மேற்புறம் mēṟ-puṟam, *n.* <id.+புறம்¹. 1. Outside; upper surface; வெளிப்புறம். (W.) 2. Windward side of a vessel; கப்பலிற் காற்றுத் தாக்கும் பக்கம். (W.) 3. Western side; மேலண்டைப் பக்கம்.

மேற்பூச்சு mēṟ-pūccu, *n.* <id.+. 1. Plastering, coating, gilding, painting; வெளிப்பூச்சு (W.) 2. Covering up of defects, white-washing; குற்றமறைக்கை. *Loc.* 3. Formality, convention; மனப்பூர்வமில்லாத நடத்தைமுதலியன. *Loc.*

மேற்பேச்சு mēṟ-pēccu, *n.* <id.+. *Loc.* 1. Further talk or discussion; மேற்கொண்டு விவகரிக்கை. 2. Lip-deep courtesy; வெளியுபசாரச்சொல்.

மேற்போக்கி mēṟ-pōkki, *n.* <id.+போக்கு-. Aqueduct; கீழுள்ள ஆறு அல்லது வாய்க்காலுக்கு மேலே குறுக்காக நீரோடும்படி கட்டிய கால். *Loc.*

மேற்போட்டுக்கொள்(ளு)-தல் mēṟ-pōṭṭukkoḷ-, *v.* <id.+. *tr.* To undertake voluntarily; to take upon oneself; வலிய ஏற்றுக்கொள்ளுதல்.—*intr.* To stand surety, stand guarantee; பிறனுக்காகப் பிணையேற்றல்.

மேற்றட்டு[1] mēṟṟaṭṭu, *n.* <id.+தட்டு². 1. High rank; உயர்தரம். 2. Upper shelf, as of

an almirah, etc.; அலமாரி முதலியவற்றின் மேல் அறை 3. See மேற்றளம்[1], 2. 4 Upper berth; பரண்போன்ற மேலிடம். 5. Upper compartment, as of a tiffin-carrier; அடுக்குப் பாத்திரத்தில் மேலுள்ள தட்டு. 6 Outer fold of a woman's garment; உடுத்திருக்குஞ்சேலையின் வெளிச்சுற்று. *Loc.*

மேற்றட்டு[2] mēṟṟaṭṭu, *n.* <id. + தட்டு[3]. Superior pony; உயர்ந்தசாதி மட்டக்குதிரை.

மேற்றண்ணீர் mēṟṟaṇṇīr, *n.* <id. + தண்ணீர். 1. Water from a higher level; மேலிடத்தினின்று வரும் நீர். 2. Water from the head-sluice of a channel; தலைமடையிலிருந்து பாயும் நீர். 3. Surface-water; பூமிமேலேதேங்கி ஓடும் நீர். 4. Surface-spring; பூமட்டத்தை யடுத்துக்காணும் ஊற்றுநீர். 5 Rain-water, as from above; மழைத்தண்ணீர்.

மேற்றலை mēṟṟalai, *n.* <id. + தலை. [K. *mēlutale.*] 1. Crown, top of the head; சிரசின் மேற்பகுதி. 2. See மேற்புறம், 2, 3. (W.) 3. Upper surface; மேற்புறம். மேசையின் மேற்றலை 4. Beginning, head; source, as of a river; நதி முதலியன தொடங்கு மிடம். இது மேற்றலை வெள்ளம்.

மேற்றளம்[1] mēṟṟaḷam, *n.* <id. + தளம்[2]. 1. Upper floor; மேல்மாடி. மேற்றளத் தொருவன் பசிக்கவைத்தது (பிரபோத. 13, 17). 2. Upper deck of a ship; கப்பலின் மேற்புறத்துள்ள தட்டு. (W.)

மேற்றளம்[2] mēṟṟaḷam, *n.* <id. + தளம்[3]. Calyx of a flower; புறவிதழ். (W.) 2. Troop of body-guards; மெய்க்காவற்படை. (யாழ். அக.)

மேற்றிசை mēṟṟicai, *n.* <id. + திசை[2] West; மேற்கு. மேற்றிசைக்க ணுள்ள நிலத்தை (சிறுபாண. 47, உரை).

மேற்றிசைப்பாலன் mēṟṟicai-p-pālaṉ, *n.* <மேற்றிசை + பாலன்[2]. Varuṇa, as the regent of the west; வருணன். (சூடா.)

மேற்றிணை mēṟṟiṇai, *n.* <மேல் + திணை. High caste; உயர்குலம். தன் மேற்றிணைக்கேற்பத் தருவன கூறும் (பெருங. உஞ்சைக். 36, 121).

மேற்றிராசனம் mēṟṟirācaṉam, *n.* <Syr. *metrān* + ஆசனம. Episcopal see, metranate; மேற்றிராணியின் ஸ்தானம். *R. C.*

மேற்றிராணி mēṟṟirāṇi, *n.* <Syr. *metrān.* 1. Prelate; metran; கிறிஸ்தவக் கண்காணியார். *R. C.* 2. Jurisdiction; அதிகாரம். (யாழ். அக.)

மேற்றிராணிப்பட்டம் mēṟṟirāṇi-p-paṭṭam, *n.* <மேற்றிராணி +. Bishop's title in the Roman Catholic church; கத்தோலிக் கிறிஸ்தவக் கண்காணியாரின் பட்டம்.

மேற்றொழில் mēṟṟoḻil, *n.* <மேல + தொழில். Great deed or achievement; உயர்ந்த செயல். மேற்றொழிலு மாங்கே மிகும் (நாலடி, 193).

மேற்றோல் mēṟṟōl, *n.* <id. + தோல்[3]. Epidermis; மீந்தோல்.

மேற்றோன்றி mēṟṟōṉṟi, *n.* <id + தோன்றி. Red species of Malabar glory-lily. See செங்காந்தள். மேற்றோன்றிப் பூக்காள் (திவ். நாய்ச். 10, 2).

மேன் mēṉ, *n.* See மேல், 1. (நாமதீப. 773.)

மேன்கஸ்து mēṉ-kastu, *n* <மேல +. Overseer; superintendent, மேற்பார்வையோன். (W.)

மேன்கூரை mēṉ-kūrai, *n.* <id. +. See மேற்கூரை. (யாழ். அக.)

மேன்சாதி mēṉ-cāti, *n.* <id + சாதி[6]. See மேற்சாதி. *Loc.*

மேன்செலவு mēṉ-celavu, *n.* <id. +. See மேற்செலவு, 2. *Colloq.*

மேன்பாடு mēṉ-pāṭu, *n.* <id. +. See மேம்பாடு. (யாழ். அக.)

மேன்பாலம் mēṉ-pālam, *n.* <id. + பாலம்[4] 1. See மேற்பாலம். 2. See மேற்போக்கி.

மேன்மக்கள் mēṉ-makkaḷ, *n.* <id. +. Noble men, high-minded men; உயர்ந்தோர். கீழாய . . . சொலப்படுவார் மேன்மக்கள் (நாலடி, 70).

மேன்மலை mēṉ-malai, *n.* <id + மலை[4] 1. The hill where the sun sets; அத்தகிரி. கனலி . . . மேன்மலை குளிப்ப (பெருங. மகத. 7, 99). 2. A mountain range in Coorg. See சகியம்[2]. கிளையொடு மேன்மலை முற்றி (பரிபா. 12, 2).

மேன்மாடம் mēṉ-māṭam, *n.* <id + மாடம்[1]. Upper storey; balcony; terrace; உபரிகை.

மேன்முறையாளர் mēṉ-muṟai-y-āḷar, *n.* <id. + முறை + ஆள்-. See மேன்மக்கள். மேன்முறையாளர் தொழில் (திரிகடு. 2).

மேன்மூச்சு mēṉ-mūccu, *n.* <id. +. See மேல்மூச்சு. மேன்மூச்சுக் கீழ்மூச்சு வாங்குகிறது.

மேன்மூடி mēṉ-mūṭi, *n.* <id. +. Cover, lid; மேலே மூடுதற்குதவுவது.

மேன்மேல் mēṉ-mēl, *adv.* <id. +. [K. *mēlumēlu.*] See மேன்மேலும். தவாஅது மேன்மேல் வரும் (குறள், 368).

மேன்மேலும் mēṉ-mēlum, *adv.* <id. +. More and more; further and further; பின்னும்

பெருக. மேன்மேலுங் குடைந்தாடி யாடுவோமே (திரு வாச. 5, 30).

மேன்மை mēṉmai, n. <id. [T. mēlimi.] 1. Greatness, eminence, excellence; dignity; superiority; சிறப்பு. ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை (குறள், 137). 2. Grandeur, sublimity, மகத்துவம். 3. Respect, honour; nobility; கண்ணியம்.

மேன்றலை mēṉṟalai, n. <id.+தலை. The helm of a ship; மரக்கலத்தின் முன்புறம். (யாழ். அக.)

மேன mēṉa, part. <மேல். Ending of the locative; ஏழாம்வேற்றுமை யுருபு. (தொல். சொல். 57, சேனா.)

மேனகை mēṉakai, n. <Mēnakā. A courtesan of Svarga; தேவலோகத்து மகளிரு ளொருத்தி. மேனகையொடு திலோத்தமை யரம்பை யுருப்பசியா (திவ். பெரியாழ். 3, 6, 4).

மேனசம் mēṉacam, n. Borax; வெங்காரம். (சங். அக.)

மேனரிக்கம் mēṉarikkam, n. <T. mēnarikamu. The relationship that exists between a man and his father's sister's family or his mother's brother's family; அத்தை அல்லது அம்மான் குடும்பத்தாரோடு ஒருவனுக்கு உள்ள உறவு முறைமை. Madr.

மேனா[1] mēṉā, n. [K. mēne.] See மேனாப் பல்லக்கு.

மேனா[2] mēṉā, n. <மன்னா. 1. A kind of saccharine exudation obtained from plants. See சீர்கஸ்து. (பைஷஜ.) 2. Flowering ash tree, Fraxinus ornus; மரவகை. (M. M. 471.)

மேனாக்காய்ச்சொல்(லு)-தல் mēṉāk-kāy-c-col-, v. intr. <மேல்+நாக்கு+ஆ[6]-+. To speak merely for form's sake; to express sentiments which are merely lip-deep; மனப்பூர்வ மின்றி வெளிக்குப் பேசுதல். Nāñ.

மேனாசை mēṉācai, n. <Mēnā-jā. See மேனைமகள். (யாழ். அக.)

மேனாட்டார் mēṉāṭṭār, n. <மேனாடு. 1. The Celestials; தேவர். 2. The people of Mysore; மைசூர்ப் பிரதேசத்தார். 3. The Occidentals; Europeans; ஐரோப்பியர் முதலிய மேலைத்தேச வாசிகள். 4. A sub-division of the Cāṉār caste in the western part of Tinnevelly and in Travancore; திருநெல்வேலியின் மேற்குப்பாகத்திலும் திருவிதாங்கூரிலுமுள்ள சாணார்வகையார்.

மேனாடு mēṉāṭu, n. <மேல்+நாடு. 1. Svarga, as the upper world; சுவர்க்கம். 2. Highland; மேட்டுபூமி. 3. Mysore, as being to the west of the Tamil country; [தமிழ்நாட்டுக்கு மேற் பாலுள்ளது] மைசூர்ப்பிரதேசம். (குருபரம்.) 4. See மேற்சீமை, 1. 5. A plant found in damp places. See பொன்னாங்காணி. (தைலவ. தைல.)

மேனாணி-த்தல் mēṉāṇi-, 11 v. intr. <id. +நாணி-. To be proud; பெருமிதங் கொள்ளுதல். அவர்கள் நடுவே . . . மேனாணித்திருக்கு மிருப்பை (ஈடு, 7, 6, 9).

மேனாணிப்பு mēṉāṇippu, n. <மேனாணி-. Pride, lordliness; பெருமிதம். அத்தால வந்த மேனாணிப்பாலே செருக்கி யிருக்கிறவனை (திவ். திருக் குறுந். 2, வ்யா.).

மேனாத்மசை mēṉātmacai, n. <Mēnāt-majā. See மேனைமகள். (இலக். அக.)

மேனாதம் mēṉātam, n. <mē-nāda. (யாழ். அக.) 1. Cat; பூனை. 2. Peacock; மயில். 3. Goat; வெள்ளாடு.

மேனாதவம் mēṉātavam, n. <Mēnā-dhava. The Himālayas personified, as the husband of Mēṉai; [மேனையின் கணவன்] இமவான். (யாழ். அக.)

மேனாப்பல்லக்கு mēṉā-p-pallakku, n. <மேனா[1]+. A covered palanquin; மூடுபல்லக்கு.

மேனாரிக்கம் mēṉārikkam, n. See மேனரிக்கம். Madr.

மேனாவண்டி mēṉā-vaṇṭi, n. <மேனா[1]+. Bullock-coach; பெட்டிவண்டி. Loc.

மேனாள் mēṉāḷ, n. <மேல்+நாள். 1. Former day; முன்னாள். மேனாணீ பூப்பலி விட்ட கடவுளைக் கண்டாயோ (கலித். 93). 2. Subsequent day; பின்னாள். (கலித். 72, உரை.)

மேனி mēṉi, n. [T. mēnu, M. mēni.] 1. Body; உடம்பு. (பிங்.) பசந்த மேனியள் (சிலப். 8, 68). 2. Form, shape; வடிவம். (பிங்.) 3. Colour; நிறம். தளிரேர் மேனித்தாய சுணங்கின் (நெடுநல். 148). 4. [T. mēni.] Beauty; அழகு. 5. Good condition, healthy state; நன்னிலைமை. Loc. 6. Average crop or yield of a harvest; நிலத்தின் சராசரி விளைவு. இந்தமுறை நெல் மேனிக் குறைவு. 7. Indian acalypha. See குப்பைமேனி. (தைலவ. தைல.)

மேனிகரப்போர் mēṉi-karappōr, n. <மேனி+கர-. Asuras, as becoming invisible at will; [தம் உருவத்தை மறைக்கவல்லவர்] அசுரர். (பிங்.)

மேனிகுலை-தல் mēṉi-kulai-, v. intr. <id. +. (W.) 1. To lose freshness or beauty; to fade; to wither, as the body; அழகு குறைதல். 2.

To be disarranged, dishevelled, as the hair; சீர்குலைதல். 3. To be deformed; உருவங்கெடுதல். 4. To be perturbed, agitated; கலக்கமுறுதல்.

மேனிப்பொன் mēṉi-p-poṉ, n. perh. id +. An ancient tax; பழைய வரிவகை. (I. M. P. Tr. 89.)

மேனிமினுக்கி mēṉi-miṉukki, n. <id.+. Person gaudily dressed, fop; எப்பொழுதும் அலங்காரஞ் செய்துகொண்டு திரிபவன்-ள்.

மேனிலம் mēṉilam, n. <மேல + நிலம். See மேனடு, 1.

மேனிலை mēṉilai, n. <மேனிலம. Gods; தேவர். (நாமதீப. 63.)

மேனிலை mēṉilai, n. <மேல் + நிலை. 1. That which precedes; முன்னர் உள்ளது. மேனிலை யொத்தலும (தொல். எழுத். 340). 2. Upper storey; மேல்மாடி. மேனிலைச் சாளரக்கதவு (காஞ்சிப். நகர. 75). (பிங்.)

மேனிலைக்கட்டு mēṉilai-k-kaṭṭu, n. <மேனிலை+. Storey, as of a tower; கோபுர முதலியவற்றின் மேல்மாடி. (சுக்கிரநீதி, 229.)

மேனீர் meṉīr, n. <மேல்+. 1. See மேற் றண்ணீர், 1, 2, 3, 4. 2. Rain-water; மழைநீர். இந்நிலத்துக்கு முன்னுடைய மேனீருங் கிணறும் (S. I. I. iii, 110).

மேனை mēṉai, n. <Mēṉā. Wife of the Himālayas personified; இமவான் மனைவி. மேனைபோன்மேரு வீன்றற கைவண்ணத் தளிர்தீண்டி (திருவிளை. தடாதகை. 31).

மேனைமகள் mēṉai-makaḷ, n. <மேனை+. Pārvatī; பார்வதி. (நாமதீப. 23.)

மேனோக்கம் mēṉōkkam, n. <மேல் + நோக்கம். 1. Elevation, rise; steepness; மேனோக்கிக் கிளம்புகை. 2. Liberality of mind; தாராள சிந்தை. 3. Superficial view; மேலெழுந்த பார்வை. 4. Aspiration, ardent desire; பேரவா. 5. Haughtiness; செருக்கு.

மேனோக்கு-தல் mēṉōkku-, v. intr. <id.+. 1. To rise; மேல் எழுதல். (W.) 2. To increase; விருத்தியாதல். 3. To vomit; வாந்தியாதல். Colloq. 4. To aspire, ardently desire; பேரவாக்கொள்ளு தல். 5. To be haughty; கருவங்கொண்டிருத்தல்.

மேஜை mējai, n. See மேசை.

மேஜோடு mējōṭu, n. [T. mejōḍu] Stockings; காலில் அணியும் உறைவகை. Mod.

மேஷசங்கிரமணம் mēṣa-caṅkirama-ṇam, n. <mēṣa+. See மேஷசங்கிராந்தி, 1.

மேஷசங்கிராந்தி mēsa-caṅkirānti, n. <id.+. The time at which the sun enters the sign Aries; சூரியன் மேடராசியிற் பிரவேசிக்குங் காலம். (பஞ்.) (I. M. P. Rd 122.)

மேஷம் mēṣam, n. <mēṣa. See மேடம்[1].

மேஷரவி mēṣa-ravi, n. <id.+. See மேஷசங்கிராந்தி. (பஞ்.)

மேஷவிஷுவத்து mēṣa-visuvattu, n. <id.+visuvat. See மேஷசங்கிராந்தி, 1.

மேஷாயனம் mēṣāyaṉam, n. <mēṣā-yana. The section of the zodiac embracing the signs Taurus, Gemini, Cancer and Leo. See மேடவீதி.

மேஸ்திரி mēstiri, n. <Port. mestre. 1. Overseer; superintendent; மேற்பார்வையிடு வோன். 2 Head workman, foreman; தலைமை வேலைக்காரன். 3. Tailor; தையற்காரன். 4. Title of certain castes; சிலசாதியாரின் பட்டப் பெயர்.

மேஸ்ரிட்டு mēsiriṭṭu, n. <E. Magistrate; குற்றவிசாரணைசெய்யும் நியாயாதிபதி. Mod.

மை

மை[1] mai. The compound of ம் and ஐ.

மை[2] mai, n. cf. masī. 1. Collyrium for the eye; கண்ணுக்கிடும் அஞ்சனம். மைபடிந்த கண ணாளும் (தேவா. 1235, 10). 2. Ink; ink paste; மசி. 3. Black pigment used in witchcraft; மந்திர வாதத்தில் உபயோகிக்கும் மை. 4. Grease made of castor-oil and burnt straw, used as a lubricant for country-carts; வண்டி மசகு. 5. Black, blackness; கருநிறம். மறவர் மைபடு திண்டோள் (அகநா. 89). 6. Darkness; இருள். மைபடு மருங் குல் (புறநா. 50). 7. Greenness; பசுமை. மையிருங் கானம் (அகநா. 43.) 8. Spot, as of the moon; blemish; களங்கம். மைதீர்ந்தன்று மதியுமன்று (கலித். 55). 9. Dark cloud; கருமேகம். மைபடு சென்னி . . . மலை (கலித். 43). 10. Sky, as blue; விண். (அரு. நி.) 11. Fault; defect; குற்றம். மையி லறிவினர் (புறநா. 22, 8). 12. Sin; பாவம். மை தீர்தல் (சினேந். 457). 13. Dirt; அழுக்கு. மையில் செங்துகிர (கலித். 85). 14. Birth, as due to karma; பிறவி. மையறு சிறப்பிற் றெய்வம் (பட்டினப். 159). 15. Barrenness, sterility; மலடு. (பிங்.) 16. cf. மைம்மை. Barren woman; மலடி. (நாமதீப. 182.) 17. cf. மைம்மை. Barren buffalo; மலட் டெருமை. (சூடா.) 18. cf. mahiṣa. Buffalo;

எருமை. வைகுபுலர் விடியன் மைபுலம் பரப்ப (அகநா. 41). 19. cf. *mēṣa*. Aries of the zodiac; மேடராசி. (சூடா.) 20. Sheep; goat; ஆடு. (திவா.) மையூன மொசித்த வொக்கலொடு (புறநா. 96). 21. Youth; இளமை. (அக. நி.) 22. Water; நீர். (யாழ். அக.)

மை[3] mai, *part.* Suffix (a) expressing an abstract quality or condition, as *karumai, porumai;* பண்புப்பெயர் விகுதியுள் ஒன்று: (b) ending verbal nouns, as *ceykinramai, ceyyāmai;* தொழிற்பெயர்விகுதியுள் ஒன்று: (c) ending verbal participles; வினையெச்சவிகுதியுள் ஒன்று. ஒற்றொற் றுணராமை யாள்க (குறள், 589).

மை[4]-த்தல் mai-, *11 v. intr.* <மை². 1. To become black; கறுத்தல். மைத்திருள்கூர்ந்த (மணி. 12, 85). 2. To be dim; ஒளிமழுங்குதல். மைத்துன நீண்ட வாட்டடங் கணணாா (சீவக. 2333).

மைக்கண் mai-k-kaṇ, *n.* <id. +. A kind of paddy; நெல்வகை. *Tinn.*

மைக்கரப்பான் mai-k-karappāṉ, *n.* <id. +. A dark-coloured eruption; கருங்கரப்பன் வகை. (பதார்த்த. 234.)

மைக்கா maikkā, *n.* <E. Mica; அப்பிரகம். *Colloq.*

மைக்காட்டுமண் maikkāṭṭu-maṇ, *n.* <மைக்காடு +. See மைக்காடு.

மைக்காட்டுவெட்டு maikkāṭṭu-veṭṭu, *n.* prob. id. +. A coin used in former days; பழைய நாணயவகை. (பணவிடு. 136-7.)

மைக்காடு maikkāṭu, *n.* [T. *masikaṭṭu.*] Ashes and dust in a goldsmith's workshop containing particles of precious metals; பொன் முதலியன சிதறிக்கலந்துள்ள அச்கசாலை மண். (W.)

மைக்காநாள் maikkā-nāḷ, *n.* perh. மற்றை +. Next day, morrow; மறுநாள். *Loc.*

மைக்காப்பு mai-k-kāppu, *n.* <மை² +. Smearing black paste over the leaves of an ōla book to render the script clear; எழுத்து நன்குதெரியுமாறு ஏட்டுச்சுவடிக்கு மைதடவுகை. கோவை முடிவிடத்தெழுதிப பின்னா . . . மைக் காப்புஞ் செய்தார (திருவாத. பு. திருவடி. 15).

மைக்காலிருட்டு mai-k-kāl-iruṭṭu, *n.* <id. + கால்¹ +. Pitch darkness; காரிருள். மைக்கா லிருட்டனைய விருளில்லை (தாயு. ஆனந்த. 10).

மைக்குறுவை mai-k-kuṟuvai, *n.* <id. +. A kind of paddy; நெல்வகை. (G. Tn. D. I, 153.)

மைக்கூடு mai-k-kūṭu, *n.* <id. +. Ink-bottle, ink-pot; எழுதும் மசி வைக்குங் கூடு.

மைக்கூண்டு mai-k-kūṇṭu, *n.* <id. +. 1. See மைக்கூடு. 2. Little metallic receptacle for collyrium for the eyes; அஞ்சனம் வைக்குஞ் சிமிழ்.

மைக்கூர் maikkūr, *n.* A kind of boil; ஒருவகைப் புண். (M. L.)

மைக்கொன்றை maikkoṉṟai, *n.* Peacock's crest. See மயிற்கொன்றை (பதார்த்த. 207.)

மைகம் maikam, *n.* A mineral poison; வக்கிராந்தபாஷாணம். (யாழ். அக.)

மைகரம் mai-karam, *n.* prob. மை² + கரம்¹. Bewilderment, confusion; மயக்கம். (யாழ். அக.)

மைகூட்டு-தல் mai-kūṭṭu-, *v. intr.* <id. +. To make ink, collyrium or paint; மை தயாரித்தல்.

மைச்சந்தன் maiccantaṉ, *n.* A mineral poison; பாஷாணவகை. (யாழ். அக.)

மைச்சம்பா mai-c-campā, *n.* <மை² +. A kind of paddy. See கருங்குறுவை. (பதார்த்த. 816.)

மைச்சம்பி maiccampi, *n.* cf. மச்சம்பி. See மைத்துனன். *Loc.*

மைச்சமநந்தன் maiccamanantaṉ, *n.* See மைச்சந்தன். (யாழ். அக.)

மைச்சாலி mai-c-cāli, *n.* <மை² + சாலி¹. See மைச்சம்பா. (தைலவ. தைல.)

மைச்சாள் maiccāḷ, *n.* Fem. of மைச்சான். See மைத்துனி. (யாழ். அக.)

மைச்சான் maiccāṉ, *n.* <மச்சான். See மைத்துனன். (யாழ். அக.)

மைச்சுனன் maiccuṉaṉ, *n.* See மைத்துனன். மைச்சுனனா காடவராயர் (I. M. P. Sm. 28).

மைச்சுனி maiccuṉi, *n.* Fem. of மைச்சுனன். See மைத்துனி. (யாழ். அக.)

மைசாட்சி maicāṭci, *n.* <*mahiṣākṣa*. [T. *maisākṣi.*] 1. Indian bdellium. See குங்கிலியம், 6 (பாலவா. 710.) 2. Black dammar-resin. See குக்கில்², 2. (M. M.)

மைசூர் maicūr, *n.* <*Mahiṣa-pura*. The capital of the Mysore State; மைசூர்ச்சீமையின் தலைநகர்.

மைசூர்க்கட்டு maicūr-k-kaṭṭu, *n.* <மைசூர் +. [K. *maisūrukaṭṭu.*] A mode of tying turban, as peculiar to the Mysoreans; தலைப் பாகைவகை.

மைசூர்ப்பருப்பு maicūr-p-paruppu, n. <U. masūr <masura+. Lentil, *Lens esculenta*; துவரைவகை.

மைசூர்ப்பாகு maicūr-p-pāku, n. <id. +. A kind of sweet confection; ஒருவகை இனிப்புப் பணிகாரம்.

மைசூர்ரசம் maicūr-racam, n. <மைசூர் +. A kind of pepper-water preparation, as peculiar to Mysore; ஒருவகை மிளகுரசம்.

மைசேர்-த்தல் mai-cēr-, v. intr. <மை² +. See மைகூட்டு-.

மைஞ்சு maiñcu, n. [K. *mañju*] See மஞ்சு. (நன. 122, மயிலை.)

மைத்தான் maittāṉ, n. perh மை-. Smut, a disease affecting *cōḷam*; சோளப்பயிர்க்கு வரும் நோய்வகை. *Loc.*

மைத்திரம் maittiram, n. <*maitra*. 1. Love, friendship; நட்பு. 2. The third of the 15 divisions of the day; பகல் 15 முகூர்த்தங்களுள் மூன்றுவது. (விதான. குண. 73, உரை.)

மைத்திராயணி maittirāyaṇi, n. <*Maitrāyaṇī*. An Upaniṣad, one of 108; நூற்றெட் டுபநிடதங்களுள் ஒன்று.

மைத்திராவருணி maittirā-varuṇi, n. <*Maitrāvaruṇi*. Agastya, as descended from Mitra and Varuna; அகத்திய முனிவர்.

மைத்திரி maittiri, n. <*maitrī*. 1. Friendship; நட்பு. (பரிபா. 4, 1, உரை.) 2. See மைத்திரீபாவனை. மைத்திரி கருணை முதிதை (மணி. 30, 256).

மைத்திரியாழ்வார் maittiri-y-āḻvār, n. <id.+. The Buddha of the future. See மயித்திரியாழ்வார். (மணி. புத்தசரித. பக். 30, கீழ்க் குறிப்பு.)

மைத்திரீபாவனை maittirī-pāvaṉai, n. <id.+. (Buddh.) A form of meditation which developes a feeling of fellowship with all beings, practised by monks; எல்லாவுயிர்களிடத் தும் அன்புபாராட்டி அவற்றின் நல்வாழ்வைக் கருதி பௌத்தபிக்ஷு புரியும் தியானவகை. (மணி. பக். 387.)

மைத்திரேயர் maittirēyar, n. <*Maitreya*. 1. A Ṛṣi; ஒரு முனிவர். 2. See மயித்திரியாழ்வார். (நீலகேசி.)

மைத்திரேயி maittirēyi, n. <*Maitrēyī*. An Upaniṣad, one of 108; நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று.

மைத்துனத்தோழன் maittuṉa-t-tōḻaṉ, n. <மைத்துனன்+. Intimate friend, chum, boon companion, பரிகாசஞ்செய்து விளையாடும் முறைமையுடைய தோழன். மைந்தனை மகிழ்வு கூறி மைத்துனத் தோழனென்றான் (சீவக. 1264).

மைத்துனமை maittuṉamai, n. <id. Relationship of a brother-in-law or of a cognate-cousin; மைத்துனமுறைமை. மாதவன் மைத் துனமையினுன் மகிழ்ச்சிகூரநதே (பாரத. அருச்சுனன் தீர். 56).

மைத்துனன் maittuṉaṉ, n. prob. *maithuna* 1. Brother of one's wife or husband; மனைவிக்கு அல்லது கணவனுக்குச் சகோதரன். 2. Son of one's maternal uncle or paternal aunt; மாமன் அல்லது அத்தையின் மகன் தன்மைத்து னனைக் கொலை சூழாத (உத்தரரா. திக்குவி. 107). 3. Sister's husband; சகோதரியின் கணவன்.

மைத்துனி maittuṉi, n. Fem. of மைத்து னன். 1. Wife's sister; மனைவியின் உடன்பிறந் தாள். 2. Daughter of one's maternal uncle or paternal aunt; மாமன் அல்லது அத்தையின் மகள். மைத்துனி நடக்கமாட்டே னினைத்தனனென்ன (திருவாலவா. 62, 7). 3. Brother's wife; சகோதர னின் மனைவி.

மைதா maitā, n. <T. *mandu*. Intoxication; கள்மயக்கம் *Loc.*

மைதாமா maitā-mā, n. <U. *maidā*+மா⁶. Corn-flour; ஒருவகைத் தானியத்தின் மா *Mod.*

மைதானம் maitāṉam, n <U. *maidān*. A plain, open field, maidan; திறந்த வெளியிடம். *Mod.*

மைதிலி maitili, n. <*Maithilī*. Sītā, as daughter of the king of Mithilā; [மிதிலையரசன் மகள்] சீதை. இலக்குமனேடு மைதிலியும . . . துதி செய்ய நின்ற (திவ். பெரியதி. 2, 3, 7).

மைதிலை maitilai, n. <*Mithilā*. An ancient province of Gaur, one of *pañca-kauṭam*, q.v.; பஞ்சகௌடத்துளொன்றான ஒரு பிரதேசம்.

மைதீட்டு-தல் mai-tīṭṭu-, v. intr. <மை² +. To paint the eye-lids with collyrium. See மையிடு-, 1.

மைதுலி maituli, n. See மைதிலி. (சது.)

மைதுலை maitulai, n. See மைதிலை. (யாழ். அக.)

மைதுனம் maituṉam, n. <*maithuna*. 1. Copulation; sexual union; புணர்ச்சி. (பிங்.) வதுவைச் சடங்கதனை மைதுனமாக் கொண்ட (ஒழிவி. கிரியை. 16). 2. Marriage; விவாகம். (யாழ். அக.)

மைந்தன் maintaṉ, *n.* <மைந்து. [M. *maindan.*] 1. Son; மகன். (பிங்.) குலக்கோ மைந்தர் தமக்கும் (கம்பரா. மந்தரை. 76). 2. Young man; இளைஞன். (பிங்.) மைந்த . . . நீ யிதற் கென்னை வெகுண்டது (கம்பரா. நகாநீங். 134). 3. Young of an animal or reptile; விலங்கு ஊர்வன வற்றின் குட்டி. அரவழுந்த மைந்தன் (பரிபா. 19, 73). 4. Disciple, pupil; மாணாக்கன். அளவிலா மைந்தாக் கூட்டி (திருவாலவா. 35, 4). 5. Man; ஆண்மகன். (பிங்.) 6. Strong, powerful man; திண்ணியன். (சூடா.) 7. Warrior, hero; வீரன். தொடுகழன் மைந்தா தொழில் (பு. வெ. 3, 6). 8. Husband; கணவன். மைந்த ரகலத்தகலா . . . நன் னாப் புணாச்சியும (பரிபா. 8, 43).

மைந்து maintu, *n.* 1. Might, strength; வலிமை. மைந்து பொருளாக வந்த வேந்தனை (தொல். பொ. 70). 2. cf. *mañju.* Beauty; அழகு. மைந்தா ரசோக மடலவிழ (சிலப. 8, வெண்பா, 1). 3. Desire; விருப்பம். துறை வேண்டு மைந்தின் (பரிபா. 6, 30). 4. Infatuation of love; காமமயக்கம். மகளிரை மைந்துற் றமாபுற்ற மைந்தா (பரிபா. 20, 91). 5. Madness; பித்து. (திவா.) 6. Must of an elephant; யானையின் மதம். களிறே . . . மைந்து பட்டன்றே (புறநா. 13). 7. Ignorance, stupidity; அறியாமை. மைந்துற்றுய (பரிபா. 20, 69).

மைந்நூறு mai-n-nūṟu, *n.* <மை[2] + நூறு[2]. Black powder for the eye; அஞ்சனப்பொடி. மைந்நூறு வேற்கண மடவாா (சீவக. 453).

மைநகர்ப்பூமி mainakarppūmi, *n.* A mineral poison; வக்கிராந்தபாஷாணம். (யாழ். அக.)

மைநாகம் mainākam, *n.* <*Maināka.* Mount Maināka, said to be between the Indian Peninsula and Ceylon; இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலுள்ளதாகச் சொல்லப்படும் ஒரு மலை. (கம்பரா. கடருவு. 40.)

மைநாகன் maināk̲aṉ, *n.* See மைநாகம். (W.)

மைப்பரணி mai-p-paraṇi, *n.* <மை[2]+. Casket for collyrium; அஞ்சனம் வைக்குஞ் சிமிழ்.

மைப்பு maippu, *n.* <மை-. Black, blackness; கறுப்பு. மைப்புறுத்தகண ணாமடைமாா (காஞ்சிப்பு. அரிசாப. 2).

மைப்புயல் mai-p-puyal, *n.* <மை[2]+. Dark cloud; இருண்ட மேகம். (அக. நி.)

மைப்போது mai-p-pōtu, *n.* <id.+ போது[3]. See மைம்மலர். மைப்போ தணிதொஙகல் வாணன் (தஞ்சைவா. 116).

மைபோட்டுப்பார்-த்தல் mai-pōṭṭu-p-pār-, *v. tr.* <id.+போடு-+. To discover hidden treasure, etc., by using magic pigment; புதையல் முதலியன கண்டுபிடித்தற்பொருட்டு அஞ்சனமையிட்டுப் பார்த்தல்.

மைபோடு-தல் mai-pōṭu-, *v. intr.* <id.+. 1. To grease, as a country cart; வண்டிக்கு மசகு இடுதல். *Colloq.* 2. See மையூட்டு-, 2. 3. To bewitch; மயக்கி வசீகரித்தல்.

மைம்மலர் mai-m-malar, *n.* <id.+. Blue nelumbo. See கருங்குவளை. மைமமலாக் கோதை (சீவக. 208).

மைம்மா mai-m-mā, *n.* <id.+மா[2]. Pig, as black; பன்றி. (பிங்.)

மைம்மீன் mai-m-mīṉ, *n.* <id.+மீன்[1]. The planet Saturn, as black in colour; சனி. மைம்மீன் புகையினும் (புறநா. 117).

மைம்முகன் mai-m-mukaṉ, *n.* <id.+. Langur, as black-faced. See முசு[1]. (பிங்.)

மைம்மை maimmai, *n.* cf. id. [K. *maime,* M. *mamma.*] 1. Barren woman; மலடி. (பிங்.) 2. Barren buffalo; மலட்டெருமை. (திவா.)

மைம்மைப்பு mai-m-maippu, *n.* <id.+ மை-. Defective sight, dimness of vision; பார்வைக்குறை. மைமமைபபி னன்று குருடு (பழமொ. 298).

மைமல் maimal, *n.* prob. id. Evening; மாலைநேரம். (யாழ். அக.)

மைமை maimai, *n.* perh. *mahimā.* [K. *maime.*] (Jaina.) Worship; பூசை. புக்கவா மைமை தொடஙகின ரன்றே (மேருமந். 1285).

மையக்கட்டை maiya-k-kaṭṭai, *n.* <மையம்[1]+. Piece of wood placed over the axle, supporting the frame-work of a country cart; வண்டியில் அச்சின்மேற்போடுங் கட்டை.

மையண்டம் maiyaṇṭam, *n.* Egg; முட்டை. (யாழ். அக.)

மையத்து maiyattu, *n.* <Arab. *mayyit.* Corpse; பிரேதம். *Muham.*

மையம்[1] maiyam, *n.* <*madhya.* 1. Centre, middle; நடு. (சூடா.) 2. That which is mediocre; நடுத்தரமானது. 3. That which is doubtful or vague; சந்தேகமானது. 4. Impost; top portion of a pillar upon which an arch rests; கமான்வளைவைத் தாங்கும் தூணின் மேலுறுப்பு. *Loc.*

மையம்[2] maiyam, *n.* See மையத்து. *Loc.*

மையம்பாய்-தல் maiyam-pāy-, v. intr. <மையம்[1]+. To oscillate about the middle point, as the index of a balance; இருபக்கமுஞ் சாய்தலால் ஒவ்வாமல் நிற்றல். (யாழ். அக.)

மையமண்டபம் maiya-maṇṭapam, n. <id.+. Building or hall in the middle of a temple tank; தெப்பக்குளத்தின் நடுவில் அமைந்த மண்டபம். Loc.

மையல் maiyal, n. <மை-. 1. Infatuation of love; காமமயக்கம். மையல் செய்தென்னை மனங் கவர்ந்தானே யென்னும் (திவ். திருவாய். 7, 2, 6). 2. Madness; பித்து. மைய லொருவன் களித்தற்றால் (குறள், 838). 3. Overwhelming pride due to rank, wealth, etc.; செல்வம் முதலியவற்றால் வரும் செருக்கு. மையல் . . . மன்னன் (சீவக. 589). 4. Must of an elephant; யானையின் மதம். வேழ மையலுறுதத (பெருங். உஞ்சைக். 37, 232) 5. Purple stramony. See கருவூமத்தை. (மலை.)

மையலஞ்சந்தை maiyalañ-cantai, n. The second day in the holding of a fair or market; சந்தைநடக்கும் இரண்டாம் நாள். (W.)

மையலவர் maiyalavar, n. <மையல். Persons of deranged minds; பித்தர். மையலவா போல மனம் பிறந்த வகைசொன்னாா (சீவக. 2013).

மையலார் maiyalār, n. <id. 1. Magicians; மாயவித்தைக்காரர். மணமயக்கு மயககுடை மையலாா (இரகு. யாகப. 35). 2. See மையலவர்.

மையலி maiyali, n. <id. Witch; மாயவித்தைக்காரி. (யாழ். அக.)

மையவாடி[1] maiya-vāṭi, n. prob. மையம்[1] +. Place hedged around with thorns; முள் வேலியுள்ள இடம். (யாழ். அக.)

மையவாடி[2] maiya-vāṭi, n. <மையம்[2]+. Burial-ground; இடுகாடு. Muham.

மையன்மா maiyaṉ-mā, n. <மையல்+மா[2]. Elephant; யானை. (இலக். அக.)

மையன்மை maiyaṉmai, n. <id. See மையல், 1, 2. மையன்மை செய்து (திவ். பெரியாழ். 2, 3, 3).

மையனோக்கம் maiyaṉōkkam, n. <id.+ நோக்கம். Mournful look; துக்கப் பார்வை. மையனோக்கம்பட வருமிரக்கம் (தொல். பொ. 260, உரை).

மையா[1] mai-y-ā, n. <மை[2]+ஆ[8]. Barren cow; மலட்டுப்பசு. மையாதாங் காததோமப் (அறநெறி. 38).

மையா[2]-த்தல் mai-yā-, 12 v. intr. prob. id.+யா-. 1. To be perplexed; மயங்குதல். மலர் காணின் மையாத்தி நெஞ்சே (குறள், 1112). 2. To become dim; ஒளிமழுங்குதல். விண்மே லொளி யெல்லா மையாந் தொடுங்கி (பு. வெ 9, 13). 3. To look wan; to look deserted; பொலிவழிதல் மாந்த ரென்பவ ரொருவருமின்றி மையாந்த வநகா (காஞ்சிப பு. நகரேற். 101).

மையாடு-தல் mai-y-āṭu-, v intr. <id. +. 1. See மையோலைபிடி-. ஐயாண்டெய்தி மையாடி யறிந்தாா கலைகள (சீவக. 2706). 2. To be blackened, as with poison, கருமையாதல். மையாடிய கண்டனை (தேவா. 303, 1).

மையான் mai-y-āṉ, n. <id.+ஆன்[1]. Buffalo, as black; எருமை. இருணிற மையான் (குறுந். 279)

மையிடு-தல் mai-y-iṭu-, v. intr. <id.+. 1. To paint the eyes with collyrium; கண்ணுக்கு அஞ்சனமெழுதுதல். வடிவேல் விழிக்குமையிட்டாள (விறலிவிடு.). 2. To apply magic pigment to one's eyes or palm for obtaining a vision of stolen goods or hidden treasure; புதைபொருள் முதலியவற்றைக் கண்டுபிடிக்க உள்ளங்கையிலேனும் கண்களிலேனும் மந்திரமை போடுதல்.

மையிருட்டு mai-y-iruṭṭu, n. <id.+. Pitch darkness; காரிருள். Colloq.

மையிருள் mai-y-iruḷ, n. <id.+. See மையிருட்டு. கருகு மையிருளின் கணம (பெரியபு. இளையான். 15).

மையிழுது mai-y-iḻutu, n <id.+. 1. Collyrium, eye-salve; அஞ்சனவிழுது. மையிழு திழுகி (புறநா. 281). 2. Fat of sheep; ஆட்டு நிணநெய். (புறநா. அரும.)

மையுடை mai-y-uṭai, n. <id.+உடை[5]. Black babul. See கருவேல் (தைலவ. தைல.)

மையூட்டு-தல் mai-y-ūṭṭu-, v. intr. <id. +. 1. See மையிடு-, 1. (W.) 2. To ink a written ōla; ஓலைக்கு மைதடவுதல்.

மையெழுத்து mai-y-eḻuttu, n. <id.+. Writing, in ink; மையால் எழுதும் எழுத்து. மையெழுத்தாசியின் மாண்டதோர் தோட்டிடை . . . கரந்தெழுத்திட்டாள் (சீவக. 1767).

மையெழுது-தல் mai-y-eḻutu-, v. intr. <id.+. See மையிடு-, 1. மையெழுதிப் பொட்டெழுதி (கூளப்ப. 132).

மையொற்றி mai-y-oṟṟi, n. <id.+. Blotting paper; எழுதுமையை ஒற்றும் காகிதம். Mod.

மையோலைபிடி-த்தல் mai-y-ōlai-piṭi-, v. intr. <மை[2]+ஓலை+. To handle an ōla written and inked, in commencing one's study; கற்கத் தொடங்கும்போது மைதடவிய எழுத்துள்ள ஓலையைக்

கைக்கொள்ளுதல். ஐயாட்டை நாளே எண்ணுகப பெற்று மையோலைபிடித்துக் கலைகள் கற்றூ (சீவக. 2706, உரை). மையோலை பிடிதத இளைய புலவரது (பரிபா. 11, 88, உரை).

மைரேயம் maırēyam, *n.* <*maırēya.* 1. A kind of ıntoxicatıng drınk; ஒருவகை மது. 2. A kind of medicated oil; மருந்துத்தைலவகை. (யாழ். அக.)

மைல் mail, *n.* <E. Mile=1760 yards; 1760 கஜங்கொண்ட நீட்டலளவு. *Mod.*

மைலார் mailār, *n.* <மைலாரு. Festival in which washermen, artisans and others worship *mailāru*, their tutelary deity, for about a week after Pongal; பொங்கற்பண்டிகையை யடுத்து ஒருவாரகாலம் வண்ணார் முதலியோர் மைலாரு தேவியை வழிபட்டுக் கொண்டாடும் விழா. (C. G.)

மைலார்பூசை mailār-pūcai, *n.* <மைலார +. See மைலார். *Loc.*

மைலாரு mailāru, *n.* <T. *mailāru.* A petty goddess; ஒரு சிறுதேவதை.

மைலாலக்கடி mailālakkaṭi, *n.* <U. *mailālakri.* 1. Common grey mango laurel. See பிசின்பட்டை, 2. 2. Bark of common grey mango laurel; பிசின்பட்டை மரத்தின் மேற்றோலி.

மைவாகனன் mai-vākaṉaṉ, *n.* <மை² + *vāhana.* Agni, as riding a ram; [ஆட்டுவாகன முடையோன்] அக்கினி தேவன். (பிங்.) நமமை முகம பாரான் மைவாகனன் வநதே வயிற்றினிற் பற்றினனே (தனிப்பா. 1, 186, 14).

மைவிடை mai-viṭai, *n.* <id.+. Ram; ஆட்டுச்கிடாய். வாயின் மாடந்தொறும் மைவிடை வீழ்பப (புறநா. 33).

மைவிளக்கு mai-viḷakku, *n.* <id.+. Oil-lamp; எரிவிளக்கு. மாணிகக விளக்கை மைவிளக் கோடே எடுதது (சிலப. 9, 1-4 உரை).

மைவை-த்தல் mai-vai-, *v. intr.* <id.+. 1. To bewitch; to enchant by means of magic pigment; அஞ்சனமிட்டு மயக்குதல். 2. To prepare collyrium for the eye; கண்ணுக்கு அஞ்சனம் தயாரித்தல். *Loc.* 3. To drink to intoxication; வெறியுண்டாம்படி கட்குடித்தல்.

மைனம் maiṉam, *n.* prob. *mīna.* Fish; மீன். (யாழ். அக.)

மைனர் maiṉar, *n.* <E. Minor, person under age; சட்டப்படி சொத்தாளுதல் முதலியவற்றிற் குரிய வயதடையாதவ-ன்-ள். *Mod.*

மைனர்விளையாட்டு maiṉar-viḷaiyāṭṭu, *n.* <மைனர்+. Lavish expenditure by a person in his nonage; சிறுவயதிற் கண்டபடி செலவு செய்கை. *Colloq.*

மைனு maiṉā, *n.* <U. *mainā.* Common myna, *Acridotheres tristis;* நாகணவாய்ப்புள்.

மைனிகன் maiṉikaṉ, *n.* White ant; கறையான். (யாழ். அக.)

மொ

மொ mo. The compound of ம் and ஒ.

மொக்கட்டை mokkaṭṭai, *n.* <மொக்கை. 1. [T. *mokkattu.*] Face; முகம். (யாழ். அக.) 2. That which is blunt; மழுக்கமானது. *Loc.*

மொக்கட்டைமுறித்தான் mokkaṭṭai-muṟittāṉ, *n.* <மொக்கட்டை+. Mischievous person; குறும்பன். (யாழ். அக.)

மொக்கணி mokkaṇi, *n.* prob. மொக்கு-+ அணி. [K. *bakkana.*] 1. Feed-bag, nose-bag; குதிரைக்குக் கொள்ளு முதலிய உணவு கட்டும் பை. மொககணி முட்டக்கட்டி (திருவாலவா. 29, 6). 2. A kind of bridle for mules, etc.; கோவேறுகழுதை முதலியவற்றுக்கிடுங் கடிவாளம் போன்ற கருவிவகை. (J.)

மொக்களி-த்தல் mokkaḷi-, *11 v. tr.* To detain a person in his journey; பயணத்தில் தடைசெய்தல். (W.)—*intr.* To stop on a journey; to sojourn; பயணத்தில் தங்குதல். (யாழ். அக.)

மொக்கன் mokkaṉ, *n.* <மொக்கு³. Stout person or thing; தடித்த-வன்-வள்-து. *Loc.*

மொக்கித்தின்(னு)-தல் mokki-t-tiṉ-, *v. tr.* <மொக்கு-+. To eat greedily in large mouthfuls; ஒருசேர விழுங்கி யுண்ணுதல். (W.)

மொக்கு¹-தல் mokku-, *5 v. tr.* [T. *mekku*, K. *mukku.*] 1. See மொக்கித்தின்-. முக் கனி சாக்கரை மொக்கிய (திருப்பு. 263). 2. To beat soundly; அடித்தல். (பிங்.)

மொக்கு² mokku, *n.* <மொக்குள். [T. *mogga*, K. *moggu.*] 1. cf. மொட்டு. Flower-bud; பூமொட்டு. 2. Bud-like designs on sarees; சீலைகளில் மொட்டுப்போற் செய்யப்படும் வேலைப் பாடு. 3. Ornamental designs drawn on the floor with powder; தரையிலிடும் பூக்கோலம். 4. Bowl of an oil lamp; குத்துவிளக்கின் தகழி. (W.)

மொக்கு³ mokku, *n.* cf. *mukha.* [T. *mokka.*] 1. Knot in trees; மரக்கணு. (யாழ். அக.) 2. See மொக்கை.

மொக்குப்போ-தல் mokku-p-pō-, *v. intr.* <மொக்கு[3]+. See மொக்கைபோ-. *Colloq.*

மொக்குமா mokku-mā, *n.* <மொக்கு[2]+ மா[6]. Powder for drawing decorative designs on the floor; ஒருவகைக் கோலப்பொடி. *Loc.*

மொக்குழி mokkuḻi, *n.* prob. மொக்குளி-. A kind of confection; சிற்றுண்டிவகை. *Loc.*

மொக்குள் mokkuḷ, *n.* <*mukula.* [K. *mugul.*] 1. Flower-bud, மலரும்பருவத்துள்ள அரும்பு. முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போல் (குறள், 1274). 2. Bubble; நீர்க்குமிழி. பெய்மழை மொக்குளின் (நாலடி, 27).

மொக்குளி-த்தல் mokkuḷi-, *11 v. intr.* <மொக்குள். [K. *mukkuḷisu.*] 1. To bubble up; குமிழியுண்டாதல். (W.) 2. To gather up; திரளு தல். (யாழ். அக.)

மொக்குளிப்பான் mokkuḷippāṉ, *n.* <மொக்குளி-. Chicken-pox; கொப்புளிப்பான்.

மொக்கை mokkai, *n.* <மொக்கு[3]. 1. Bluntness, as of an iron style; கூரின்மை. பேனு மொக்கையாய் விட்டது. 2. Bulkiness; stoutness; பருமன். 3. Piece of wood; stump; மரத்துண்டு. *Loc.* 4. Low condition; தாழ்வு. *Loc.* 5. Ignominy, shame, disgrace; அவமானம். (யாழ். அக.) 6. Respect; மதிப்பு (யாழ். அக.) 7. Face; முகம். மொக்கைக்காட்டி யடித்தான். *Loc.*

மொக்கைகுலை-தல் mokkai-kulai-, *v. intr.* <மொக்கை+. To be disgraced; அவமானப் படுதல். (W.)

மொக்கைச்சோளம் mokkai-c-cōḷam, *n.* prob. மக்கா+. Indian corn. See மக்காச் சோளம். (மூ. அ.)

மொக்கைபோ-தல் mokkai-pō-, *v. intr.* <மொக்கை+. 1. To be disgraced; அவமானப் படுதல். மொக்கைபோகச் செகுத்திடுவோ ம பொருள (திருப்பு. 603). 2. To become blunt, as a knife; முனை மழுங்குதல். (யாழ். அக.)

மொக்கையீனம் mokkai-y-īṉam, *n.* <id. +. Disrespect; மதிப்புக்குறைவு. (யாழ். அக.)

மொகசல் mokacal, *n.* <U. *mohassal.* Guard placed over a revenue defaulter; மோதூல்.

மொகத்தமா mokattamā, *n.* <Arab. *muqaddamā.* Subject-matter of a case or law-suit; வழக்குவிஷயம். (C. G.)

மொகதர்பா mokatarpā, *n.* <Arab. *mohatarifa.* Tax on arts and trades; தொழில்வரி.

மொகமொகெனல் mokamokeṉal, *n.* Onom. expr. of (a) boiling; நீர்க்கொதிப்பின் ஒலிக்குறிப்பு.: (b) gurgling sound, as of water poured from a narrow-necked vessel; ஒடுத்துக் குறுகிய பாத்திரத்தினின்றும் நீர் ஊற்றுங்காலுண்டாம் ஈரடுக்கொலிக் குறிப்பு. (சூடா.)

மொகர் mokar, *n.* <Persn. *mohar.* (W.) 1. Seal. See முகர். 2. See மொகரா.

மொகர்வை-த்தல் mokar-vai-, *v. intr.* <மொகர்+. 1. To seal; முத்திரையிடுதல். *Loc.* 2. (Mus.) To finish a time-beat by emphatic strokes, in drumming; மத்தளமுதலியவற்றில் தாளத்தீர்மான மிடுதல்.

மொகரம் mokaram, *n.* <Arab. *muharram.* A Muhammadan festival in the Arabic month of Muharram; மொகரம் என்ற அரபிமாதத்து வரும் ஒரு முகம்மதிய பண்டிகை.

மொகரர் mokarar, *adj.* <Arab. *muqarrar.* Appointed, fixed; நியமிக்கப்பட்ட. (C. G.)

மொகரா mokarā, *n.* <Persn. *mohar.* 1. A gold coin = Rs. 15; பதினைந்து நூபாய் பெறு மானமுள்ள பொன்னுணயம். 2. Gold coin, dollar, etc.; பொன்னுணயம்.

மொகரீர் mokarīr, *n.* <Arab. *muharrir.* Clerk, writer, scribe; குமாஸ்தா. (C. G.)

மொகலிங்கம் mokaliṅkam, *n.* [T. *mogalingamu.*] Weaver's beam. See மகலிங்கம். (M. M. 1022.)

மொகாசா mokācā, *n.* <முகாசா. Village or land assigned by a king to his relatives or dependents, either rent-free or at a low quit-rent, on condition of military service; போரில் உதவும்பொருட்டுத் தன் உறவினர்க்கும் சார்ந்தோர்க் கும் அரசன் இறுமாக வழங்கிய பூமி. (C. G.)

மொகாபிலா mokāpilā, *n.* <Arab. *muqābala.* Comparing of a fair copy with its original or draft; நகலை மூலப்பிரதியோடு ஒப் பிடுகை. (C. G.)

மொகுமொகு-த்தல் mokumoku-, *11 v. intr.* To resound; ஒலித்தல். எழுகடல்களு மொகு மொகுதெனெ (பாரத. பதினேழன். 86).

மொகுமொகுமெனல் mokumokumeṉal, *n.* See மொகுமொகெனல். (திவா.)

மொகுமொகெனல் mokumokeṉal, *n.* Onom. expr. of (a) resounding; ஒலிக்குறிப்பு. மொகுமொகென் றொலி மிகுந் தமருகங்கள் (கலிங். 100).: (b) gushing, as of water; நீர்பெருகுதற் குறிப்பு. மொகுமொகென விருவிழிநீர் முத்திறைப்ப (தாயு. பொருள்வ. 4).

மொங்கன் moṅkaṉ, *n.* prob. மொங்கான். See மோக்சன். (W.)

மொங்கான் moṅkāṉ, *n.* cf. மொக்கு³. 1. Rammer for roads; இடிகட்டை. (W.) 2. Anything large and heavy; பெருத்துக் கனத்த பொருள். *Colloq.*

மொங்கான்சாத்து-தல் moṅkāṉ-cāttu-, *v. tr.* <மொங்கான் +. See மொங்கான்வை-, 2.

மொங்கான்வை-த்தல் moṅkāṉ-vai-, *v. tr.* <id.+. 1. To ram; இடிகட்டையால் நொறுக்குதல். 2. To deceive; ஏமாற்றுதல். *Colloq.*

மொங்கின் moṅkiṉ, *n.* Horizontal wooden block to which the fore-tack of a sail is fastened; கப்பலின் பாய்க்கயிறு கட்டும் கட்டை. *Naut.*

மொச்சட்டங்கொட்டு-தல் moccaṭṭaṅ-koṭṭu-, *v. intr.* <மொச்சட்டம் +. To smack; நாவாற் கொட்டியொலித்தல். *Loc.*

மொச்சட்டம் moccaṭṭam, *n.* Smacking; நாவாற் கொட்டியொலிக்கை.

மொச்சடி-த்தல் moccaṭi-, *v. intr.* <மொச்சு +. To emit a foul smell, as goats; துர்நாற்றம் வீசுதல். (W.)

மொச்சி mocci, *n.* <Hind. *mōcī*. One who serves out articles of stationery in an office. See முச்சி³, 1.

மொச்சியன் mocciyaṉ, *n.* <மொச்சி. Artist; painter; சித்திரக்காரன். *Loc.*

மொச்சு moccu, *n.* <மொச்சை¹. [T. *muccu*.] Foul smell, as of goats; துர்நாற்றம். (W.)

மொச்சுமொச்செனல் moccumocceṉal, *n.* Onom. expr. of munching; அசையிட்டு உண்ணும் ஒலிக்குறிப்பு.

மொச்சை¹ moccai, *n.* cf. கொச்சை. Foul smell; துர்நாற்றம். மொச்சைய வமணரும (தேவா. 579, 10).

மொச்சை² moccai, *n.* [M. *mocca*.] 1. Hyacinth bean, climber, *Dolichos*; ஒரு வகைப் பயற்றுக்கொடி. (சிலப. 14, 211, உரை.) 2. Lablab, climber, *Dolichos lablab*; பயற்றுக்கொடிவகை.

மொச்சைக்கொட்டை moccai-k-koṭṭai, *n.* <மொச்சை² +. Hyacinth bean; மொச்சையின் விதை. (பதார்த்த. 837.)

மொச்சைப்பயறு moccai-p-payaṟu, *n.* <id.+. See மொச்சைக்கொட்டை. (W.)

மொச்சையடி-த்தல் moccai-y-aṭi-, *v. intr.* <மொச்சை¹ +. To emit a bad odour, as rancid curd, etc.; தயிர் முதலாயின துர்நாற்றம் வீசுதல். *Loc.*

மொச்சையவரை moccai-y-avarai, *n.* <மொச்சை² +. See மொச்சை², 1. *Loc.*

மொசடி mocaṭi, *n.* A sea-fish, purplish-red, attaining 16 in. in length, *Upeneus indicus*; ஊதாக்கலந்த செந்நிறமுள்ளதும் 16 அங்குலம்வரை வளர்வதுமான கடல்மீன்வகை.

மொசி¹-தல் moci-, 4 *v. intr.* cf. மொய்¹-. To swarm; மொய்த்தல். கடுந்தே றுறுகிளை மொசிந் தன துஞ்சும (பதிற்றுப். 71, 6).

மொசி²-த்தல் moci-, 11 *v. tr.* cf. பொசி²-. To eat; தின்னுதல். மையூன் மொசித்த வொக்க லொடு (புறநா. 96).

மொசிங்கிப்பாறை mociṅki-p-pāṟai, *n.* Horse mackerel, silvery blue, attaining 13 in. in length, *Caranx djedaba*; வெண்மைகலந்த நீலநிறமுள்ளதும் 13 அங்குலம்வரை வளரக்கூடியதுமான கடல்மீன்வகை.

மொசுக்கு-தல் mocukku-, 5 *v. tr.* cf. மொக்கு-. See மொக்கித்தின்-. *Loc.*

மொசுக்கை mocukkai, *n.* <முசுக்கை. Bristly bryony. See முசுமுசுக்கை. (மூ. அ.)

மொசுப்பு mocuppu, *n.* perh. மொய்². Pride; செருக்கு. தீமபிலே கைவளருமபடி வளர்த்த மொசுபபெலலாம் (திவ். திருமாலை. 18, வ்யா. பக். 69).

மொசுமொசு-த்தல் mocumocu-, 11 *v.* [T. *musamusalāḍu*.] *intr.* To feel an itching sensation; தினவெடுத்தல். (W.)—*tr.* To worry, annoy; அடிக்கடி உபத்திரவித்தல்.

மொசுமொசுக்கை mocumocukkai, *n.* Bristly bryony. See முசுமுசுக்கை. (W.)

மொசுமொசெனல் mocumoceṉal, *n.* 1. Onom. expr. of (a) swarming, as of bees, வண்டு முதலியன மொய்த்தற்குறிப்பு.: (b) gurgling sound, as in drinking; நீர் உள்ளிறங்குதற்குறிப்பு. மாடு மொசுமொசென்று குடிக்கிறது. 2. Expr. signifying luxuriant growth of hair; மயிர் நன்கு வளர்தற் குறிப்பு.

மொஞ்சகம் moñcakam, *n.* prob. *mecaka*. Whisk made of peacock-feathers; பீலி. மொஞ் சகக் கையா (திருவாலவா. 26, 6).

மொஞ்சி moñci, *n.* Breasts; முலை. மொஞ்சி மொஞ்சியென் றழுமகுழந்தை (திருப்பு. 71).

மொஞ்சிநாற்றம் moñci-nāṟṟam, *n.* <மொஞ்சி+. Smell of breast-milk; முலைப்பால் மணம். (W.)

மொட்டந்தலை moṭṭan-talai, *n.* <மொட்டை+. See மொட்டைத்தலை. மொட்டந்தலையிற பட்டங்கட்டி யாளவந்தானோ. (W.)

மொட்டம்பு moṭṭampu, *n.* <id.+அம்பு[2]. Blunt arrow; கூரற்ற அம்பு. (பிங்.)

மொட்டி-த்தல் moṭṭi-, 11 *v. intr.* <மொட்டு. 1. To close in like a bud; குவிதல். *காமலா மொட்டித் திருதய மலர* (திருவாச. 4, 84). 2. To bud; to shoot forth buds; அரும்புதல். (சங். அக.)

மொட்டு moṭṭu, *n.* 1. Tender flower-bud; அரும்பு. *மொட்டலருமலா* (திருவாச. 29, 8). 2. Rounded top of a car; தேரின்கூம்பு. *மாமொட் டொடிந்து . . . மானதேர சிதைய* (பாரத. நான்கா நாள். 24). 3. [T. *modda.*] Glans penis; ஆண்குறியின் நுனி. (W.)

மொட்டுவெளித்தள்ளுதல் moṭṭu-veḷi-t-taḷḷutal, *n.* <மொட்டு+. Condition in which the foreskin is drawn back from the end of the penis and cannot be returned, *Paraphimosis;* ஆண்குறியின் மேற்றோல் மொட்டைமூடாமல் உள்வாங்கியுள்ள நிலை. (M. L.)

மொட்டை moṭṭai, *n.* cf. *muṇḍana.* [T. *moḍḍu,* M. *moṭṭu.*] 1. Bald head; shaven head; மயிர்நீங்கிய தலை. *மொட்டையம ணுதா* (தேவா. 325, 10). 2. Bluntness, as of a knife; கூரின்மை. 3. Stupidity, ignorance, dulness; அறிவின்மை. *மொட்டையபுத்தி.* *Colloq.* 4. Complete barrenness; வெறுமை. *மொட்டை மரம்.* 5. Imperfection, incompleteness; பூரணமின்மை. *மொட்டை வாக்கியம்.* 6. Unmarried young man, used in contempt; கலியாணமாகாத இளைஞன். (W.) 7. Anonymous petition. See மொட்டைவிண்ணப்பம். *Loc.*

மொட்டைக்கறுப்பன் moṭṭai-k-kaṟuppan, *n.* <மொட்டை+. (W.) 1. A kind of black paddy; கறுப்பு நெல்வகை. 2. Messenger of Yama; யமதூதன்.

மொட்டைக்காயிதம் moṭṭai-k-kāyitam, *n.* <id.+. 1. Anonymous letter; கையெழுத்தில்லாத கடிதம். *Mod.* 2. See மொட்டைவிண்ணப்பம்.

மொட்டைக்குல்லா moṭṭai-k-kullā, *n.* <id.+. A kind of flat cap; தட்டை வடிவான குல்லாவகை. (W.)

மொட்டைக்குறுவை moṭṭai-k-kuṟuvai, *n.* <id.+. A species of paddy, short and bent down, maturing in two months, dist. fr. *vāṟ-kuṟuvai;* இரண்டுமாதத்திற் பயிராகக்கூடியதும் தட்டையாய்க் கீழ்நோக்கி வளைவதுமான நெல்வகை.

மொட்டைக்கோபுரம் moṭṭai-k-kōpuram, *n.* <id.+. Unfinished tower of a temple; வேலை அரைகுறையாய்ச்செய்து நிறுத்தி விடப்பட்ட கோபுரம்.

மொட்டைச்சி moṭṭaicci, *n.* 1. Fem. of மொட்டையன். Bald-headed woman; மயிரற்ற தலையுடையவள். 2. Widow, as having a shaven head; கைம்பெண். 3. A medicinal powder. See பூநீறு, 2. (யாழ். அக.)

மொட்டைத்தலை moṭṭai-t-talai, *n.* <மொட்டை+. 1. Bald or shaven head; cropped head; மயிர்நீங்கிய சிரம். *தட்டைமுடி மொட்டைத்தலை* (அறப. சத. 61). 2. Bare, uncovered head; பாகை முதலியன தரியாத தலை.

மொட்டைதட்டு-தல் moṭṭai-taṭṭu-, *v. tr.* <id.+. See மொட்டையடி-, 2. *மாதனையெல்லாம மொட்டைதட்டிவிட்டான்.* (W.)

மொட்டைப்பிராது moṭṭai-p-pirātu, *n.* <id.+. See மொட்டைவிண்ணப்பம். *Loc.*

மொட்டைப்புத்தி moṭṭai-p-putti, *n.* <id.+. Stupidity, dulness of intellect; மழுங்கின அறிவு. (W.)

மொட்டைமச்சு moṭṭai-maccu, *n.* <id. + See மொட்டைமாடி.

மொட்டைமரம் moṭṭai-maram, *n.* <id. +. 1. Dead tree; பட்டுப்போனமரம். 2. Barren, unyielding tree; காயாமரம். 3. Tree stripped completely of its fruits, leaves, etc.; இலை பழம் முதலியன முற்றும் உதிர்ந்த மரம்.

மொட்டைமனு moṭṭai-maṉu, *n.* <id.+. See மொட்டைவிண்ணப்பம்.

மொட்டைமாடி moṭṭai-māṭi, *n.* <id.+. Open terrace or flat roof of a house; கட்டடம் அமையப்பெறாத மேற்றளம்.

மொட்டைமாடு moṭṭai-māṭu, *n.* <id.+. Hornless or dehorned cattle; கொம்பில்லா மாடு.

மொட்டையடி-த்தல் moṭṭai-y-aṭi-, *v. tr.* <id.+. 1. To shave the head entirely; தலை முழுதும் மழித்தல். 2. To strip completely, as a man of his wealth, as a tree of its fruits; முழுதுங் கொள்ளைகொள்ளுதல். *மரத்தை மொட்டையடித்துவிட்டார்கள்.*

மொட்டையர்ஜி mottai-y-arji, *n.* <id.+. See மொட்டைவிண்ணப்பம்.

மொட்டையன் mottaiyan, *n.* <id. 1. Bald-headed man; man with fully shaven or cropped head; மொட்டைத்தலையன். 2. Man completely stripped of his wealth; முழுதுமிழந்தவன். *Loc.*

மொட்டையாக்கு-தல் mottai-y-ākku-, *v. tr.* <id.+ See மொட்டையடி-, 2 *Loc.*

மொட்டையிடு-தல் mottai-y-itu-, *v. tr.* <id.+. See மொட்டையடி-.

மொட்டைவசனம் mottai-vacanam, *n.* <id.+. 1. Incomplete sentence; முடிவில்லா வாக்கியம். 2. Uncorroborated statement; நிஜப்படுத்தாத செய்தி.

மொட்டைவண்டி mottai-vanti, *n.* <id. +. Open cart without roof or hood; மேற்கூடில்லா வண்டி.

மொட்டைவிண்ணப்பம் mottai-vinnappam, *n.* <id +. Anonymous petition; கையெழுத்திடப்பெறாத மனு.

மொடமொடெனல் motamotenal, *n.* See மொடுமொடெனல். (*சது.*)

மொடு motu, *n.* 1. cf. மோடு¹. Bigness, bulkiness; பருமை. (J.) 2. Plenty; மிகுதி. (J.) 3. Cheapness; விலை முதலியவற்றின் நயம். (W.) பெருசசாளியை மூதத நயினுர் மொடுவாயக் கொணடு போனா (*குற்றா. குற.* 93, 2).

மொடுக்குமொடுக்கெனல் motukku-motukkenal, *n.* Onom. expr. of gulping; ஒலிக்குறிப்புவகை. மொடுக்குமொடுக்கென்று குடிக்கிறான். (W.)

மொடுகு motuku, *n.* [T. *murugu.*] A kind of bracelet; கையணிவகை.

மொடுமொடு-த்தல் motumotu-, 11 *v. intr.* 1. To rustle, as dried skin, starched cloth; பசையுள்ள ஆடை முதலியன ஒலித்தல். (W.) 2. To rumble, as the bowels; வயிறு இரைதல். 3. To hasten; விரைதல்.

மொடுமொடெனல் motumotenal, *n.* Onom. expr. signifying (a) rustling sound, as of dried skin, starched cloth; உலர்ந்ததோல் முதலியவற்றின் ஒலிக்குறிப்பு. (பிங.): (b) rumbling in the stomach; வயிறு இரைதற்குறிப்பு. *Colloq.*: (c) hastening; விரைதற்குறிப்பு. முன்னலோர் வெள்ளிய பெருமலைக் குட்டன் மொடுமொடு விரைந்தோட (*திவ். பெரியதி.* 1, 7, 5).

மொண்டணி montani, *n.* Knot in a tree. See மொந்தணி, 1. (J.)

மொண்டல் montal, *n.* <மொள்-. Taking liquid, as in a vessel; scooping; மொள்ளுகை. (*நாமதீப.* 757)

மொண்டன் montan, *n.* A species of *cāmai;* சாமைவகை (J.)

மொண்டாவன் montāvan, *n.* See மொண்டன். (J.)

மொண்டான் montān, *n.* perh. மொள்-. A vessel for taking water; நீர்மொள்ள உதவும் பாத்திரவகை. *Loc.*

மொண்டி¹ monti, *n.* cf. நொண்டி. [T. *mondi.*] 1. Lame person; நொண்டி. (W.) 2. One who, on being defeated in a game, makes excuses and refuses to admit defeat; ஆட்டத்தில் தன் தோல்வியை யேற்றுக்கொள்ளாமற் சாதிப்பவன். *Loc.*

மொண்டி² monti, *n.* See மொண்டன். (J.)

மொண்டி³ monti, *n.* <மொண்டு. [T. *mondi*, K. *monda*, Tu. *monti.*] See மொண்டுக்காரன்.

மொண்டு montu, *n.* <மிண்டு. [T. *mondi*, K. *mondu.*] 1. Refractoriness, unruliness; முரண்டு. (W.) 2. Annoyance, worry; தொந்தரவு. (*யாழ். அக.*)

மொண்டுக்காரன் montu-k-kāran, *n.* <மொண்டு+. (*யாழ். அக.*) 1. Refractory man; முரண்டுசெய்வோன். 2. Troublesome person; தொந்தரவு செய்பவன்.

மொண்ணன் monnan, *n.* <மொண்ணை. Bald-headed person; வழுக்கைத்தலையன். வன்கணணா மொணணரை (*தேவா.* 705, 4).

மொண்ணி monni, *n.* Breast; முலை. (J.)

மொண்ணை monnai, *n.* cf. மண்ணை. 1. Baldness; வழுக்கை. 2. Bluntness; கூர்மையின்மை.

மொண்ணையன் monnaiyan, *n.* <மொண்ணை. Dullard, idiot; அறிவுமழுங்கினவன். *Tinn.*

மொணரி monari, *n.* perh. முணுமுணு-. One who grumbles; மோறுமோறுப்பவ-ன்-ள். *Loc.*

மொத்தப்பட்டா motta-p-pattā, *n.* <மொத்தம்+. Lease of a whole village or district; கிராமம் அல்லது ஜில்லாவை மொத்தமாக விடுங் குத்தகை. (W.)

மொத்தப்பைசல் motta-p-paical, *n.* <மொத்தம்+. 1. Settlement of land revenue based on a preliminary assessment of the whole village; கிராம முழுவதுக்கும் மொத்தத் தீர்வையை நிச்சயித்துப் பின்பு அத்தீர்வையைப் பட்டாவாரியாகப் பாகிக்கை. (R. T.) 2. Outright settlement, as of a business; முழுதுந் தீர்த்துவிடுகை.

மொத்தம் mottam, *n.* [T. *mottamu*, K. *motta*.] 1. Sum, total, aggregate; கூட்டுத்தொகை. 2. Whole; முழுமை. *பரிக்குழிப பரிமா மொத்தம்* (திருவாலவா. 28, 72). 3. Universality, generality; பொது. (அக. நி.) *எல்லாரையும் மொத்தமாய் வைதான்.* 4. cf. மொத்தை[1]. Bulkiness; பருமன். (W.)

மொத்தம்பைசல் mottam-paical, *n.* <மொத்தம்+. See மொத்தப்பைசல் (G. Tj. D. I, 182.)

மொத்தளம் mottaḷam, *n.* <id. (யாழ். அக.) 1. Crowd; கூட்டம். 2. See மொத்தம், 1.

மொத்தி motti, *n.* <மொத்து-. Excrescence; protuberance; swelling; புடைப்பு. (J.)

மொத்தினி mottiṉi, *n.* perh. மொத்து[1]-. Foam; நுரை. (சங். அக.)

மொத்து[1]-தல் mottu-, 5 *v. tr.* prob. மோது-. [T. *mottu*, K. *mōdu*, Tu. *mutte*.] To strike, beat; அடித்தல். *எதிர்மொத்தி நின்று* (கம்பரா. முதற்போ. 66).

மொத்து[2] mottu, *n.* <மொத்து[1]-. Stroke, blow; அடி. *மோதுதிரையான் மொத்துண்டு* (சிலப். 7, பாடல் 7).

மொத்து[3] mottu, *n.* cf. மொத்தை[2]. [T. *moddu*, K. *modda*.] 1. Dullard; idiot; மூடமானவன்-வள்-து. 2. Lazy person or animal; சுறுசுறுப்பில்லாத-வன்-வள்-து. *Colloq.*

மொத்து[4]-தல் mottu-, 5 *v. intr.* perh. மொத்தை[1]. To swell; வீங்குதல். *அவனுக்கு முகம் மொத்தியிருக்கிறது.*

மொத்துப்பிண்டம் mottu-p-piṇṭam, *n.* <மொத்து[3]+. See மொத்து[3]. *Loc.*

மொத்தை[1] mottai, *n.* [T. *mudda*, K. *mudde*.] 1. Ball, round lump; உருண்டை. (W.) 2. Bulkiness; stoutness; பருமன். (யாழ். அக.)

மொத்தை[2] mottai, *n.* perh. *mugdhā*. [K. *moddi*.] Ignorant woman; மூடப்பெண். (W.)

மொத்தையுரு mottai-y-uru, *n.* <மொத்தை[1]+உரு[3]. Learning by rote; நெட்டுரு. *Loc.*

மொதிரகண்ணி motira-kaṇṇi, *n.* Climbing flax; மோதிரக்கண்ணி. (L.)

மொதுமொதெனல் motumoteṉal, *n.* Onom. expr. signifying (a) sound of swallowing or sucking in liquid; விழுங்சல் அல்லது உறிஞ்சல் ஒலிக்குறிப்பு. (W.): (b) crowding together; திரளுதற்குறிப்பு. *மொதுமொதென்று சனங்கள் குவிந்தார்கள்.*: (c) luxuriance in growth; கொழுத்து வளர்தற்குறிப்பு.

மொந்தணி montaṇi, *n.* <மொத்து[4]-. 1. Protuberance or knot in a tree; மரத்தின் கணு. (J.) 2. See மொத்தை[1]. (யாழ். அக.)

மொந்தணியன் montaṇiyaṉ, *n.* <மொந்தணி. (யாழ். அக.) 1. Anything in round lump; ball; உருண்டையானது. 2. Anything bulky; பருத்தது.

மொந்தன் montaṉ, *n.* [T. *bonta*.] Abyssinian banana, s. tr., *Musa ensete;* வாழைவகை. (பதார்த்த. 728.)

மொந்தை montai, *n.* [T. *munta*, K. *munde*, M. *monta*.] 1. A small earthen vessel; சிறு மட்பாண்டவகை. *நீர்மொள்ள மொந்தைக்கும் வழியில்லை* (அருட்பா, V, சுந்தரசரண. தனிப்பா. 2). 2. A small wooden vessel; சிறு மரப்பாண்டவகை. 3. A small vessel; சிறு பாத்திரவகை. *Loc.* 4. A drum with one face; ஒருகட்பறைவகை. (பிங்.) 5. Anything stout or big; பருத்தது. (யாழ். அக.)

மொந்தையுரு montai-y-uru, *n.* <மொந்தை+உரு[3]. See மொத்தையுரு. *Colloq.*

மொப்படி-த்தல் moppaṭi-, *v. intr.* <மொப்பு+. To emit a rancid smell; வெடிநாற்றம் வீசுதல். (W.)

மொப்பு moppu, *n.* prob. மோ-. 1. Rancid smell, as of sour milk or putrid meat; வெடிநாற்றம். (W.) 2. Piece of cloth tied over the she-goat's udder to prevent its kid from sucking the milk; குட்டி பாலைக்குடியாதபடி ஆட்டின் மடிவில் சுற்றிவைக்குந் துணி. (சங். அக.)

மொபஸில் mopasil, *n.* <Arab. *mufassal*. Mofussil; நாட்டுப்புறம். (W.)

மொய்[1]-த்தல் moy-, 11 *v.* [K. *musuru*.] *intr.* 1. To crowd, press, throng, swarm, as flies, bees, ants; நெருங்குதல். *வாளோர் மொய்ப்ப* (புறநா. 13). 2. To spread, as an eruption; மேற்பரவுதல். *கரப்பான் மொய்க்கிறது.* (W.) 3. To abide in; இருத்தல். (அக. நி.)—*tr.* 1. To crowd round, swarm round; நெருங்கிச்சுற்றுதல். 2. To annoy, tease; உபத்திரவம் பண்ணுதல். 3. To cover; to enclose; மூடுதல்.

TAMIL LEXICON

Published under the authority of the University of Madras

VOL. VI. PART II

மொ—வ.

MADRAS
PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, MYLAPORE

1934

Price Rs. 2

மொய்² moy, *n.* <மொய்¹-. 1. Press, throng, swarm; நெருக்கம். மொய்கொண் மாக்களை (மணி. 19, 136). 2. Company, assembly, crowd; கூட்டம். (பிங்.) 3. Closeness, tightness; இறுகுகை. மொய்வளம் பூத்த முயக்கம் (பரிபா. 18, 18). 4. Greatness, excellence; பெருமை. மொய்ய சிதைக்கு மொற்றுமை யின்மை (நான்மணி. 23). 5. Strength; வலிமை. மொய்வளஞ் செருக்கி (பதிற்றுப். 49, 8). (பிங்.) 6. Battle, war; போர். மொய்தாங்கிய முழுவலித் தோள (பு. வெ. 8, 28, கொளு). (சூடா.) 7. Battle-field; போர்க்களம். (பிங்.) மொய்த் தலைதனில் . . . முடுகினனே (இரகு. திக்கு. 87). 8. Enemy; enmity; பகை. மொய்ம்மிரிய (பு. வெ. 3, 5). 9. Elephant; யானை. (பிங்.) 10. Bee; வண்டு. (சூடா.)

மொய்³ moy, *n.* cf. மோய். Mother; தாய். (அக. நி.)

மொய்⁴ moy, *n.* cf. மொயின். 1. [K. *muy.*] Presents given on special occasions, as at a wedding; விவாக முதலியவற்றில் வழங்கும் நன்கொடைப்பணம். *Colloq.* 2. Contribution, as to a charity; மகமை. *Loc.*

மொய்⁵-த்தல் moy-, *11 v. tr.* prob. மொய்⁴. To give, bestow; கொடுத்தல். (அக. நி.)

மொய்க்கணக்கு moy-k-kaṇakku, *n.* <id.+. List of presents made on marriage or other special occasions; விவாக முதலியவற்றில் வழங்கும் நன்கொடைகளின் குறிப்பு.

மொய்கதிர் moy-katir, *n.* prob. மொய்³+. 1. Nipple of woman's breast; teat of animal; முலைக்காம்பு. (நிகண்டு.) 2. Breast; udder; முலை. (சது.)

மொய்த்தாய் moy-t-tāy, *n.* <id.+. Mother; தாய். (யாழ். அக.)

மொய்தாய் moy-tāy, *n.* See மொய்த்தாய். (யாழ். அக.)

மொய்ப்பணம் moy-p-paṇam, *n.* <மொய்⁴ + பணம்². See மொய்⁴.

மொய்ம்பன் moympaṉ, *n.* <மொய்ம்பு. Warrior; வீரன். வாளி . . . மொய்ம்ப ரகலங்களைக் கிழித்து (கம்பரா. முதற்போ. 145).

மொய்ம்பு moympu, *n.* prob. மொய்¹-. [K. *muyvu.*] 1. Strength, valour, prowess; வலிமை. முரண்சேர்ந்த மொய்ம்பினவர்க்கும் (குறள், 492). 2. Shoulder; தோள். பூந்தாது மொய்ம்பின வாக (கலித். 88.)

மொய்யற்சன்னி moyyaṟ-caṉṉi, *n.* prob. id.+. Catalepsy. See முடிசன்னி. (யாழ். அக.)

மொய்யெழுத்து moy-y-eḻuttu, *n.* <மொய்⁴+. Deed of endowment for a charitable purpose; தருமசாஸனம். (யாழ். அக.)

மொய்யெழுது-தல் moy-y-eḻutu-, *v.* <id. +. *tr.* 1. To give presents on marriage or other special occasions; மணமுதலியவற்றில் நன்கொடை யளித்தல். 2. To subscribe small sums to a charity; தருமத்திற்குச் சிறுதொகை உதவுதல் (W.) 3. To write off, as irrecoverable; கொடுத்துத் திரும்பக்கிடையாதனவற்றைச் செலவாக எழுதுதல். —*intr.* To make a list of presents given on marriage or other special occasions; விவாக முதலியவற்றில் அளிக்கும் நன்கொடைகளைப் பதிவு செய்தல்.

மொய்யெனல் moy-y-eṉal, *n.* Expr. signifying (a) slowness; மந்தக்குறிப்பு. (சூடா.): (b) sourness; புளித்தற்குறிப்பு. *Colloq.*

மொயின் moyiṉ, *n.* A payment or contribution, as to a temple. See மோகினி². (R. T.)

மொயினி moyiṉi, *n.* A payment or contribution, as to a temple. See மோகினி². (R. T.)

மொரசுபறையன் moracu-paṟaiyaṉ, *n.* prob. முரசு+. A division of the Paraiya caste, said to have migrated from Canara to the Tamil country; கன்னடதேசத்திலிருந்து தமிழ்நாடு புகுந்த பறையர்வகை. (E. T. v, 80.)

மொரமொர-த்தல் moramora-, *11 v. intr.* 1. To rustle; முறுக்கா யொலித்தல். 2. To be neat. See முறமுற-, 1. 3. To be rough or stiff; to be crisp. See முறமுற-, 2.

லகாய்-த்தல் lakāy-, 11 v. <Hind. *lagānā.* [K. *lagāysu.*] intr. To prosper in an eminent degree; to be successful; காரியசித்தி பெறுதல்.—tr. *Loc.* 1. To deal severely; to chastise; தண்டித்தல். 2. To eat to satiety; நிரம்ப உண்ணுதல்.

லகாரம் la-kāram, n. <ல+காரம்². A term denoting a lakh; லக்ஷத்தைக் குறிக்கும் ஒருசொல். *அவருக்கு ஒரு லகாரம் இருக்கும்.*

லகாவ் lakāv, *v. imp.* <Hind. *lagav.* Beat; அடி என்னேவல். லகாவ், லகாவ், லகாவ் இந்த லண டனைப்பாவிச் சண்டாளனை (பிரதாப. விலா. 102).

லகான் lakāṉ, *n.* <லகாம. Rein; கடிவாள வார்.

லகிமா lakimā, *n.* <*laghiman.* The supernatural power of levitation, one of *aṣṭamā-citti*, q.v.; அஷ்டமாசித்திகளுள் கனமற்றதாகும் ஆற்றல்.

லகு laku, *n.* <*laghu.* 1. Ease. See இலகு, 2. திருக லகுவாய்ப்பறந்து (தனிப்பா. i, 335, 43). 2. See இலகு, 1, 3, 4, 5, 7. 3. Alleviation; தணிவு. வியாதி லகுவாயிருக்கிறது. *Madr.*

லகுத்வம் lakutvam, *n* <*laghu-tva.* Lightness; ease; இலேசு.

லகுபஞ்சமூலம் laku-pañcamūlam, *n.* <*laghu*+. A compound medicine. See சிறு பஞ்சமூலம், 1.

லகுபக்ஷணம் laku-pakṣaṇam, *n.* <id +. Lunch; light refreshments; சிற்றுண்டி. *Mod.*

லகுலாட்சி lakulāṭci, *n.* A kind of lute; வீணைவகை. (பாரத. ஒழிபி. 16.)

லகுவுபிகுவாய் lakuvupikuvāy, *adv.* <லகு+பிகு+ஆ-. [K. *lagubiguvāyi.*] By some means or other; in any way possible; ஏற்றதோர் முறையில்.

லகோடா lakōṭā, *n.* <Hind. *lakhōṭā.* 1. That which is besmeared with lac, மெழுகாற் பூசப்பட்டது. *Loc.* 2. Envelope of paper, as sealed or wafered; காகிதவுறை. (W.)

லகோடாப்பற்று lakōṭā-p-parṟu, *n.* <லகோடா+. Lit., small particles of cooked rice for gumming envelopes. [காகிதவுறையை ஒட்டவுதவும் சோற்றுப்பருக்கை] A small quantity; particle; மிகச்சிறியவளவு. *Loc.*

லங்கடா laṅkaṭā, *n.* <Persn. *langḍā* <*lang.* Lame person; நொண்டி. *Loc.*

லங்கணம் laṅkaṇam, *n.* <*laṅghana.* Fasting; பட்டினி. *Loc.*

லங்கர் laṅkar, *n.* <Persn. *laṅgar.* Anchor; நங்கூரம்.

லங்கர்கானு laṅkar-kāṉā, *n.* <Persn. *laṅgar-khānā.* Alms-house; அன்னசாலை. (W.)

லங்கர்பாய்-தல் laṅkar-pāy-, *v. intr.* <லங்கர்+. To be moored; to be at anchor; நங்கூரம் பற்றுதல்.

லங்கர்போடு-தல் laṅkar-pōṭu-, *v. intr.* <id.+. See லங்கரடி-.

லங்கரடி-த்தல் laṅkar-aṭi-, *v. intr.* <id.+. 1. To cast anchor; நங்கூரம்போடுதல். 2. To turn a somersault; அந்தரடித்தல்.

லங்கனம் laṅkaṉam, *n.* <*laṅghana.* 1. Crossing, as of the sea; கடல் முதலியன கடக்கை. 2. Violation of prescribed rules; நியமந்தவறுகை. சமயலங்கனமுந தெய்வ நிந்தையுஞ்செய்தனா (பெரிய பு. திருநாவுக். 83). 3. See லங்கணம்.

லங்குனி laṅkuṉi, *n.* Looseness of tooth of a horse; குதிரையின் பற்களுக்கு உண்டாம் அசைவு. (அசுவசா. 7.)

லங்கேச்சுரம் laṅkēccuram, *n.* <*laṅkēś-vara.* A kind of medicinal pill; ஒருவகை மாத்திரை. (பதார்த்த. 1224).

லங்கேச்சுரரசம் laṅkēccura-racam, *n.* <id.+. A kind of medicinal preparation; மருந்துவகை. (பைஷஜ. 154.)

லங்கை laṅkai, *n.* <*laṅkā.* See இலங்கை, 1, 2, 3.

லங்கோடா laṅkōṭā, *n.* See லங்கோடு.

லங்கோடி laṅkōṭi, *n.* <Hind. *laṅgoṭī.* See லங்கோடு. *Loc*

லங்கோடு laṅkōṭu, *n.* <Hind. *laṅgōṭa.* Strip of cloth fitted to the loins, as of a wrestler; சல்லடம். *Loc.*

லச்சி[1] lacci, *n.* [T. *lacci.*] Scavenger woman; குப்பைக்காரி. *Loc.*

லச்சி[2]-த்தல் lacci-, 11 *v. intr.* <*laj.* To be shy; கூச்சமடைதல். (தக்கயாகப. 326, உரை.)

லச்சை[1] laccai, *n.* <*lajjā.* See இலச்சை.

லச்சை[2] laccai, *n.* See லச்சி[1].

லச்சை[3] laccai, *n.* prob. நச்சு[4]. Trouble, annoyance; தொந்திரவு. என்னை லச்சைபண்ணுதே.

லசுனி lacuṉi, *n.* A property of rubies. See இலசுனி. குழியும் லசுனியு முடையது (S. I. I. ii, 81).

லஞ்சம் lañcam, *n.* <*laṃcā.* Bribe. See இலஞ்சம்.

லஞ்சாக்கொடுக்கு lañcā-k-koṭukku, *n.* <*lañjā*+கொடுக்கு[2]. Whoreson; அவிசாரிமகன்.

லஞ்சாகோர்[1] lañcā-kōr, *n.* <*laṃcā*+U. *khōr.* One who habitually receives bribes; பரிதானம்வாங்குவோன்.

லஞ்சாகோரி[2] lañcā-kōri, *n.* <*lañjā*+. Loose woman; தீயொழுக்கமுள்ள பெண்.

லட்சம் latcam, *n.* <*lakṣa.* Lakh; நூறாயிரம். (W.)

லட்சாதிபதி laṭcātipati, *n.* <id+*adhi-pati.* A person owning property worth a lakh of rupees and more; லட்சம் ரூபாய்க்குமேற் பெறுமானமுள்ள ஆஸ்தியுடையவன்.

லட்சுமி laṭcumi, *n.* See லக்ஷ்மி. (தக்கயாகப. 38, உரை.)

லட்டு laṭṭu, *n.* <*laḍḍu.* See லட்டுகம். (W.)

லட்டுகம் laṭṭukam, *n.* <*laḍḍuka.* A ball-shaped sweetmeat. See இலட்டு.

லடாய் laṭāy, *n.* <Hind. *laḍāī.* 1. Fighting, fight; சண்டை. 2. Bickering, abusive quarrel; வாய்க்கலகம்.

லடி laṭi, *n.* <Hind. *laḍī.* Skein of lace, nearly 440 yards; சுமார் 440 கஜவளவுள்ள சரிகைக்கண்டு.

லடு laṭu, *n.* <Hind. *lāṭṭa. Naut.* 1. Fair-lead; thimble or cringle to guide a rope; கப்பலில் கயிறு ஒழுங்காகச் செல்லுதற்பொருட்டு அமைத்த கருவிவகை. 2. Plummet; கடலின் ஆழமறிதற்கு விடப்படுங் கயிற்றிற் கட்டியிருக்கும் ஈயக்குண்டு.

லண்டன்[1] laṇṭaṉ, *n.* <லண்டு. [K. *lam-bani.*] 1. A class of mendicants. See கல்லுளிமங்கன். 2. Stubborn man; சண்டி. 3. Man of loose conduct; நெறிகெட்டவன். இந்த லண்டனை . . . நன்றாய் லகாவ் (பிரதாப. விலா. 102).

லண்டன்[2] laṇṭaṉ, *n.* <Hind. *laṇd. Membrum virile;* ஆண்குறி. *Madr.*

லண்டன்[3] laṇṭaṉ, *n.* <E. London; ஆங்கில நாட்டின் தலைநகரம்.

லண்டன்சீனி laṇṭaṉ-cīṉi, *n.* <லண்டன்[3] +. White sugar; வெள்ளைச் சர்க்கரை. *Tinn.*

லண்டி laṇṭi, *n.* Fem. of லண்டன். 1. Stubborn, intractable woman; சண்டி. 2. Woman of loose conduct; துர்நடத்தையுடைய பெண்.

லண்டு laṇṭu, *n.* prob. *laḍḍa.* cf. Hind. *launḍa.* Stubbornness; சண்டித்தனம். *Loc.*

லத்தா lattā, *n.* <Hind *lat.* Blow, kick; உதை. நான் உனக்கு ஒரு லத்தா கொடுப்பேன்.

லத்தாடு lattāṭu, *n.* [K. *laṭāḍu.*] Vexation; agitation; சஞ்சலம். (W.)

லத்தி[1] latti, *n.* cf. *lanḍa.* [T. K. *laddi.*] Dung of horses, asses, elephants, camels. See இலத்தி[1].

லத்தி[2] latti, *n.* See லதி. *Mod.*

லத்திபோடு-தல் latti-pōṭu-, *v. intr.* <லத்தி[1]+. Lit., to pass stools. [மலங்கழித்தல்] To be afraid; பயப்படுதல்.

லத்தீன் latīṉ, *n.* <E. Latin; இத்தாலிய தேசத்தில் முற்காலத்து வழங்கின பாஷை.

லத்தை[1] lattai, *n.* perh. *labdhā.* Mercy, compassion; கிருபை. லத்தையுற் றருள்வாய் (கந்தரந். 6).

லத்தை[2] lattai, *n.* (Astrol.) Evil effect due to the conjunction of a malefic planet and the moon in particular *nakṣatras;* குறித்த நக்ஷத்திரங்களில் சந்திரனோடு பாபக்கிரகங் கூடுவதாலுண்டாம் தீப்பயன். (பஞ்.)

லதாக்கிருகம் latā-k-kirukam, *n.* <*latā-gṛha.* Creeper-bower; கொடியால் அமைந்த வீடு.

லதாங்கி latāṅki, *n.* <*latāṅgī.* 1. Woman of slender, creeper-like form; கொடிபோன்ற சரீரமுள்ள பெண். 2. (Mus.) A specific melody-type; ஓர் இராகம்.

லதாவேஷ்டிதம் latā-vēṣṭitam, *n.* <*latā* +*vēṣṭita.* A mode of sexual embrace, likened to a creeper clinging round a tree; கொடிபோலச் சுற்றித் தழுவும் ஆலிங்கனவகை. (கொக்கோ. 541.)

லதி lati, *n.*<U. *lāṭhī.* Staff, cane, cudgel; கழி. *Mod.*

லதை latai, *n.* <*latā.* Creeper. See இலதை[1], 1.

லப்தம் laptam, *n.* <*labdha.* Gain, acquisition; that which is obtained; அடையப்பெற்றது.

லப்தஹானி lapta-hāṉi, *n.* <id.+*hāni. Artta-nācam,* the fourth section of Pañca-tantiram, treating of the loss of what was gained; பஞ்சதந்திரத்துள் பெறிழத்தலைப்பற்றிக் கூறுவதான நான்காம் பகுதி.

லப்பக்கத்தி lappa-k-katti, *n.* <லப்பம்+. Putty-knife; மக்கு வைக்குங் கருவி. (C. G.)

லப்பம் lappam, *n.* prob. *lēpya.* [T. *lap-pamu,* K. *leppa.*] Putty, a kind of cement used to fill up cracks in wood, etc.; பலகை முதலியவற்றில் இடைவெளியின்றி இசைத்தற்குரிய மக்கு.

லப்பை lappai, *n.* A class of Tamil-speaking Muhammadans found chiefly on the

coasts of South India; தென்னிந்தியக் கடற்கரைப் பிரதேசங்களில் வசிப்பவரான தமிழ்ப்பேசும் முகம் மதியர்.

லபக்கெனல் lapakkeṉal, *n.* cf. U. *lapak.* Onom. expr. signifying (a) suddenness; விரைவுக்குறிப்பு: (b) gulping; விழுங்குதற்குறிப்பு.

லபி-த்தல் lapi-, *11 v.* <*labh. intr.* To be gained, obtained; to accrue; to succeed, come to a successful issue; சித்தித்தல். *காணரிய பெரியோராக டெரிசனம் லபிப்பதே கணணிணைகள செய்புண்ணியம்* (*அறப. சத.* 76).—*tr.* To obtain; பெறுதல். *ஆதிப்பிரமமா ஸ்ரீரங்க விமானத்தை லபித்து* (கோயிலொ. 1).

லபோலபோபண்டிகை lapō-lapō-paṇṭi-kai, *n.* <லபோலபோவெனல்+. The spring festival in honour of Kāma, as the occasion in which the beating of the open mouth with the palm is a marked feature; [*அகங்கையால வாயி லடித்துக்கொள்ளும திருவிழா*] காமன்பண்டிகை. *Loc.*

லபோலபோவெனல் lapō-lapō-v-eṉal, *n.* Expr. of beating the open mouth with the palm of the hand on account of sorrow; திறந்துள்ளவாயில் துக்கங் காரணமாகக் கையால் அடித்துக்கொள்ளுதற் குறிப்பு.

லம்பாடி lampāṭi, *n.* [T. *lambāḍi,* K. *lambāṇi.*] 1. A wandering caste; அலைந்து திரியும் ஒரு சாதி. 2. Vagrant; ஊர்ஊராய்த் திரிவோன். 3. A breed of cattle; மாட்டுச்சாதிவகை.

லம்பு[1] lampu, *n.* <வம்பு. Trouble; தொந்தரவு. (C. G.)

லம்பு[2]-தல் lampu-, *5 v. intr.* prob. அலம்பு-. cf. நெம்பு-. To be unsteady; to shake; அசைதல்.

லயம் layam, *n.* <*laya.* See இலயம். *ஒன்றேடொன்றாகவே பற்றிலயமாம் போதினில்* (*தாயு. சித்தா.* 3).

லயாவத்தை layāvattai, *n.* <id.+*avasthā.* (Śaiva.) Stage of involution of the universe; stage of absorption of the universe by the Supreme Being; பிரபஞ்சத்தை ஒடுக்குநிலை. (*சி. போ. பா. பக்.* 25.)

லயி-த்தல் layi-, *11 v. intr.* See இலயி-.

லலனாமணி lalaṉā-maṇi, *n.* <*lalanā*+. See லலனை.

லலனை lalaṉai, *n.* <*lalanā.* Woman; பெண்.

லலாடம் lalāṭam, *n.* <*lalāṭa.* 1. Forehead; நெற்றி. 2. A part of the crown; கிரீடவுறுப்புவகை.

லலாடலிபி lalāṭa-lipi, *n.* <id.+*lipi.* Hand-writing of Fate; தலையெழுத்து.

லலிதாஸஹஸ்ரநாமம் lalitā-sahasra-nāmam, *n.*<*Lalitā*+*sahasranāma.* The thousand holy names of the Goddess Pārvatī; உமாதேவியின் ஆயிரந்திருநாமக்கோவை. (*தக்கயாகப.* 76, *விசேடக்.*)

லலிதை lalitai, *n.* <*lalitā.* 1. Pārvatī; உமை. 2. (Mus.) A specific melody-type; ஓர் இராகம். (*பரத. இராக.* 56.)

லவ்வாலவ்வா lavvā-lavvā, *n.* See லவாலவா. *Loc.*

லவக்குலவக்கெனல் lavakku-lavakkeṉal, *n.* cf. லபக்கெனல. Onom. expr. signifying (a) a galloping sound; ஓட்டக்குறிப்பு: (b) gobbling in eating; விரைந்துவிழுங்குதற் குறிப்பு.

லவங்கம் lavaṅkam, *n.* <*lavaṅga.* See இலவங்கம்.

லவடா lavaṭā, *n.* <Hind. *lauṛā.* *Membrum virile;* ஆண்குறி.

லவண்டி lavaṇṭi, *n.* <Hind. *lauṇḍī.* See லண்டி.

லவணசமுத்திரம் lavaṇa-camuttiram, *n.* <*lavaṇa*+. Sea of salt water. See உப்புக்கடல். *அமிர்து கடைந்தது லவண சமுத்திரத்தென உணாக* (*தக்கயாகப.* 284, *உரை*).

லவணம் lavaṇam, *n.* <*lavaṇa.* Salt; உப்பு.

லவம் lavam, *n.* <*lava.* 1. Hair of cow's tail; பசுவின் வால்மயிர். *குசலவங்களாற ஞடைத்துக் குறிக்கொண்டாரகள்* (*உத்தரரா. இலவ.* 75). 2. (Mus.) A variety of *kālam.* See இலவம்[2], 2. *கணமோரெட்டும் லவ மெனப்படுமே* (*பரத. தாள.* 27). 3. Little; small particle; மிகச் சிறுபகுதி.

லவலேசம் lava-lēcam, *n.* <*lava*+*lēśa.* Smallest degree; சிற்றளவு. *நிலைகாணேம் லவலேசம்* (*இராமநா. ஆரணிய.* 3).

லவாடி lavāṭi, *n.* Prostitute; வேசி. (W.)

லவாலவா lavā-lavā, *n.* Children's game of ball, accompanied by singing *lavā-lavā;* லவாலவா என்று பாடிக்கொண்டு பந்தடிக்கும் சிறுவர் விளையாட்டு.

லவாலவாவெனல் lavā-lavā-v-eṉal, *n.* Onom. expr. signifying (a) being distressed or knocked about in life; அவஸ்தைப்படுதற்குறிப்பு: (b) crying in sorrow; துயரத்துடன் அழுதற்குறிப்பு.

லவுக்கார் lavukkār, *n.* <U. *lēva* <*lēpa*. Rough plastering with chunam; சன்னமாய்ப் பூசாத சுண்ணாம்புப் பூச்சு. *Loc.*

லவுண்டி lavunṭi, *n.* See லண்டி.

லளிதம் laḷitam, *n.* <*lalita*. 1. Wantonness, dalliance, sport; லீலை. சிட்டா பரிபால லளிதக்கார (திருப்பு. 55). 2. Grace, charm; இலாவண்ணியம். 3. Sweetness; மாதுரியம். 4. Ease, facility; சுலபம். 5. One of 28 *civākamam*; சிவாகமத்துள் ஒன்று. (சைவச. பொது. 335, உரை.)

லளிதை laḷitai, <*Lalitā*. Pārvatī. See லலிதை, 1. (நாமதீப. 24.)

லஜ்ஜாதத்தம் lajjā-tattam, *n.* <*lajjā*+. Customary presents made to relations or friends on auspicious occasions. See நாண்கோடை. (சுக்கிரநீதி, 145.)

லஷ்கர் laṣkar, *n.* <Persn. *laṣkar*. Army; படை. (C. G.)

லஸ்கர் laskar, *n.* <E. *lascar*. 1. Lascar, sailor; மாலுமி. 2. Labourer, tent-pitcher, peon (R. F.); சேவகன் முதலிய வேலையாள். (C. G.)

லஸ்தர் lastar, *n.* prob. E. *lustre*. Prismatic glass pendants of a chandelier; அலங்காரத்தொங்கல். *Colloq.*

லக்ஷ்மி lakṣmi, *n.* <*Lakṣmī*. See இலக்குமி.

லக்ஷ்மீகடாக்ஷம் lakṣmī-kaṭākṣam, *n.* <id.+. Prosperity, as due to the grace of Lakṣmi; பாக்கியம்.

லக்ஷ்மீகாந்தன் lakṣmī-kāntaṉ, *n.* <id.+. Viṣṇu, as the Lord of Lakṣmī; திருமால்.

லக்ஷ்மீநரசிம்மன் lakṣmī-naracimmaṉ, *n.* <id.+. Narasiṃha in His pose of embracing Lakṣmī; இலக்குமிதேவியைத் தழுவிய கோலத்துடன் உள்ள நரசிங்கமூர்த்தம்.

லக்ஷ்மீநாராயணன் lakṣmī-nārāyaṇaṉ, *n.* <id.+. Viṣṇu in His pose of embracing Lakṣmī; இலக்குமிதேவியைத் தழுவிய கோலத்தோடு காணப்படுந் திருமாலின் மூர்த்தம்.

லக்ஷ்மீபஞ்சமி lakṣmī-pañcami, *n.* <id.+. The fifth *titi* of the bright fortnight in the lunar month of *caittiram*, as sacred to Lakṣmī; இலக்குமிதேவிக்குரிய சைத்திரமாதத்துச் சுக்கிலபக்ஷ பஞ்சமிதிதி.

லக்ஷகம் lakṣakam, *n.* <*lakṣaka*. Word in its secondary signification; இலக்கணைப்பொருளில் வருஞ்சொல்.

லக்ஷணம் lakṣaṇam *n.* <*lakṣana*. See இலக்கணம். சைதன்யம சலட்சணமாயினும் விலட்சணம் (கைவல். தத்துவ. 1, உரை).

லக்ஷணை lakṣaṇai, <*lakṣaṇā*. (Gram.) Secondary significative capacity of a word. See இலக்கணை.

லக்ஷதீபம் lakṣa-tīpam, *n.* <*lakṣa*+. Festival of illuminating a temple, by burning 1,00,000 lights; கோயிலில் லக்ஷம் விளக்குகள் ஏற்றும் திருவிழா.

லக்ஷம் lakṣam, *n.* <*lakṣa*. Lakh; நூறாயிரம்.

லக்ஷியம் lakṣiyam, *n.* <*lakṣya*. 1. See இலக்கியம். அதனை லக்ஷியத்தின்பாற் படுத்துக் கண்டித்தல் (சிவசம. 33). 2. Secondary signification of a word; இலக்கணைப்பொருள்.

லா

லா lā. The compound of ல் and ஆ.

லாக்கு lākku, *n.* Corr. of லக்கு.

லாக்குப்போடு-தல் lākku-p-pōṭu-, *v. intr.* To be in great straits; to be hard put to it; மிகவும் கஷ்டப்படுதல். சோற்றுக்கு லாக்குப போடுகிறான்.

லாக்ஜாரி lākjāri, *n.* See லாகிராஜ். (W.)

லாகவம் lākavam, *n.* <*lāghava*. See லகுத்துவம்.

லாகிராஜ் lākirāj, *n.* <Hind. *lā-khirāj*. Tax-free land, opp. to *mālkujāri*; இறையிலி நிலம். (C. G.)

லாகிரி lākiri, *n.* See லகரி[2].

லாகினி lākiṉi, *n.* <*lākinī*. A class of goddesses mentioned in Tāntric lore; தந்திர சாத்திரங்களிற் கூறப்பட்ட ஒருசார் பெண்தேவதை. (தக்கயாகப. 87, விசேடக்குறிப்பு.)

லாகு lāku, *n.* See லகுத்வம். (W.)

லாகுலுக்சான் lāku-lukcāṉ, *n.* <Hindi. *lāha*+. Profit and loss; லாபநஷ்டம். (C. G.)

லாகை[1] lākai, *n.* [T. *lāgu*.] Manner, style. See இலாகை.

லாகை[2] lākai, *n.* [K. *lāga*.] Somersault; அந்தரடிக்கை. *Colloq.*

லாசடி lācaṭi, *n.* Worry, trouble. See இலாசடி.

லாசார்படு-தல் lacār-patu-, v. intr. <Hind. lāchar+. To be helpless, forlorn; உதவியற்று வருந்துதல். Loc.

லாசுபறுவான் lācuparuvāṉ, n. cf. பறுவான். Yard arm; கப்பற்பாய்நாங்குந் சட்டை. Naut.

லாஞ்சனை lāñcaṉai, n. <lāñchana. See இலாஞ்சனை¹. ஆதித்தனது சதந்திரிய லாஞ்சனையான யானை (தக்கயாகப். 8, உரை).

லாடக்காரன் lāṭa-k-kāraṉ, n. <லாடம்⁴+. Farrier; லாடங்கட்டுபவன்.

லாடங்கட்டு-தல் lāṭaṅ-kaṭṭu-, v. intr. <id.+. To shoe, as a horse; குதிரை முதலியவற்றின் கால்கட்கு இரும்புத்தகடு தைத்தல்.

லாடசங்கிலி lāṭa-caṅkili, n. See லாடர் சங்கிலி. Loc.

லாடம்¹ lāṭam, n. <Lāṭa. A country. See இலாடம்¹.

லாடம்² lāṭam, n. <Rādha. A country. See இலாடம்².

லாடம்³ lāṭam, n. <lalāṭa. Forehead. See இலாடம்³.

லாடம்⁴ lāṭam, n. <U. lāda. Horse shoe; குதிரை முதலியவற்றின் குளம்புகளுக்கு அடிக்கும் இரும்புத்தகடு.

லாடர்சங்கிலி lāṭar-caṅkili, n. <லாடன்² +. Puzzle chain. See இலாடசங்கிலி. Loc.

லாடன்¹ lāṭaṉ, n. Loc. 1. Green banana, s. tr., *Musa paradisiaca-troglodytarum;* பெருவாழைவகை. 2. A kind of cotton plant with green seeds; பருத்திவகை.

லாடன்² lāṭaṉ, n. <lāṭa. See இலாடன்.

லாடு lāṭu, n. <laḍḍu. A ball-shaped sweetmeat. See இலட்டு.

லாடுலகாடு lāṭulakāṭu, n. Scrape, trouble, difficulty; தொந்தரவு. லாடுலகாடு யார் படுகிறது?

லாத்தித்தள்ளு-தல் lātti-t-taḷḷu-, v. tr. <லாத்து²-+. To make dizzy or giddy; கிறுகிறுத்து விழச்செய்தல். என்னை லாத்தித்தளளுகிறது.

லாத்து¹ lāttu, n. See லத்தா.

லாத்து²-தல் lāttu-, 5 v. <லாத்து. tr. 1. To belabour, beat heavily; புடைத்தல். 2. To seize and jerk to and fro; பிடித்தலைத்தல்.—intr. To tumble; to be shaky in gait; நடைதடுமாறுதல். Colloq.

லாத்து³-தல் lāttu-, 5 v. intr. <உலாத்து¹-. To walk about; to ride about; See உலாத்து¹-.

லாத்து⁴-தல் lāttu-, 5 v. tr. <உலாத்து²-. 1. To take out for a walk. See உலாத்து²-, 1. 2. To spread. See உலாத்து²-, 2.

லாத்துலத்தாடு lāttu-lattāṭu, n. <U. lāt +U. latād. Convenience and inconvenience; சௌகரியாசௌகரியம். (C. G.)

லாந்தர் lāntar, n. <Fr. lanterne. Lantern; ஒருவகைக் கண்ணாடிவிளக்கு.

லாந்தல் lāntal, n. See லாந்தர்.

லாந்து¹-தல் lāntu-, 5 v. intr. <லாத்து⁴-. 1. To walk about, wander about; சுற்றித்திரிதல். அவன் லாந்திகொண்டிருக்கிறான். 2. To spread, as fire; பரவுதல். நெருப்பு எங்கும் லாந்திவிட்டது. 3. To pounce and get hold of; பாய்ந்து கைக்கொள்ளுதல். லாந்திப்பிடி.

லாந்து² lāntu, n. <லாந்து¹-. 1. Spreading out; பரவுகை. 2. Pounce; பாய்ச்சல். ஒரே லாந்தாக லாந்திப்பிடி.

லாந்து³ lāntu, n. cf. Hind. ladāo. Terracing, setting bricks on edge; கல்லைக் குத்து நிலையில் அடுக்குகை. (கட்டட. நா. 19.)

லாந்து⁴-தல் lāntu-, 5 v. intr. <லாந்து³. To put up a terrace; மேற்றளம் போடுதல்.

லாபநஷ்டம் lāpa-naṣṭam, n. <lābha+ naṣṭa. Profit and loss, இலாபமும் நஷ்டமும்.

லாபம் lāpam, n. <lābha. See இலாபம்.

லாபலோபம் lāpa-lōpam, n. <id.+ lōpa. See லாபநஷ்டம்.

லாயக்கு lāyakku, n. <Arab. lāiaq. 1. Fitness, suitableness; தகுதி. (W.) 2. Haughtiness; செருக்கு. Loc.

லாயம் lāyam, n. [T. lāyamu, K. lāya.] Stable for horse; குதிரைகட்டுமிடம். (பிங்.)

லாலனம் lālaṉam, n. <lālana. See லாலனை.

லாலனை lālaṉai, n. <lālanā. 1. Fondling, caressing, coaxing; கொஞ்சுகை. Loc. 2. Support; தாங்குகை. (W.)

லாலா lālā, n. <Hind. lālā. 1. A caste of Hindu merchants who migrated into the Tamil country from Northern India; வடநாட்டினின்று தமிழ்நாட்டிற் குடியேறிய இந்துவியாபாரி. 2. A term of respect; ஒரு சிறப்புப்பெயர். 3. A term of endearment; ஒரு செல்வப்பெயர். நந்தலாலா.

லாலாடிகம் lālāṭikam, n. <lālāṭika. A mode of sexual embrace; ஆலிங்கனவகை. (கொக்கோ. 5, 46.)

லாலி[1] lāli, n. prob. lāta. Rag; கந்தை. Loc.

லாலி[2] lāli, n. [T. K. lāli.] 1. cf. lālikā. Song consisting of eulogies, compliments, congratulations, etc., sung at weddings and other auspicious occasions, every line ending in lāli; கலியாணம் முதலியவற்றிற் பாடப்படுவதும் அடிதோறும் லாலி என்று முடிவதுமான மங்களப்பாட்டு வகை. 2. Flattery, adulation; இச்சகவார்த்தை. 3. Lullaby; தாலாட்டு.

லாலோஜி lālōji, n. Bribe லஞ்சம். Loc.

லாவண்யம் lāvaṇyam, n. <lāvanya. Beauty; grace; loveliness; charm; ஒளிரும் அழகு.

லாவண்யார்ச்சிதம் lāvaṇyārccitam, n. <id.+ārjita. See இலாவண்ணியார்ச்சிதம். (W.G.)

லாவணம் lāvaṇam, n. [T. lāvanamu, K. lavaṇa.] See இலாவணம்.

லாவணி lāva-ṇi, n. <Mhi. lāvaṇī. (Mus.) A Maharatta melody; மகாராட்டிர மொழியிலுள்ள இசைப்பாட்டுவகை. Loc.

லாவாதேவி lāvā-tēvi, n. <U. lāwādēī. See லேவாதேவி. (C. G.)

லாவாலேவி lāvālēvi, n. See லாவாதேவி.

லாவு-தல் lāvu-, 5 v. tr. prob. உலாவு-. 1. To spread around; பரவுதல். நெருப்பு லாவி விட்டது. 2. To pounce or dart upon; இறுஞ்சுதல். (J.)

லாவுபண்ணு-தல் lāvu-paṇṇu-, v. intr. prob. E. law+. 1. To be constantly questioning and disputing; வழக்காடுதல். 2. To behave in a haughty manner; செருக்குறுதல்.

லாளிதம் lāḷitam, n. <lālitya. Beauty, grace, charm; அழகு. மதகும்பலாளிதக் கரியென (திருப்பு. 194).

லாஜஹோமம் lāja-hōmam, n. <lāja+hōma. See இலாசவோமம்.

லாஸ்கார் lāscār, n. See லஸ்கர். (W.)

லி

லி li. The compound of ல் and இ.

லிகிதம் likitam, n. <likhita. See இலிகிதம்.

லிங்கசெந்தூரம் linka-centūram, n. <linga+. See லிங்கபஸ்பம்.

லிங்கப்புற்று linka-p-puṟṟu, n. <லிங்கம்+. Syphilitic chancre; கெட்டவியாதியால் உண்டாம் விரணவகை. (M. L.)

லிங்கபஸ்மம் linka-pasmam, n. <linga+. Calcined powder of cinnabar. See இலிங்க பற்பம்.

லிங்கபுராணம் linka-purāṇam, n. <id. + A Purāṇa. See இலிங்கபுராணம். (தக்கயாகப். 340, உரை.)

லிங்கம் linkam, n. <linga. See இலிங்கம். விழுந்தது லிங்கம (திருமந். 455).

லிங்காபட்டியம் linkā-paṭṭiyam, n. <lingā-bhaṭṭīya. A commentary on Amarakōśa by Lingābhatta; அமரகோசம் என்ற வடமொழி நிகண்டுக்கு லிங்காபட்டர் எழுதிய உரை.

லிங்காயத்து linkāyattu, n. <K. lingāyat. One who wears a miniature lingam suspended from the neck. See இலிங்கங்கட்டி.

லிபாபா lipāpā, n. <Arab. lifāfa. Envelope, cover, wrapper; கடிதவுறை. (C. G.)

லிபி lipi, n. <lipi. 1. Letter of alphabet; எழுத்து. ஐம்பதோரா விதமான லிபிகளும் (திருப்பு. 322). 2. Destiny, fate; விதி. Colloq.

லிவா livā, n. See லிபாபா. Loc.

லீ

லீ lī. The compound of ல் and ஈ.

லீடாலீடநியாயம் līṭālīṭa-niyāyam, n. <lāḍhālīḍha+. A Nyāya in illustration of repeatedly addressing oneself to one aspect of a matter, as licking what is already licked; நக்கினதையே திரும்ப நக்குவதுபோல் ஒருமுறையிலேயே பலகாலும் பார்க்கும் நியாயவகை. லீடாலீட நியாயமாக அவ்விட மாத்திரையே நோக்குவார்க்கு (சிவசமவா. பக். 42).

லீலாமானுஷன் līlā-māṉuṣaṉ, n. <līlā+mānuṣa. God assuming human shape in sport; மானுஷவேஷதாரியான கடவுள்.

லீலாவதி līlāvati, n. <līlāvatī. 1. Charming or beautiful woman; அழகிய பெண். 2. A mathematical treatise by Bhāskarācārya; பாஸ்கராசாரியரால் வடமொழியில் இயற்றப்பெற்ற ஒருகணிதநூல்.

லீலாவிபூதி līlā-vipūti, *n.* <*līlā-vibhūti.* The material worlds, as exhibiting the Divine Sportiveness in their creation, preservation and destruction; பிராகிருதவுலகங்கள். (ஈடு, 3, 10, 7.)

லீலாவினோதம் līlā-viṉōtam, *n.* <*līlā*+. Diversion, pastime, sport; உல்லாசவிளையாட்டு.

லீலை līlai, *n.* <*līlā.* 1. Play; விளையாட்டு. 2. Sport, as of a deity; தெய்வ முதலியவற்றின் விளையாடல். (ஈடு, 3, 10, 7.) 3. Amorous sport; sexual intercourse; சுரத விளையாட்டு.

லு

லு lu. The compound of ல் and உ.

லுக்சான் lukcāṉ, *n.* See லுச்சான். (C. G.)

லுங்கி lunki, *n.* < Persn. *lungī.* A coloured cloth worn by Muhammadans; முகம்மதிய ரணியும் ஆடைவகை.

லுச்சா luccā, *n.* <U. *lucchā.* Vagabond; rake; profligate; தூர்த்தன். (W.)

லுச்சான் luccāṉ, *n.* <Arab. *nuqsān.* Loss; நஷ்டம்.

லுத்தன் luttaṉ, *n.* <*lubdha.* Miser; உலோபி. லுத்தனுக்கு இரட்டிச்செலவு.

லுப்தம்[1] luptam, *n.* <*lupta.* 1. (Gram.) Elision; எழுத்துக்கேடு. 2. Injury, destruction; அழிவு. 3. Loss; deprivation; நஷ்டம்.

லுப்தம்[2] luptam, *n.* <*lubdha.* Covetousness; miserliness; உலோபம்.

லுப்தன் luptaṉ, *n.* <*lubdha.* Miser; உலோபி.

லுப்தோபமை luptōpamai, *n.* <*luptōpamā.* (Rhet.) A simile. See தொகையுவமம்.

லுஹர் luhar, *n.* <Arab. *zuhr.* Midday prayer; மத்தியானகாலப் பிரார்த்தனை. *Muham.*

லூ

லூ lū. The compound of ல் and ஊ.

லூசு lūcu, *n.* cf. E. *lace.* Superior silver lace; உயர்ந்த வெள்ளிச்சரிகை.

லூட்டி lūṭṭi, *n.* <Hind. *lūṭ.* [K. *lūṭi.*] 1. Plunder, pillage, loot; கொள்ளை. 2. Trouble, annoyance; உபத்திரவம்.

லூடி lūṭi, *n.* 1. See லூட்டி, 1. (C. G.) 2. See லூட்டி, 2.

லூதாதந்துநியாயம் lūtātantu-niyāyam, *n.* <*lūtā-tantu*+. A Nyāya, in illustration of the principle of an author destroying his own creation, even as a spider eats up the thread which it throws out; சிலம்பி தன்வாயா லிழைத்த நூலைத் தானே யுட்கொள்வதுபோல் தான் செய்ததைத் தானே யழிப்பதாகக் கூறும் நெறி.

லெ

லெ le. The compound of ல் and எ.

லெக்கு lekku, *n.* Aim. See இலக்கு.

லெக்குறடு lek-kuṟaṭu, *n.* See லக்குறடு.

லெகு leku, *n.* See இலகு. (W.)

லெச்சி lecci, *n.* See லச்சி.

லெச்சை leccai, *n.* See இலச்சை. (W.)

லெட்சம் leṭcam, *n.* See லக்ஷம். (W.)

லெப்பை[1] leppai, *n.* See லப்பை. (W.)

லெப்பை[2] leppai, *n.* See லேவை.

லெவலேசம் levalēcam, *n.* See லவலேசம்.

லெவை levai, *n.* <Heb. *Levi.* Priest in a mosque; பள்ளிவாசலில் புரோகிதஞ்செய்வோன்.

லே

லே[1] lē. The compound of ல் and ஏ.

லே[2] lē, *int.* cf. *rē.* Ho, hallo; விளிச்சொல்.

லேககன் lēkakaṉ, *n.* <*lekhaka.* Writer; எழுத்துவேலை செய்பவன்.

லேகணி lēkaṇi, *n.* See லேகனி. (C. G.)

லேகம்[1] lēkam, *n.* <*lēha.* See லேகியம். (C. G.)

லேகம்[2] lēkam, *n.* <*lēkha.* Writing; letter; எழுத்து.

லேகனி lēkaṉi, *n.* <*lēkhanī.* Pen, style; எழுதுகோல்.

லேகா lēkā, *n.* prob. *lēhya.* See லேகாவுண்டை.

லேகாவுண்டை lēkā-v-uṇṭai, *n.* <லேகா +. Ball of ganja; கஞ்சாவுண்டை.

லேகியம் lēkiyam, *n.* <*lēhya.* 1. Food that is eaten by licking; நக்கியுண்ணுதற்கு உரியது. 2. Electuary, in medicine; நக்கியுண்ணும் மருந்து

வகை. தூயதைலம் லேகியஞ் சொல்பக்குவங்கணடு (அறப. சத. 51). 3. See லேகாவுண்ணடை. *Loc.*

லேகை lēkai, *n.* <*lēkhā*. See இரேகை. சங்கலேகையும் சக்கிரலேகையும் (சூளா. குமார. 45).

லேசம் lēcam, *n.* <*lēśa*. 1. Small bit, particle; அற்பம். 2. A measure of time equal to two *kalai;* இரண்டுகலைகொண்ட காலவளவு. 3. (Rhet.) A figure of speech. See இலேசவணி.

லேசு[1] lēcu, *n.* See இலேசு.

லேசு[2] lēcu, *n.* <E. *lace*. 1. Lace; ஒருவகை அலங்காரப் பின்னற்றுணி. 2. Silver or gold lace; சரிகை.

லேஞ்சி lēñci, *n.* <Port. *lengo*. Kerchief, scarf. See இலேஞ்சி. (W.)

லேஞ்சு lēñcu, *n.* See லேஞ்சி. (W.)

லேணி lēṇi, *n.* <Hind. *lēnā*. [K. *lēṇe*.] Borrowing; கடன்வாங்குகை. (C. G.)

லேணிதாரன் lēṇitāraṉ, *n.* <Hind. *lēnādār*. Creditor; கடன்கொடுத்தவன். (C. G.)

லேபனம் lēpanam, *n.* <*lēpana*. 1. Anointing, smearing; பூச்சு. மருகமத படீர லேபன (திருப்பு. 43). 2. Plaster, ointment, unguent, salve; பூசும்பொருள். 3 Virility, *Erectio penis;* தாதுவன்மை.

லேலம் lēlam, *n.* prob. Port. *leilao*. cf. ஏலம்[3]. Auction; ஏலம். *Nāñ.*

லேவாதேவி lēvātēvi, *n.* <Hind. *lēwā-dēī*. Money-dealings; கொடுக்கல் வாங்கல். (C G.)

லேவாலேவி lēvālēvi, *n.* See லேவாதேவி.

லேனாதேனா lēṉātēṉā, *n.* <Hind. *lēnā-dēnā*. See லேவாதேவி. (C. G.)

லை

லை lai. The compound of ல் and ஐ.

லொ

லொ lo. The compound of ல் and ஒ.

லொங்காரி loṅkāri, *n.* cf. Arab. *langar*. Termagant; அடங்காப்பிடாரி. *Loc.*

லொங்கு-தல் loṅku-, 5 *v. intr.* [T. *longu*.] To be humble, submissive; to be servile; பணிந்து நடத்தல். (W.)

லொங்குலொங்கெனல் loṅku-loṅkeṉal, *n.* Onom. expr. signifying physical exhaustion; உடலின் தளர்ச்சிக்குறிப்பு.

லொட்டி[1] loṭṭi, *n.* [T. *lotti*.] 1. Toddy; கள். அவன் பணமெல்லாம் லொட்டியிற் போகிறது. 2. Small earthen pot for drawing toddy; கள் இறக்கும் குடுவை. (W.)

லொட்டி[2] loṭṭi, *n.* See ரொட்டி. *Loc.*

லொட்டிமூஞ்சி loṭṭi-mūñci, *n.* <லொட்டி[1] +. Drunkard; கட்குடியன். (W.)

லொட்டுலொடுக்கு loṭṭuloṭukku, *n.* See லொட்டுலொஸ்கு. *Loc.*

லொட்டுலொஸ்கு loṭṭulosku, *n.* Odds and ends; stray articles; சில்லறைச் சாமான்கள்.

லொட்டை loṭṭai, *n.* <*lōṣṭa*. 1. Anything inferior; தாழ்ந்தது. *Loc.* 2. See லொட்டையாட்டம். *Loc.* 3. A kind of cake; ஒருவகைப் பணிகாரம். (W.)

லொட்டைதாளி-த்தல் loṭṭai-tāḷi-, *v. intr.* <லொட்டை +. To become a pauper; to be impoverished; ஏழையாதல். *Loc.*

லொட்டையாட்டம் loṭṭai-y-āṭṭam, *n.* <id. +. A game of marbles; கோலி விளையாட்டுவகை. *Loc.*

லொடலொட்டை loṭaloṭṭai, *n.* <லொட லொட-. *Loc.* 1. Anything rickety; சட்டுக்குலைந்தது. 2. Anything hollow or empty; உள்ளீடின்றிக் கூடானது. 3. Anything useless; பயனற்றது.

லொடலொட-த்தல் loṭa-loṭa-, 11 *v. intr.* *Colloq.* 1. To become rickety; to be dismembered; to become loose; சட்டுக்குலைதல். 2. To be hollow or empty; உள்ளீடின்றிக் கூடாயிருத்தல். 3. To become useless; பயனற்றுப் போதல்.

லொடலொடவெனல் loṭa-loṭa-v-eṉal, *n.* Onom. expr. signifying (a) rattling or rumbling; ஓர் ஒலிக்குறிப்பு: (b) ricketiness; சட்டுக்குலைவின் குறிப்பு.

லொடுக்கு loṭukku, *n.* Emptiness; hollowness; want of solidity; உள்ளே வெற்றிடமாகை. லொடுக்கு விழுந்துபோயிற்று.

லொடுக்குலொடுக்கெனல் loṭukku-loṭukkeṉal, *n.* 1. Onom. expr. signifying shakiness, as of a running carriage; குதிரைவண்டி முதலியன ஓடும்போது ஆட்டங்கொடுத்தற்குறிப்பு. 2. See லொடலொடவெனல். 3. See லொங்குலொங்கெனல்.

லொத்து-தல் lottu-, 5 *v tr.* cf. U. *lāt*. To beat or strike hard; to belabour; நையப்புடைத்தல். *Loc.*

லொத்துகத்தோல் lottuka-t-tōl, *n.* <லொத்துகம்+. Bark of lodhra tree; வெள்ளிலத்தியின் பட்டை. (தைலவ. தைல.)

லொத்துலொத்தெனல் lottu-lotteṉal, *n.* Onom. expr. of (a) beating hard, giving repeated blows; நையப்புடைத்தற்குறிப்பு. *Loc.*: (b) hollow sound; உள்ளீடற்றபொருளைத் தட்டுங்கால் எழும் ஒலிக்குறிப்பு.

லொள்ளெனல் lolleṉal, *n.* Onom. expr. of dog's bark; நாய் குரைத்தற்குறிப்பு.

லொஸ்கு losku, *n.* Almost nothing; nothingness; ஒன்றுமின்மை.

லோ

லோ lō. The compound of ல் and ஓ.

லோக்கியம் lōkkiyam, *n.* <*lōkya.* See லௌகீகம், 1. சகல லோக்கியமே தானுளூறு மசார பாரதிபனேடே (திருப்பு. 1080).

லோககண்டகன் lōka-kaṇṭakaṉ, *n.* <*lōka*+*kaṇṭaka.* Very troublesome or wicked man, as a thorn afflicting the world; [உலகத்திக்கு முட்போன்றவன்] மிகக்கொடியோன். *Colloq.*

லோககதி lōka-kati, *n.* <id.+. Way of the world; உலக நடைமுறை.

லோககர்த்தா lōka-karttā, *n.* <id.+. Lord of the world; உலகத்துக்கு முதல்வன்.

லோகசஞ்சாரம் lōka-cañcāram, *n.* <id. +. 1. Travelling in different countries of the world; பலதேசங்களில் யாத்திரை செய்கை. 2. Business outside one's house; outwork; வெளி முயற்சி. *Loc.*

லோகசஞ்சாரி lōka-cañcāri, *n.* <id.+. Traveller in many lands; பல தேசங்களில் யாத்திரை செய்வோன்.

லோகசாக்ஷி lōka-cākṣi, *n.* <id.+. God, as the Universal Witness; [யாவுங்காணுஞ் சான்று] கடவுள்.

லோகசிந்தூரம் lōka-cintūram, *n.* <*lōha*+. Hydrated peroxide of iron, *Ferrugo;* அயச்சிந்தூரம். (இங. வை.)

லோகத்திரயம் lōka-t-tirayam, *n.* <*lōka* +. The three worlds. See மூவுலகு.

லோகதருமிணி lōka-tarumiṇi, *n.* <id.+ *dharmiṇī.* (Śaiva.) A mode of initiation. See உலோகதருமிணி.

லோகதன்மணி lōka-taṉmaṇi, *n.* <id.+ id. (Śaiva.) A mode of initiation. See உலோகதருமிணி. (சி. சி. 8, 5, மறைஞா.)

லோகப்பிரசித்தம் lōka-p-piracittam, *n.* <id.+. That which is universally known; உலகத்தாரால் நன்கறியப்பட்டது.

லோகபத்ததி lōka-pattati, *n.* <id.+. See லோககதி.

லோகபாலகர் lōka-pālakar, *n.* <*lōka-pālaka.* 1. See லோகபாலர், 1. அட்ட லோக பாலகரே (தக்கயாகப. 468). 2. See லோகபாலர், 2.

லோகபாலர் lōka-pālar, *n.* <*lōka-pāla.* 1. Regents of the eight directions. See உலோக பாலர். 2. Kings; அரசர். லோகபால ரெயில் காவல் கூடா (தக்கயாகப. 17).

லோகம்[1] lōkam, *n.* <*lōka.* World. See உலகம். எல்லா லோகங்களுமு இவருடைய (தக்கயாகப. 38, உரை).

லோகம்[2] lōkam, *n.* <*lōha.* Metal. See உலோகம்[2].

லோகமரியாதை lōka-mariyātai, *n.* <*lōka*+. Customs and manners of a country; உலகவழக்கம்.

லோகமாதா lōka-mātā, *n.* <id.+*mātṛ.* 1. See உலகமாதா, 1, 2. 2. Lakṣmī; இலட்சுமி. *Loc.*

லோகயாத்திரை lōka-yāttirai, *n.*<id.+. See லோககதி. இது ஒரு லோகயாத்திரை (ஈடு, 4, 9, 6).

லோகரஞ்சனம் lōka-rañcaṉam, *n.* <id. +. That which is popular or pleasing to the world; உலகிற்கு மகிழ்ச்சிதருவது.

லோகரட்சை lōka-raṭcai, *n.* <id.+. Protection of the world; உலகத்தைக் காக்கை. லோகரட்சையுந தனுர்வேத வில்வலியும் (தக்கயாகப். 468, உரை).

லோகரக்ஷகன் lōka-rakṣakaṉ, *n.* <id.+. Saviour of the world; உலகத்தைக் காப்போன்.

லோகரூடம் lōka-rūṭam, *n.* <id.+*rūḍha.* 1. That which is famous throughout the land; தேசமெங்கும் பிரசித்தமானது. 2. See லோகமரியாதை.

லோகவிருத்தாந்தம் lōka-viruttāntam, *n.* <id.+. 1. See லோகாசாரம். 2. Rumour; ஊர்ப்பேச்சு.

லோகவேடணை lōka-v-ēṭaṉai, *n.* <id. +. See உலகவேடணை. (நாமதீப. 576)

லோகாக்கிரசித்தர் lōkākkira-cittar, *n.* prob. id.+*agra*+*siddha.* A superior class of celestials; தேவருட்சிறந்த ஒருசாரார். (தக்கயாகப். 352, உரை.)

லோகாசாரம் lōkācāram, *n.* <id. + *ācāra.* Customs of the people, ways of the world, common practice; உலகத்தாரொழுக்கம்.

லோகாசாரியர் lōkācāriyar, *n.* <*Lōkācārya.* See பிள்ளைலோகாசாரியர்.

லோகாதிபதி lōkātipati, *n.* <*lōkādhipati.* 1. Lord of the Universe; உலகமுதல்வன். 2. Emperor; சக்கரவர்த்தி.

லோகாதீதம் lōkātītam, *n.* <*lōkātīta.* The supernatural; the ultramundane; உலகத்துக்கு அப்பாற்பட்டது.

லோகாந்தரம் lōkāntaram, *n.* <*lōkāntara.* The world beyond; வேறுலகம்.

லோகாந்தரமடை-தல் lōkāntaram-aṭai-, *v. intr.* <லோகாந்தரம் +. To die; மரணமடைதல்.

லோகாபவாதம் lōkāpavātam, *n.* <*lōkāpavāda.* Censure of the world; public scandal; பெரும்பழி.

லோகாபிராமம் lōkāpirāmam, *n.* <*lōkābhirāma.* 1. That which is pleasing to the world; உலகத்திற்கு மகிழ்ச்சி தருவது. 2. General talk; rumour; ஊர்ப்பேச்சு. *லோகாபிராமமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள்.*

லோகாயதம் lōkāyatam, *n.* <*lōkāyata.* Materialism. See உலோகாயதம். (*தக்கயாகப்.* 378, *உரை.*)

லோகாயதன் lōkāyatan, *n.* <*lōkāyata.* Materialist. See உலோகாயதன். *லோகாயதன் சமயநடைசாராமல்* (*தாயு. மௌன.* 4).

லோகாலோகம் lōkālōkam, *n.* <*lōkālōka.* A mythical range of mountains. See சக்கரவாளம், 1.

லோகிதம் lōkitam, *n.* <*lōhita.* Redness, that which is red; செந்நிறமானது. *லோகிதமல ரோமெம்* (*இரகு. திக்குவி.* 264).

லோகோத்தமரசம் lōkōttama-racam, *n.* <*lōkōttama-rasa.* A purgative; ஒருவகைப் பேதிமருந்து. (*பைஷஜ.*)

லோகோத்தரம் lōkōttaram, *n.* <*lōkōttara.* That which is excellent in every way; மிகச்சிறந்தது.

லோகோபகாரம் lōkōpakāram, *n.* <*lōkōpakāra.* Public good; general good; உலகநன்மை.

லோட்டா lōṭṭā, *n.* <U. *lōṭā* <Arab. *luṭiyā.* 1. Pipkin; a small metal pot, generally of brass; நீர்குடிக்கும் பாத்திரவகை. *Colloq.* 2. A necklace of gold beads; கழுத்தணிவகை. *Loc.*

லோடா lōṭā, *n.* See லோட்டா, 1. (W.)

லோடு lōṭu, *n.* prob. Hindi *luṭ.* Loss; deficiency; குறைவு. (C. G.)

லோத்திரம் lōttiram, *n.* <*lōdhra.* Lodhra tree; வெள்ளிலோத்திரம்.

லோத்துகம் lōttukam, *n.* See லோத்திரம்.

லோந்து lōntu, *n.* <Fr. *ronde.* Night patrol; இராக்காவல்.

லோபம்[1] lōpam, *n.* <*lōpa.* 1. (Gram.) Elision; கெடுதல்விகாரம். *ஆதேசலோபம்* (*பி. வி.* 26). 2. Defect, deficiency; குறைவு. *மந்திர கிரியாலோப மின்றியே* (*அறப். சத.* 81).

லோபம்[2] lōpam, *n.* <*lōbha.* 1. Avarice. See உலோபம்[1]. *லோப மருளின்மை கூடக்கலந்துள்ளிருக்க* (*தாயு. சின்மயா.* 3). 2. Stinginess; கடுஞ்செட்டு. *Colloq.*

லோபன் lōpan, *n.* <*lōbha.* Miser. See உலோபன். *லோபன் மகன் டம்பன்.*

லோபி[1] lōpi, *n.* <*lōbhin.* See உலோபி.

லோபி[2]-த்தல் lōpi-, 11 *v. intr.* <*lōbha.* See உலோபி[2]-.

லோபி[3]-த்தல் lōpi-, 11 *v. tr.* & *intr.* <*lōpa.* See உலோபி[3]-.

லோபு-தல் lōpu-, 5 *v. intr.* <id. See உலோபு-. *லோபியுணறுா* (*தேவா.* 55. 7).

லோபை lōpai, *n.* prob. *lōbhā.* Pārvatī; பார்வதி. (*கூாமபு. திருக்கலி.* 22.)

லோம்பர் lōmpar, *n.* A kind of iron; இரும்புவகை. *Loc.*

லோல்படு-தல் lōl-paṭu-, *v. intr.* <*lōla* +. 1. To wander about restlessly; to be tossed about; திண்டாடுதல். *அவன் அஙகுமிஙகும் லோல் படுகிறான்.* 2. To be over-plentiful, as a commodity; மலிந்து கிடத்தல். *Colloq.*

லோலக்கம் lōlakkam, *n.* cf. *lōla.* Restless wandering; திண்டாட்டம். *அவன் அஙகுமிஙகும் லோலக்கமாடுகிறான்.*

லோலக்கு lōlakku, *n.* See லோலாக்கு.

லோலம் lōlam, *n.* <*lōla.* 1. Unsteadiness; restlessness; அலைவு. 2. Greediness; lustfulness; passion; ஆசைப்பெருக்கம். (W.)

லோலயப்படு-தல் lōlaya-p-paṭu-, *v. intr.* <லோலாயம் +. See லோல்படு-. *Colloq.*

லோலன் lōlan, *n.* <*lōla.* 1. One who is sportive or playful; விளையாடித் திரிபவன். *முத்*

தலைச் சூலனே லோலனே (அறப். சத. 17). 2. One who dallies with women; ஸ்திரீலோலன்.

லோலாக்கு lōlākku, n. <U. lōlak. A pendant suspended from the lobe of the ear; காதில் தொங்கவிடும் அணிவகை.

லோலாயப்படு-தல் lōlāya-p-paṭu-, v. intr. <லோலாயம்+. See லோல்படு-. Colloq.

லோலாயம் lōlāyam, n. <dōlāyamāna. See லோலக்கம்.

லோலோவென்றலை-தல் lōlō-v-eṉṟalai-, v. intr. To wander restlessly; திண்டாடித் திரிதல்.

லௌ

லௌ lau. The compound of ல் and ஔ.

லௌகிகதந்திரம் laukika-tantiram, n. <laukika+. Skill or tact in worldly affairs; உலகவிஷயங்களிற் சாமர்த்தியம்.

லௌகிகதருமம் laukika-tarumam, n. <id.+. Ways of the world; உலகியல்.

லௌகிகப்பிரக்கிரியை laukika-p-pirakkiriyai, n. <id.+. (Gram.) Usage in common speech; உலகவழக்கு. (பி. வி. 18, உரை.)

லௌகிகம் laukikam, n. See லௌகீகம்.

லௌகிகன் laukikaṉ, n. See லௌகீகன்.

லௌகீகம் laukīkam, n. <laukika. 1. Worldly affairs; that which is of the world; உலகிற்குரியது. 2. Worldliness; உலகப்பற்றுடைமை. (W.) 3. Office; உத்தியோகம்.

லௌகீகவிருத்தி laukīka-virutti, n. <id.+. Secular pursuits, opp. to vaitīka-virutti; வைதீகவிருத்தியை விடுத்து உலகநடைக்குரிய தொழில்களில் முயலுகை.

லௌகீகன் laukīkaṉ, n. <laukika. 1. One who is worldly-minded; உலகப்பற்றுடையவன். 2. One who does not strictly adhere to the prescribed rites and observances, dist. fr. vaitīkaṉ; சமயவொழுக்கவிதிகளைச் சரிவரப் பின்பற்றாதவன். 3. One who follows secular pursuits; லௌகீகவிருத்தியில் ஒழுகுபவன். 4. One who is worldly-wise; உலகியலறிந்தவன்.

வ்

வ் v. The 14th labial consonant, a spirant; பதினான்காம் மெய்யான இடையெழுத்து.

வ்யக்தம் vyaktam, n. <vyakta. Clearness; தெளிவு.

வ்யக்தி vyakti, n. <vyakti. Form, shape; வடிவு.

வ்யதீபாதம் vyatīpātam, n. <vyatīpāta. (Astrol.) A yōkam. See வியதீபாதம்.

வ்யவஸ்தை vyavastai, n. <vyava-sthā. 1. Demarcation, limit; வரையறை. 2. Rule; நியதி. 3. Proper conduct; ஒழுக்கம்.

வ்ருத்தம் vruttam, n. <vṛtta. 1. Roundness; வட்டம். இவ்விடலிங்கத்தின் வ்ருத்தமே (சித். சிகா. லிங்க. 1, உரை). 2. Verse; செய்யுள். 3. History, career; சரித்திரம். வ்ருத்தவிஜ்ஞாபநமென்றுதல் (திவ். இயற். திருவிருத். தனியன், வ்யா.).

வ்ருத்தி[1] vrutti, n. <vṛtti. 1. Action; தொழில். காமாதிவ்ருத்திகள் தோன்றுவதிலும் (சித். சிகா. பக். 202). 2. Profession, occupation, means of livelihood; சீவனோபாயம்.

வ்ருத்தி[2] vrutti, n. <vṛddhi. 1. Increase; அதிகரிப்பு. 2. Interest; வட்டி. 3. Ceremonial pollution observed on the birth of a child; பிரசவத்தீட்டு. Loc.

வ்ருஷபம் vruṣapam, n. <vṛṣabha. See இடபம்.

வ

வ[1] va. The compound of வ் and அ.

வ[2] va. Symbol of the fraction $\frac{1}{4}$; கால் என்ற பின்னவெண்ணின் குறி.

வ[3] va, part. An ending indicative of neut. pl.; பலவின்பால் விகுதியுள் ஒன்று. (தொல். சொல். 9.)

வக்கட்டை vakkaṭṭai, n. Outlet for surplus water. See கடவாசி. (யாழ். அக.)

வக்கணம்[1] vakkaṇam, n. <Pkt. vaggaṇa <valgaṇa. [T. vakkaṇa, K. okkaṇe.] 1. See வக்கணை[1], 1, 2. (யாழ். அக.) 2. Title; பட்டப்பெயர். (யாழ். அக.) 3. Learning, scholarship; விற்பன்னம். (யாழ். அக.) 4. Civilization, culture; refinement; நாகரிகம். (யாழ். அக.) 5. Order; ஒழுங்கு. 6. See வக்கணை[1], 3. (சங். அக.) 7. Taunt, accusation; நிந்தை. வக்கணப் பேச்சு. (J.)

வக்கணம்[2] vakkaṇam, n. <vakṣaṇa. Breast; மார்பு. (யாழ். அக.)

வக்கணாத்தன் vakkaṇāttaṉ, n. cf. வக்கணை[2]. Heart-leaved mottled ebony, s. tr., Diospyros montana-cordifolia; மரவகை. (L.)

வக்கணாத்தி vakkaṇātti, n. A species of star-vervain climber, s. cl., Symphorema involucratum; ஒருவகைக் கொடி. (L.)

வக்கணி¹-த்தல் vakkaṇi-, 11 v. tr. <வக்கணம்¹. [T. vakkaṇincu, K. vakkaṇisu.] To expound in detail; விவரித்துரைத்தல். புராணஞ் சுருதிப்பொருள் வக்கணிப்பவன் (மேருமந். 244).

வக்கணி²-த்தல் vakkaṇi-, 11 v. intr. See வக்கிரி-, 3. Loc.

வக்கணை¹ vakkaṇai, n. [K. vakkaṇe.] 1. Formal portion of a letter or other document; honorific superscription in a letter, சடிதம் முதலியவற்றின் முகப்புவாசகம். (நாமதீப. 654.) 2. Words of courtesy; உபசார வார்த்தை. வக்கணையா லின்பம் வருமோ (தாயு. பராபர. 213). 3. Flowery or rhetorical speech or statement; வருணனை. வக்கணைபபேச்சல்ல (இராமநா. உயுத். 30). 4. See வக்கணம்¹, 2, 3, 4, 5, 7. (யாழ். அக.) 5. Skilful talk; சமத்காரப் பேச்சு. Loc.

வக்கணை² vakkaṇai, n. 1. Wight's Indian nettle. See மலைப்புன்கு. (L.) 2. Mottled ebony, m. tr., Diospyros montana; மரவகை. 3. Yellow wood ebony, m. tr., Diospyros chloroxylon; மரவகை.

வக்கணை³ vakkaṇai, n. See வக்கணம்². (யாழ். அக.)

வக்கம்பிடி-த்தல் vakkam-piṭi-, v. intr. prob. வெக்கை+. To foment; ஒற்றடமிடுதல்.

வக்கரன் vakkaraṉ, n. <vakra-danta. See வக்கிரன். வக்கரனைக் கொன்றான் வடிவு (திவ். இயற். மூன்றாந். 21).

வக்கரனை vakkaraṉai, n. cf. வக்காணம். (Mus.) Manipulating the flute so as to produce all melody-types on its six stops; எல்லா இராகங் களும் குழலின் ஆறு துவாரங்களாலேயே உண்டாகும் படி விரல்களால் சமஞ்செய்து சோதிக்கை. வைத்த துளை யாராய்ச்சி வக்கரனைவழிபோக்கி யொத்தநிலை யுணர்த்தறபின் (பெரியபு. ஆனாய. 24). (செந். vi. 215.)

வக்கரி-த்தல் vakkari-, 11 v. intr. See வக்கிரி-. வக்கரித்தால் நீவாரா வண்மையென்ன (கொண்டல்விடு. 8).

வக்கரை¹ vakkarai, n. 1. Wooden ridge-piece to hold the ropes that tie down the thatch; tie-piece; வரிந்துகட்டும் முகட்டுக்கட்டை. 2. Stirrup. See பக்கரை. (யாழ். அக.)

வக்கரை² vakkarai, n. <பற்கறை. Artificial blackness of the teeth; பற்கறை. (W.)

வக்கா¹ vakkā, n. <baka. White stork, Ardea nivea; கொக்குவகை. வக்காவு நாரையுங் கொக்கும் படுக்கவே (குற்றா. குற. 93, 2).

வக்கா² vakkā, n. A kind of cockle-shell; சிப்பிவகை. வக்காவின் மணிபூணடு (குற்றா. குற. 79).

வக்காணம் vakkāṇam, n. prob. vargaṇā. [K. vakkāṇa.] (Mus.) Elaboration of a tune; ஆலாபனம். மீத்திறம படாமை வக்காணம வகுதது (சிலப. 3, 148).

வக்காணி-த்தல் vakkāṇi-, 11 v. prob. vyākhyāna. [T. vakkāṇincu.] tr To expound in detail. See வக்கணி¹-. நாலு பாஷ்யததிலும ஒரு பாஷ்யம் வக்காணிததறிவான் (சோழவமி. 53).—intr. To carry on disputations; வாதஞ்செய்தல்.

வக்காணிக்குமண்டபம் vakkāṇikku-maṇṭapam, n. <வக்காணி-+மண்டபம். The hall where disputations on the Śāstras are held; சாஸ்திரசம்பந்தமாக வாதம்நிகழும் மண்டபம். (I. M. P. Cg. 1005, 1015.)

வக்காப்புல் vakkā-p-pul, n. <வக்கா²+. A kind of weed; களைவகை. Tj.

வக்காமணி vakkā-maṇi, n. <id.+. Bead of a kind of cockle-shell; சிப்பிமணிவகை. வக்காமணிக்கு வழியற்றவன்.

வக்காமணிச்செட்டிகள் vakkāmaṇi-c-ceṭṭikaḷ, n. <வக்காமணி+. Traders dealing in vakkā-maṇi; வக்காமணி வியாபாரஞ்செய்யும் செட்டிவகையினர். (W.)

வக்காலத்து vakkālattu, n. <U. wakālat. (Legal.) Power of attorney given to a lawyer for conducting a case; வியாச்சியம் முதலி யன நடத்துவதற்கு வக்கீலுக்குக் கொடுக்கும் அதிகார பத்திரம். (W.)

வக்காலத்துநாமா vakkālattu-nāmā, n. <id.+. (Legal.) See வக்காலத்து. (W.)

வக்காளி-த்தல் vakkāḷi-, 11 v. intr. To clear up, as the sky; வானம் வெளிவாங்குதல். Tj.

வக்கிணி-த்தல் vakkiṇi-, 11 v. intr. See வக்கிரி-, 3. வக்கிணித்தவீடு வாழாது.

வக்கிரக்கண் vakkira-k-kaṇ, n. <vakra+. Squinting eye; மாறுகண். Colloq.

வக்கிரக்கிரீபம் vakkira-k-kirīpam, n. See வக்கிரக்கிரீவம். (யாழ். அக.)

வக்கிரக்கிரீவம் vakkira-k-kirīvam, n. <vakra+grīva. Camel, as having an arched neck; [வளைந்த கழுததுடையது] ஒட்டகம். (இலக். அக.)

வக்கிரகட்கம் vakkira-katkam, n. <id.+. Scimitar; வளைந்த கரவாள். (சங். அக.)

வக்கிரகண்டகம் vakkira-kaṇṭakam, n. <id.+. Jujube-tree, as having curved thorns; [வளைந்த முள்ளுடையது] இலந்தை. (சங். அக.)

வக்கிரகதி vakkira-kati, *n.* <id. +. 1. See வக்கிரம், 5. 2. (Astron.) Retrograde motion of a planet; கிரகத்தின் பிற்போக்கான நடை.

வக்கிரகம் vakkirakam, *n.* prob. *vakra-ka.* Hindrance to business due to rain; மழையா லுண்டாம் தடை. (இலக். அக.)

வக்கிரகிரகம் vakkira-kirakam, *n.* <*vakra* +. (Astron.) Planet in its retrograde motion; வக்கிரித்துள்ள கிரகம்.

வக்கிரகிரீவம் vakkira-kirīvam, *n.* See வக்கிரக்கிரீவம். (சங். அக.)

வக்கிரசச்சு vakkira-caccu, *n.* <வக்கிர சஞ்சு. (யாழ். அக.) Lit., bent beak. [வளைந்த மூக்கு] 1. Parrot; கிளி. 2. White-headed kite. See கருடன், 2. 3. King-crow; வலியான்.

வக்கிரசஞ்சு vakkira-cañcu, *n.* <*vakra*+. See வக்கிரசச்சு.

வக்கிரசந்திரன் vakkira-cantiraṉ, *n.* <id.+. Crescent moon; இளம்பிறை. (யாழ். அக.)

வக்கிரசாரம் vakkira-cāram, *n.* <id.+ *cāra.* (Astrol.) Retrograde motion of a planet; கிரகத்தின் வக்கிரகதி. (W.)

வக்கிரசுரம் vakkira-curam, *n.* <id.+ *svara.* (Mus.) Irregular succession of notes; நேர்மையற்றியைந்த இசைச்சுரம்.

வக்கிரதந்தம் vakkira-tantam, *n.* <id.+. Curved tooth, fang; வளைந்த பல். (W.)

வக்கிரதந்தன் vakkira-tantaṉ, *n.* <*vakra-danta.* Yama; யமன். (நாமதீப. 87.)

வக்கிரதுண்டம் vakkira-tuṇṭam, *n.* <*vakra*+*tuṇḍa.* See வக்கிரசச்சு. (யாழ். அக.)

வக்கிரதுண்டன் vakkira-tuṇṭaṉ, *n.* <*vakra-tuṇḍa.* Gaṇēśa; பிள்ளையார். (நாமதீப. 28.)

வக்கிரநாசிகம் vakkira-nācikam, *n.* <*vakra*+*nāsikā.* (யாழ். அக.) 1. Owl; ஆந்தை. 2. Parrot; கிளி.

வக்கிரபுட்பம் vakkira-puṭpam, *n.*<id.+. Palāsa flower; முருக்கம்பூ. (சங். அக.)

வக்கிரம் vakkiram, *n.* <*vakra.* 1. Curve, bend, winding; வளைவு. வக்கிர சாபமழை பொழிந்து (பாரத. இரண்டா. 12). 2. Circle; வட்டம். (பிங்.) 3. Retracing one's steps; சென்ற வழி மீளுகை. (பிங்.) 4. (Astrol.) See வக்கிரகதி. (யாழ். அக.) 5. Irregular course; நேர்மையற்ற செலவு. (அக. நி.) 6. Cruelty; malignancy, as of a planet; கொடுமை. (பிங்.) 7. Lie; பொய். (திவா.) 8. Fraud, dishonesty; வஞ்சனை. (W.) 9. Indirectness; crookedness; perversity; கோணல்வழி. *Colloq.* 10. Envy; பொறாமை. (பிங்.) 11. Confusion; கலக்கம். (W.)

வக்கிரராகம் vakkira-rākam, *n.* <id.+. (Mus.) Melody-type in which the ascent of the notes in the scale is interrupted by the descending notes and the descent by the ascending notes; நேராக ஏறி யிறங்காமல் இடையில் ஸ்வரம் மாறி வரும் இராகம்.

வக்கிரவத்திரம் vakkira-vattiram, *n.* <id.+*vaktra.* Boar; பன்றி. (யாழ். அக.)

வக்கிரவாலதி vakkira-vālati, *n.* <id.+ *vāladhi.* Dog; நாய். (யாழ். அக.)

வக்கிரவுத்தி vakkira-v-utti, *n.* <id.+ *ukti.* A figure of speech. See வக்கிரோக்தி. (மாறனலங். 279.)

வக்கிரன் vakkiraṉ, *n.* <*vakra.* 1. Perverse, cross-grained person; மாறுபாடுள்ளவன். 2. Cruel man; குரூரன். (W.) 3. Saturn; சனி. (இலக். அக.) 4. Mars; செவ்வாய். (பிங்.) 5. Rudra; உருத்திரன். (யாழ். அக.) 6. A liberal chief. See தந்தவக்கிரன். (பிங்.) 7. An asura slain by Viṣṇu; திருமாலாற் சங்கரிக்கப்பட்ட ஓர் அசுரன். வக்கிரனை வடிவழித்த மாயவனு (பெருந்தொ. 865).

வக்கிராங்கம் vakkirāṅkam, *n.*<*vakrāṅga.* Swan, as having an arched body; [வளைந்த வடிவுடையது] அன்னம். (பிங்.)

வக்கிராங்கி vakkirāṅki, *n.* cf. *cakrāṅgī.* Christmas rose. See கடுரோகணி. (சங். அக.)

வக்கிராந்தபாஷாணம் vakkirānta-pāṣāṇam, *n.* perh. *vakrānta*+. A mineral poison; பிறவிப்பாஷாணவகை. (மூ. அ.)

வக்கிராஸ்தமனம் vakkirāstamaṉam, *n.* <*vakra*+*astamana.* (Astron.) Heliacal setting of a planet, while in its retrograde motion; கிரகம் வக்கிரகதியில் அஸ்தமிக்கை. (பஞ்.)

வக்கிரி-த்தல் vakkiri-, *11 v. intr.* <id. 1. (Astrol.) To retrograde, as a planet; கிரகம் மடங்கித் திரும்புதல். (யாழ். அக.) 2. To be crooked; to be perverse; to be contradictory; கோணியிருத்தல். 3. To be at variance; மனங்கோணியிருத்தல். 4. (Mus.) To elaborate a tune or melody-type; ஆலாபனஞ்செய்தல். இசையோன் வக்கிரித்திட்டத்தை யுணர்ந்து (சிலப். 3, 41).

வக்கிரீகரணம் vakkirīkaraṇam, *n.* <*vakrī-karaṇa.* Refraction; deviation; retrogression; கோணலாய்ச் செல்லுகை.

வக்கிரோக்தி vakkirōkti, *n.* <*vakrōkti.* (Rhet.) A figure of speech in which a repartee is based on a *double entendre;* சொன்ன சொற்களுக்கு வெவ்வேறு பொருள் கொண்டு மறுமொழி யுரைப்பதாகிய அணி.

வக்கிரோதயம் vakkirōtayam, *n.* <*vakra* +. (Astron.) Heliacal rising of a planet, while in its retrograde motion; கிரகம் வக்கிரகதியில் உதயமாகை. (பஞ்.)

வக்கில் vakkil, *n.* See வக்கீல். (W.)

வக்கீல் vakkīl, *n.* <U. *wakīl.* 1. Authorized attorney; counsel at law, pleader; நியாயஸ்தலத்தில் பிறர்க்காக வழக்கெடுத்து வாதிப்போன். 2. One who represents the bride in a contract of marriage; மணவுடன்படிக்கையில் மணப்பெண் சார்பான காரியஸ்தன். *Muham.*

வக்கு[1]-தல் vakku-, *5 v. tr.* perh. *vakṣ.* cf. வதக்கு-. To burn, singe; to roast; வதக்குதல். கொழுப்பரிந்து . . . வக்குவன வக்குவித்து (பெரியபு. கணணப். 145).

வக்கு[2] vakku, *n.* <வக்கு-. Being singed or burnt; being roasted; வேதுகை. நெருப்புசசிந்தலின் வக்கிலாததிசைகளு மில்லை (கம்பரா. இராவணன்வதை. 65).

வக்கு[3] vakku, *n.* <*tvac.* 1. Skin; தோல். (யாழ். அக.) 2. Contused wound; ஊமைக்காயம். வக்குணட காயம். *Loc.* 3. Water-trough; நீர்த்தொட்டி. (யாழ். அக.)

வக்கு[4] vakku, *n.* perh. *varga.* cf. வகை. Means, resources; வழி. அவனுக்குக் கடன் கொடுக்க வக்கில்லை. (C. G.)

வக்கு[5] vakku, *n.* <Pkt. *vakka* <*vrkka.* 1. Kidney; மூத்திரக்குண்டிக்காய். 2. Testicle; அண்டவிதை. உன்னை வக்கிலே உதைத்துச் சரியான வழி பண்ணுகிறேன்.

வக்குத்திரிகரணம் vakkuttirikaranam, *n.* Bed; படுக்கை. (W.)

வக்குநார் vakku-nār, *n.* prob. வக்கு[3]+. 1. Woolly ordure tree, l. tr., *Sterculia villosa;* மரவகை. 2. Hemp fibre; சணல் நார்.

வக்குரி-த்தல் vakkuri-, *11 v. intr.* perh. வக்கு[2]. To scorch, burn; வேதல். வாயாற் சொல்லில் வாய் வக்குரிக்கும்படி (ஈடு, 9, 9, 2).

வக்குவக்கெனல் vakku-vakkenal, *n.* (W.) Onom. expr. of (a) running to exhaustion; களைப்புமேலிட ஓடும் ஒலிக்குறிப்பு. நாய் வக்கு வக்கென்றோடுகிறது: (b) coughing hard; கடுமையாய் இருமற் குறிப்பு. (W.): (c) pounding hard or ramming; கடுமையாய் இடித்தற்குறிப்பு.

வக்தா vaktā, *n.* <*vaktā* nom. sing. of *vaktr.* 1. One who speaks or expounds; எடுத்துச்சொல்லுவோன். 2. Orator; பேச்சாளி.

வக்திரம் vaktiram, *n.* <*vaktra.* 1. Mouth; வாய். 2. Face, countenance; முகம்.

வக்திருவிவக்ஷை vaktiru-vivakṣai, *n.* <*vaktr-vivakṣā.* Speaker's intention, author's meaning; சொல்லுவான்குறிப்பு. (பி. வி. 26.)

வக்து vaktu, *n.* <*Arab. vaqt.* Time; season; opportunity; காலம். *Loc.*

வகச்சல் vakaccal, *n.* prob. வகை-. A kind of garland; மாலைவகை. திருமாலை வகச்சல் வளையம் (கோயிலொ. 59).

வகத்திரம் vakattiram, *n.* Siris; வாகை. (சங். அக.)

வகதி vakati, *n.* <*vahati.* (யாழ். அக.) 1. Bull; எருது. 2. Wind; காற்று. 3. Friend; சினேகிதன்.

வகது vakatu, *n.* <*vahatu.* (யாழ். அக.) 1. Bull; எருது. 2. Traveller; பிரயாணி.

வகந்தம் vakantam, *n.* <*vahanta.* (யாழ். அக.) 1. Wind; காற்று. 2. Child; குழந்தை.

வகநிசூதனன் vaka-nicūtanaṉ, *n.* <*Baka-niṣūdana.* Bhīma, as the slayer of the demon Baka; [பகாசுரனை வதைத்தோன்] வீமன். (யாழ். அக.)

வகம் vakam, *n.* <*vaha.* 1. Wind; காற்று. (யாழ். அக.) 2. Path; வழி. (யாழ். அக.) 3. Horse; குதிரை. (இலக். அக.) 4. Vehicle; வாகனம். (யாழ். அக.)

வகன் vakaṉ, *n.* <*Baka.* (யாழ். அக.) 1. Kubēra; குபேரன். 2. Baka, an asura or demon; பகன் என்னும் அசுரன்.

வகாரவுப்பு vakāra-v-uppu, *n.* <U. *pahār* + உப்பு. Rock-salt; கல்லுப்பு. (மூ. அ.)

வகாலத்து vakālattu, *n.* See வக்காலத்து. (W.)

வகி-த்தல் vaki-, *11 v. tr.* <*vah.* To bear, carry, as a load; to undertake, as a responsible work; to maintain, support, as a family; to endure, as fatigue, etc.; தாங்குதல். குடும்ப பாரத்தை வகிக்கிறான்.

வகிடு vakiṭu, *n.* <வகிர். Parting in woman's hair from the crown to the forehead; வகிர்ந்த முன்தலை மயிரின் இடைவெளியொழுங்கு.

வகிர்[1]-தல் vakir-, *4 v. tr.* 1. cf. *bhaj.* To slice; to cut in slips; துண்டாக அறுத்தல். (சது.)

2. To split; பிளத்தல். (சது.) 3. To cleave; to tear open; to rip up; கீறுதல். பகிரந்தான் சில வகிரந்தான் சில (கம்பரா. அதிகாய. 160). 4. To disentangle; கோதுதல். (சது.) 5. To divide; பங்கு செய்தல். (சது.) 6. See வகிரெடு-.

வகிர்² vakir, n. <வகிர-. 1. Tearing; பிளவு. 2. Scratch; கீறு. (W.) 3. Slice; பிளந்த துண்டு. மாவின்வடுவகி ரன்ன கணணீர (திருவாச. 9, 2). 4. See வகிடு. வாரந்தநெடுங கூந்தல வகிரிநுள் (வெங்கையு. 304). 5. Leather girdle; வார்க் கச்சு. (W.) 6. Leather strap; தோல்வார். (யாழ். அக.) 7. Tendon; நரம்பு. (யாழ். அக.) 8. cf. *vaha*. Way, road; வழி. (பிங்.)

வகிரங்கம் vakirankam, n. <*bahir-aṅga*. 1. Publicity; வெளிப்படை. 2. External part, limb or member; வெளியுறுப்பு. (W.)

வகிரா vakirā, n. Buffalo; எருமை. (சங். அக.)

வகிரிந்திரியம் vakirintiriyam, n. <*bahir* +. See வகிரேந்திரியம். (யாழ். அக.)

வகிரியாகம் vakiriyākam, n. <id.+. External worship. See பகிர்யாகம். (W.)

வகிரெடு-த்தல் vakir-eṭu-, v. tr. <வகிர +. To part the hair from the crown to the forehead; உச்சியினின்றும் நெற்றியின் மத்திவரை மயிரை ஒழுங்குபடப் பிரித்தல்.

வகிரேந்திரியம் vakirēntiriyam, n. <*bahir-indriya*. Organ of sense; அறிகருவி யாகிய புலன். (யாழ். அக.)

வகீல் vakīl, n. See வக்கீல். (C. G.)

வகு¹-த்தல் vaku-, 11 v. tr. cf. *bhaj*. 1. To separate; to divide; கூறுபடுத்துதல். 2. To apportion; to distribute; பகிர்ந்து கொடுத்தல். பெருமபெயர மன்னர்க் கொபப மனைவகுத்து (நெடுநல். 78). 3. To classify; to allot under different heads; இனம்பற்றிப் பிரித்தல். 4. (Arith.) To divide; பதத்துக்கணக்கிடுதல். 5. To assign, appoint; நியமித்தல். வகுத்தான் வகுதத வகையல லால் (குறள், 377). 6. To narrate categorically; வகைப்படுத்திச் சொல்லுதல். அவன்கதை வகுபபாய் (பாகவத. 1, ஸ்ரீநாரதர். 5). 7. To expend methodically; நியமத்தோடு செலவிடுதல். காத்த வகுத தலும் (குறள், 385). 8. To create, as for a special purpose; படைத்தல். என்னை வகுத்திலையே லிடும பைக் கிடம் யாது சொல்லே (தேவா. 643, 2). 9. To daub; பூசுதல். அஞ்சனம் வகுத்து (பெருங். உஞ்சைக். 34, 15).

வகு²-தல் vaku-, 4 v. tr. cf. வகிர்-. To split; பிளத்தல். மால் வகுந்து தொடுத்த செம்பூங கணணி யொடு (புறநா. 264).

வகுஞ்சம் vakuñcam, n. perh. *bha+kuñja*. Night; இராத்திரி. (பிங்.)

வகுண்டம் vakuṇṭam, n. <*avakuṇṭha*. A low annual plant flourishing in dry localities. See கவிழ்தும்பை. (மலை.)

வகுண்டிகை vakuṇṭikai, n. perh. *vaikuṇṭhikā*. White basil. See கஞ்சாங்கோரை, 1. (மலை.)

வாட்டு³ vāṭṭu, n. cf. வாட்டம்². 1. See வாட்டம்², 1. நீர்வாட்டுச் சரியாகவிருக்கிறது. 2. That which is handsome; அழகானது. Loc. 3. That which is suitable; தகுதியானது. அந்தத் தொழில் எனக்கு வாட்டா யிருக்கவில்லை. (W.) 4. cf. vaṭa. Side; nearness; சார்பு. என்பக்கவாட்டி லிராதே. 5. Facility from frequent use, as of the right or the left hand; பழக்கமிகுதியா லேற்படும் லாகவம். அவன் இடக்கை வாட்டுள்ளவன். 6. Cheapness; மலிவு. அது எனக்கு வாட்டாய்க் கிடைத்தது. (W.)

வாட்டுசோகை vāṭṭu-cōkai, n. < வாட்டு- +. Bright's disease; சோகைநோயால் உண்டாம் வீக்கவகை.

வாட்டுலோடு vāṭṭul-ōṭu, n. < E. bottle + ஓடு⁴. Broken pieces of glass; உடைந்த கண்ணாடித் துண்டு. Loc.

வாட்டுலோடுபுதைத்தல் vāṭṭulōṭu-putaittal, n. < வாட்டுலோடு + புதை-. Fixing broken pieces of glass over walls to prevent people from climbing over them; சுவர்மேல் ஆள் ஏறதபடி உடைந்த கண்ணாடித்துண்டுகளைப் பதிக்கை. (கட்டட. நாமா. 19.)

வாட்படை vāṭ-paṭai, n. < வாள்¹ +. Army of soldiers armed with swords; வாள்தரித்த வீரர். வாட்படையை யோட்டி (பட்டினப. 226, உரை).

வாட்படையாள் vāṭ-paṭaiyāḷ, n. < id. + படை. Durgā, as armed with sword; துர்க்கை. (பிங்.)

வாட்பல்விலக்கி vāṭ-pal-vilakki, n. < id. + பல்² + விலக்கு-. 1. Tenon saw; சிறிய ரம்பம். (C. G.) 2. Saw-set; ரம்பத்தின் பற்களை நேராக்கும் கருவி.

வாட்போர் vāṭ-pōr, n. < id. + போர்³. Fight with the sword; வாளாற் செய்யும் யுத்தம். வாட்போரான் மிகுகின்ற . . . வீரருடைய (மதுரைக். 53, உரை).

வாடகை¹ vāṭakai, n. < bhāṭa-ka. Rent, hire; கூலி. வாடகைக்குதிரை (திருவேங். சத. 85).

வாடகை² vāṭakai, n. < vāṭikā. 1. Region, district; சுற்றுவட்டம். அரசூர் வாடகையில் (S. I. I. iii, 109). 2. Street; தெரு. (யாழ். அக.) 3. Garden; கொல்லை. (யாழ். அக.) 4. Stable; வாகன சாலை. (யாழ். அக.) 5. Mud wall; மண்சுவர். (யாழ். அக.)

வாடல் vāṭal, n. <வாடு-. 1. Withering; drying; becoming lean; fading; வாடுகை. 2. That which is faded, dried or withered; that which is stale or not fresh, as vegetables; வாடின பொருள். 3. Faded flower; உலர்ந்த பூ. (பிங்.)

வாடன்சம்பா vāṭaṉ-campā, n. perh. vāṭa + சம்பா¹. An inferior kind of paddy; மட்ட நெல்வகை.

வாடாக்கடமை vāṭā-k-kaṭamai, n. <வாடு- + ஆ neg. +. Permanently fixed tax; திட்டமான வரி. இவ்வாண்டு முதல் வாடாக்கடமை யாக நிறுத்துவித்தது (S. I. I. v, 120).

வாடாக்குறிஞ்சி vāṭā-k-kuṟiñci, n. <id. + id. +. A plant whose flowers do not lose colour in withering; உலரும் நிலையிலும் தன் இயற்கைநிறம் மாறாத பூவகை. (பிங்.)

வாடாக்கொடி vāṭā-k-koṭi, n. perh. id. + id. +. Willow-leaved justicia. See கருநொச்சி, 1.

வாடாத்தாமரை vāṭā-t-tāmarai, n. <id. + id. +. Lotus-shaped ornament of gold, presented to bards by ancient kings; பண்டைக்கால வரசர் பாணர் அளிக்கும் பொற்றாமரைப்பூ. வாடாத் தாமரை சூட்டுவ னினைக்கே (புறநா. 319).

வாடாமல்லி vāṭā-malli, n. <id. + id. + மல்லி¹. See வாடாமல்லிகை. Loc.

வாடாமல்லிகை vāṭā-mallikai, n. <id. + id. +. Bachelor's buttons, *Gomphrena globosa*; பூச்செடிவகை. (W.)

வாடாமாலை vāṭā-mālai, n. <id. + id. + மாலை³. 1. Gold necklace, as not fading like the garland of flowers; [பூமாலை போன்று வாடாதது] பொன்னரி மாலை. வாடாமாலை பாடினி யணிய (புறநா. 364). 2. Garland made of rags, pith, etc.; கிழி கிடை முதலியவற்றாற் செய்யப்படும் மாலை (சிலப. 5, 33, உரை.)

வாடாவஞ்சி vāṭā-vañci, n. <id. + id. + வஞ்சி³. Karūr. See கருவூர். வாடாவஞ்சி வாட்டு நின் . . . நோன்றாள் (புறநா. 39).

வாடாவள்ளி vāṭā-vaḷḷi, n. <id. + id. +. 1. A kind of dance; ஒருவகைக் கூத்து. வாடா வள்ளியின் வளம்பல தரூஉ நாடுபல (பெரும்பாண். 370). 2. Painting, picture; சித்திரம். (அக. நி.)

வாடாவூட்டு vāṭā-v-ūṭṭu, n. <id. + id. +. See வாடாக்கடமை. (Insc. Pudu. 287.)

வாடி¹ vāṭi, n. <id. A sensitive plant. See தொட்டால்வாடி, 1. (மூ. அ.)

வாடி² vāṭi, n. <vāṭī. 1. Garden; தோட்டம். (W.) 2. Wall; மதில். (யாழ். அக.) 3. Courtyard; முற்றம். (யாழ். அக.) 4. House; வீடு. (யாழ். அக.) 5. Fish-curing yard; மீனுலர்த்து மிடம். Loc. 6. Village, hamlet; பட்டி. 7. Rest-house; சாவடி. காட்டுவீடு. 8. Hut of bamboo and grass, of kāṇi-k-kāraṉ; காணிக்காரரின் புல் வேய்ந்த மூங்கிற் குடிசை. (G. Tn. D I, 7.) 9. Enclosure, fenced place; அடைப்பிடம். (W.) 10. Yard, shed where firewood is stored for sale; விறகு மரம் முதலியன விற்குமிடம். விறகுவாடி, மரவாடி.

வாடிக்கை vāṭikkai, n. [T. vāḍuka, K. vāḍike.] 1. Habit; வழக்கம். செந்தாக்களைக் கிளி வாடிக்கையாற் கற்று (இராமநா. அயோத். 22). 2. Custom, as in dealing; வழக்கமாகப் பற்றுவரவு செய்கை. 3. Usage; முறை. உலகவாடிக்கை நிசமல்லவே (குமரே. சத. 69). 4. See வாடிக்கைக்காரன்.

வாடிக்கைக்காரன் vāṭikkai-k-kāraṉ, n. <வாடிக்கை + காரன்¹. 1. Customer; வழக்கமாக ஓரிடத்துப் பற்றுவரவு செய்வோன். 2. Customary supplier of goods; பண்டங்களை வழக்கமாக ஓரிடத்து விலைக்குக்கொடுத்து வருவோன்.

வாடிகம் vāṭikam, n. A prostrate herb. See பிரமி². (நாமதீப. 340.)

வாடிகை vāṭikai, n. <vāṭikā. (யாழ். அக.) 1. See வாடகை², 2, 3, 4. 2. Resting place; தங்குமிடம்.

வாடிவாசல் vāṭi-vācal, n. <வாடி² +. Entrance hall of a palace or mansion; ஆசார வாசல். Loc.

வாடிவேலி vāṭi-vēli, n. <id. +. The boundary line of a village; கிராமத்தின் எல்லைக் குறி. Colloq.

வாடு¹-தல் vāṭu-, 5 v. intr. [T. vāḍu, K. bāḍu, M. vāḍuga.] 1. To wither, fade, dry up; உலர்தல். பொதிபொதி பீளவாட (நாலடி, 269). 2. To be emaciated; to become weak; மெலிதல். எந்தோள் வாட (கலித். 68). 3. To pine away, grieve; மனமழிதல். வாடினேன் வாடி வருந்தினேன் (திவ். பெரியதி. 1, 1, 1). 4. To turn pale; பொலி வழிதல். குழலியென் வாடிப் புலம்புவதே (திருக் கோ. 14). 5. To be defeated; தோல்வியடைதல். வாடாவஞ்சி தலைமலைந்து (பு. வெ. 3, 1, கொளு). 6. To perish; கெடுதல். காரிகை பெற்றதன கவின்வாட (கலித். 124). 7. To be removed; நீங்குதல். சூலமும் . . . கரத்தினில் வாடாதிருத்தி (கல்லா. 87, 29). 8. To diminish, decrease; குறைதல். வாட்டருஞ் சீர்க்கண்ணகி நல்லாளுக்கு (சிலப. 9, 40). 9. To fall short in weight; நிறைகுறைதல். Loc.

வாடு² vāṭu, n. <வாடு-. Faded flower; வாடற் பூ. ஈங்கைவா டுதிர்புக (கலித். 31).

வாடூன் vāṭūṉ, n. < id + ஊன். Dried flesh; உப்புக்கண்டம். வாராத்தட்ட வாடூன் பழுக்கல் (பெரும்பாண். 100).

வாடை[1] vāṭai, n. < வடக்கு. 1. North wind; வடகாற்று. (பிங்.) வாடை நலிய வடக்கிருந் தோனை (பு. வெ. 8, 16). 2. Chill wind; குளிர் காற்று. Colloq. 3. Wind; காற்று (பிங்.) வாடை மயிர்ப்படன் (சடா. பிள்ளைக். 66). 4. [T. vāda.] Fume; scent; வாசனை. கைத வாடையின் (திருப்பு. 143). 5. cf. vāḍava. Submarine fire. See வடவை. வாடை பொங்கொள்கொளை (திருப்ப. 382).

வாடை[2] vāṭai, n. < vāṭa. 1. Row of houses, as in a street; தெருச்சிறகு. (சூடா.) கீழை வாடை, மேலைவாடை. 2. Street; தெரு. (பிங்.) 3. Street where herdsmen or hunters reside; இடையர் அல்லது வேடர் வாழும் வீதி. (W.) 4. Village, hamlet; சிறு கிராமம். 5. Direction; வழி. இந்த வாடையாக வா.

வாடை[3] vāṭai, n. prob. vaṭa. Medicine; மருந்து. (பிங்.)

வாடை[4] vāṭai, n. < bhāṭa. Rent. See வாடகை[1]. (W.)

வாடைக்கச்சான் vāṭai-k-kaccāṉ, n. < வாடை[1] +. North-west wind; வடமேல்காற்று. (யாழ். அக.)

வாடைக்குற்றி vāṭaikkuṟṟi, n. Willow-leaved justicia. See சுருரோச்சி, 1. (L.)

வாடைக்கொண்டல் vāṭai-k-koṇṭal, n. < வாடை[1] +. North-east wind; வடகீழ்காற்று (யாழ். அக.)

வாடைச்சம்பா vāṭai-c-campā, n. See வாடன்சம்பா.

வாடைப்பாசறை vāṭai-p-pācaṟai, n. < வாடை[1] +. (Puṟap.) Theme describing the north wind which blows in the camp of soldiers and distresses them by reminding them of their lady-loves; பாசறைச்சண் வீரர் தம் காதன்மகளிரை நினைந்து துயருறும்படி செய்கின்ற வாடைக்காற்றின் மிகுதியைக் கூறும் புறத்துறை. (பு. வெ. 8, 16.)

வாடைப்பொடி vāṭai-p-poṭi, n. < id. +. 1. Aromatic or scented powder; வாசனைத் தூள். Loc. 2. Medicated powder that charms a person and keeps him under fascination; வசியப்படுத்தும் பொடி. வாடைப்பொடியிட்டான (விறலிவிடு. 823).

வாடையாலோடு-தல் vāṭaiyāl-ōṭu-, v. intr. < id. +. See வாடையிலோடு-. (W.)

வாடையிலோடு-தல் vāṭaiyil-ōṭu-, v. intr. < id +. To sail with the north wind; வடகாற்றின் உதவியால் மரக்கலம் பாய்விரித்துச் செல்லுதல். (W.)

வாண்டியம் vāṇṭiyam, n. Pink-tinged white sticky mallow. See பேராமுட்டி. (மலை)

வாண்டையான் vāṇṭaiyāṉ, n. A title of the Kaḷḷa caste; கள்ளர்சாதியினரின் பட்டப் பெயர்களுள் ஒன்று.

வாண்மங்கலம் vāṉ-maṅkalam, n. < வாள்[1] +. 1. (Puṟap.) Theme which describes the sword of a victorious king being placed in the hands of Koṟṟavai and given a ceremonial bath; பகையரசை வென்ற வேந்தன் தன் வாளினைக் கொற்றவைமேல் நிறுத்தி நீராட்டுதலைக் கூறும் புறத்துறை. (தொல். பொ. 68, உரை.) 2. (Puṟap.) Theme which describes a victor's sword being blessed by the devils whose hunger has been satisfied by its deeds of slaughter; வீரனது வாள் வென்றியாற் பசிப்பிணி தீர்ந்த பேய்ச்சுற்றம் அவன் வாளினை வாழ்த்துதலைக் கூறும் புறத்துறை. (தொல். பொ. 91.)

வாண்மண்ணுநிலை vāṇ-maṇṇu-nilai, n. < id. +. (Puṟap.) Theme which describes the ceremonial bath given to a king's sword and the heroic achievements of the king with that sword; தீர்த்த நீராலே மஞ்சனமாட்டிய அரசவாளின் வீரத்தைக் கூறும் புறத்துறை. (பு. வெ. 6, 27.)

வாண்முகம் vāṉ-mukam, n. < id. +. Edge of sword; வாளின்வாய். வாணமுகம பொறிதத மாணவரி யாக்கையா (பதிற்றுப. 58, 3).

வாண்முட்டி vāṉ-muṭṭi, n. < id. + முட்டி[2]. Handle or hilt of a sword; வாளின் பிடி. வாண் முட்டியை இடையறும்படி பிடிதத கையினா (சீவக. 2217, உரை).

வாணக்கந்தகம் vāṇa-k-kantakam, n. < வாணம + கநதகம[1]. Stick sulphur, roll sulphur, as used in fireworks; பொறிவாணம் முதலிய செய் தற்குரிய கந்தகவகை. (M. M. 300.)

வாணக்காரன் vāṇa-k-kāraṉ, n. < id. + காரன்[1]. [K. bāṇagāra.] One who manufactures and sells fireworks; ஆகாசவாணம் முதலியனசெய்து விற்பவன்.

வாணக்குழல் vāṇa-k-kuḻal, n. < id. + குழல்[3]. Metallic tube fixed in a block of wood, used for loading fireworks with gunpowder; அதிர்வேட்டுக்காகப் பொறிவாணமருந்து அடைக்கும் வெடிகுழாய்.

வாணகந்தி[1] vāṇakanti, n. prob. parṇa-khaṇḍa. Pipal. See அரசு[1]. (மலை.)

வானகந்தி[2] vāna-kanti, n. < வானம் + கந்தி[4]. See வானகந்தகம்.

வாணகம் vāṇakam, n. < bāṇa. (யாழ். அக.) 1. See வாணம், 1, 2. 2. Cow's udder; பசுவின் மடி. 3. Flute; வேய்ங்குழல். 4. Loneliness; தனிமை.

வாணகன் vāṇakan, n. prob. வாணகம். Viṣṇu; திருமால். (யாழ். அக.)

வாணகோப்பாடி vāṇa-kō-p-pāṭi, n. < வாணன்[2] + கோ[3] + பாடி[1]. The country of the Bāṇas, an ancient kingdom comprising portions of the Mysore State, and of the Kurnool and North Arcot districts; வாணவரசர் ஆண்டதும் மைசூர் சமஸ்தானம், கர்நூல் சில்லா, வடஆர்க்காடு சில்லா ஆகியவற்றின் பாகங்கள் அடங்கியதுமான நாடு. (S. I. I. ii, Preface. 27.)

வாணதண்டம் vāṇataṇṭam, n. < vāṇa-daṇḍa. Apparatus for weaving sarees; புடைவை நெய்யுங் கருவிவகை. (யாழ். அக.)

வாணதீர்த்தம் vāṇa-tīrttam, n. < bāṇa-tīrtha. A sacred waterfall in the Tinnevelly District; திருநெல்வேலி ஜில்லாவில் புண்ணியதீர்த்தமாயுள்ள ஓர் அருவி.

வாணபுரம் vāṇa-puram, n. < Bāṇa+. The capital of Bāṇa's kingdom; வாணசுரனது தலைநகர். வாணபுரம்புக்கு (திவ். திருவாய். 7, 10, 7).

வாணம் vāṇam, n. < bāṇa. 1. Arrow; அம்பு. 2. Fire; தீ. பாயும் புகைவாணங் கொடு பாணம (இரகு. நகர. 24). 3. Rocket, fireworks; ஆகாசவாணம் பொறிவாண முதலியன. (யாழ். அக.)

வாணலி vāṇali, n. [T. K. bāṇali.] Frying pan; வறுக்குஞ்சட்டி.

வாணலிங்கம் vāṇa-liṅkam, n. < Bāṇa+. A form of Lingam, found in the Narmadā, as worshipped by the Asura Bāṇa; வாணசுரனாற் பூசிக்கப்பட்டதும் நருமதையில் அகப்படுவதுமான லிங்கவகை. வாணனெனுமசுர னர்ச்சித்தான் . . . வாணலிங்கம (சைவச. பொது. 85).

வாணன்[1] vāṇaṉ, n. < வாழ்-. 1. Resident; வசிப்பவன். அணடவாண ரமுதுண நஞ்சுண்டு (தேவா. 644, 6). 2. One who persues a profession or calling; ஏதேனும் ஒரு தொழிலால் வாழ்பவன். பாவாணன். 3. Prosperous man; நல்வாழ்வுள்ளவன். (W.)

வாணன்[2] vāṇaṉ, n. < bāṇa. 1. An asura, son of Mahābali; மகாபலியின் மகனான ஓர் அசுரன். வாணன் பேரூர் (மணி. 3, 123). 2. King of a dynasty tracing its lineage from Mahābali; மகாபலி வமிசத்துத்தோன்றிய அரசன். வாணவித்தியாதரரான வாணாராய மகா தேவியார (S. I. I. iii, 99). ஆறைய கோன வாணன (பெருந்தொ. 1185). 3. A chief of Tañcākkūr, a town in Pāṇḍya country; பாண்டி நாட்டில் தஞ்சாக்கூர் என்ற நகரையாண்ட ஒரு தலைவன். 4. The third nakṣatra. See கார்த்திகை. (சூடா.)

வாணன்கோவை vāṇaṉ-kōvai, n. < வாணன்[2]+. A kōvai treatise on Tañjai-vāṇaṉ. See தஞ்சைவாணன்கோவை. (W.)

வாணா vāṇā, n. See வாணலி. Loc.

வாணாக்கம்பு vāṇā-k-kampu, n. < Hind. bāṇā + கம்பு[1]. See வாணாத்தடி.

வாணாட்கோள் vāṇāṭ-kōḷ, n. < வாள்[1] + நாள் + கோள்[1]. (Purap.) Theme of a king sending his sword in advance at an auspicious moment, when setting out with the object of capturing the fort of his enemy; பகைவனது அரணைக் கொள்ள நினைத்து வாளைப் புறவீடு விடுவதைக் கூறும் புறத்துறை. (பு. வெ. 6, 3.)

வாணாத்தடி vāṇā-t-taṭi, n. < Hind. bāṇā + தடி[2]. Cudgel used by Indian gymnasts in fencing. See பாணாத்தடி. Loc.

வாணாய் vāṇāy, n. See வாணலி. Loc.

வாணாள் vāṇāḷ, n. < வாழ்- + நாள். 1. Lifetime; சீவியகாலம். 2. Life; உயிர். தெவ்வர் வாணாள் வீழ்ந்தன (சீவக. 3079).

வாணாளளப்போன் vāṇāḷ-aḷappōṉ, n. < வாணாள் + அள-. Sun; சூரியன். (சூடாமணி நிகண்டு. 94.)

வாணாளைவாங்கு-தல் vāṇāḷai-vāṅku-, v. tr. < id.+. To tease, worry to death; பெருந்தொந்தரவு பண்ணுதல். என் என்னை வாணாளை வாங்குகிறாய் ?

வாணி[1] vāṇi, n. < vāṇī. 1. Word, language, speech; சொல். (பிங்.) நன்கல்ல வாணி கிளைததடக்கி (பிரபோத். 22, 19). 2. Learning; கல்வி. துதி வாணி வீரம் (பெருந்தொ. 418). 3. Sarasvatī, as the Goddess of Learning; சரசுவதி. (பிங்.) வாணிபு மல்லிமென் மலரையனும (சீகாளத். பு. நான்மு. 147). 4. The river Sarasvatī; சரசுவதி நதி. கஙகை காளிந்தி வாணி காவிரி . . . நதிகள (திருவிளை. தல. 11). 5. Source of vocal sounds; நாதந்தோன்றும் இடம். நாபிககு நால்விரல் மேலே . . . வாணிக் கிருவிர லுள்ளே (திருமந். 616). 6. A kind of dance; கூத்துவகை. (பிங்.)

வாணி[2] vāṇi, n. prob. bāṇa. Arrow; அம்பு. (பிங்.)

வாணி[3] vāṇi, n. prob. yavānī. Bishop's weed. See ஓமம்[1]. (மலை.)

வாணி[4] vāṇi, n. < pāṇi. Water; நீர். (W.)

வாணி[5] vāṇi, n. (சங். அக.) 1. Rock-salt; இந்துப்பு. 2. Realgar. See மனோசிலை.

வாணிகச்சாத்து vāṇika-c-cāttu, n. < வாணிகம் + சாத்து[3]. Caravan of traders; வாணிகர் திரள். வாணிகச்சாத்தோடே போகாநின்ற தனிமையாள் யான் தொடருகின்றேன் (சிலப். 11, 190, உரை).

வாணிகச்சி vāṇikacci, n. Fem. of வாணிகன். Woman of the trading caste; வைசிய சாதிப்பெண்.

வாணிகம் vāṇikam, n. < vāṇijya. 1. Trade; வியாபாரம். வாணிகஞ்செய்வார்க்கு வாணிகம் (குறள், 120). 2. Gain, profit; ஊதியம். யானொரு வாணிகப் பரிசில னல்லேன் (புறநா. 208).

வாணிகவென்றி vāṇika-venri, n. < வாணிகம் +. (Puṟap.) Theme describing the selfless benefactions of a merchant who has risen to prominence by his success in business; வாணிகத்தாற் சிறப்பெய்திய வணிகன் தனது பொருளிற் பற்றின்றிப் பிறர் மிடியை நீக்கும் பெருந்தன்மையை எடுத்துக்கூறும் புறத்துறை. (பு. வெ. 12, ஒழிபு, 2.)

வாணிகன் vāṇikan, n. < id. cf. pāṇika. 1. Merchant, trader; வியாபாரி. அறவிலைவாணிகன் (புறநா. 134). 2. Man of the trading caste; வைசியன். 3. Scales, balance; துலாக்கோல். (பிங.) 4. Libra of the zodiac; துலாராசி. (சூடா.)

வாணிகேள்வன் vāṇi-kēḷvan, n. < வாணி[1] +. Brahmā; பிரமன். (சூடா.)

வாணிச்சி vāṇicci, n. 1. See வாணிகச்சி. மதுரையிற் பிட்டுவாணிச்சி மகற்கு (தொல். பொ. 84, உரை). (ஈடு. 144, மயிலை.) 2. See வாணியச்சி.

வாணிச்சிமேனி vāṇicci-mēṉi, n. perh வாணிச்சி +. Ruby; மாணிக்கம். (யாழ். அக.)

வாணிச்சியம் vāṇicciyam, n. < vāṇijya. Trade; வியாபாரம். (W.)

வாணிதம் vāṇitam, n. cf. phāṇita. Toddy; கள். (பிங.)

வாணிதி vāṇiti, n. See வாணினி, 1, 2. (யாழ். அக.)

வாணிபம் vāṇipam, n. 1. See வாணிகம், 1. (W.) 2. See வாணிகம், 2. இவளை வைதது வைததுக் கொணடென்ன வாணிபம் (திவ். பெரியாழ். 3, 7, 9).

வாணிபன் vāṇipan, n. See வாணிகன், 1. (W.)

வாணிமலர் vāṇi-malar, n. < வாணி[1] +. White lotus; வெண்டாமரை. (மூ. அ.)

வாணிமன் vāṇi-maṉ, n. < id. + மன்[2]. See வாணிகேள்வன். பாணியாற படைத்திலன வாணிமன் (பாகவத. 1, கணணபிரான் துவரை. 25).

வாணியச்சி vāṇiyacci, n. Fem. of வாணியன். Woman of the oil-monger caste; செக்கார் சாதிப்பெண்.

வாணியநகரத்தான் vāṇiya-nakarattāṉ, n. < வாணியன் +. See வாணியன். (I. M. P. Sm. 25.)

வாணியம் vāṇiyam, n. < vāṇijya. 1. See வாணிகம், 1. (W.) 2. See வாணிகம், 2. சிறுகாலை நாமுறுவாணியம (தேவா. 259, 3).

வாணியன் vāṇiyaṉ, n. < வாணிகன். 1. See வாணிகன், 1. 2. Oil-monger; செக்கான். (W.)

வாணியன்தாதன் vāṇiyaṉ-tātaṉ, n. < வாணியன் +. A poet said to be of oil-monger caste and a contemporary critic of Kampar; கம்பர்காலத்தில் அவர்க்கு எதிரியாயிருந்தவராகவும் செக்கார்குலத்தவராகவும் சொல்லப்படும் ஒரு புலவர். (தமிழ்நா. 83.)

வாணியன்பொருவா vāṇiyaṉ-poruvā, n. 1. Anchovy, silvery, shot with gold and purple, *Engraulis malabaricus*; வெண்மையில் பொன்னிரேகையும் ஊதாரேகையுமுள்ள கடல்மீன்வகை. 2. Anchovy, bronze, *Engraulis hamiltonii*; வெளிறின மஞ்சணிறமுள்ள கடல்மீன்வகை.

வாணிலை vāṇilai, n. < வாள்[1] + நிலை. (Puṟap.) Theme of sending in advance at an auspicious moment the sword of a king who intends to advance against his enemies; பகைமேற் படையெடுத்தலை விரும்பி வேந்தன் வாளைப் புறவீடுவிடுவதைக் கூறும் புறத்துறை. (பு. வெ 3, 4.)

வாணினி vāṇiṉi, n. < vāṇinī. 1 Dancing woman; நாடகக்கணிகை. (W.) 2. Immodest woman; நாணமற்றவள். (W.) 3. Clever woman; விவேகமுள்ளவள். (யாழ். அக.)

வாணீசன் vāṇīcaṉ, n. < Vāṇīśa. Brahmā; பிரமன். (யாழ். அக.)

வாணுதல் vāṇutal, n. < வாள்[1] + நுதல். 1. Bright forehead; ஒளிபொருந்திய நெற்றி. வாணுதல் விறலி (புறநா. 89). 2. Woman with a bright forehead; ஒள்ளிய நெற்றியுள்ள பெண். வாணுதல் கணவ (பதிற்றுப. 38, 10).

வாத்தாட்டுப்பலகை vāttāṭṭu-p-palakai, n. < வாத்தாடு +. Eave-board. See வாய்த்தட்டுப்பலகை.

வாத்தாடு vāttāṭu, n. prob. வாய்+தட்டு. Eaves; கூரையின் ஓரம். (கட்டட. நாமா. 20)

வாத்தி vātti, n. < உபாத்தி. School-master, teacher; உபாத்தியாயன். மக்களுக்கு வாத்தி (டாக்டர். சுண்ணன்-என்சேவகன், 50).

வாத்திச்சி vātticci, n. Fem. of வாத்தி. Lady teacher; school-mistress; உபாத்தியாயினி.

வாத்திமர் vāttimar, n. prob. *mādhyama*. A sect of Smārtha Brahmans; சுமார்த்தப்பிராமண ருள் ஒரு பிரிவினர்

வாத்தியஞ்சேவி-த்தல் vāttiyañ-cēvi-, v. intr. < வாத்தியம்+. To play on the pipe with accompaniments. See மேளமடி-, 2.

வாத்தியப்பெட்டி vāttiya-p-petti, n. < id.+. *Mod.* 1. Harmonium, ஆர்மோனியப் பெட்டி. 2. Music-box, as piano, etc.; கீதம் வாசிக்கும் யந்திரப்பெட்டி.

வாத்தியபாண்டம் vāttiya-pāntam, n. < *vādya-bhāṇḍa*. (யாழ். அக.) 1. See வாத்தியம். 2. Lute; வீணை.

வாத்தியம் vāttiyam, n. < *vādya* Musical instrument; இசைக்கருவி.

வாத்தியம்பண்ணு-தல் vāttiyam-paṇṇu-, v. intr. < வாத்தியம்+. To beat the kettle drum; நகராமுழக்குதல். (W.)

வாத்தியமாராயன் vāttiya-mārāyan, n. < id.+மார்[4]+. See வாச்சியமாராயன். செம்பியன் வாத்தியமாராயனுக்கு (S. I. I. ii, 275).

வாத்தியாயர் vāttiyāyar, n. < *upādhyāya*. Teacher. See உபாத்தியாயன். *Loc.*

வாத்தியார் vāttiyār, n. < வாத்தி. 1. See வாத்தியாயர். வாத்தியார் மனமறுகி வருந்த (அருட்பா, v, கந்தாச. 3). 2. Family priest; புரோகிதன். *Brāh.* 3. One who trains actors and dancers; நாடகம் கூத்து முதலிய பயிற்றுவிப்போன். *Loc.*

வாத்து[1]-தல் vāttu-, 5 v. tr. < வாழ்த்து-. 1. See வாழ்த்து-. 2. To wave saffron water before the bridel pair to ward off the evil eye; திருஷ்டிகழிக்க மணமக்கள்முன் மஞ்சணீரால் ஆலத்தி சுற்றுதல். *Loc.*

வாத்து[2] vāttu, n. < *vāstu*. 1. See வாஸ்து, 1. 2. See வாஸ்துபுருஷன். (தைலவ.)

வாத்து[3] vāttu, n. cf. Hind. *batak*. [K. *bātu*.] 1. Duck; தாரா. (பதார்த்த. 873.) 2. Goose; பெருந்தாரா.

வாத்து[4] vāttu, n. cf. வாது[2]. Branch of a tree; மரக்கொம்பு. (W.)

வாத்துசாந்தி vāttu-cānti, n. < வாத்து[2]+. See வாஸ்துசாந்தி.

வாத்துபுருடன் vāttu-puruṭan, n. < id. +. See வாஸ்துபுருஷன். (யாழ். அக.)

வாத்துபோதம் vāttu-pōtam, n. < *vāstu* + prob. *bōdha*. A treatise on architecture, one of 32 *cirpa-nūl*, q.v.; சிற்பநூல் முப்பத்தி ரண்டனுள் ஒன்று. (இருசமய. உலகவழக்க. சிற்ப. 3.)

வாத்துமன் vāttuman, n. < வாத்து[2]+மன்[2]. See வாஸ்துபுருஷன். (யாழ். அக.)

வாத்துமாதனம் vāttumātanam, n. perh. வாத்து[3]+ஆதனம். A kind of posture, in which the body is supported on an elbow, the two legs and one arm being stretched out and the head held erect; இருகால்களும் ஒருகையும் நீட்டி ஒரு முழங்கையூன்றி தலைநிமிர்த்திக் கிடக்கும் ஆசன வகை. (யாழ். அக.)

வாத்ஸ்யாயனம் vātsyāyanam, n. < *vāts-yāyana* A Sanskrit treatise on sexual science, by Vātsyāyana; வாச்சாயனர் இயற்றிய காம சூத்திரம். வாதஸ்யாயனகதந்தக் காமதந்த்ரமே கடத்திய போதது (ரகு, 2, 3, டீ.).

வாத்ஸல்யம் vātsalyam, n. < *vātsalya*. Great affection, as parental affection; மிக்க அன்பு.

வாதக்கடல் vāta-k-kaṭal, n. prob. வாதம்[1] +. Sal ammoniac; நவச்சாரம். (யாழ். அக.)

வாதக்கடுப்பு vāta-k-kaṭuppu, n. < id.+. See வாதக்குடைச்சல். (W.)

வாதக்கரப்பன் vāta-k-karappan, n. < id. +. A disease; கரப்பானோய்வகை. (யாழ். அக.)

வாதக்கிரந்தி vāta-k-kiranti, n. < id.+ கிரந்தி[1]. See வாதக்கரப்பன். (இங். வை.)

வாதக்கிராணி vāta-k-kirāṇi, n. < id.+ கிராணி[2]. A form of diarrhoea due to bad humours, one of six *kirakaṇi*, q.v.; கிரகணி ஆறனுள் ஒன்று. (W.)

வாதக்குடைச்சல் vāta-k-kuṭaiccal, n. < id.+. 1. Rheumatic pain; சந்துவாதத்தாலுண்டாம் வலி. 2. A nervous disease, neuralgia; நரம்புநோய்வகை. (பைஷஜ. 300.)

வாதக்கொதி vāta-k-koti, n. < id.+. A kind of fever. See வாதசுரம். (W.)

வாதகம் vātakam, n. < *bādhaka*. Hindrance, obstacle; இடையூறு. வாதகமில்லா முத்தி வரதனே (சேதுபு. தோத். 65).

வாதகரப்பான் vātakarappāṉ, n. Tooth-leaved tree of Heaven. See பெருமரம், 1. (மலை.)

வாதகாசம்[1] vāta-kācam, n. <வாதம்[1] + காசம்[2]. A pulmonary complaint, காசநோய் வகை. (யாழ். அக.)

வாதகாசம்[2] vāta-kācam, n. <id. + காசம்[4]. An eye-disease; கண்ணோய்வகை. (சீவரட். 261.)

வாதகாமி vātakāmi, n. <vāta-gāmin. A kind of bird; பறவைவகை. (யாழ். அக.)

வாதகாலம் vāta-kālam, n. <vāta+. (W.) 1. The third and last period of a day or night; the period of time before sunset or sunrise; காலை மாலைச் சந்திகளின் முன்னேரம். 2. The third and last period of life; வாழ்நாளின் கடைப் பகுதி.

வாதகி vātaki, n. perh. vāta-ghnī. Acrid salt. See சத்திச்சாரம். (யாழ். அக.)

வாதகுன்மம் vāta-kuṉmam, n. <vāta-gulma. Hypochondriac disorders; குன்மவகை. (சீவரட். 113.)

வாதசரீரம் vāta-carīram, n. <வாதம்[1]+. Body in which windy humour predominates; வாதக்கூறு மிக்க சரீரம்.

வாதசாரதி vāta-cārati, n. <vāta-sārathi. Fire; அக்கினி. (யாழ். அக.)

வாதசிரோமணி vāta-cirōmaṇi, n. prob. வாதம்[1]+. See வாதக்கடல். (யாழ். அக.)

வாதசிரீடம் vāta-cirīṭam, n. <vāta-śīrṣa. Lower belly; அடிவயிறு. (யாழ். அக.)

வாதசுரம் vāta-curam, n. <vāta+jvara. Fever arising from vātam; வாதம்பற்றி யெழும் காய்ச்சல். (சீவரட். 19.)

வாதசூலை vāta-cūlai, n. <id.+śūla. Myalgia; சூலைநோய்வகை. (சீவரட். 121.)

வாதசெபம் vātacepam, n. <vāta-java. Fleetness of the wind, வாயுவேகம். (சிலப். 6, 172, அரும்.)

வாதத்தனிக்கல் vātattaṉi-k-kal, n. prob. rājāvartta+. A kind of gem. See ராஜாவர்த்தம். (யாழ். அக.)

வாததேகி vāta-tēki, n. <vāta-dēhin. One in whose body windy humour predominates; வாதக்கூறுமிக்க சரீரமுள்ளவன். (பதார்த்த. 1265.)

வாதநாசனம் vāta-nācaṉam, n. <vāta-nāśana. Castor plant. See ஆமணக்கு. (தைலவ.)

வாதநாடி vāta-nāṭi, n. <vāta+. Pulse indicating vātam, one of three nāṭi, q.v.; நாடி மூன்றனுள் வாதநிலையை அறிவிக்கும் நாடி. (W.)

வாதநாராயணம் vāta-nārāyaṇam, n. <id.+. (L.) 1. Creamy peacock flower, m. tr., Poinciana elata; மரவகை. 2. Flamboyant. See மயிற்கொன்றை, 2.

வாதநிகண்டு vāta-nikaṇṭu, n. <வாதம்[2]+. A treatise on alchemy; இரசவாதநூல். (யாழ். அக.)

வாதநீர் vāta-nīr, n. <வாதம்[1]+நீர்[1]. Rheumatic humours, flatulency; உடலில் தீமிர் உண்டாக்கும் துர்நீர்.

வாதநோய் vāta-nōy, n. <id.+. Neuralgia; rheumatism; உடலுறுப்புக்களில் வலியை யுண்டுபண்ணும் நோய்வகை.

வாதப்பிடிப்பு vāta-p-piṭippu, n. <id.+. Rheumatic affection; வாயுப்பிடிப்பு. (W.)

வாதப்பிரமி vātappirami, n. <vāta-pramī. Antelope; மான். (W.)

வாதபாடணர் vāta-pāṭaṇar, n. prob. apa-vāda+bhāṣaṇa. Those who falsely attribute malicious statements to others; பிறர் சொல்லாத பழிச்சொற்களைச் சொன்னதாகக் கூறுவோர். வாதபாடணர் வாக்கைமறப்பவர் (சிவதரு. சிவஞானதா. 7).

வாதபித்தசூலை vāta-pitta-cūlai, n. <vāta+pitta+. An arthritic complaint from vāta-pittam; வாதபித்தத்தாலுண்டாம் சூலைநோய்வகை. (W.)

வாதபித்தம் vāta-pittam, n. <id.+. A state of one's body in which the windy and the bilious humours predominate; வாதபித்தக்கூறுகள் மிக்க சரீரநிலை. (யாழ். அக.)

வாதபோதம் vātapōtam, n. <vāta-pōtha. Palas-tree. See பலாசம்[1], 4. (மலை.)

வாதம்[1] vātam, n. <vāta. 1. Wind, air; காற்று. (பிங்.) மாவாதஞ் சாய்த்த மராமரமே போல வின்றார் (கம்பரா. நகர்நீங்கு. 99). 2. The ten vital airs of the body. See தசவாயு. (W.) 3. Windy humour of the body; உடலில் வாயு மிகுதலாகிய பிணிக்கூறு. (பிங்.) வாதபித்த கபமென . . . மூவ ரும . . . நலித்தனர் (உத்தரரா. அரக்கர்பிறப். 31). 4. See வாதநாடி. 5. See வாதநோய்.

வாதம்[2] vātam, n. <vāda. 1. Utterance; சொல். எஞ்சலின் மந்திரவாதமன்றி (பெரியபு. திருஞான. 911). 2. Argument; வாதம் முதலியவற்றில் ஒருபட்சத்தை யெடுத்துக்கூறுகை. 3. Disputation, contention; தருக்கம். (சூடா.) வாதமா றென்றின்றித் தோற்றான் புத்தன் (பெரியபு. திருஞான. 924). 4.

Conversation; சம்பாஷணை. (யாழ். அக.) 5. Alchemy; இரசவாதவித்தை. உலகமாதி மூன்றுமிய லகியமே வாதம (திருவிளை. எல்லாம்வல்ல 17).

வாதம்[3] vātam, n. < pūti-vāta Bael. See வில்வம். (மலை.)

வாதமடக்கி vātam-aṭakki, n. < வாதம்[1] + அடக்கு-. 1. Carminative medicine; வாதநோய் போக்கும் மருந்து. 2. Jointed podded prickly sensitive plant, *Mimosa*; செடிவகை. 3. Peacock's crest. See மயிற்கொன்றை, 1. 4. Beetle-killer. See சிறுதேக்கு, 2. (மூ. அ.)

வாதமிருகம் vāta-mirukam, n. < vāta-mṛga A kind of antelope; மான்வகை (யாழ். அக.)

வாதமையுப்பு vātamai-y-uppu, n. prob. வாதம்[1] + உப்பு. Common salt; சவுப்பு. (மூ. அ.)

வாதயுத்தம் vāta-yuttam, n. < vāda + yuddha. Wordy warfare, disputation; தருக்கப் போர். (யாழ். அக.)

வாதரக்காச்சி vātarakkācci, n. perh. vāta-rākṣasī. Long-leaved pine. See சீமைத் தேவதாரு. (L.)

வாதரக்கி vātarakki, n. prob. vāta + rakṣiṇī. A kind of poison; பாஷாணவகை. (அரு. அக.)

வாதரங்கம் vātaraṅkam, n. < vāta-raṅga. Pipal. See அரசு[1]. (யாழ். அக.)

வாதரசு vātaracu, n. < வாதம்[1] + அரசு[1]. Creamy peacock flower. See வாதநாராயணம், 1.

வாதராட்சதன்குளிகை vāta-rāṭcataṉ-kuḷikai, n. < vāta + rākṣasa +. A medicinal pill; ஒருவகை மாத்திரை. (W.)

வாதராட்சி vātarāṭci, n. perh. vāta-rākṣasī. See வாதரக்காச்சி. *Loc.*

வாதராயணசம்பந்தம் vātarāyaṇa-campantam, n. < vādarāyaṇa +. Fanciful connection or relationship; கற்பித்த தொடர்பு.

வாதராயணம் vātarāyaṇam, n. < vātarāyaṇa. Long-leaved pine. See சீமைத்தேவதாரு.

வாதராயணன் vātarāyaṇaṉ, n. < Bādarāyaṇa. Vyāsa, the author of the Vēdānta Sūtras; வியாசமுனிவன். வாதராயணன் முதலோரா சித்திரமன் றெனுநாமம் வழங்கினரால் (குற்றா. தல. திருநட. 39).

வாதலம் vātalam, n. Liquorice-plant. See அதிமதுரம்[2], 1. (மலை.)

வாதவரி vāta-v-ari, n. < வாதம்[1] + அரி[6]. See வாதநவரி.

வாதவூரர் vāta-v-ūrar, n. A Śaiva saint, as born in Tiru-vātavūr in Madura district. See மாணிக்கவாசகர். வாதவூர ரடியிணை போற்றி (திருவாலவா. கடவு. 21).

வாதவைரி vāta-vairi, n. < vāta-vairin. Castor plant. See ஆமணக்கு. (மலை.)

வாதனம் vātaṉam, n. < vāsana. Cloth; சீலை. (சிகா.)

வாதனாமலம் vātaṉā-malam, n. < vāsanā +. See வாசனாமலம். பசுசாதகாதகை பச்சரித் தாங் வாதனாமல போம் (சி. போ. பா. 10).

வாதனை[1] vātaṉai, n. < vāsanā. 1. See வாசனை[1], 1. 2. See வாசனை[1], 2. பண்டிடைய வாதனைகளை . . . பூதி பொற்றான்றோதா (பிரபோத். 20, 70). 3. See வாசனை[1], 3. வாதனையான மும் பொருதய . . . மறவாதா வாந்தது (சேதுபு. 811, 1).

வாதனை[2] vātaṉai, n. < bādhanā. Pain, trouble, uneasiness; துன்பம். யாவாதனை மறந்து (மாறனலங். 653).

வாதாசனம் vātācaṉam, n. < vātāśana. Serpent, as feeding on wind; [காற்றை யுண்டது] பாம்பு. வாதாசனச்சயனா (அழகர்கலம். 75).

வாதாட்டம் vātāṭṭam, n. < வாதாடு-. Wrangling, disputation; தருக்கஞ் செய்கை. (யாழ். அக.)

வாதாட்டு[1]-தல் vātāṭṭu-, v. tr. Caus. of வாதாடு-. (யாழ். அக.) 1. To draw into a disputation; தருக்கத்துக்கு இழுத்தல். 2. To annoy, tease; வருத்துதல்.

வாதாட்டு[2] vātāṭṭu, n. < வாதாடு-. See வாதாட்டம்.

வாதாட்டுப்பலகை vātāṭṭu-p-palakai, n. < வாய்த்தட்டு +. Eave-board. See வாய்த்தட்டுப் பலகை.

வாதாடு-தல் vātāṭu-, v. intr. < வாது[3] +. To dispute, wrangle; தருக்கஞ்செய்தல். வாதாடி னென்னபலன் வாயக்கும (தாயு. பராபரக். 171).

வாதாதிசாரம் vātāticāram, n. < vāta + atisāra. Diarrhoea accompanied by inflation of the abdomen; வயிற்றை உப்பச்செய்து பேதி யாகும் நோய்வகை. (சீவரட்.)

வாதாதிரோகம் vātāti-rōkam, n. < id. + ādi +. Rheumatism. See வாதநோய். (W.)

வாதாபி vātāpi, n. < Vātāpi. 1. An Asura said to have been destroyed by Agastya;

அகஸ்திய முனிவரால் கொல்லப்பட்ட ஓர் அசுரன். 2. See வாதாபி, 2

வாதாம் vātām, n. cf. vātāma. See வாதுமை, 1 Mod.

வாதாயனம் vātāyanam, n <vātāyana 1. Window, சாளரம். (பிங்.) 2. Hall; pavilion; மண்டபம். (யாழ். அக.)

வாதாரி vātāri, n <vātāri. 1. Castor plant. See ஆமணக்கு. (மலை) 2. Margosa; வேம்பு. (நாமதீப. 301.)

வாதாவி vātāvi, n. <Vātāpi. 1. See வாதாபி, 1. 2. Bādāmi, the capital of the Western Calukyas; மேலைச்சளுக்கியரின் தலைநகர். (பெரிய பு. சிறுத்தொண். 6)

வாதானுவாதம் vātānuvātam, n. <vāda +anu-vāda. Argument and reply; தருக்கத்தில் நிகழும் தடைவிடைகள். (யாழ். அக.)

வாதி[1]-த்தல் vāti-, 11 v. tr. <bādh 1. To torment, afflict, trouble; வருத்துதல். (திவ். திருவாய். 7, 5, 6). 2. To hinder, obstruct; தடுத்தல். (சூடா., 66).

வாதி[2] vāti, n. <bādhin. Tormentor; வருத்துபவன். (சேதுபு. கோடி. 223).

வாதி[3]-த்தல் vāti-, 11 v. tr. <vāda To argue, dispute; to asseverate; வாதாடுதல்.

வாதி[4] vāti, n. <vādin 1. One who advocates; எடுத்துப்பேசுபவன். (தேவா. 391, 4) 2. Disputant, debater; தருக்கிப்பவன். (மலைபடு. 112). 3. Complainant, plaintiff; opp. to pirati-vāti; வழக்குத்தொடுப்போன். 4. Scholar who by adducing reasons and quoting authorities confutes the statements of his opponent and establishes his own, one of four pulamaiyōr, q.v.; புலமையோர் நால்வருள், வாதில் ஏதுவும் மேற்கோளு மெடுத்துக்காட்டிப் பிறர் கோள்மறுத்துத் தன்கொள்கையை நிலைநிறுத்துவோன். (யாப. வி. பக். 514.) (பிங.) 5. Alchemist; இரசவாதி. தோன்றினன் மனமருள செய்வதோர வாதி (கந்தபு. மார்க. 116). 6. (Mus.) See வாதிஸ்வரம்.

வாதிகம் vātikam, n. <vātiga. See வாதிங்கணம். (மலை.)

வாதிகன் vātikan, n. prob. vāsa. Scent-manufacturer; நறுமணப்பண்டங்கள் கூட்டுவோன். வாதிகர் கடைத்தலை வாசசுண்ணமும (பெருங. இலாவாண. 2, 95).

வாதிங்கணம் vātiṅkaṇam, n. <vātiṅgaṇa. Indian kales. See சேம்பு, 1. (மலை.)

வாதிப்பு vātippu, n. <வாதி[1]-. Trouble, affliction; துன்பம். முதலை வலைப்பட்டு வாதிப்புண வேழம் (திவ். பெரியாழ். 2, 10, 8).

வாதிபம் vātipam, n. Rattan-palm. See வஞ்சிக்கொடி. (மலை.)

வாதிஸ்வரம் vāti-svaram, n. <vādin+. (Mus.) Key-note of a musical measure; ஓர் இராகத்தின் முக்கிய ஸ்வரம்.

வாது[1]-தல் vātu-, 5 v. tr. cf. vadh. To cut, tear open; அறுத்தல். வாதுவலவயிறே வாதுவலவயிறே (தொல். பொ. 79, உரை, பக். 292).

வாது[2] vātu, n. cf. வார்த்து[4]. Branch of a tree; மரக்கிளை. Loc.

வாது[3] vātu, n. <vāda. [T. vādu.] 1. Disputation, discussion; தருக்கம். வாது செய்த திருவுளமே (தேவா. 865, 2). 2. Quarrel, fight; சண்டை. குகனை வாதுக்கழைத்ததுவும (தனிப்பா. 1, 76, 150). 3. Case or proceeding in court; நியாயஸ்தல வழக்கு. 4. Vow; சபதம். (நாமதீப. 667.)

வாதுமை vātumai, n. cf. vātāma. 1. Common almond, m. tr., Prunus amygdalus; மரவகை. (L.) 2. Indian almond, l. tr., Terminalia catappa; நீண்ட மரவகை.

வாதுவன் vātuvaṉ, n. perh. bādh. 1. Groom; குதிரைப்பாகன். காழோர வாதுவர (சிலப. 22, 12). 2. Mahout; யானைப்பாகன். (பிங.)

வாதுளம் vātuḷam, n. <Vātula. An ancient Śaiva scripture in Sanskrit, one of 28 civākamam, q.v.; சிவாகமம் இருபத்தெட்டனுளொன்று. வாதுள முதலிய தந்திர தொகுதி (கந்தபு. சூரனமைச். 129).

வாதுளி vātuḷi, n. <vādhūla+. One who belongs to vātūla-gōtra; வாதூலகோத்திரத்தான். கோடி மங்கலம் வாதுளி நற்சேநதன் (அகநா. 179).

வாதூகம் vātūkam, n. perh. vātiga. Copper; செம்பு. (மலை.)

வாதூலகோத்திரம் vātūla-kōttiram, n. <Vādhūla+gōtra. Name of a gōtra of Brahmans; பிராமண கோத்திரங்களுள் ஒன்று.

வாதை vātai, n. <bādhā. 1. Affliction, torment, distress; துன்பம். வாதைப்படுகின்ற வானோர (தேவா. 570, 2). 2. Painful disease; வேதனை செய்யும் நோய். (பிங.)

வாந்தவன் vāntavaṉ, n. < bāndhava. Friend; மித்திரன். (யாழ். அக.)

வாந்தி[1] vānti, n. < vānti. Vomiting, ejecting from the mouth, வாயாலெடுக்கை. (நாமதீப. 600.)

வாந்தி[2]-த்தல் vānti-, 11 v. tr. < வாந்தி. See வாந்தியெடு-. (யாழ். அக.)

வாந்திபிராந்தி vānti-pirānti, n. < id. + பிராந்தி[3]. See வாந்திபேதி. (யாழ். அக.)

வாந்திபேதி vānti-pēti, n. < id. +. Cholera, as attended with vomiting and purging; விஷபேதிநோய். Mod.

வாந்திமருந்து vānti-maruntu, n. < id. +. Emetic; வாந்தியுண்டாக்கும் மருந்து.

வாந்தியம் vāntiyam, n. (மலை.) 1. Bellaric myrobalan. See தான்றி[2], 1. 2. Black-oil tree. See வாலுளுவை.

வாந்தியுப்பு vānti-y-uppu, n. < வாந்தி +. Tartar emetic, *Potassio tartras;* வாந்தியுண்டாக்கும் உப்பு. (இங். வை.)

வாந்தியெடு-த்தல் vānti-y-eṭu-, v. tr. < id. +. To vomit; சர்த்திசெய்தல்.

வாப்பர் vāppar, n. Windward; சப்பலிற் காற்றடிக்கும் பக்கம். Naut.

வாபசு vāpacu, n. See வாபீசு.

வாபம் vāpam, n. < vāpa. (யாழ். அக.) 1. Shaving; மயிர்மழிக்கை. 2. Weaving; நெய்கை. 3. Seed; வித்து.

வாபி vāpi, n. < vāpī. See வாவி. (யாழ். அக.)

வாபீசு vāpīcu, n. < U. wāpas. 1. Returning; refunding; பெற்றதைத் திருப்பிக்கொடுக்கை. 2. Retracting, withdrawing, as one's words; சொன்னதைத் தவறென்று ஒப்புக்கொள்கை. Mod.

வாமசுக்கிலம் vāmacukkilam, n. Fetid cassia. See பொன்னாவிரை, 1. (மலை.)

வாமடை vāmaṭai, n. Corr. of வாய்மடை.

வாமடைவைக்கல்கட்டு vāmaṭai-vaik-kal-kaṭṭu, n. < வாமடை + வைக்கோல் +. Straw bundle given to the landholder; நிலச்சுவான்தாருக்குக் கொடுக்கவேண்டிய வைக்கோற்கட்டு. (R. T.)

வாமதந்திரம் vāma-tantiram, n. < vāma-tantra. A *tantric* treatise on Śakti worship; சக்தியுபாசனை முறையைக்கூறும் ஓர் ஆகமம். (கந்தபு. தெய்வயா. 159.)

வாமதேவம் vāma-tēvam, n. < vāma-dēva. 1. A face of Śiva which is turned northward, one of *civaṉ-ai-m-mukam*, q.v.; சிவனைம்முகத் தொன்று. (சைவச. பொது. 332, உரை.) 2. A Śiva mantra; சைவமந்திரவகை.

வாமதேவன் vāma-tēvaṉ, n. < Vāma-dēva. 1. Śiva; சிவபிரான். மாடர் கொன்றை ... வாமதேவா (தேவா. 1028, 5). (பிங்.) 2. An ancient Ṛṣi; ஒரு முனிவன். வாமதேவனென்னொரு முனி (உபதேசகா. விபூதி. 34).

வாமம்[1] vāmam, n. < vāma. 1. Beauty; அழகு. (பிங்.) வாமச்சொரூப முடையோய் (இரகு. திக்குவி. 149). 2. Light, brightness, splendour; ஒளி. (சூடா.) வாம மேகலை மங்கையொடு (கம்பரா. கைகேசி. 49). 3. Left side; இடப்பக்கம். வாமத் தானமேவை ... (... 32, 8). 4. Unrighteousness, injustice; நேர்மையின்மை. வாமமேபோர வலமிட்சாசனம் (கம்பரா. படைத்தலை. 49). 5. Opposition; எதிரிடை. (W.) 6. Evil, baseness; தீமை. வாமக்காமிகை குடித ... (குற்றா. குற. 165). 7. (Śaiva.) A Śaiva sect which declares that the whole universe is a manifestation of Śakti, and that salvation consists in absorption in Her, one of six *aka-p-puṟa-c-camayam*, q.v.; அகப்புறச்சமயம் ஆறனுள் அனைத்துலகும் சத்தியின் பரிணாமமே என்றும் சத்தியுடன் இலயித்தலே முத்தியென்றும் கூறும் மதம். (சி. போ. பா. அவையடக். பக். 50.) 8. A kind of snake; பாம்புவகை. (W.) 9. Woman's breast; முலை. (W.) 10. Riches; செல்வம். (W.)

வாமம்[2] vāmam, n. < vāma-dēva. See வாமதேவம், 1. (பிங்.)

வாமம்[3] vāmam, n. See வாமனம், 1. (சூடா.)

வாமம்[4] vāmam, n. Thigh; தொடை. மென்கதலித் தண்டனைய . . . வாமத்தாள் (காஞ்சிப். உலா, 466).

வாமமார்க்கம் vāma-mārkkam, n. < vāma +. See வாமாசாரம்.

வாமல் vāmal, n. perh. vāmalā. cf. வாமலோசிகம். Aloe. See கற்றாழை, 1. (மலை.)

வாமலூரு vāmalūru, n. < vāmalūru. White-anthill, hillock thrown up by termites; கரையான் புற்று.

வாமலூருதனயன் vāmalūru-taṉayaṉ, n. < id. + tanaya. Sage Vālmīki; வான்மீகி முனிவன். (W.)

வாமலோசனன் vāma-lōcaṉaṉ, n. < vāma-lōcana. Viṣṇu; திருமால். (W.)

வாமலோசனை vāma-lōcaṉai, n. < vāma-lōcanā. (W.) 1. Fair-eyed woman; அழகிய கண்ணுடையாள். 2. Lakṣmī; இலக்குமி.

வாமலோசிகம் vāmalōcikam, n. perh. vāmalōcana. cf. காமம். Aloe. See கற்றாழை, 1. (மலை.)

வாமன்¹ vāmaṉ, n. < vāma. 1 Arhat; அருகன். காமனை முனிந்த வாமன (சீவக. 3018). 2. Buddha; புத்தன். காமனைக்கடந்த வாமன்பாதம (மணி. 5, 77). (பிங்.) 3 Śiva, சிவபிரான். கங்கை சூடும் வாமனை (தேவா. 1050, 4).

வாமன்² vāmaṉ, n. See வாமனன். (பிங்.) வாமன் திருமருவு தாள்மருவு சென்னியரே (திவ். இயற். 2, 21).

வாமனக்கல் vāmaṉa-k-kal, n. < வாமனன் +. Boundary stone of lands granted for religious purposes, as carved with the figure of Vāmaṉa; இறையிலி நிலங்களின் எல்லைதறிக்க நாட்டப்படும் வாமனாவதாரவுருவமைந்த கல். (Insc.)

வாமனத்துவாதசி vāmaṉa-t-tuvātaci, n. < id +. The 12th titi of the bright fortnight of the month of Caittiram; சைத்திர மாதத்துச் சுக்கிலபட்சத்துத் துவாதசி.

வாமனபுராணம் vāmaṉa-purāṇam, n. < id. +. A chief Purāṇa, one of patiṉeṇ-purāṇam, q.v.; பதினெண்புராணத் தொன்று.

வாமனம் vāmaṉam, n. < vāmana. 1. Dwarfishness, shortness of stature; குறள்வடிவம். (பிங்.) 2. See வாமனாவதாரம். (பிங்.) 3. See வாமனபுராணம். (பிங்.) 4. Male elephant of the southern direction, one of aṣṭa-tikkajam, q.v.; அஷ்டதிக்கஜங்களு ளொன்றான தென்றிசை யானை. (பிங்.) 5. A figure of the height of 84 inches; 84-அங்குல உயரமுள்ள உருவம். (சுக்கிரநீ. 231.)

வாமனமுனிவர் vāmaṉa-muṉivar, n. < id. +. See வாமனாசாரியர்.

வாமனரூபம் vāmaṉa-rūpam, n. prob. id. +. (Nāṭya.) A masquerade dance; வரிக்கூத்து வகை. (சிலப். 3, 12, உரை, பக். 88.)

வாமனன் vāmaṉaṉ, n. < Vāmana. Viṣṇu in His dwarf-incarnation, one of tacāvatāram, q.v.; தசாவதாரத்துள் குறள்வடிவாய் அவதரித்த திருமால். (பிங்.) வாமனன மணணிது வென்னும (திவ். திருவாய். 4, 4, 1).

வாமனஜயந்தி vāmaṉa-jayanti, n. < id. +. Day of festival in honour of Vāmaṉa, celebrated on the 12th titi of the bright fortnight of the month of Pāttirapatam; பாத்திரபத மாதத்துச் சுக்கிலபட்சத்துத் துவாதசியாகிய வாமனாவதாரத்தைக் கொண்டாடுதற்குரிய நாள்.

வாமனாசாரியர் vāmaṉācāriyar, n. < id. + ācārya. A Jaina poet, author of Mēru-mantara-purāṇam, 14th c.; 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும் மேருமந்தரபுராண மியற்றியவருமான சைன ஆசிரியர். (மணி. அரும. பக். 516.)

வாமனாவதாரம் vāmaṉāvatāram, n. < id. + avatāra. The dwarf-incarnation of Viṣṇu, குறள் வடிவான திருமாலவதாரம்.

வாமா vāmā, n. < vāmā. See வாமை. வாமாகேசமின்றி நின்ற சமரசமா திருவாணம் (பிரபோத. 46, 19).

வாமாசாரம் vāmācāram, n. < vāma + ācāra. Left-hand practices or doctrines of the tantras, worship of the Śakti or female energy; வாமதந்திரமார்க்கப்படி செய்யுஞ் சத்தியுபாசனை.

வாமாட்சி vāmāṭci, n. < vāmākṣī. See வாமலோசனை. (யாழ். அக.)

வாமான் vā-māṉ, n. < வாவு- + மான¹. Horse; குதிரை. வாமானது வகையுரைத்தன்று (பு. வெ. 5, 5, கொளு).

வாமி¹ vāmi, n. < vāmī. 1. Pārvatī; பார்வதி. (நாமதீப. 24.) 2. Durgā; துர்க்கை.

வாமி² vāmi, n. < vāmin. Member of the Vāmācāra sect; வாமாசாரத்தின்படி நடப்போன். வாமியின்றே வலக்கை தா (பிரபோத. 31, 21).

வாமை vāmai, n. < vāmā. (யாழ். அக.) 1. A Śiva-śakti; ஒரு சிவசத்தி. 2. Lakṣmī; இலக்குமி. 3. Sarasvatī; சரசுவதி. 4. Woman; பெண்.

வாய்¹-தல் vāy-, 4 v. intr. 1. To succeed; to be gained; சித்தித்தல். கலவிவாயுமே (திவ். திருவாய். 1, 10, 11). 2. To happen with certainty; to come true; நிச்சயமாய் நிகழ்தல். வருதல் வாய்வது (முல்லை. 20). 3. To be fit or suitable; ஏற்றதாதல். வாயநத மலையும் (குறள், 737). 4. To be full; நிறைதல். வாயநத புகழ் மறைவளருந தோணிபுரம (தேவா. 145, 3). 5. To excel, surpass; சிறத்தல். (W.) 6. See வாய்²-, 5, 6, 7.—tr. 1. To obtain, realise, possess; பெறுதல். வாய்நத மேனியெரி வண்ணமே (தேவா. 582, 6). 2. To consent to, agree to; மனநேர்தல். கொய்தழை கைபற்றிச் செய்ததம் வாயாளோ (பரிபா. 6, 66).

வாய்²-த்தல் vāy-, 11 v. intr. 1. See வாய்¹-, 1. மாதிரசெயல் வாய்த்தில (பெரியபு. திருஞான 700). 2. See வாய்¹-, 2 தேற்று னுற்ற சூள் வாயத்தல்லே (ஐங்குறு. 37). 3. See வாய்¹-, 3. வாய்தத கருமமினி மற்றிலலை (அஷ்டப். நூற்றெட். 69) 4. See வாய்¹-, 5. (பிங.) வாய்க்குமணிநிறம் (திவ். திருவாய. 7, 10, 4). 5. To be appropriately situated or formed; நன்கமைதல். திருவாறன் விளைவாய்க்கும் (திவ். திருவாய். 7, 10, 4). 6. To flourish; to be luxuriant; செழித்தல். வாய்க்குங்

கருமபும (திவ். திருவாய். 7, 10, 4). 7. To be over-luxuriant in growth; மதர்த்தல். உரம அதிகமா-விட்டதினால பயிர வாயததடபோய்விட்டது. *Loc* — *tr.* 1. See வாய்[1]-, 1. (திவா.) காமனை வாய்த்தானும (அழகாகலம. 36). 2. To join, unite; சேர்தல். வருடையைப படிமகன் வாய்ப்ப (பரிபா. 11, 5). 3. To gather into a mass; திரட்டுதல். கஞ்சகம வாயதத கவளம (பு. வெ. ஒழிபு. 8).

வாய்[3] vāy, cf. *vāc*. [T. *vāyi*, K. *bāy*, M. *vāy*.] *n.* 1. Mouth; beak of birds, உதடு அலகு அலது இவற்றின்டையிலுள்ள உறுப்பு. (பிங்.) கய வாவா யினஞ்சு சோக (நாலடி, 66). 2. Mouth, as of cup, bag, ulcer, etc.; பாத்திரம் முதலியவற்றின் திறந்த மேற்பாகம். காயிலை நாடகளை செய்ய . . . முதலிபெற்ற தேனோ தமிராதாக்கிட்டும (அஷ்டப. திருவரங. மாலை, 53). பணவாய கிழிததன (பெருங. தொ. 701). 3. Mouthful; வாய்கொண்ட வளவு. நாலுவாய உணடான். 4. Lip; உதடு. வாயமடித் துரறி (புறநா. 298). (சூடாமணி. 587.) 5. Edge, rim; விளிம்பு. பொனனைகைகல் . . . வாயருகு வந தொசிந்து (சீவக. 595). 6. Edge, as of a knife; ஆயுதத்தின் முனை. கூனிக குயததின் வாயநெல் லரிநது (பொருந. 242). 7. Word; மொழி. வணங்கிய வாயினராதல் லரிது (குறள், 419). 8. Speech, utterance, வாக்கு. (அக. நி.) பணடேயுன வாயறிதும (திவ். திருப்பா. 15). 9. Voice, tone; குரல். வாயுடை மறையவர (திவ். நாய்ச. 1, 7). 10. cf. வாய-மை. Truth; மெய்ம்மை. பொய்சேணிங்கிய வாய நட்பினையே (மதுரைக். 198). (பிங்.) 11. cf. வாயப்பு. Excellence; சிறப்பு. முறியினும வாயது (குறுந். 62). 12. cf. வாயப்பு. That which is excellent; சிறப்புடைப் பொருள். மடவோன் காட்சி வாயன்று (ஞானா. 10). 13. Opening; gate; வாசல். நரகவாய் கீண்டாயும் நீ (திவ். இயற். 3, 47). 14. Way, path; வழி. பெரியாரால் காலற்கு வாய் காப்புக் கோடல் வனப்பு (ஏலா. 23). 15. Means; உபாயம். அது தணிக்கும வாய்நாடி (குறள், 948). 16. Agency, instrumentality; மூலம். தூதாவாயி விட்டு நீட்டுகையு மன்றிக்கே (ஈடு, 10, 10, ப்ர.). 17. Place; இடம். கொக்கின் மென்பறைத் தொழுதி . . . எவ்வாயுங் கவர (நெடுநல். 17). 18. Graduated mark on a steelyard; துலாக்கோலின் வரை. (G. Sm. D. I, i, 284.) 19. Scar; தழும்பு. வாள்வாயு மின்றி வடிவெங்கணை வாயு மின்றி (சீவக. 454). 20. Hole; orifice; துவாரம். (யாழ். அக.) 21. cf. வேய். Flute, musical pipe; வாத்தியக் குழல். (சூடா.)—*part.* 1. (Gram.) A sign of the locative case; ஏழனுருபு. (நன். 302.) கங்குல் வாய (திவ். திருவாய். 5, 4, 7). 2. A particle of comparison; ஓர் உவமவுருபு. தீவாய்செக்கர் (கல்லா. 42, 20).

வாய்க்கசப்பு vāy-k-kacappu, *n.* <வாய்+. 1. Bitterness in the mouth; வாய் கசந்திருக்கை. 2. A cattle-disease; மாட்டுக்கு வரும் கோமாரிநோய்.

வாய்க்கட்டு vāy-k-kaṭṭu, *n.* <id.+. 1. Restraint in food; abstaining from eating except at meal-time and confining oneself to the regular courses; கண்டதைத் தின்னுமலிருக்கை. 2. Rendering one speechless; preventing by witchcraft, animals, etc., from opening their mouths; மந்திரத்தால் பேச முடியாமலும் வாயைத் திறக்க முடியாமலுஞ்செய்கை.

வாய்க்கட்டை vāy-k-kaṭṭai, *n.* <id.+. 1. Sweets for children; சிறுவர்க்குரிய தின்பண்டம். *Loc.* 2. Bribe, tip; இலஞ்சம். (W.)

வாய்க்கணக்கு vāy-k-kaṇakku, *n.* <id.+. *Mod.* 1 Mental arithmetic; working out sums mentally; மனக்கணிதம். 2. Oral statement of account, not reduced to writing; வாயாற் சொல்லுங் கணக்கு.

வாய்க்கயிறு vāy-k-kayiṟu, *n.* <id.+. Rein; கடிவாளக்கயிறு. வயமாப் பணணி வாயக்கயிறு பிணிதது (பெருங். இலாவாண. 18, 17).

வாய்க்கரிசி vāykkarici, *n.* <id.+அரிசி. 1. Handful of rice dropped into the mouth of a deceased person by sons and other relations, just before cremation; தகனத்தின்முன் உறவுமுறையோரால் பிரேதத்தின் வாயிலிடும் அரிசி. உனககு வாயககரிசி தந்தேனுண்டிரு (அரிச். பு. காசி கா. 62). 2. Bribe, tip; இலஞ்சம். *Colloq.* 3. Anything unwillingly parted with; மனமில்லாமற் கொடுப்பது. *Loc.*

வாய்க்கருவி[1] vāy-k-karuvi, *n.* <id +. Bit of a bridle; கடிவாளம். வாய்க்கருவியிற் கோததுமுடியுங் குசையிறறலை (நெடுநல். 178, உரை).

வாய்க்கருவி[2] vāykkaruvi, *n.* Corr. of வாய்க்குருவி.

வாய்க்கரை vāy-k-karai, *n.* <வாய்+கரை[5]. 1. Rim; brink or edge, as of a well; கிணறு முதலியவற்றின் விளிம்பு. 2. Lip; உதடு. வாய்க் கரையிலே எனக்கு ஜீவனத்தையிட்டு (ஈடு, 6, 1, 1).

வாய்க்கரைப்பற்று vāykkarai-p-paṟṟu, *n.* <வாய்க்கரை+. 1. Lip; உதடு. (ஈடு, 4, 8, 8, ஜீ.) 2. Field near the head of a channel; நீர்நிலைக் கருகிலுள்ள வயல். வாய்க்கரைப்பற்றை அடுத்தூணாக வுடையவன் (ஈடு, 4, 8, 8).

வாய்க்காசு vāy-k-kācu, *n.* <வாய்+காசு[3]. 1. Money placed on the mouth of a corpse with *vāykkarici*; பிரேதத்தின் வாயில் வாய்க்கரிசி யுடன் வைக்கும் பணம். (W.) 2. Bribe, tip; இலஞ்சம். *Colloq.*

வாய்க்காடிவார்-த்தல் vāy-k-kāṭi-vār-, *v. intr.* <id.+காடி[1]+. To be very sorrowful;

மிக்க துச்சத்துடனிருத்தல். அவன் வாய்க்காடிவாரத் தூக்கொண்டிருக்கிறான். (W.)

வாய்க்காரன் vāy-k-kāraṉ, n. <id.+ காரன். 1. Clever speaker; talkative man; பேச்சில் வல்லவன். Loc. 2. Man who is arrogant in speech; செருக்கால் மிதமிஞ்சிப் பேசுவோன். (யாழ். அக.) 3. Man given to scandal-mongering; பிறரைத் திட்டுஞ் சுபாவமுள்ளவன். Loc. 4. A sub-division of Paḷḷa caste; பள்ளருள் ஒருவகை. (G. Tn. D. I, 93.)

வாய்க்காரி vāykkāri, n. Fem. of வாய்க்காரன். 1. Clever speaker; talkative woman; பேச்சில் வல்லவள். Loc. 2. Woman who is arrogant in speech; செருக்கால் மிதமிஞ்சிப் பேசுபவள். 3. Woman given to scandal-mongering, பிறரைத் திட்டுஞ் சுபாவமுள்ளவள். Loc.

வாய்க்கால் vāy-k-kāl, n. <வாய்+கால்[1]. 1. Water-course, channel, canal; கால்வாய். செய் விளைக்கும் வாய்க்கா லனையார் தொடர்பு (நாலடி, 218). 2. The 10th nakṣatra. See மகம்[2]. (பிங்.)

வாய்க்காலுக்குப்போ-தல் vāykkāluk-ku-p-pō-, v. intr. <வாய்க்கால்+. Lit., to go to a channel. [வாய்க்காற் பக்கத்திற்குப் போதல்] To go to stool; மலங்கழித்தல். (W.)

வாய்க்கிரந்தி vāy-k-kiranti, n. <வாய்+கிரந்தி[1]. Thrush, a disease, Apthae; வாய்ப்புண். (கடம்ப. பு. இலீலா. 124.)

வாய்க்கிலைகெட்டவன் vāykkilai-keṭṭa-vaṉ, n. <id.+இலை+. 1. Very poor man, as being too poor to buy betel-leaf; பெருந்தரித்திரன். 2. Useless person; உபயோகமற்றவன்.

வாய்க்கிறுது vāy-k-kiṟutu, n. <id.+. 1. Arrogant speech; செருக்கான பேச்சு. அவன் வாய்க்கிறுது பேசுகிறான். 2. Unsuitable, inappropriate word; பொருந்தமற்ற வார்த்தை. (யாழ். அக.)

வாய்க்குட்டு vāy-k-kuṭṭu, n. <id.+குட்டு[3]. See வாய்ச்சாலகம்.

வாய்க்குட்பேசு-தல் vāykkuṭ-pēcu-, v. tr. & intr. <id.+பேசு-. To mumble, mutter; முணுமுணுத்தல்.

வாய்க்குருவி vāy-k-kuruvi, n. <id.+. Toy-whistle; விளையாட்டு ஊதுகுழல். Loc.

வாய்க்குவழங்காமை vāykku-vaḻaṅ-kāmai, n. <id.+வழங்கு-+ஆ neg. 1. Unpalatability; சுவையற்றதாகை. (W.) 2. Being unspeakably vulgar; அசப்பியமாயிருக்கை. Colloq.

வாய்க்குற்றம் vāy-k-kuṟṟam, n. <id.+. 1. Slip of the tongue, lapsus linguae; தன்னை யறியாமற் பேச்சில் நேரும் பிழை. (W.) 2. Error in speech; பேச்சுக் குற்றம். (யாழ். அக.)

வாய்க்கூடு vāy-k-kūṭu, n. <id.+. Small basket or other contrivance for muzzling an animal; விலங்கின் வாயின்மேலிடுங் கூடு. Tinn.

வாய்க்கூடை vāy-k-kūṭai, n. <id.+ கூடை[1]. See வாய்க்கூடு. (W.)

வாய்க்கூலி vāy-k-kūli, n. <id.+. Bribe, hush-money; இலஞ்சம். (W.)

வாய்க்கேள்வி vāy-k-kēlvi, n. <id.+. 1. Royal command, proclamation; அரசனின் சட்டளை. நிவந்தஞ்செய்த நம வாய்க்கேள்விபபடி (S. I. I. ii, 306). 2. Hearsay; பிறர் சொல்லக்கேட்ட சங்கதி.

வாய்க்கேள்வியர் vāykkēlviyar, n. <வாய்க்கேள்வி. Those who execute royal commands; இராசசட்டளைகளை நிறைவேற்றுவோர். மணிக்கையை வாஙகென்று வாய்க்கேளவியர்க்கு வருதி செய்தான் (தனிப்பா.).

வாய்க்கொழுப்பு vāy-k-koḻuppu, n. <வாய்+. Arrogance in speech, insolence in language; மரியாது பேசுகை.

வாய்க்கொள்ளாதபேச்சு vāy-k-koḷḷāta-pēccu, n. <id.+கொள்-+ஆ neg.+. Unspeakably vulgar talk; அசப்பியப் பேச்சு. (யாழ். அக.)

வாய்க்கோணல் vāy-k-kōṇal, n. <id.+. A disease; நோய்வகை. (கடம்ப. பு. இலீலா. 139.)

வாய்க்கோமாரி vāy-k-kōmāri, n. <id.+. A mouth-disease, in cattle; மாட்டுக்கு வாயில் வரும் நோய்வகை. (M. L.)

வாய்கட்டு-தல் vāy-kaṭṭu-, v. <id +. tr. 1. To silence; பேசாதிருக்கச் செய்தல். 2. To charm, as a snake or beast, so as to prevent its opening its mouth; மந்திரத்தால் துஷ்டப் பிராணிகளின் வாயைத் திறவாமற் பண்ணுதல்.—intr. 1. See வாயைக்கட்டு-, 1, 2. 2. To cover one's mouth with cloth, as a mark of respect; மரியாதைக் குறிப்பாக ஆடையால் வாயை மூடுதல். (யாழ். அக.) 3. To bind the mouth and chin of a corpse with a piece of cloth; பிரேதத்தின் வாயை ஆடையாற் கட்டுதல். (யாழ். அக.)

வாய்கரை vāy-karai, n. <id.+. Ghat, ford, landing place; இறங்கு துறை. நீஞ்சப் புக்கு வாய்கரையிலே தெப்பமிழப்பாரைப்போலே (திவ். திருக்குறுந். 10, வ்யா.).

வாய்கரையர் vāy-karaiyar, n. <id.+. Men with superficial knowledge; ஆழ்ந்தறிய மாட்டாது மேலெழுந்த ஞானமுள்ளவர்கள். சமவா னரியனென்று ஜகத்தை வழியடித்துண்கிற வாய்கரை யரைப்போலன்றி (திவ். இயற். 2, 60, அப்பிள்ளா ருரை).

வாய்கன-த்தல் vāy-kaṉa-, *v. intr.* <id. +. To articulate indistinctly, as when speaking with the mouth full of food; தெளிவின்றிப் பேசுதல். (J.)

வாய்காட்டு-தல் vāy-kāṭṭu-, *v. intr.* <id. +. 1. To wag one's tongue; அக்கப்பிரசங்க மாய்ப் பேசுதல். (யாழ். அக.) 2. To cringe, கெஞ்சுதல். *Colloq.*

வாய்குமட்டல் vāy-kumaṭṭal, *n.* <id.+. Nausea; வாந்தியெடுக்க வருகை. (M. L.)

வாய்குளிரப்பேசு-தல் vāy-kuḷira-p-pēcu-, *v. intr.* <id.+குளிர்-+. To be honey-tongued; மேலுக்கு இனிமையாகப் பேசுதல். *Loc.*

வாய்குளிறு-தல் vāy-kuḷiṟu-, *v. intr.* <id. +. (W.) 1. To bawl out; சத்தமிடுதல். 2. To cry out in sleep, as from fear; தூக்கத்தில் கனவு முதலியவற்றால் வாய்குழறுதல்.

வாய்கூப்பு-தல் vāy-kūppu-, *v. tr.* <id.+. To praise; துதித்தல். *மருதிடத்தா னென்றொருகால் வாய்கூப்ப* (பதினொ. திருவிடை. மும்மணி. 29).

வாய்கூம்பு-தல் vāy-kūmpu-, *v. intr.* <id.+. To close, as petals of a flower, குவிதல். *ஆம்பல்வாய் கூம்பினகாண்* (திவ். திருப்பா 14).

வாய்கொடு-த்தல் vāy-koṭu-, *v. intr.* <id. +. 1. To give word, promise; வாக்குத்தத்தஞ் செய்தல். 2. To engage one in talk; பேச்சுக் கொடுத்தல். *Colloq.* 3. To kindle a quarrel; to bandy words; வாய்ச்சண்டை வளர்த்தல். (W.)

வாய்ச்சப்பை vāy-c-cappai, *n.* <id.+ சப்பை[1]. 1. Foot-and-mouth disease. See காற் சப்பை, 1. (Cm. M. 247.) 2. One who is not clever in speaking; பேச்சுச் சாமர்த்தியமற்ற வ-ன்-ள். *Loc.*

வாய்ச்சம்பிரதாயம் vāy-c-campiratāyam, *n.* <id.+. 1. Cleverness in talking; பேச்சுச் சாமர்த்தியம். (யாழ். அக.) 2. Oral tradition; கர்ணபரம்பரையாக வரும் வழக்கம். (W.)

வாய்ச்சாக்கூட்டம் vāyccā-k-kūṭṭam, *n.* prob. id. Tooth; பல். (யாழ். அக.)

வாய்ச்சாலக்கு vāy-c-cālakku, *n.* <id.+. See வாய்ச்சாலகம்.

வாய்ச்சாலகம் vāyccālakam, *n.* <*vācālaka.* Skill in speech, eloquence, fluency in speech; சொல்வன்மை. (W.)

வாய்ச்சான்பிழைச்சான் vāyccāṉ-piḻaiccāṉ, *n.* <வாய்[2]-+பிழை-. Precarious affair; matter of neck or nothing; நிச்சயமற்றது.

வாய்ச்சி vāycci, *n.* <*vāsī.* 1. Adze; மரந்தைச் செதுக்கும் ஆயுதம். *வாய்ச்சி வாயுறத் தீண்டி மரத்தாய்த் தோற் செத்தொழுக* (சீவக. 2825). 2. Instrument for cutting the surface of bricks; செங்கல் செதுக்குங் கருவி. *வாய்ச்சியாற்பட்டிகை செத்தி மாதர்* (சீவக. 2559).

வாய்ச்சித்தலை vāycci-t-talai, *n.* <வாய்ச்சி +தலை[1]. Flattened head; தட்டையான தலை. (யாழ். அக.)

வாய்ச்சுத்தம் vāy-c-cuttam, *n.* <வாய் + சுத்தம்[1]. Truthfulness; பொய்சொல்லாமை.

வாய்ச்சொல் vāy-c-col, *n.* <id.+சொல்[3]. 1. Utterance, speech, word of mouth; வாயி னின்று வருஞ் சொல். *வாய்ச்சொற்க ளென்ன பயனு மில* (குறள், 1100). 2. See வாய்ப்பேச்சு, 2. *வாய்ச் சொலில் வீரர* (பாரதி. தேசீ. நடிப். 1). 3. Utterance of an invisible speaker, considered as an omen. See உபசுருதி. *வாய்ச்சொல் வாவென் றிடல* (அறப. சத. 63).

வாய்ச்சொலவு vāy-c-colavu, *n.* <id.+. (W.) 1. Prediction, augury; ஆருடஞ்சொல்லுகை. 2. Ominous utterance; கேடுதியையுண்டாக்கத் தக்க சொல்.

வாய்சலி-த்தல் vāy-cali-, *v. intr.* <id.+. To be tired of speaking; பேசி வாயயர்தல். *அவன் நெடுநேரம் பேசி வாய்சலித்தான்.* (W.)

வாய்சவக்களி-த்தல் vāy-cavakkaḷi-, *v. intr.* <id.+. 1. To be insipid; ருசியின்றி யிருத்தல். 2. To be distasteful; அருசிப்படுதல்.

வாய்சளப்பு-தல் vāy-caḷappu-, *v. intr.* <id.+. To chatter; to indulge in idle talk; வீண்பேச்சுப் பேசுதல். (யாழ். அக.)

வாய்சளி-த்தல் vāy-caḷi-, *v. intr.* <id.+. See வாய்சவக்களி-. (யாழ். அக.)

வாய்சோர்-தல் vāy-cōr-, *v. intr.* <id.+. 1. To talk incoherently, as in delirium; வாய் பிதற்றுதல். *வாய்சோரத் தாற்று* (பெருங். உஞ்சைக். 7, 25). 2. See வாய்தடுமாறு-, 2. (பெரியபு.) 3. See வாய்சலி-. *Loc.*

வாய்த்தட்டுப்பலகை vāy-t-taṭṭu-p-palakai, *n.* <id.+தட்டு[2]+. Eave-board, barge-board; கூரையின் முகப்பில் தைக்கும் பலகை. *Loc.*

வாய்த்தல் vāyttal, *n.* See வாய்தல்[2]. (அரு. நி.)

வாய்த்தலை vāy-t-talai, *n.* <வாய்+தலை[1]. 1. Head-sluice of a channel; வாய்க்காலின் தலைப்பு மதகு. *சுதைசெய் வாய்த்தலை* (சீவக. 40). 2. Source; தொடங்கும் இடம். *நினைவுக்கு வாய்த்தலையான நெஞ்சிலே* (திவ். திருமாலை, 34, வ்யா. பக். 112).

வாய்த்தாரை vāy-t-tārai, n. <id. + தாரை². (யாழ். அக.) 1. Edge, as of a weapon, ஆயுதத்தின் நுனி. 2. See வாய்ச்சரை, 1.

வாய்த்தீர்த்தம் vāy-t-tīttam, n. <id. +. See வாய்நீர். வாய்த்தீர்த்தம் பாய்ந்தாட வல்லாய் வலம்புரியே (திவ். நாய்ச். 7, 6).

விலைத்துண்டு vilai-t-tuṇṭu, n. <id.+. 1. A charge paid out of the kuṭivāram by cultivators to the mēlvāratār or to the government on account of the difference between the price at which the cultivators had sold their grain and the estimated retail prices at the place of sale; கிராமங்களிற் சில்லறையாக விற்கும் நெல்விலைக்கும் மதிப்புவிலைக்குமுள்ள வித்தியாசத்தை ஈடுசெய்வதற்காகக் குடிவாரத்திலிருந்து விவசாயி மேல்வாரதாருக்குச் செலுத்தும் அதிக வரி. (R. T.) 2. Loss due to the difference between the sale price and the cost price; அடக்கவிலைக்கும் விற்கிற விலைக்குமுள்ள வித்தியாசத்தால் நேரும் நஷ்டம். Loc.

விலைத்தூக்கம் vilai-t-tūkkam, n. <id.+ தூக்கம்[2]. See விலையேற்றம். நல்லெண்ணெய் விலைத்தூக்கமாக இருக்கிறது.

விலைதீர்[1]-தல் vilai-tīr-, v. intr. <id.+. To be settled, as price; கிரயம் நிச்சயமாதல். (யாழ். அக.)

விலைதீர்[2]-த்தல் vilai-tīr-, v. tr. <id.+. To settle the price; கிரயம் நிச்சயித்தல். (W.)

விலைநலப்பெண்டிர் vilai-nala-p-peṇṭir, n. <id.+நலம்+. Harlots; பரத்தையர். விலைநலப் பெண்டிரிற் பலர்மீக் கூற (புறநா. 365).

விலைப்பட்டி vilai-p-paṭṭi, *n.* <id. + *பட்டி*[4]. 1. List of prices, invoice; விற்றபண்டங்களின் விலைக்குறிப்பு. 2. Sales account; விற்பனைக் கணக்கு.

விலைப்படு-தல் vilai-p-paṭu-, *v. intr.* <id. +. To be sold; கிரயமாதல்.

விலைப்பண்டம் vilai-p-paṇṭam, *n.* <id. + *பண்டம்*[1]. See விலைச்சரக்கு.

விலைப்பணம் vilai-p-paṇam, *n.* <id. +. Purchase money; கிரயத்தொகை. (W.)

விலைப்பருவம் vilai-p-paruvam, *n.* <id. +. 1. State of the market; விலையின் நிலைமை. (*யாழ். அக.*) 2. Time of sale; விலையாகும் காலம்.

விலைப்பலி vilai-p-pali, *n.* <id. + *பலி*[3]. Sacrificial offering given to deities, with a view to gaining their favour; பயன்கருதித் தெய்வங்கட்கிடும் பலி. *விலைப்பலி யுண்ணும மலர்பலி பீடிகை* (*சிலப்.* 12, 43).

விலைப்பிரமாணக்கச்சாத்து vilaippiramāṇa-k-kaccāttu, *n.* <*விலைப்பிரமாணம்* +. See விலைத்தீட்டு. (Insc.)

விலைப்பிரமாணம் vilai-p-piramāṇam, *n.* <விலை +. See விலைத்தீட்டு. (S. I. I. i, 104.)

விலைப்பிரமாணவிசைவுதிட்டு vilai-p-piramāṇa-v-icaivu-tiṭṭu, *n.* <*விலைப்பிரமாணம்* + இசைவு +. See விலைத்தீட்டு. (S. I. I. iv, 127.)

விலைப்போ-தல் vilai-p-pō-, *v. intr.* <விலை +. See விலைபோ-.

விலைபெறு-தல் vilai-peṟu-, *v. intr.* <id. +. 1. To be worth a good price; தக்க கிரயம் பெறுதல். *நல்லாவின் கன்றாயி னுங்கும் விலைபெறூஉம்* (*நாலடி,* 115). 2. See விலைபோ-. 3. To be valued high; மதிப்பு மேம்படுதல்.

விலைபேசு-தல் vilai-pēcu-, *v. tr.* <id. +. To bargain or discuss the price of; கிரயம்பற்றி உசாவுதல்.

விலைபொருந்து-தல் vilai-poruntu-, *v. intr.* <id. +. To be worth the price; விலை தகுதியாதல். (W.)

விலைபோ-தல் vilai-pō-, *v. intr.* <id. +. To fetch a price; கிரயமாதல். *நல்ல மாடானால் உள்ளூரிலே விலைபோகாதா ?*

விலைபோடு-தல் vilai-pōṭu-, *v. intr.* <id. +. To estimate or fix a price; கிரயத்தொகை குறித்தல். (W.)

விலைமகள் vilai-makaḷ, *n.* <id. +. Harlot; வேசை. *விலைமக ளனைய நீயும் கல்லிய லாதி யென்றான்* (*கம்பரா. அகலி.* 79).

விலைமதிப்பு vilai-matippu, *n.* <id. + *மதிப்பு*[1]. Estimate of price; விலைநிர்ணயிக்கை.

விலைமாது vilai-mātu, *n.* <id. + *மாது*[1]. See விலைமகள்.

விலைமானம் vilai-māṉam, *n.* <id. + *மானம்*[1]. See விலைமதிப்பு. (*யாழ். அக.*)

விலைமேவு-தல் vilai-mēvu-, *v. intr.* <id. +. 1. To agree on the price; விலையை ஒத்துக்கொள்ளுதல். (W.) 2. To be easily saleable; எளிதாக விலையாதல்.

விலையர்த்தம் vilai-y-arttam, *n.* <id. + *அர்த்தம்*[1]. Purchase money; விலைப்பணம். *Nāñ.*

விலையாட்டி vilaiyāṭṭi, *n.* Fem. of விலையாளன். Tradeswoman; பண்டம் விற்பவள். *கள் விலையாட்டி* (*சிலப்.* 12, *உரை, பக்.* 320).

விலையாவணம் vilai-y-āvaṇam, *n.* <விலை +. See விலைத்தீட்டு. *நிலமுற்றும விற்று விலையாவணஞ்செய்து கொடுத்தோம்* (S. I. I. iii, 110).

விலையாள் vilai-y-āḷ, *n.* <id. + ஆள்[1]. Slave; அடிமை. *விலையாளா வடியேனை வேணுதியோ* (*திவ். பெரியதி.* 5, 5, 2).

விலையாளன் vilai-y-āḷaṉ, *n.* <id. + ஆள்-. Seller; dealer; merchant; பண்டம் விற்போன். (W.)

விலையிடு-தல் vilai-y-iṭu-, *v. intr.* <id. +. See விலைபோடு-. *தேவிக்காவதோர காற்கணி நீ விலையிடுதற்காகியோ* (*சிலப.* 16, 112).

விலையிறங்கு-தல் vilai-y-iṟaṅku-, *v. intr.* <id. +. To fall in price; கிரயத்தொகை குறைதல்.

விலையுணி vilai-y-uṇi, *n.* <id. + உண்-. 1. One who sells himself, as a slave to pay a debt; கிரயத்துக்குத் தன்னை விற்பவன். (W.) 2. One whose entire property is sold for debt; கடனுக்காகச் சொத்திழந்தவன். 3. Slave, resold; விலைக்கு வாங்கி விற்கப்படும் அடிமை. (W.)

விலையுயர்-தல் vilai-y-uyar-, *v. intr.* <id. +. 1. To rise in price; கிரயத்தொகை மிகுதல். 2. To be valuable; பெருமதிப்புடையதாதல்.

விலையேற்றம் vilai-y-ēṟṟam, *n.* <விலை *யேறு-*. 1. Rise in price; கிரயத்தொகை மிகுகை. 2. Costliness; அதிகவிலை யுடையதாகை.

விலையேற்று-தல் vilai-y-ēṟṟu-, *v. tr.* <விலை +. To raise the price, as of an article; பண்டங்களின் கிரயத்தை மிகும்படி செய்தல்.

விலையேறு-தல் vilai-y-ēṟu-, *v. intr.* <id. +. See விலையுயர்-.

விலையொட்டு-தல் vilai-y-oṭṭu-, *v. intr.* <id.+. To add slightly to the price; பண்டங்களின் விலையைச் சிறிது கூட்டிச் சொல்லுதல். (W.)

விலையொறு-த்தல் vilai-y-oṟu-, *v. intr.* <id.+. To become dear; விலை அதிகமாதல். (J.)

விலையொறுப்பு vilai-y-oṟuppu, *n.* <விலையொறு-. Dearness in price; விலையேற்றம். (J.)

விலையோலை vilai-y-ōlai, *n.* <விலை+. See விலைத்தீட்டு. *இதுவே விலையோலை ஆவதாகவும்* (S. I. I. iii, 154, 23).

விலைவன் vilaivaṉ, *n.* <id. One who does a thing for money; கூலியின்பொருட்டாக ஒன்றைச் செய்பவன். *மற்றிவன் விலைவன் போலான்* (புறநா. 152).

விலைவாசி vilai-vāci, *n.* <id.+வாசி[1]. Rate of price, current price; கிரயவளவு.

விலைவிழு-தல் vilai-viḻu-, *v. intr.* <id.+. See விலையிறங்கு-.

விலைவை-த்தல் vilai-vai-, *v. intr.* <id.+. See விலைபோடு-. (யாழ். அக.)

விலோசனம் vilōcaṉam, *n.* <*vi-lōcana*. 1. Eye; கண். (பிங்.) 2. Glance, look; பார்வை. (W.) 3. Intention, idea; உட்கருத்து. *ஆயுதபுரோகிதன் விலோசன முணராது* (பாரத. வாரணா. 60).

விலோதம் vilōtam, *n.* <*vilōda*. 1. Hair of women, as wavy; பெண்மயிர். (பிங்.) 2. Curl of hair; மயிர்ச்சுழற்சி. (திவா.) *வனைமயிர விலோதமாது* (பாகவத. 10, திருவவ. 49) 3. See விலோதனம்[1]. (பிங்.) *காலூன்று விலோதமும் . . . சோதநுமின்* (மணி. 1, 52).

விலோதனம்[1] vilōtaṉam, *n.* <*vilōdhana*. 1. Large flag, ensign; பெருங் கொடி. (பிங்.) 2. A flag for ornament; அலங்காரத்துக்காகக் கொண்டு செல்லுங் கொடி.

விலோதனம்[2] vilōtaṉam, *n.* <*vilōcana*. See விலோசனம், 1. *விலோதனம் விரைந்த தொன்று* (இரகு. யாகப. 64).

விலோமம் vilōmam, *n.* <*vilōma*. 1. Reverse order, opposite course; நேரெதிரிடையான முறை. 2. Left-hand system; இடப்பக்க முறை. (சித். சிகா. விபூதிதாரண. 18.) 3. A hell; நரகவகை. (சிவதரு. சுவர்க்கநரக. 113.)

விலோமன் vilōmaṉ, *n.* <*Vilōma*. Varuṇa; வருணன். (யாழ். அக.)

விலோலம் vilōlam, *n.* <*vi-lōla*. Fidgetiness, mental agitation; மனச்சஞ்சலம். (சங். அக.)

விவகம் vivakam, *n.* <*vivaha*. A wind, one of *capta-maruttu*, q.v.; சப்தமருத்துக்களுள் ஒன்று. (விஷ்ணுபுராணம்.)

விவகரி-த்தல் vivakari-, *11 v.* <*vyava-hṛ*. *intr.* 1. To carry on legal proceedings; நியாயத்தலத்தில் வழக்காடுதல். 2. To argue; தருக்கித்தல். *திராவிடத்திலே வந்ததா விவகரிப்பேன்* (தாயு. சித்தர். 10).—*tr.* To expound; விரித்துக் கூறுதல். *நேசானுசாரியாய் விவகரிப்பேன்* (தாயு. பரிபூ. 1).

விவகலனம் vivakalaṉam, *n.* <*vyava-kalana*. See விவகலிதம். (யாழ். அக.)

விவகலிதம் vivakalitam, *n.* <*vyava-kalita*. (Arith.) Subtraction; கழித்தற்கணக்கு. (யாழ். அக.)

விவகாரதரிசனம் vivakāra-taricaṉam, *n.* <*vyavahāra*+. Judicial enquiry; நியாய விசாரணை. (யாழ். அக.)

விவகாரம் vivakāram, *n.* <*vyava-hāra*. 1. Judicial proceedings, litigation; நியாயத்தல வழக்கு. *அந்தச சொத்து விவகாரத்தி லிருக்கிறது.* 2. That branch of the Dharma Śāstra which strictly falls within the province of law; நியாயத்தலவழக்குச் சம்பந்தமான தருமசாத்திரப் பகுதி. 3. Disputation; தருக்கவாதம். *ஏதன்றி விவகாரமுணடென்னிலோ . . . ஆற்றிலேன்* (தாயு. சச்சி. 9). 4. Conduct, behaviour; நடத்தை. *அவனுடைய விவகாரம நன்றாக இல்லை.*

விவகாரவிதி vivakāra-viti, *n.* <id.+ +. Law; நியாயப்பிரமாணம். (யாழ். அக.)

விவகாரஸ்தானம் vivakāra-stāṉam, *n.* <id.+. Court of justice; நீதித்தலம்.

விவகாரி vivakāri, *n.* <*vyavahārin*. 1. Litigant, litigious person; நியாயத்தலத்து வழக்காடுவோன். 2. One who speaks with a full knowledge of affairs; விஷயங்களை நன்றறிந்து பேசுவோன். *Colloq.*

விவகாரிகம் vivakārikam, *n.* <*vyāvahārika*. 1. That which is the subject-matter of a dispute or talk; விவகாரசம்பந்த முடையது. (இலக். அக.) 2. Custom; வழக்கம். (யாழ். அக.)

விவச்சுதன் vivaccutaṉ, *n.* <*Vivasvat*. See விவச்சுவான். (பிங்.)

விவச்சுவான் vivaccuvāṉ, *n.* <*Vivasvān* nom. sing. of *Vivasvat*. A manifestation of the Sun, one of *tuvātacātittar*, q.v.; துவாதசாதித்தருளொருவர்.

விவசம் vivacam, *n.* <*vi-vaśa*. 1. Ecstasy, trance; பரவசம். (சது.) 2. The state of

the soul when freed from bondage; ஆன்மாவின் நிவிர்த்திநிலை. (W.)

விவசாயம் vivacāyam, n. <vyavasāya. 1. Labour, active occupation; தொழில். 2. Effort; முயற்சி. 3. Agriculture, cultivation, as requiring strenuous effort; வேளாண்மை. *Colloq.* 4. Buying and selling, trade, traffic; வியாபாரம். *Loc.*

விவசுவான் vivacuvāṉ, n. See விவச்சுவான்.

விவஞ்சி vivañci, n. <vipañcī. A kind of lute. See விபஞ்சிகை. (பிங்.)

விவட்சாதீனம் vivaṭcātīṉam, n. <vivakṣādhīna. (Gram.) Purpose or intention of an author or speaker; சொல்வான்குறிப்பு. (பி. வி. 26, உரை.)

விவட்சை vivaṭcai, n. <vivakṣā. *Loc.* 1. Wish or desire to speak; பேசவேண்டுமென்ற விருப்பம். 2. Meaning, intention; sense; கருத்து.

விவத்து vivattu, n. See விபத்து. (W.)

விவத்தை[1] vivattai, n. See விவஸ்தை. (இலக். அக.)

விவத்தை[2] vivattai, n. <vi-pat. Peril, danger; ஆபத்து. (யாழ். அக.)

விவதானம் vivatāṉam, n. <vyava-dhāna. 1. Cover, screen; மறைப்பு. 2. Obstruction; தடை. உயிர் விவதானமாய் இடை நிறுறலின் (சித். சிகா. மரபுகண். 20).

விவர்த்தகம் vivarttakam, n. <vivartaka. (Phil.) Illusory appearance, as that of a serpent in a rope; ஒரு வஸ்து தன் சுவரூபத்தை விடாமல் வேறு சுவரூபத்தைக் காண்பிக்கை. பரிணும மாரம்பம் விவர்த்தகமாம் (வேதா. சூ. 82).

விவர்த்தம் vivarttam, n. <vivartta. 1. Rolling, turning round; சுற்றுகை. (யாழ். அக.) 2. Dancing; ஆடுகை. 3. (Phil.) See விவர்த்தகம். (வேதா. சூ. 82, உரை.)

விவர்த்தனம் vivarttaṉam, n. <vivartana. See விவர்த்தம், 1. (W.)

விவரகதி vivara-kati, n. <vivara+. (Astron.) Difference in the daily motions of the sun and the moon; சந்திர சூரியாது நித்திய கதிகளுக்குள்ள அந்தரம். (W.)

விவரணம் vivaraṇam, n. <vivaraṇa. Explanation, exposition, gloss; விவரக்குறிப்பு. பிரணவத்திற்கு மந்திரசேஷம் விவரணம் (அஷ்டாதச. முமுக்ஷுப்.).

விவரநாளிகை vivara-nāḷikai, n. <vivara-nālika. Bamboo; மூங்கில். (சங். அக.)

விவரம் vivaram, n. <vivara. 1. Fissure, hole, cavity, hollow, vacuity; துவாரம். 2. Cave; மலைக்குகை. (சூடா.) 3. Intervening space; இடைவெளி. பிலங்களேழு மதனிடையிடை விழுந்த . . . வோ விவரம (தக்கயாகப. 147). 4. Particulars, details; circumstances, as of a narrative; வரலாற்றுக் குறிப்பு. 5. See விவேகம், 1. கருமத்தாலே விவரமதா யாராய்ந்து (ஞானவா. முமுட். 10).

விவரி-த்தல் vivari-, 11 v. tr. <vivr. To relate in detail, enter into particulars; விரித்துக்கூறுதல். சொன்னவார்த்தையை விவரியாநின்றுகொண்டு (ஈடு, 5, 1, 3).

விவரிதம் vivaritam, n. Contrariety. See விபரீதம், 1. (யாழ். அக.)

விவரிப்பு vivarippu, n. <விவரி-. Explanation, detailed statement; விரித்துக் கூறுகை.

விவஸ்தை vivastai, n. <vyava-sthā. 1. Settlement; முடிவு. 2. Settled principle; ஒழுங்குமுறை. அவன் விவஸ்தை யில்லாதவன்.

விவா[1] vivā, n. cf. vibhū. Greatness; பெருமை. (அரு. நி.)

விவா[2] vivā, n. cf. vibhāvarī. Night; இரவு. (அக. நி.)

விவாகப்பொருத்தம் vivāka-p-poruttam, n. <விவாகம்+. (Astrol.) Correspondence between the horoscopes of prospective bride and bridegroom. See கலியாணப்பொருத்தம்.

விவாகபந்தம் vivāka-pantam, n. <vivāha+. The matrimonial tie or relationship; விவாகத்தால் மனைவிக்கும் கணவனுக்குமேற்படுஞ் சட்டு. விடுமுறிப பிரமாணம் எழுதி விவாகபந்தத்தை நீக்கிவிட்டார்கள்.

விவாகம் vivākam, n. <vivāha. Marriage, matrimony, one of cōṭaca-camskāram, q.v.; சோடசசம்ஸ்காரங்களுள் ஒன்றான கலியாணம். விவாகமும் காருகத்தமும் கூறினமையும் (சிலப். 9, 28, உரை).

விவாகஸ்திரீ vivāka-strī, n. <id.+. Lawfully wedded wife; விதிப்படி கல்யாணம் செய்துகொண்ட மனைவி. (W.)

விவாதம் vivātam, n. <vivāda. 1. Dispute, wordy warfare; தர்க்கம். இருவரும் விவாதம்பண்ணி (உத்தரரா. இலவண. 6). 2. Legal dispute, lawsuit; நியாயத்தல வழக்கு.

விவாதாமிசம் vivātāmicam, n. <id.+aṃśa. The matter in dispute; the question at issue; வழக்கிற்குரிய விஷயம்.

விவாதிஸ்வரம் vivāti-svaram, *n.* <*vivādin*+. (Mus.) Discordant note; இசையிலுண்டாம் பகைச்சுரம்.

விவிதம் vivitam, *n.* <*vi-vidha*. Variousness; பலவிதம். *விவித முத்தழன்மீது* (தக்கயாகப். 506). (சூடா.)

விவிலியநூல் viviliya-nūl, *n.* <Gr. *biblia* +. The Bible; கிறிஸ்துவசமயத்தின் பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் அடங்கிய நூல்.

விவிலியமதம் viviliya-matam, *n.* <id.+ *mata*. Christianity; கிறிஸ்தவ மதம்.

விவேகசிந்தாமணி vivēka-cintāmaṇi, *n* A treatise on Vēdānta philosophy; ஒரு வேதாந்த நூல். (W.)

விவேகபருவம் vivēka-paruvam, *n.* <விவேகம்+. Age of discretion; பகுத்தறியும் பிராயம். (W.)

விவேகம் vivēkam, *n.* <*vivēka*. 1. Discrimination, the capacity to reason and distinguish; பகுத்தறிவு. *நித்திய வநித்தியங்க ணிணையந தெரிவிவேகம* (கைவல. தத். 8). 2. Ingenuity, penetration, right judgment; புத்திக் கூர்மை. (W.) 3. Preface of a book; பாயிரம். (W.)

விவேகமதியுப்பு vivēka-mati-y-uppu, *n.* prob. id.+ மதி³+. Glass gall. See வளையலுப்பு. (மூ. அ.)

விவேகி¹ vivēki, *n.* <*vivēkin*. Clever person, person of understanding; பகுத்தறிவுள்ளவன். *மலாதூவித் தொழுதான் விவேகிகளின் மிக்கோன்* (ஞானவா. பிரகலா. 23).

விவேகி²-த்தல் vivēki-, 11 *v. tr.* <விவேகம். To discriminate; to understand with discrimination; பகுத்தறிதல்.

விவேசனம் vivēcaṉam, *n.* <*vi-vēcana*. Discrimination, distinguishing truth from falsehood, reality from semblance; பகுத்தறிவு. (W.)

விழ viḻa, *n.* <விழா. See விழா. *விழ வித தாய் வீடுபெற்றான்* (சீவக. 3114).

விழக்குழிபாய்ச்சு-தல் viḻa-k-kuḻi-pāyccu-, *v. intr.* <விழு-+. (W.) 1. To throw into a pit; படுகுழியில் வீழ்த்துதல். 2. To thwart an undertaking by putting obstacles in the way; பிறனுக்கு இடையூறு செய்து காரியக்கேடு விளைத்தல்.

விழத்தட்டு-தல் viḻa-t-taṭṭu-, *v. tr.* <id. +. (W.) 1. To overthrow, fell down; கீழ் விழும்படி தள்ளுதல். 2. To dash out of another's hand; பிறன் கையிலுள்ளதைத் தட்டி வீழ்த்துதல்.

விழத்தள்ளு-தல் viḻa-t-taḷḷu-, *v. tr.* <id. +. See விழத்தட்டு-. (W.)

விழத்தாட்டு-தல் viḻa-t-tāṭṭu-, *v. tr.* <id. +தாட்டு-. See விழத்தட்டு-. (W.)

விழம்பு viḻampu, *n* Boiled rice; சோறு. (யாழ். அக.)

விழல் viḻal, *n.* <விழு-. 1. Falling; விழுகை. *பாவாடை விடலொன்றே நரகத்தில் விழலொன்றே.* 2. Worthlessness, being valueless; பயனின்மை. *அழல தோமபு மருமறையோர்திறம் விழல தென்னு மருகா* (தேவா. 866, 7). (பிங்.) 3. Dharba grass. See விசுவாமித்திரப்புல். *காமரெழில் விழலுடுத்து* (திவ். பெருமாள். 9, 7). 4. A kind of sedge; கோரைவகை. 5. Cuscus grass See இலாமிச்சை. (W.)

விழல்கட்டி viḻal-kaṭṭi, *n.* <விழல்+ கட்டு-. One who plaits darbha grass; விழற்புல் லாற் பின்னுவோன். *Loc.*

விழலன் viḻalaṉ, *n.* <id. cf. *vṛṣala*. Idler; worthless man; ஒன்றுக்கும் உதவாதவன். *விழல னெனையாள நினைவாய்* (திருவேங். சத. 86).

விழலாண்டி viḻal-āṇṭi, *n.* <id.+. Idler, saunterer; சோம்பித்திரியும் வீணன். (W.)

விழலி viḻali, *n.* Fem. of விழலன். Idle woman; worthless woman; ஒன்றுக்கும் உதவாத வள். *வீணிகள் விழலிகள்* (திருப்பு. 890).

விழலுக்கிறை-த்தல் viḻalukkiṟai-, *v. intr.* <விழல்+. To labour unprofitably, as watering unproductive grass; வீண்பாடுபடுதல்.

விழவணி viḻa-v-aṇi, *n.* <விழவு+. Adornment of the person on festive occasions, as marriage, etc.; சுபகாலங்களில் அணியும் அலங் காரம். *வதுவை விழவணி வைகலுங் காட்டினை* (கலித். 98).

விழவர் viḻavar, *n.* <id. Those who celebrate a festival; உற்சவங் கொண்டாடுவோர். *தணபதங்கொள் விழவ ரோதை சிறந்தார்ப்ப* (சிலப். 7, பக். 206).

விழவாற்றுப்படு-த்தல் viḻavāṟṟuppaṭu-, *v. intr.* <id.+. To bring a festival to a close; உற்சவத்தை முடிவுசெய்தல். *விழவாற்றுப்படுத்தபிற் புல்லென்ற களம்போல* (கலித். 5).

விழவு viḻavu, *n.* <விழா. 1. See விழா. *முந்நீர் விழவி னெடியோன்* (புறநா. 9). 2. Pastime; விளையாட்டு. *ஊரனொ டப்புவிழவமரும் பணிமொழி*

யரிவை (பு. வெ. 12, பெண்பாற். 10). 3. Desire; அவா. (அரு. நி.) 4. Gemini of the zodiac; மிதுனராசி. (பிங்.)

விழவுக்களம் viḻavu-k-kaḷam, n. <விழவு + களம்². Place of celebration of a festival; உற்சவம் நடைபெறும் இடம். விழவுக்கள நந்தி (குறிஞ்சிப். 192).

விழவேடெடு-த்தல் viḻa-v-ēṭeṭu-, v. intr. prob. விழு- + ஏடு +. To steal one's book; கிரந்தத்தைத் திருடிக்கொள்ளுதல். அவ்வூரில விழவேடெடுத்துக் கொண்டறிதல . . . செய்வாரில்லை (திவ். பெரியதி. 8, 1, 8, வ்யா.).

விழற்கட்டு viḻaṟkaṭṭu, n. <விழல் +. House thatched with viḻal grass; விழற்புல் வேய்ந்த வீடு. (யாழ். அக.)

விழற்கிறை-த்தல் viḻaṟkiṟai-, v. intr. <id. + இறை-. See விழலுக்கிறை-. சுத்தப பாமரராய் விழற்கிறைத்துப் பட்டனரால் (பிரபோத. 13, 14).

விழற்கூரை viḻaṟ-kūrai, n. <id. +. Roof of viḻal grass thatch; விழற்புல் வேய்ந்த கூரை.

விழற்பாய் viḻaṟ-pāy, n. <id. + பாய்². Mat made of viḻal grass; விழற்புல்லாற் பின்னிய பாய். வெயில்நாளில் விழற்பாயும் குளிர்நாளில் கோரைப்பாயும்.

விழா viḻā, n. <விழை-. 1. Festive occasion, festival; உற்சவம். ஆலமாசெல்வன் . . . மகன் விழாக் கால்கோளென்று (கலித். 83). 2. Celebration of a marriage; விவாகக்கொண்டாட்டம். அரசிளங் குமரர்க்குயர் விழா நடத்தி (திருவாலவா. 25, 24).

விழாக்கடி viḻā-k-kaṭi, n. <விழா + கடி⁵. Sights of a festival; உற்சவக்காட்சி. (W.)

விழாக்கால்கோள் viḻā-k-kāl-kōḷ, n. <id. + கால்¹ + கோள்¹. Commencement of a festival; திருவிழாத்தொடக்கம். ஆலமாசெல்வன்மகன் விழாக் கால் கோள் (மணி. 3, 144).

விழாக்கொள்(ளு)-தல் viḻā-k-koḷ-, v. intr. <id. +. To celebrate a festival; திருவிழா நடத்துதல். (குறிஞ்சிப. 192, உரை.)

விழாக்கோள் viḻā-k-kōḷ, n. <id. + கோள்¹. Celebration of a festival; திருவிழாக் கொண்டாட்டம். விழாக்கோளெடுத்த நாலேழ் நாளினும் (மணி. 1, 7).

விழாக்கோளாளர் viḻākkōḷ-āḷar, n. <விழாக்கோள் +. Those who conduct a festival, as by order of a king; அரசர் முதலியோர் ஆணைப்படி திருவிழா நடத்துவோர். விழாக்கோளாளரைக் குழாத்திடைத் தரீஇ (பெருங. உஞ்சைக். 37, 247).

விழாப்புறம் viḻā-p-puṟam, n. <விழா + புறம்¹. Land-endowment for the conduct of festivals; திருவிழா நடைபெறுதற்கு விடப்பட்ட இறையிலிநிலம். (T. A. S. i, 6.)

விழால் viḻāl, n. cf. விழல். See விழாலரிசி. (தைலவ.)

விழாலரிசி viḻāl-arici, n. <விழால் +. [T. viḍavali.] Seed of a kind of grass; ஒருவகைப் புல்லரிசி. (தைலவ.)

விழாவணி viḻā-v-aṇi, n. <விழா +. 1. See விழவணி. 2. Ceremonial grandeur, as of festivities; திருவிழாச்சிறப்பு. நிகழ்தல் விழாவணி நிகழ்வித்தோனே (சிலப. உரைபெறுகட். 4). 3. State of a warrior armed for battle; வீரனது போர்க்கோலம். வில்லின்செல்வன் விழாவணி விரும்பி நோக்கி (கம்பரா. மீட்சிப. 55).

விழி¹-த்தல் viḻi-, 11 v. intr. 1. To open the eyes; கண்திறத்தல். இமையெடுத்துப பற்றுவே னென்றியான் விழிக்குங்கால் (கலித். 144). 2. To wake from sleep; நித்திரை தெளிதல். உறங்கி விழிப்பது போலும் பிறப்பு (குறள், 339). 3. To watch; to be vigilant; to be wide awake; சாக்கிரதையாயிருத்தல். அவன் சோர்வு போகாமல் விழித்துக்கொண்டிருப்பவன். 4. To look at attentively; கவனித்து நோக்குதல். நாட்டார்கள் விழித்திருப்ப . . . நாயினுக்குத் தவிசிட்டு (திருவாச. 5, 28). 5. To gaze, stare; மருண்டு நோக்குதல். விண்ணின்று மிழியாம லெப்போதும் வானோர் விழிக்கின்றதே (பிரபோத. 6, 14). 6. To shine; பிரகாசித்தல். பொன்னூ ணிருள கெட விழிப்ப (சீவக. 2280). 7. To be clear; தெளிவாதல். மொழிப்பொருட் காரணம விழிப்பத் தோன்று (தொல். சொல். 394). 8. To be alive; உயிர்வாழ்தல். அழற்கணுக மாருயிருணண விழித்தலாற்றேன் (மணி. 23, 70).

விழி² viḻi, n. <விழி-. 1. Eye; கண். (பிங்.) விழியிலா நகுதலை (தேவா. 345, 5). 2. Eye-ball; மிண்டை. 3. Knowledge; wisdom; ஞானம். தேறா விழியிலா மாந்தா (திருமந். 177).

விழிகண்குருடு viḻi-kaṇ-kuruṭu, n. <id. +. Blindness without any apparent defect in the eye, *Amaurosis;* வெளித்தோற்றத்தில் விழியில் மாறுபாடின்றியே கண்தெரியாமை. அவமுறு விழிகண்குருடொடு மாவி யயர்வுறும் (கடம்ப. பு. இலீலா. 104).

விழிச்சி viḻicci, n. cf. எழுச்சி. Inflammation of the internal ear, otitis; காதுக்குள் வெடிக்குங் கட்டி. (M. L.)

விழிஞம் viḻiñam, n. A town on the sea-coast of Travancore; திருவிதாங்கூரிலுள்ள ஒரு துறைமுகப்பட்டினம். விழிஞக்கடற்கோடியுள் வேல் வலங்கைக் கொண்டான் (இறை. 3, உரை).

விழிதுறை viḻiturai, n. prob. இழிதுறை. (யாழ். அக.) 1. Shore, bank, ford; நீர்க்கரை. 2. Ghat; ford; இறங்குதுறை.

விழிப்பு viḻippu, n. <விழி-. 1. Waking up; விழிக்கை. 2. Watchfulness, vigilance; சாக்கிரதை. 3. Conspicuousness, prominence; சிறந்து விளங்குகை. (W.) 4. Blinking in ignorance; செய்வது தெரியாமல் திகைக்கை.

விழிபிதுங்கு-தல் viḻi-pituṅku-, v. intr <விழி+. To suffer from overwork; வேலை நெருக்கடியால் வருந்துதல்.

விழிமி viḻimi, n. See விழுதி. (பிங.)

விழியன் viḻiyaṉ, n. <விழி. 1. One having large prominent eyes; பெருங்கண்ணுடையவன். (W.) 2. One having bulging eyes; பிதுங்கிய விழியுடையவன்.

விழிவாதம் viḻi-vātam, n. <id.+வாதம்[1]. A disease of the eye that causes twitching; இமைகளையாட்டும் கண்ணோய்வகை. (சீவரட்.)

விழிவிழுங்கி viḻi-viḻuṅki, n. <id.+விழுங்கு-. An eye-disease; கண்ணோய்வகை. (யாழ். அக.)

விழு[1]-தல் viḻu-, 4 v. intr. cf. வீழ்-. [K. bīḻu.] 1. To fall, fall down; to descend; to flow down; கீழ்நோக்கி யிழிதல். விழூஉ மவ்வெள்ளருவி (பதிற்றுப. 78, 1). 2. To lie prostrate, as in reverence; நிலம்படியச் சாய்தல். பாடல் புரிந்து விழுந்தெழுந்து . . . பயில்வித்தார (பெரியபு. திருநா. 309). 3. To fall down exhausted; சோர்ந்து வீழ்தல். வெஞ்சினவீரா விழுந்தனா (கம்பரா. இராவணன் வதை. 36). 4. To fall sick or ill; to be bedridden; நோய்வாய்ப்பட்டுக் கிடத்தல். 5. To be defeated or overthrown; தோற்றுப்போதல் அவன் வாக்குவாதத்தில் விழுந்துவிட்டான். 6. To fall low, decline, as prices; to sink to a lower level; தாழ்தல். விலை விழுந்துவிட்டது. 7. To be destroyed, ruined; கெடுதல். விழுந்தன கொடிய தீவினைப பாபமெலாம் (பிரபுலிங. அக்கமா. உற. 11). 8. To die; சாதல். அவா விழுந்துபோனா. 9. To set, as the sun; அஸ்தமித்தல். விழுந்த ஞாயிறு வெழுவதன் முன் (கம்பரா. காப்பு. 9). 10. To fall into desuetude; வழக்கிலின்றி யொழிதல். 11. To settle; to be fixed; தங்குதல். அவன் நினைவு அதிலே விழுந்தது. 12. To crowd together; to swarm; திரண்டு கூடுதல். சனங்கள் வந்து விழுகிறார்கள். 13. To be allotted; to fall to one's lot or share; கிடைத்தல். சீட்டு அவனுக்கு விழுந்தது. 14. To be imprinted; பதிதல். புகைப்படம் நன்றாய் விழுந்திருக்கிறது. 15. To appear; to be formed; to come out; வெளித்தோன்றுதல். துவாரம் விழுந்த மரம்; மாட்டுக்கு இரண்டு பல் விழுந்திருக்கிறது; கிழங்கு விழுந்தது. 16. To take place, happen; நேர்தல். 17. To pass; to pass away; கழிதல். இப்படி நாள விழுகையாலும் (S. I. I. v, 140). 18. To rush, as against a person; ஒருவன்மீது தாக்கிச் செல்லுதல். பகைமேல் விழுந்தான். 19. cf. vr. To exhibit desire; விருப்பங்கொள்ளுதல். ஐம்புலன் மேல் விழுந்து (திருநூற். 13). 20. To fall into position; இடத்திற் பொருந்துதல். 21. To devolve; உரிமை முதலியன இறங்குதல். 22. To be born, used in contempt; பிறத்தல். பெண கட்டை விழுந்தது. 23. To issue, proceed from, as speech; சொல் முதலியன வெளிப்படுதல். 24. To become detached; பிரிவுபடுதல். 25. To swoop; கீழ்நோக்கிப் பாய்தல். 26. To discharge, empty, as a river; நதி முதலியன சங்கமமாதல். 27. To hang down, droop; தொங்குதல். 28. To fall into a rage; கடுஞ்சினங் கொள்ளுதல். 29. To lose animation, as face; முகம் முதலியன வாடுதல். 30. To be locked up, as capital; பணம் முதலியன முடங்கிக்கிடத்தல்.

விழு[2]-த்தல் viḻu-, 11 v. tr. Caus. of விழு[1]-. 1. To cause to fall; to throw down; விழச்செய்தல். பழைய கால்விழுதத நெடுவேலைவீழ் வெற்பனை (பாரத. இராசசூய. 64). 2. To cause to die; சாகச்செய்தல். நமன்றமா . . . விழுப்பதன்முன் (தேவா. 420, 6). 3. To abandon; to remove; களைதல். அரைத்துணியை விழுத்து வை.

விழு[3] viḻu, n. <viṣu. See விஷுவம். விழு அயனதிகளிலும் விழவுகளிலும் (சிலப. 10, 22, உரை).

விழு[4] viḻu, adj. <விழு[1]-. 1. cf. vara. Excellent; sublime; சிறந்த. விழுப்பேற்றி னஃதொப்ப தில்லை (குறள், 162). 2. Distressing, grievous; துன்பமான. (சீவக. 2355.)

விழுக்காடிடு-தல் viḻukkāṭiṭu-, v. tr. <விழுக்காடு+. To apportion; கூறிடுதல். ஒன்று மிரணடுமாகப் பகழியை விழுக்காடிட்டு (சீவக. 798, உரை).

விழுக்காடு viḻukkāṭu, n. <விழு[1]-+காடு[3]. 1. Falling; flowing down, as of a waterfall; வீழ்கை. மலைநீர்விழுக்காடு (திருவாலவா. 54, 9). 2. Swoop, as of a kite; கீழ்நோக்கான பாய்ச்சல். பருந்தின் விழுக்காடு (நன். 18, மயிலை.). 3. Share, portion, lot; பங்கு. (W.) 4. Proportion, rate; வீதம். நூறுகுழிக்குக் கலனேநானாழி நெல்லும் கால் பணமும விழுக்காடு கொள்ளக் கடவதாகவும (S. I. I. i, 93, 7). 5. Chance; தற்செயல். பகவத்குணனுபவம்வழிந்த பேச்சுகள் விழுக்காட்டாலே பணணனபடி (ஈடு, 3, 6, 11). 6. That which is in store in the future; மேல்வருவது. இவனும் விழுக்காடறியாதே அகப்பட்டுக் கொடுநின்றான் (ஈடு, 6, 1, 5, ஜீ.). 7. Expletive; பொருளின்றிக் கூட்டியுரைக்கப்படுஞ் சொல். என்றால் என்பது ஓர சொல் விழுக்காடு (சீவக. 1886, உரை). 8. Implication,

implied sense; அருத்தாபத்தி. விழுக்காட்டாலே சொன்னார் (ரு, 3, 3, 5).

விழுக்கு[1] viḻukku, n. <விழுங்கு-. Gulp, swallow; மென்றுதின்னாமல் ஒருசேர விட்கொள்ளுகை. ஒரு விழுக்கு விழுங்கினான்.

விழுக்கு[2] viḻukku, n. cf. விழுது. 1. Fat, suet; ஊன்விசேடம். விழுக்கொடு விரைஇய வெண்ணிணச் சுவையினள் (புறநா. 371). 2. Oiliness, grease; எண்ணெய்ப்பிசுக்கு.

விழுக்குப்புரட்டு viḻukku-p-puraṭṭu, n. <விழுக்கு[2]+. A relish prepared in oil; எண்ணெயில் வேகவைத்தெடுத்த கறிவகை. Nāñ.

விழுங்கு-தல் viḻuṅku-, 5 v. tr. [T. miṅgu, K. muṅgu, M. viḻuṅṅuka.] 1. To swallow, gulp, as food; மென்றுதின்னாமல் ஒருசேர விட்கொள்ளுதல். தூண்டிற்பொன் மீன் விழுங்கி யற்று (குறள், 931). 2. To devour, consume, to absorb; to exhaust; கவளீகரித்தல். அக்கினி எல்லாவற்றையும் விழுங்கிவிட்டது. 3. To utter indistinctly; தெளிவின்றிப் பேசுதல். (W.) 4. To be hesitant in speech, slurring over words; வார்த்தைகளை மழுப்புதல். என் விழுங்கி விழுங்கிப் பேசுகிறாய். 5. To overcome; வெல்லுதல். வெம்பு காலினை விழுங்கிட . . . உம்பர் மீதினிமிர் வாசுகி யொத்தான் (கம்பரா. இராவணன்தானை. 3). 6. To seize, capture; கவர்தல். விடையுடை யினநிரை விழுங்கன் மேயினார் (சீவக. 1817). 7. To kill; கொல்லுதல். கல்லாமந்திரி விழுங்கப் பட்டான் (சீவக. 385). 8. To pervade; to swarm everywhere; வியாபித்தல். வானகம் விழுங்கினார் விண்ணவர் வெளியின் றென்னவே (கம்பரா. திருவவ. 85).

விழுங்கும்பாம்பு viḻuṅkum-pāmpu, n. <விழுங்கு-+. A deadly defensive machine in a fortress; மதிற்பொறிவகை. (சிலப. 15, 216, உரை.)

விழுச்சிறை viḻu-c-ciṟai, n. <விழு[4]+. Imprisonment without loss of dignity or honour; சீரிய சிறைவாசம். விலங்கி வில்லுமிழும் பூணான் விழுச்சிறைப் பட்டபோழ்தும் (சீவக. 1167).

விழுச்செல்வம் viḻu-c-celvam, n. <id.+. Great fortune, immense wealth; பெருஞ்செல்வம். கேடில் விழுச்செல்வங் கல்வி (குறள், 400).

விழுசுமை viḻu-cumai, n. <விழு[1]-+. Heavy burden; பெரும்பாரம். (யாழ். அக.)

விழுத்தகை viḻu-t-takai, n. <விழு[4]+. Unequalled excellence; பிறர்க்கில்லாத சிறப்பு. விழுத்தகை பெறுகென (பரிபா. 11, 117).

விழுத்தண்டு viḻu-t-taṇṭu, n. <id.+. Large stick for support in walking; பெரிய ஊன்றுகோல். தொடித்தலை விழுத்தண்டூன்றி (புறநா. 243).

விழுத்தம் viḻuttam, n. Black cumin. See கருஞ்சீரகம். (W.)

விழுத்தாட்டு-தல் viḻu-t-tāṭṭu-, v. tr. <விழு[1]-+தாட்டு-. See விழத்தட்டு-.

விழுத்திணை viḻu-t-tiṇai, n. <விழு[4]+. Noble family; உயர்குலம். வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து (புறநா. 27).

விழுத்து[1]-தல் viḻuttu-, 5 v. tr. Caus. of விழு[1]-. [K. bilisu.] See விழு[2]-. விழுத்தினான் சிரமெனும் வெகுளி மீக்கொள (கம்பரா. இராவணன் வதை. 155).

விழுத்து[2] viḻuttu, n. perh. விழு[2]-. Direction, aim; இலக்கு. அந்த விழுத்திலே ஓடினேன். Loc.

விழுதி viḻuti, n. A straggling shrub with simple oblong leaves and greenish flowers, m. sh., Cadaba indica; மருந்துச் செடிவகை.

விழுதிக்கீரை viḻuti-k-kīrai, n. <விழுதி+. Leaves of viḻuti; விழுதியின் இலை.

விழுது viḻutu, n. <விழு[1]-. [K. bilalu, M. viḻudu.] 1. Aerial root, as of the banyan; ஆலமரம் முதலியவற்றின் கிளைகளினின்று இறங்கும் வேர்த்தொகுதி. (பெரும்பாண. 357, உரை.) 2. Lock of hair; தலைமயிர்ச் சடையின் ஒருகால். Loc. 3. (Weav.) Heddles; நெசவுக்கருவி யுறுப்புள் ஒன்று. 4. Lead for sounding; ஆழமளக்குங் கருவி. Naut. 5. Ghee in congealed state; இறுகிக் கட்டியான நெய். 6. Butter; வெண்ணெய். ஆய்ச்சி விழுதுண்ட வாயானை (திவ். இயற். 3, 25). 7. Fat; நிணம். (W.) 8. Paste, pulpy mass; நீர் விட்டரைத்துத் திரட்டியது. இந்த உழுந்து தோசைக்கரைத்தால் விழுது காணுமா?

விழுதுக்கயிறு viḻutu-k-kayiṟu, n. <விழுது+. 1. (Weav.) Thread of linen, wound on the two beams, which the slay moves up and down; நெசவுக் கயிறுவகை. 2. Sounding-line; கடலின் ஆழமறிய உதவுங் கயிறு. (Naut. Man. 71.)

விழுதுசாந்து viḻutu-cāntu, n. <id.+. Mortar ground to a pulpy mass, dist. fr. iti-cāntu; மையாக அரைத்த சுண்ணச்சாந்து. Loc.

விழுதுவிடு-தல் viḻutu-viṭu-, v. intr. <id. +. 1. To drop or let down aerial roots, as banyan; ஆல் முதலியனவற்றின் கிளைகளினின்றும் வேர் வெளிப்பட்டுத் தோன்றுதல். 2. To take soundings; to cast the lead-line; ஆழமளத்தல். (W.)

விழுந்தான்கொட்டு viḻuntāṉ-koṭṭu, n. <விழு[1]-+கொட்டு[2]. A peculiar beat of drum,

indicating the death of a person; ஒருவன் இறந்ததைக் குறிக்கும் பறைமுழக்கு. *Loc.*

விழுந்துபோ-தல் viḻuntu-pō-, *v. intr.* <id.+. 1. To fall down; கீழ்விழுதல். 2. To die; இறத்தல். 3. To cut across; குறுக்குவழியாகச் செல்லுதல். *அந்த ஊருக்கு இந்த வழியே விழுந்துபோகவேண்டும்.*

விழுப்பகை viḻu-p-pakai, *n.* <விழு⁴+. Enmity towards the great; சீரிய பகை. *வேந்தனொடு நாடுதரு விழுப்பகை யெய்துக* (புறநா. 306).

விழுப்பம் viḻuppam, *n.* <id. 1. See விழுமம், 1. *ஒழுக்கம் விழுப்பந் தரலான்* (குறள், 131). 2. Good; benefit; நன்மை. (பிங்.) 3. Family, ancestry; குலம். (பிங்.) 4. See விழுமம், 4. *நின் விழுப்ப நீக்குதி* (விநாயகபு. 57, 23).

விழுப்பரையன் viḻupparaiyaṉ, *n.* perh. விழுப்பம் + அரையன். 1. See விழுப்பாதராயன், 1. (I. M. P. Tj. 89) 2. See விழுப்பாதராயன், 2. *வேளாளனை விழுப்பரையனுக்குக் கோயிற்கணக்கனென்றும்* (கோயிலொ. 44)

விழுப்பாதராயன் viḻu-p-pāta-rāyaṉ, *n.* perh. விழு⁴+பாதம்¹+. 1. A title of a class of vassals of the Tamil kings; தமிழ் அரசர்க்குக் கீழ்ப்பட்ட தலைவரில் ஒரு சாரார்ன் பட்டப்பெயர். (I. M. P. Sm. 47.) 2. A class of people whose duty is to read the accounts of a temple in the presence of the deity; கோயிலிற் சுவாமி திருமுன்பு கணக்கு வாசிக்கும் உரிமையுடைய மரபினன். *பாணடி பதினலுக்கும் வேண்டிய விழுப்பாதராயர்* (திருவாலவா. அரும.).

விழுப்பாதிராசன் viḻuppātirācaṉ, *n.* See விழுப்பாதராயன், 1. (I. M. P. Tj. 1092.)

விழுப்பிணி viḻu-p-piṇi, *n.* <விழு⁴+. Disease in an advanced and incurable stage; தீராத முற்றிய நோய். *விழுப்பிணிப்போழ்து மறுமை மனத்தாரேயாகி* (நாலடி, 329).

விழுப்பு¹ viḻuppu, *n.* <விழு²-. 1. Anything cast off; கழிக்கப்படுவது. *விழுப்புற வுதுக்கியிட்டு* (சீவக. 2771). 2. State of ceremonial impurity before daily bath; ஸ்நானம் செய்யுமுன் உள்ள அசுத்தநிலை. *விழுப்புத் துணி.*

விழுப்பு² viḻuppu, *n.* <விழுப்பம். See விழுப்பம், 1, 3, 4. (அரு. நி.)

விழுப்புண் viḻu-p-puṇ, *n.* <விழு⁴+. 1. Wound of a warrior on his face or breast received in battle; போரில் முகத்தினும் மார்பினும் பட்ட புண். *விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள் வைக்கும்* (குறள், 776). 2. Grievous wound; இடும்பை தரும் புண். *கொழுவாய் விழுப்புண் குரைபபொலியும்* (சீவக. 2355).

விழுப்பேரரையர் viḻu-p-pēr-araiyar, *n.* perh. id.+பேர்⁴+. A title of a class of Tamil chieftains; தமிழ்த் தலைவரில் ஒரு சாரார் பட்டப்பெயர். *விழுப்பேரரையர் அய்யாக்குட்டி யடிகள்* (I. M. P. S A. 974).

விழுப்பொருள் viḻu-p-poruḷ, *n.* <id.+. The highest object or thing; மேலான பொருள். *விண்ணகத்தேவரு நண்ணமாட்டா விழுப்பொருளே* (திருவாச. 20, 9).

விழுபாலை viḻu-pālai, *n.* perh. விழு¹-+பாலை¹. A creeper; கொடிவகை. (யாழ். அக.)

விழுமம் viḻumam, *n.* <விழு⁴. 1. Excellence, greatness, sublimity, eminence, magnificence, superiority; சிறப்பு. (தொல். சொல். 353.) 2. Good state; சீர்மை. (தொல. சொல். 353.) 3. Purity; தூய்மை. *Loc.* 4. Distress, affliction; இடும்பை. *நின்னுறு விழுமங் களைந்தோள்* (அகநா. 170).

விழுமலை viḻu-malai, *n.* <விழு¹-+மலை⁴. The western mountain beyond which the sun is supposed to set. See அஸ்தகிரி. *எழுமலை விழுமலை புடைமணி யாக* (கல்லா. 19).

விழுமா-த்தல் viḻumā-, *12 v. intr.* <விழுமம்+ஆ⁴-. To attain to eminence or glory; சிறப்படைதல். *மகளிர் விழுமாந்தனர் தங்கொழுநரைக் காத்தே* (நற். 320).

விழுமிய viḻumiya, *adj.* <id. Pre-eminent, excellent; சிறந்த. *விழுமிய பெறலரும் பரிசி னல்குமதி* (திருமுரு. 294).

விழுமியதுபயத்தல் viḻumiyatu-paya-t-tal, *n.* <id.+. (Gram.) Inculcating noble teaching, one of ten *nūl-aḻaku*, q.v.; நூலழகு பத்தனுள் சீரிய பொருளை யுணர்த்தலாகிய அழகு. (நன். 13.)

விழுமியர் viḻumiyar, *n.* <id. See விழுமியோர். *விழுமிய ரென்னினு மவர்பா லிரவாமை* (பிரபோத. 30, 72).

விழுமியோர் viḻumiyōr, *n.* <id. Excellent persons; சிறந்தோர். *வானகமு கையுறினும் வேண்டார் விழுமியோர்* (நாலடி, 300).

விழுமீன்¹ viḻumīṉ, *n.* <விழு¹-+மீன்¹. Meteor. See வீழ்மீன்.

விழுமீன்² viḻu-mīṉ, *n.* <id.+மீன்². Hilsa. See உல்லம், 1.

விழுமுதல் viḻu-mutal, *n.* <id.+. Capital invested in a business; வியாபாரத்தின் மூலதனம். *Loc.*

விழுமுறு-தல் viḻumuṟu-, *v. intr* <விழுமம் + உறு-. To be distressed or afflicted; துன்புறுதல். *வேந்து விழுமுறினே* (*புறநா.* 318).

விழுமெனல் viḻum-eṉal, *n.* See விழுவிழெனல்.

விழுவிழெனல் viḻu-viḻeṉal, *n.* Expr. signifying (a) sliminess, slipperiness; வழவழப்பாதற் குறிப்பு. (W.): (b) pastiness; பசை பிடித்தற் குறிப்பு. (*யாழ். அக.*)

விழை-தல் viḻai-, *4 v.* prob. வீழ்[1]-. *tr.* 1. To wish, desire, love; to be anxious for; to covet; விரும்புதல். *இன்பம் விழையான் வினைவிழைவான்* (*குறள்,* 615). 2. To esteem; நன்குமதித்தல். *ஒன்னார் விழையுஞ் சிறப்பு* (*குறள்,* 630). 3. To resemble; ஒத்தல். *மழைவிழை தடக்கை* (*தொல். பொ.* 289, *உரை*).—*intr.* cf. இழை[1]-. To move closely or intimately; நெருங்கிப்பழகுதல். *Loc.*

விழைச்சி viḻaicci, *n.* <விழை-. 1. Enjoyment; சுகானுபவம். *மன்னர்விழைச்சி* (*சிலப்.* 2, 2, *உரை*). 2. See விழைச்சு, 1. *அறுவகைப்பட்ட பாசாண்டிகரும் இணைவிழைச்சி தீதென்ப* (*இறை.* 1, *உரை, பக்.* 9).

விழைச்சு viḻaiccu, *n.* <id. (*பிங்.*) 1. Sexual union; புணர்ச்சி. 2. Tenderness; இளமை.

விழைந்தோன் viḻaintōṉ, *n.* <id. (*பிங்.*) 1. Friend; நண்பன். 2. Husband; கணவன்.

விழைநன் viḻainaṉ, *n.* <id. See விழைந்தோன்.

விழைய viḻaiya, *part.* <id. A particle of comparison; ஓர் உவமவாய்பாடு. (*தொல். பொ.* 289.)

விழையார் viḻaiyār, *n.* <id. + ஆ neg. Enemies; பகைவர். *விழையார் விழையப் படுப* (*குறள்,* 810).

விழைவு viḻaivu, *n.* <id. 1. Copulation; புணர்ச்சி. (*பிங்.*) 2. Desire; விருப்பம். *விழைவோ விழுமிதே* (*பு. வெ.* 9, 41). 3. Vibration of a lute; யாழி னுள்ளோசை. (*பிங்.*)

விள்(ளு)-தல் viḷ-, *2 v. intr.* 1. To open out, expand; to unfold, as a blossom; மலர்தல். (*சூடா.*) 2. To crack; உடைதல். *அந்தப் பழம் கீழ்விழுந்ததனால் விண்டுபோயிற்று.* 3. To split, burst; வெடித்தல். (*யாழ். அக.*) 4. To be at variance; to be opposed; மாறுபடுதல். *விள்வாரை மாறட்ட வென்றிமறவர்* (*பு. வெ.* 1, 14). 5. To become clear; தெளிவாதல்.—*tr.* 1. To break open; to split; பிளத்தல். *பழத்தை விண்டான்.* 2. To hate; பகைத்தல். *விண்டு . . . மண்டினார்* (*சீவக.* 418). 3. To be separated from; to leave; நீங்குதல். *வினைகளும் விண்டனன்* (*தேவா.* 928, 7). 4. To say, tell; சொல்லுதல். *தன்னிடத்து வந்து விள்ளான்* (*திருவாலவா.* 33, 10). 5. To reveal, make known; வெளிப்படுத்துதல். *உமக்கே விண்டு பேசினல்லால்* (*அஷ்டப். திருவரங்கக்.* 70). 6. To open, as the mouth; வாய் முதலியன திறத்தல். *வாய்விண்டு கூறும்* (*பாகவத.* 1, *தன்மபுத்திர.* 29). 7. To solve, as a riddle or conundrum; பிதிர் முதலியன விடுத்தல். *இந்தப் பிதிரை விள்ளு.*

விள்கை viḷkai, *n.* <விள்-. Leaving; விட்டகலுகை. *விள்கை விள்ளாமை விரும்பி* (*திவ். திருவாய்.* 1, 6, 5).

விள்ளல் viḷḷal, *n.* <id. 1. Separation; பிரிவு. *விலங்கிற்கும் விள்ள லரிது* (*நாலடி,* 76). 2. Unfolding, as of a flower; மலர்கை. (*சூடா.*) 3. Embracing; ஆலிங்கனம். (*சூடா.*) 4. Wynaad coffee cherry-nutmeg. See நெடுநாரை, 2. *Kūṭar.*

விள்ளோடன்தேங்காய் viḷ-ḷ-ōṭaṉ-teṅ-kāy, *n.* <id. + ஓடு +. Coconut in which the kernel parts easily from the shell; உள்ளீடான பருப்பு சிரட்டையினின்று எளிதாகப்பெயருந் தேங்காய். (J.)

விள[1] viḷa, *n.* <விளா[1]. Wood-apple. See விளா[1]. (*தொல். எழுத்.* 181, *உரை.*)

விள[2] viḷa, *n.* See விளவு[4]. (*பிங்.*)

விள[3] viḷa, *n.* See விளவு[6]. (*பிங்.*)

விளக்கங்காண்(ணு)-தல் viḷakkaṅ-kāṇ-, *v. tr.* <விளக்கம் +. To test; சோதித்தறிதல். *தொண்டரை விளக்கங்காண* (*பெரியபு. திருநீலகண்ட.* 10).

விளக்கணம் viḷakkaṇam, *n.* prob. விளக்கு- +. 1. Soldering; பொடிவைத்துப் பொருத்துகை. (*யாழ். அக.*) 2. Solder; பற்றுப்பொடி.

விளக்கணி viḷakkaṇi, *n.* <விளக்கு +. (Rhet.) A figure of speech. See தீவகம்[1], 2. (*அணியி.* 15.)

விளக்கணை-த்தல் viḷakkaṇai-, *v. intr.* <id. + அணை-. To extinguish a lamp; விளக்கை அவித்துவிடுதல்.

விளக்கத்தார்கூத்து viḷakkattārkūttu, *n.* A treatise on dramaturgy, not now extant; வழக்குவீழ்ந்த ஒரு நாடகத்தமிழ்நூல். (*தொல். பொ.* 553, *உரை.*)

விளக்கப்பிரைசிதான் viḷakka-p-piraici-tāṉ, *n.* <விளக்கம் + Fr. *président.* Examining magistrate; குற்றவிசாரணைக்குரிய நியாயாதிபதி. *Pond.*

விளக்கம் viḷakkam, *n.* <விளங்கு-. [K. *beḷahu.*] 1. Elucidation, explanation; தெளி

வான பொருள். 2. Clearness; perspicuity; தெளிவு. நீ சொல்வது விளக்கமாக இல்லை. 3. Light; ஒளி. ஊாசுடு விளக்கத்து (புறநா. 7). 4. Phase of the moon; சந்திரகலை. (சது.) 5. Lamp; விளக்கு. குடியென்னுங் குன்றா விளக்கம் (குறள், 601). 6. Ring; மோதிரம். செவ்விரற் கொளீஇய செங்கேழ் விளக்கத்து (நெடுநல். 144). 7. Praise; புகழ். நாவில் விளக்கந் தரும் (குறள, 853). 8. Investigation; விசாரணை. (யாழ். அக.) 9. Court of the first instance, where evidence is taken; சாக்ஷி விசாரணை நடக்கும் நியாயஸ்தலம். *Pond.* 10. Plenty; அதிகம். விளக்கமாய்க் கொடு. *Tinn.*

விளக்கவி-த்தல் viḷakkavi-, *v. intr.* <விளக்கு+அவி²-. See விளக்கணை-.

விளக்கிசைக்குறி viḷakkicaikkuṟi, *n.* <விளக்கு-+இசை⁴-+. Colon, a punctuation-mark (:); வாசிக்கையில் மூன்று மாத்திரை நிறுத்து வதற்கு இடுங்குறி.

விளக்கிடு-தல் viḷakkiṭu-, *v.* <விளக்கு+. *intr.* 1. To light lamps. See விளக்கேற்று-. 2. To burn lights in the temple, as an act of piety; கோயிலில் திருவிளக்கேற்றி வைத்தல்.—*tr.* To explain; to throw light upon; விளங்கச் செய்தல்.

விளக்கிடுகல்யாணம் viḷakkiṭu-kalyāṇam, *n.* <விளக்கிடு-+. An auspicious ceremony performed before a girl's marriage, generally in her seventh or ninth year, among Kārkātta Vēḷāḷas; கார்காத்த வேளாளரில் மணம்புரியாத பெண் களுக்கு 7 அல்லது 11-ஆம் வயதிற் செய்யப்படுஞ் சடங்குவகை. (E. T. vii, 380.)

விளக்கீடு viḷakkīṭu, *n.* <id. Lamp-lighting on the evening of *tiru-k-kārttikai;* திருக்கார்த்திகையன்று விளக்கேற்றுகை. கார்த்திகை நாள் . . . விளக்கீடு காணாதே போதியோ (தேவா. 1118, 3).

விளக்கு¹-தல் viḷakku-, *5 v. tr.* Caus. of விளங்கு-. 1. To make clear; to explain, elucidate; தெளிவாக்குதல். சொல்லிக்காட்டிச் சோரா வின்று விளக்கி (மலைபடு. 79). 2. To make illustrious; பிரசித்தப்படுத்துதல். தம்மை விளக்குமால் (நாலடி, 132). 3. To clean, brighten, polish; துலக்குதல். பல்லை விளக்குகிறான்: பாத்திரத்தை விளக்குகிறாள். 4. To purify; சுத்தமாக்குதல். குருவி னுபதேசம் மனத்தை விளக்கும். 5. To distribute, serve; பரிமாறுதல். அட்டன யாவையும் விளக்கின மிவர்க்கே (விநாயகபு. 53, 29). 6. To sweep, clear up; துடைப்பத்தாற் பெருக்குதல். 7. To solder; பொடியிட்டுப் பற்றவைத்தல். பொன் னின் பட்டைமேற் குண்டுவைத்து விளக்கின வளை (S. I. I. ii, 182).

விளக்கு² viḷakku, *n.* <விளக்கு-. [T. *velugu*, K. *beḷaku*, M. *viḷakku*.] 1. Lamp, light; ஒளிதருங் கருவி. எல்லா விளக்கும் விளக்கல்ல (குறள், 299). 2. Lustre, band of rays; ஒளிப் பிழம்பு. (அக. நி.) 3. Brightening; ஒளிபெறச் செய்கை. நிலம் விளக்குறுப்ப (மதுரைக். 705). 4. The 15th *nakṣatra*. See சோதி⁴. (சூடா.)

விளக்குக்குச்சோறூட்டு-தல் viḷakkuk-ku-c-cōṟūṭṭu-, *v. intr.* <விளக்கு+. To make an offering of boiled rice before a burning lamp in thanks-giving to the God of Fire, on gathering the first sheaves; நாட்கதிர் கொண்ட தும் அக்கினியின்பொருட்டு விளக்கு முன்பாகப் புதிய சோறு படைத்தல். (W.)

விளக்குக்குப்புதிதூட்டு-தல் viḷakkuk-ku-p-putitūṭṭu-, *v. intr.* <id.+. See விளக்குக் குச்சோறூட்டு-. (W.)

விளக்குக்கூடு viḷakku-k-kūṭu, *n.* <id. +. 1. See விளக்குத்தகழி. 2. See விளக்குக் கூண்டு, 1. 3. See விளக்குமாடம், 1. (W.) 4. Balloon carrying a light; விளக்கை உள்வைத்து வானத்துச் செலவிடுக்கும் கூண்டு.

விளக்குக்கூண்டு viḷakku-k-kūṇṭu, *n.* <id.+. 1. Lighthouse. See கலங்கரைவிளக்கம். *Colloq.* 2. See விளக்குக்கூடு, 4.

விளக்குக்கொளுத்து-தல் viḷakku-k-koḷuttu-, *v. intr.* <id.+. See விளக்கேற்று-.

விளக்குத்தகழி viḷakku-t-takaḻi, *n.* <id. +. Oil-receptacle in a lamp; தீபம் ஏற்று தற்கு உரிய அகல். (யாழ். அக.)

விளக்குத்தண்டு viḷakku-t-taṇṭu, *n.* <id. +. Lamp-stand, standard of a lamp; தீபம் ஏற்றி வைக்கும் தகழியைத் தாங்குந் தண்டு.

விளக்குத்தாள் viḷakku-t-tāḷ, *n.* <id.+ தாள்¹. See விளக்குத்தண்டு. (யாழ். அக.)

விளக்குநாய்ச்சியார் viḷakku-nāyacciyār, *n.* <id.+. *Loc.* 1. Lamp in a house, regarded as a goddess. See திருவிளக்குநாச்சியார், 1. 2. Metallic image of a woman holding a lamp in her hands. See திருவிளக்குநாச்சியார், 2.

விளக்குநிலை viḷakku-nilai, *n.* <id.+. 1. (Puṟap.) Theme describing the royal lamp as flourishing inseparably with the royal sceptre; அரசனது கோலோடு விளக்கும் ஒன்றுபட்டோங்கு வதைக் கூறும் புறத்துறை. (தொல். பொ. 90.) 2. (Puṟap.) Theme describing the movement of a lamp from left to right, indicating the victory of a king; வலமாகத் திரியாநிற்கும் விளக்கு அரச னது வெற்றியைக் காட்டுவதாகக் கூறும் புறத்துறை. (பு. வெ. 9, 12.) 3. A poem on the theme of

vilakku-nilai, in which the royal sceptre and the royal lamp are described as flourishing inseparably, as the spear and the spear-head, one of 96 *pirapantam*, q.v.; பிரபந்தம் தொண்ணூற்றாறனுள் வேலும் அதன் தலையும் விலங்கா தோங்கியவாறுபோலக் கோலும் விளக்கும் விலங்கா தோங்குவதாகக் கூறுவது. (சது.) 4. See விளக்குத் தண்டு. (அக. நி.)

விளக்குப்பாடம் vilakku-p-pāṭam, *n.* <id.+பாடம்². Lesson learnt at night under a lamp; இரவிலேற்றிய தீபத்தின் முன்னிருந்து பிள்ளைகள் படிக்கும் பாடம். *Loc.*

விளக்குப்பாதம் vilakku-p-pātam, *n.* <id.+பாதம்¹. 1. See விளக்குத்தண்டு. (W.) 2. Foot of the lamp-stand; விளக்குத்தண்டின் அடிப் பாகம்.

விளக்குப்பார்-த்தல் vilakku-p-pār-, *v. intr.* <id.+. See விளக்கேற்று-. *Loc.*

விளக்குப்பிணம் vilakku-p-piṇam, *n.* <id.+. Darkness; இருட்டு. விளக்குப்பிணம் போலே காணவொண்ணுதபடி (ஈடு, 5, 7, 4).

விளக்குப்புறம் vilakku-p-puṟam, *n.* <id. +புறம்¹. Endowment for lights in a temple; கோயிலில் விளக்கிடுதற்கு விடப்பட்ட இறையிலி நிலம். நந்தா விளக்குப்புற மாகென (சீவக. 2564).

விளக்குப்பொருத்து-தல் vilakku-p-poruttu-, *v. intr.* <id.+. See விளக்கேற்று-. (W.)

விளக்குப்போடு-தல் vilakku-p-pōṭu-, *v. intr.* <id.+. See விளக்கேற்று-.

விளக்குமாடம் vilakku-māṭam, *n.* <id. +மாடம்¹. 1. Niche in a wall for lamps; தீபம் வைப்பதற்கான சுவர்ப்புரை. (W.) 2. Place for lights in a temple; திருவிளக்கிடும் கோயிலிடம். (T. A. S. i, 176.)

விளக்குமாற்றுக்கட்டை vilakkumāṟṟu-k-kaṭṭai, *n.* <விளக்குமாறு+. 1. Old and worn-out broom; தேய்ந்த துடைப்பம். 2. A term of reproach; ஒரு பழிச்சொல். *Loc.*

விளக்குமாறு vilakku-māṟu, *n.* <விளக்கு-+. Broom; துடைப்பம். (தைலவ.)

விளக்குறு-த்தல் vilakkuṟu-, *v. tr.* <id.+உறு-. To brighten, give splendour to; ஒளிபெறச் செய்தல். நிலம விளக்குறுப்ப (மதுரைக். 705).

விளக்கெண்ணெய் vilakkeṇṇey, *n.* <விளக்கு+. 1. Castor oil, as used for lamps; விளக்கிடுவதற்கு உதவும் ஆமணக்கெண்ணெய். *Colloq.* 2. Medicinal castor oil; மருந்தாக உதவும் ஆமணக்கெண்ணெய். *Colloq.* 3. Oil extracted from neem seeds; வேப்பெண்ணெய். (யாழ். அக.)

விளக்கேற்றிவை-த்தல் vilakkēṟṟi-vai-, *v.* <id.+ஏற்று-+. *intr.* 1. See விளக்கேற்று-. 2. To help to marry; கலியாணஞ் செய்துவைத்தல். இவனுக்குக் காலத்தில் ஒரு விளக்கேற்றிவைக்க நினைக்கிறேன். (W.)—*tr.* To set up, establish; நிலைநிறுத்துதல். அழியவிருந்த குடும்பத்தை விளக்கேற்றிவைத்தான்.

விளக்கேற்று-தல் vilakkēṟṟu-, *v. intr.* <id.+. To light lamps; தீபத்தை யேற்றுதல்.

விளக்கைக்குளிரவை-த்தல் vilakkai-k-kuḷira-vai-, *v. intr.* <id.+. See விளக்கமர்-. *Loc.*

விளக்கைச்சமனஞ்செய்-தல் vilakkai-c-camanañ-cey-, *v. intr.* <id.+. See விளக்கணை-. *Loc.*

விளக்கைச்சமனம்பண்ணு-தல் vilakkai-c-camanam-paṇṇu-, *v. intr.* <id.+. See விளக்கணை-. *Loc.*

விளக்கைநிறுத்து-தல் vilakkai-niṟuttu-, *v. intr.* <id.+. See விளக்கணை-. *Loc.*

விளகம் viḷakam, *n.* <*bhallālaka.* Marking-nut tree. See சேங்கொட்டை, 2. (மலை.)

விளங்கம் viḷaṅkam, *n.* <*viḍaṅga.* Small elliptic cuspidate-leaved windberry. See வாயுவிளங்கம், 1. (மலை.)

விளங்கவை-த்தல் viḷaṅka-vai-, *v. tr.* <விளங்கு-+. 1. To make clear; தெளிவாக்குதல். 2. See விளக்கேற்றிவை-. 3. To make illustrious or renowned; புகழ்பெறச் செய்தல் பெற்ற வயிற்றை விளங்கவைக்க வேண்டும்.

விளங்கவைத்தல் viḷaṅka-vaittal, *n.* <விளங்கவை-. Perspicuity, clearness of expression, one of ten *nūl-aḻaku*, q.v.; நூலழகு பத்தனுள் கூறப்புகும் பொருளைத் தெளியச்சொல்லுவது. (நன். 13.)

விளங்கிப்பேர் viḷaṅki-p-pēr, *n.* <விளங்கு-+. History of lands, fields, etc., given in the old settlement register; முதற் பைசல் கணக்கிலுள்ள நிலவிவரணச் சரித்திரம். *Loc.*

விளங்கிழை viḷaṅkiḻai, *n.* <id.+இழை. Woman, as wearing bright jewels; பெண். விளங்கிழை தமியளானள் (சீவக. 303).

விளங்கு¹-தல் viḷaṅku-, 5 *v.* [T. *veluṅgu*, K. *belagu*, M. *viḷaṅṅuga.*] *intr.* 1. To shine; பிரகாசித்தல். பகல்விளங்குதியாற் பல்கதிர் விரித்தே (புறநா. 8). 2. To become renowned, illustrious; பிரசித்தமாதல். அவன் பெயர் எங்கும்

விளங்கும். 3. To be polished; பளபளப்பாதல். 4. To be clear or plain; தெளிவாதல். நீ சொல்வது எனக்கு விளங்கவில்லை. 5. To be prosperous, successful; விருத்தியாதல். அந்தக்குடி விளங்க வில்லை. 6. To excel, become great; மிகுதல். திறல் விளங்கு தோத்தானை (பு. வெ. 4, 8).—*tr*. To know; அறிதல். (J.)

விளங்கு[2] viḷaṅku, *n*. Lesser galangal. See சிற்றரத்தை, 1. (மலை.)

விளங்குதாரணத்ததாகுதல் viḷaṅku-tāraṇattatākutal, *n*. <விளங்கு- + உதாரணம + ஆகு- +. Being furnished with appropriate illustrations, one of ten *nūl-aḻaku*, q.v.; நூலழகு பத்த னுள் மேற்கோள் எளிதாக விளங்குவது. (நன். 13.)

விளங்குதிங்கள் viḷaṅku-tiṅkaḷ, *n*. <id. +. Venus, as the shining planet; சுக்கிரன். (திவா.)

விளங்குபொன் viḷaṅku-poṉ, *n*. <id. +. Metallic mirror; உலோகத்தாற் செய்த கண்ணாடி. விளங்குபொன்னெறிந்த நலங்கிளர் பலகையொடு (புறநா. 15).

விளங்கொளி viḷaṅkoḷi, *n*. <id. + ஒளி[1]. Arhat, as the shining light; அருகன். (திவா.)

விளச்சீர் viḷa-c-cīr, *n*. <விளம்[2] +. (Pros.) Foot of two *acai* ending in *nirai*, either *kū-viḷam*-◡◡ or *karu-viḷam* ◡◡ ◡◡; நிரையசையில் முடியும் இயற்சீர். (யாப. வி.)

விளத்தாரு viḷattāru, *n*. Sea-side Indian oak; வெண்கடம்பு. (மலை.)

விளத்து[1]-தல் viḷattu-, 5 *v. tr*. <வளர்த்து-. To explain; விவரித்தல். (W.)

விளத்து[2]-தல் viḷattu-, 5 *v. tr*. <விலத்து-. To except; to exclude; விலக்குதல். (யாழ். அக.)

விளப்பு viḷappu, *n*. <விளம்பு-. 1. Saying; சொல்லுகை. 2. Becoming famous; பிரசித்த மாகை. தனிச்சிறையில் விளப்புற்ற (திவ். திருவாய். 4, 8, 5).

விளம்[1] viḷam, *n*. perh. *viṣa*. *Loc*. 1. Long-felt hatred, spite; அடம். 2. Self-conceit; அகங்காரம்.

விளம்[2] viḷam, *n*. [K. *beḷala*.] 1. Wood-apple. See விளா[1]. (அரு. நி.) 2. (Pros.) Symbolic expression for *nirai* (◡◡) ending an *iyaṟ-cīr*; இயற்சீரின் இறுதிநிரை வாய்பாடு. விள முன் னேரும.

விளம்பகதி viḷampa-kati, *n*. <*vilamba* +. See விளம்பம்.

விளம்பம் viḷampam, *n*. <*vilamba*. 1. Slowness, tardiness, delay; தாமதம். (ஈடு, 6, 1, பிர.) (சூடா.) 2. (Mus.) A variety of *ilayai* indicating a slow pace; இலயவகை. (பரத. தாள. 51.)

விளம்பரம் viḷamparam, *n*. prob. விளம்பு-. [M. *viḷambaram*.] Advertisement, proclamation, notice, publication; அறிக்கை. *Colloq*.

விளம்பனம்[1] viḷampaṉam, *n*. <*vilambana*. See விளம்பம், 1. (சூடா.)

விளம்பனம்[2] viḷampaṉam, *n*. <*viḍambana*. Imitation of ancient customs and manners, with acting and singing; ஆதிகாலத்து மக்களின் வழக்க வொழுக்கம் முதலியவற்றை ஆடியும் பாடியுங் காட்டுகை. (திவா.) (யாப. வி. பக். 526.)

விளம்பி[1] viḷampi, *n*. <விளம்பு-. Toddy, as causing unguarded utterance; கள். (திவா.)

விளம்பி[2] viḷampi, *n*. <*Vilambin*. The 32nd year of the Jupiter Cycle; ஆண்டு அறுபத னுள் முப்பத்திரண்டாவது.

விளம்பி[3]-த்தல் viḷampi-, 11 *v. intr*. <விளம்பம். To delay, procrastinate; தாமதித்தல். நீங்கள மந்தாயுசுககளாகையாலே விளம்பிக்க வொண்ணாது (ஈடு, 1, 3, 11).

விளம்பிதம் viḷampitam, *n*. <*vilambita*. 1. Slowness; தாமதம். (நாமதீப. 562.) 2. (Mus.) See விளம்பம், 2. விளம்பித நெறிவழாமல் . . . ஆடும் (கம்பரா. ஊர்தே. 106).

விளம்பிநாகனார் viḷampinākaṉār, *n*. A poet, author of Nāṉ-maṇi-k-kaṭikai; நான் மணிக்கடிகை இயற்றிய ஆசிரியர்.

விளம்பு[1]-தல் viḷampu-, 5 *v. tr*. [M. *viḷambuga*.] 1. To speak, say; சொல்லுதல். உற்றது விளம்ப லுற்றேன் (சீவக. 1694). 2. To proclaim openly, make public, reveal; வெளிப் படக் கூறுதல். உடையது விளம்பேல் (ஆத்திசூடி). 3. To spread abroad; பரப்புதல். (பிங்.) 4. To trace letters over the model of a copy; பழுதற் காகப் பிள்ளைகள் எழுத்தின்மே லெழுதுதல். *Loc*. 5. To serve food; பரிமாறுதல். (நாமதீப. 711.) 6. To inquire; விசாரித்தல். (W.)

விளம்பு[2] viḷampu, *n*. <விளம்பு-. Word, speech; சொல். (நன். 458.)

விளமேலடி viḷamēlaṭi, *n*. perh. விளை[3] + மேல் + அடு[1]-. Assessment levied on crops other than paddy; நெல் நீங்கிய மற்றைய தானிய விளை வித்து இடும் வரி. *Loc*.

விளர்[1]-தல் viḷar-, 4 *v. intr*. [K. *beḷar*, M. *viḷarka*.] 1. To become pale; to whiten; வெளுத்தல். விளரும் விழுமெழும் (திருக்கோ. 193). 2. To be imperfect; to be immature; முதிரா திருத்தல். விளரா வன்பின் (விநாயகபு. 52, 18).

விளர்²-த்தல் viḷar-, *11 v. intr.* 1. To become white or pale; வெளுத்தல். *விளர்த்த வாளினை அசைத்து* (பு. வெ. 7, 21, உரை). 2. To feel ashamed; வெட்குதல். *மேய கலைப்பெண விளர்ப்ப* (பிரபுலிங். மாயைபூசை. 50).

விளர்³ viḷar, *n.* <விளர்¹-. [K. *beḷar*, M. *viḷar*.] 1. Whiteness; வெண்மை. *கொழுங்கொடி விளர்க்காய் கோட்பத மாக* (புறநா. 120). 2. Fat; நிணம். (பிங்.) 3. Fertility; செழுமை. (W.) 4. Tenderness; இளமை. (பிங்.) 5. That which is immature or imperfect; முற்றாதது. *விளரில் பூசனை* (திருவானைக். குபேர. 2). 6. Straightness; நேர்மை. *விளர்நிறீஇ* (கல்லா. 8). 7. Great anger, wrath; பெருஞ்சினம். (அரு. நி.) 8. Hatred; வெறுப்பு. (அக. நி.)

விளர்⁴-தல் viḷar-, *5 v. tr.* cf. விளம்பு-. To call; கூப்பிடுதல். *வையமுற்றும் விளரியதே* (திவ். இயற். திருவிருத். 82).

விளர்⁵ viḷar, *n.* cf. விளார். Twig. See வளார். (அக. நி.)

விளர்ப்பு viḷarppu, *n.* <விளர்¹-. Whiteness; வெளுப்பு. (யாழ். அக.)

விளரி¹ viḷari, *n.* prob. விளர்³. 1. Tenderness; இளமை. (பிங்.) 2. Great desire; மிக்க வேட்கை. (பிங்.) 3. Abundance; மிகுதி. (W.)

விளரி² viḷari, *n.* prob. விளர்⁴-. 1. (Mus.) The sixth note of the gamut, one of seven *icai*, q.v.; ஏழிசையு ளொன்று. (திவா.) 2. (Mus.) A melody-type of the *neytal* class, suited for mourning; நெய்தற்குரிய இரங்கற்பண். *விளரி யுறுதரு தீந்தொடை நினையா* (புறநா. 260). 3. Yāḻ; யாழ். (அக. நி.)

விளரி³ viḷari, *n.* Wood-apple. See விளா¹. (அரு. நி.)

விளரிப்பாலை viḷari-p-pālai, *n.* <விளரி² + பாலை¹. (Mus.) A melody-type of *pālai* class; பாலைப்பண்களு ளொன்று. (பிங்.)

விளவு¹ viḷavu, *n.* Eagle-wood. See அகில். (அரு. நி.)

விளவு²-தல் viḷavu-, *5 v. tr.* See விளாவு¹-. (W.)

விளவு³ viḷavu, *n.* See விளா¹. (பிங்.)

விளவு⁴ viḷavu, *n.* <விடவு. cf. பிளவு. Cleft, crack; நிலம் முதலியவற்றிற் பிளப்பு. (பிங்.)

விளவு⁵-தல் viḷavu-, *5 v. intr.* <விளவு⁴. To split; to burst asunder; கமராதல். (W.)

விளவு⁶ viḷavu, *n.* perh. விளர்¹-. Youth; இளமை. (பிங்.)

விளா¹ viḷā, *n.* cf. விள¹. [T. *velaga*, M. *viḷā*.] Wood-apple, m. tr., *Feronia elephantum*; மரவகை. (பு. வெ. 10, சிறப். 1, உரை.)

விளா² viḷā, *n.* <விளாவு²-. A turn or round in ploughing; உழவில் வருஞ் சுற்று. *விளாக் கொண்டு உழும் உழவா* (சிலப். 27, 230, அரும.).

விளாக்குலைகொள்(ளு)-தல் viḷā-k-kulai-koḷ-, *v. tr.* <வளா¹ + குலை +. 1. To overspread, pervade; வியாபித்தல். *ஒரு திருவடியே பூமிப்பரப்படங்கலும் போய் விளாக்குலைகொண்டது* (திவ். இயற். திருவிருத். 58, வ்யா. பக். 321). 2. To swallow; உட்கொள்ளுதல். *ஸத்தைய குணங்களை விளாக்குலைகொள்ளும்படியான பாடல்கள்* (ஈடு, 2, 7, 6).

விளாக்கை-த்தல் viḷākkai-, *v. tr.* <விளா² + கை³-. To plough; உழுதல். *நுகமின்றி விளாக் கைத்து* (திருவாச. 26, 8).

விளாக்கொள்(ளு)-தல் viḷā-k-koḷ-, *v. tr.* <வளா¹ +. To spread, pervade; வியாபித்தல். *தாவியன் றுலகமெல்லாந் தலை விளாக்கொண்ட வெந்தாய்* (திவ். திருமாலை, 35).

விஷ்ணு viṣṇu, n. <*Viṣṇu*. 1. Viṣṇu, one of the Hindu triad, regarded as the Preserver; திருமால். *விஷ்ணு வடிவான ஞானகுருவே* (*தாயு. கருணா. 5*). 2. Author of a treatise on Hindu law; தருமநூல் செய்தாரில் ஒருவர்.

விஷ்ணுக்கிரகம் viṣṇu-k-kirakam, n. <id.+*gṛha*. Viṣṇu temple; திருமால் கோயில். *எமமூப புவனிமாணிக்கதது விஷ்ணுக்கிரகத்துப் பெருமானடிகள்* (S. I. I. iii, 3).

விஷ்ணுக்கிராந்தி viṣṇu-k-kirānti, n. <id.+*krānti*. A medicinal plant. See விட்டுணுக்கிராந்தி.

விஷ்ணுகரந்தை viṣṇu-karantai, n. <id. +. Indian globe-thistle, seed basil, *Sphaeranthus indicus;* செடிவகை.

விஷ்ணுகாந்தி viṣṇu-kānti, n. <id.+*krānti*. A medicinal plant. See விட்டுணுக்கிராந்தி. (*புட்பவிதி, 5.*)

விஷ்ணுசித்தர் viṣṇu-cittar, n. <*Viṣṇu-citta*. Periyāḻvār. See பெரியாழ்வார்.

விஷ்ணுதீபம் viṣṇu-tīpam, n <விஷ்ணு +. The *tiru-k-kārttikai* festival observed by Vaiṣṇavas; வைஷ்ணவர்கள் கொண்டாடுந் திருக்கார்த்திகைப்பண்டிகை.

விஷ்ணுபதி viṣṇu-pati, n. <*viṣṇu-pati*. An auspicious time; புண்ணியகால விசேடம். (*பஞ்.*)

விஷ்ணுபுராணம் viṣṇu-purāṇam, n. <*Viṣṇu*+. A chief Purāṇa, one of *patiṉeṇ-purāṇam*, q.v.; பதினெண்புராணத் தொன்று.

விஷ்வக்ஸேனர் viṣvaksēṉar, n. <*Viṣvaksēna*. Cēṉai-mutaliyār, the chief of Viṣṇu's hosts; திருமாலின் கணத்தலைவரான சேனைமுதலியார். (*தக்கயாகப். பக். 322.*)

விஷ்வம் viṣvam, n. See விஷுவம். (W.)

விஷக்கடி viṣa-k-kaṭi, n. <விஷம்+கடி[2]. 1. Poisonous bite, bite of venomous reptiles or

animals; விஷப்பிராணிகளால் தீண்டப்படுகை. 2. Serious trouble; பெருந்துன்பம். எனக்கு ஒரு பெரிய விஷக்கடியாயிற்றே.

விஷக்கடிவேளை viṣakkaṭi-vēḷai, n. <விஷக்கடி+. (Astrol.) Inauspicious time; தீயகாலம். (பஞ்.)

விஷக்கண் viṣa-k-kaṇ, n. <விஷம்+. Evil eye; கேடுபயக்கும் பார்வையுள்ள கண்.

விஷக்கல் viṣa-k-kal, n. <id.+. 1. A stone supposed to absorb poison; விஷத்தை யெடுப்பதாகக் கருதப்படுங் கல். (W.) 2. Poisonous stone that causes pain when it pricks the foot; காலிற் படும்போது நோவுண்டாக்கும் விஷமுள்ள கல். *Colloq.*

விஷக்காய்ச்சல் viṣa-k-kāyccal, n. <id. +. 1. Enteric fever, typhoid; சன்னிபாத சுரம். 2. Pestilential fever; சுரநோய்வகை. (W.)

விஷக்காற்று viṣa-k-kāṟṟu, n. <id.+. 1. Poisonous wind; contaminated air; விஷத் தன்மை பொருந்திய காற்று. 2. Northerly wind; வாடைக்காற்று. *Loc.*

விஷகடி viṣa-kaṭi, n. <*viṣa*+கடி². See விஷக்கடி. (W.)

விஷகடிகை viṣa-kaṭikai, n. <id.+ கடிகை². (Astrol.) Inauspicious period in the duration of a *nakṣatra;* நக்ஷத்திரத் தியாச்சியம். (விதான. குணகுண. 25, உரை.)

விஷகிருமிநியாயம் viṣa-kirumi-niyā-yam, n. <id.+*kṛmi*+*nyāya*. Nyāya of the worm bred in poison, illustrating the principle that an evil to which a person is accustomed will not appear to him as an evil; விஷத்திலுண்டாகும் புழுப்போல் தீயதிற் பழகுவோர்க்கு அது தீங்காகத் தோன்றாமை குறிக்கும் நெறி.

விஷங்கொல்லி viṣaṅ-kolli, n. <விஷம்+ கொல்-. A herb which acts as an antidote to poison; விஷங்களுக்கு மருந்தாக உதவும் பூடுவகை. (W.)

விஷசுரம் viṣa-curam, n. <*viṣa*+*jvara*. 1. See விஷக்காய்ச்சல். (சீவரட். 33.) 2. Rinderpest; மாட்டுச்சுரம். *Loc.*

விஷதந்தம் viṣa-tantam, n. <id. +தந்தம்¹. See விஷப்பல். (தக்கயாகப். 155, உரை.)

விஷதோஷம் viṣa-tōṣam, n. <id.+. Illness of child, attributed to contact with a person who has not bathed after sexual union and is therefore unclean; புணர்ச்சிக்குப்பின் நீராடாதவர் தொடுவதால் உண்டாவதாகக் கருதப்படும் குழந்தைநோய். (சீவரட்.)

விஷந்திரும்பல் viṣan-tirumpal, n. <விஷம+திரும்பு-. Counteracting a poison; விஷம் போக்குகை. (W.)

விஷந்தீண்டல் viṣan-tīṇṭal, n. <id.+ தீண்டு-. Poisonous bite, as of a snake; பாம்பு முதலிய விஷஜந்துக்களின் கடி. (C. G.)

விஷநட்சத்திரம் viṣa-naṭcattiram, n. <*viṣa*+. (Astrol.) The 5th, 11th and 13th *nakṣatras* counted from the *nakṣatra* occupied by Rāhu; இராகுநின்ற நட்சத்திரத்திற்கு ஐந்து பதினொன்று பதின்மூன்றாவதா நட்சத்திரங்கள். (விதான. குணகுண. 41, உரை.)

விஷநாக்கு viṣa-nākku, n <விஷம்+. Evil tongue, as of a person whose croaking comes true; தீமைவிளைக்கும் சொற் பயிலும் நா. *Loc.*

விஷநாபி viṣanāpi, n. <*viṣa-nābhi*. Nepal aconite. See வச்சநாபி, 1.

விஷநீர் viṣa-nīr, n. <விஷம்+நீர்¹. Malignant humours causing swelling, etc.; தேகத்துள்ள துர்நீர். (W.)

விஷநீரேற்றம் viṣanīr-ēṟṟam, n. <விஷநீர்+. Dropsy; உடல்வீக்க நோய். (W.)

விஷப்பல் viṣa-p-pal, n. <விஷம்+. 1. Poisonous tooth; விஷமுள்ள பல். 2. See நச்சுப்பல், 2.

விஷப்பனி viṣa-p-paṉi, n. <id.+. Dew that is injurious to health; நோயை யுண்டாக்கக் கூடிய பனி.

விஷப்பூச்சி viṣa-p-pūcci, n. <id.+. Poisonous insect; விஷமுள்ள செந்து.

விஷபரீட்சை viṣa-parīṭcai, n. <*viṣa*+. 1. Examining or testing the presence of poison; விஷங்கலந்திருப்பதை யாராய்கை. 2. Testing the strength of a poison, as by letting a snake bite one; விஷத்தின் சக்தியைப் பரீட்சிக்கை.

விஷபாகம் viṣa-pākam, n. <id.+*pāka*. Sudden swelling of body; திடீரென்று காணும் உடல் வீக்கம். (W.)

விஷபாண்டு viṣa-pāṇṭu, n. <id.+. Dropsy; உடல்வீக்கநோய். (பைஷஜ. 263.)

விஷபானம் viṣa-pāṉam, n. <id.+. Taking poison; விஷத்தை யுட்கொள்ளுகை.

விஷபேதி viṣa-pēti, n. <id.+. Cholera; வாந்திபேதி. (W.)

விஷம் viṣam, n. <*viṣa*. 1. Poison; நஞ்சு. 2. That which is injurious or destructive; கேடு

விளைப்பது. 3. (Astrol.) See விஷநட்சத்திரம். (விதான. குணுகுண. 41, உரை.)

விஷமக்கணக்கு visama-k-kaṇakku, n. <விஷமம் +. 1. Difficult problem; தீர்த்தற் கரியதான விஷயம். (W.) 2. False accounts, as improper; பொய்க்கணக்கு. *Colloq.*

விஷமக்கொடுக்கு visama-k-koṭukku, n. <id.+. Highly mischievous person; கடுஞ் சேட்டை புரிபவன். *Colloq.*

விஷமகவி visama-kavi, n. <*visama*+. (Rhet.) Stanza in which the sense is obscurely expressed; கூறும் பொருளை நேர்மையாகக் கூறாத செய்யுள். (தக்கயாகப. 156, உரை.)

விஷமகேந்திரம் visama-kēntiram, n. <id.+. (Astrol.) Eccentricity, as of an orbit; கிரகங்களின் விஷமமான மார்க்கம். (C. G.)

விஷமசாகசம் visama-cākacam, n. <*visama-sāhasa*. Temerity, அசட்டுத்தைரியம். (யாழ். அக.)

விஷமசீததோஷம் visama-cīta-tōṣam, n. <*visama*+*śīta*+. A complication arising in fevers attended with shivering; நடுக்கத்தோடு கூடிய சுரதோஷவகை. (சீவரட். 31.)

விஷமசுரம் visama-curam, n. <id.+ சுரம்[1]. See விஷமஜ்வரம். (சீவரட். 31.)

விஷமத்திரிகோணம் visama-t-tiri-kōṇam, n. <விஷமம்+. Scalene triangle; மூன்று பக்கங்களும் வெவ்வேறளவினவாக அமையும் முக்கோணம். (பாலகணி. 50.)

விஷமதோஷம் visama-tōṣam, n. <*visama*+. A complication arising in fevers; சுரத்திலுண்டாந் தோஷவகை. (சீவரட். 30.)

விஷமந்திரன் visa-mantiran, n. <*visa*+ *mantra*. Person of the Kuṟava caste; குறவன். (யாழ். அக.)

விஷமப்பேச்சு visama-p-pēccu, n. <விஷமம்+. Mischievous talk; கிருத்திரிமமான வார்த்தை.

விஷமம் visamam, n. <*visama*. 1. Unevenness, coarseness, roughness; கரடுமுரடு. 2. Irregularity; நேர்மையின்மை. 3. Mischief; இடக்குச்செயல். 4. Wicked deed; துஷ்டச் செயல். *ஆமை . . . கடல்புக் குறங்கினதன்றி விஷமஞ் செய்ததில்லையன்றே* (தக்கயாகப். 630, உரை).

விஷமயதி visama-yati, n. <id.+. (Mus.) A kind of *yati*; யதியு ளொன்று. (பரத. தாள. 54.)

விஷமவிபாகம் visama-vipākam, n. <id.+*vibhāga*. Unequal division; சரியற்ற பங்கு. (யாழ். அக.)

விஷமவெடுப்பு visama-v-etuppu, n. <விஷமம்+. (Mus.) One of the four varieties of *etuppu*, q.v., in which *atīta-v-etuppu*, *anā-kata-v-etuppu* and *cama-v-etuppu* all occur; எடுப்பு நான்கனுள் அதீதவெடுப்பு அநாகதவெடுப்பு சமவெடுப்பு என்ற மூன்று எடுப்பும் கலந்துவரும் தாளவெடுப்புவகை.

விஷமன் visaman, n. <*visama*. 1. Wicked person; துஷ்டன். (W.) 2. Mischievous person; சேஷ்டை செய்பவன். 3. See விஷமம், 4.

விஷமஜ்வரம் visama-jvaram, n <id.+. Malignant fever; தோஷமுள்ள சுரநோய்வகை. (சார்ங்க. 38, கீழ்க்குறிப்பு.)

விஷமஸ்ருஷ்டி visama-sruṣṭi, n. <id. +*sṛṣṭi*. Multiform, diverse creation; ஒன்றைப் போலொன்று இல்லாத படைப்பு. (அஷ்டாதச. தத்வத்ரய. சித. 53.)

விஷமாக்கினி visamākkini, n. <id.+ *agni*. A kind of *utarākkini*, causing belated digestion; உண்ட அன்னபானுதிகளை உடனே தகிக்காது காலந்தாமதித்துத் தகிக்கும் உதராக்கினிவகை. (சீவரட். 15.)

விஷமாசனம் visamācanam, n. <id.+ *aśana*. Indigestible food; சீரணமாகாத வுணவு. (யாழ். அக.)

விஷமாட்சன் visamāṭcan, n. <*Viṣa-mākṣa*. Śiva; சிவபிரான். (யாழ். அக.)

விஷமாந்தம் visa-māntam, n. <விஷம்+. A kind of *māntam*, a disease peculiar to children; மாந்தநோய்வகை. (பாலவா. 37, 38.)

விஷமாயுதன் visamāyutan, n. <*viṣa-māyudha*. Kāma, the god of love; காமதேவன். (யாழ். அக.)

விஷமி[1]-த்தல் visami-, 11 v. intr. <விஷமம். 1. To be mischievous or troublesome; உபத்திரவஞ் செய்தல். (W.) 2. To bring about enmity; பகைமூட்டுதல். 3. To take a turn for the bad; to turn adverse, as pulse; நாடி முதலியன மாறுபடுதல். 4. To turn into poison; விஷ ரூபமாய் மாறுதல். (W.)

விஷமி[2] visami, n. <விஷமம். 1. See விஷமன், 1, 2. *Colloq.* 2. One who bears malice or hatred; வன்மங்கொண்டுள்ளவன். (யாழ். அக.)

விஷமி[3] visami, n. Fem. of விஷமன். 1. Woman who does harm to others; wicked

woman; பிறருக்குத் தீங்கு செய்பவள். *Loc.* 2. Mischievous woman; சேஷ்டை செய்பவள்.

விஷமிறக்கு-தல் visam-irakku-, *v. intr.* <விஷம்+. To remove or counteract poison; விஷத்தைப் போக்குதல். (W.)

விஷமுஷ்டி visamutti, *n.* <*viṣa-muṣṭi.* Strychnine-tree. See எட்டி[1]. (மலை.)

விஷமூங்கில் viṣa-mūṅkil, *n.* <விஷம்+. Poison lily, m. sh., *Crinum asiaticum;* செடி வகை. (பதார்த்த. 582.)

விஷமேற்று-தல் visam-ēṟṟu-, *v. tr.* <id.+. (W.) 1. To cause nullified poison to spread again through the system, by sorcery or magic; உடலிலிருந்து இறங்கின விஷத்தை மாய வித்தையால் மறுபடி பரவுமாறு செய்தல். 2. To infuriate; கடுங்கோப மூட்டுதல்.

விஷயக்காட்சி visaya-k-kāṭci, *n.* <விஷயம்+. Perception of objects by the senses; புலனறிவு. (W.)

விஷயசூசிகை viṣaya-cūcikai, *n.* <*viṣaya* + *sūcikā.* Subject index; table of contents of a treatise; நூற்பொருட் குறிப்பு. *Mod.*

விஷயஞானம் visaya-ñāṉam, *n.* <id.+. 1. Knowledge of worldly affairs; உலகவறிவு. *Loc.* 2. Knowledge of things perceptible to the senses; ஐம்புல வறிவு. (W.) 3. Knowledge of the subject-matter of a treatise; நூற்பொருளின் அறிவு.

விஷயதானம் viṣaya-tāṉam, *n.* <id.+ *dāna.* Contribution of articles to journals; பத்திரிகைகளுக்கு வியாசமெழுதித் தருகை. *Mod.*

விஷயபரித்தியாகம் visaya-parittiyākam, *n.* <id.+. Controlling the mind without allowing it to wander; புறத்தே மனஞ் செல்லாவண்ணம் ஒடுக்குகை. (W.)

விஷயம் viṣayam, *n.* <*viṣaya.* 1. Affair, matter. See விடயம்[1], 1. 2. Sense; புலன். 3. Object of sense; ஐம்பொறிகளாலறியும் பொருள். 4. Subject-matter, topic. See விடயம்[1], 4. *விஷய நியமமே யுள்ளது* (ஸ்ரீவசன. 33). 5. Cause. See விடயம்[1], 5. 6. Territory, region, country; தேசம். *பதினெண் விஷயத்தாரும்* (S. I. I. iv, 399). 7. That which pertains to a thing; ஒன்றுக்கு உரித்தானது. *இது இராசாங்க விஷயமானது.* 8. That which is peculiar or characteristic; சிறப்பியல்பாகவுள்ளது. (W.) 9. Subject, hero or heroine, as of a story; நாயகத்வம். *இந்தக் கதைக்கு விஷயம் யார்?* (W.) 10. Sexual pleasure. See விடயம்[1], 8.

விஷயவஞ்ஞானம் visaya-v-aññāṉam, *n.* <விஷயம்+. Ignorance; அறியாமை. (W.)

விஷயவாசனை visaya-vācaṉai, *n.* <id.+. Attachment to worldly things; உலகப்பற்று.

விஷயவாஞ்சை visaya-vāñcai, *n.* <id. +. Love of sensual pleasure; சிற்றின்பத்திற் பிரியம். (W.)

விஷயி-த்தல் viṣayi-, 11 *v. tr.* <id. To apprehend through the senses. See விடயி-.

விஷவாதகரப்பன் viṣavāta-karappaṉ, *n.* <*viṣa*+*vāta*+. A kind of *karappāṉ.* See விடவாதகரப்பன். (யாழ். அக.)

விஷவிருட்சநியாயம் viṣa-viruṭca-niyāyam, *n.* <id.+*vṛkṣa*+. Nyāya of the poison tree, illustrating the principle that a noxious object should not be destroyed by its producer, even as a poisonous tree ought not to be cut down by the person who reared it; தாம் வளர்த்தது நச்சுமரமாயினும் அதனை வெட்டாமைபோலத் தான் ஆக்கிய தோன்றை அழிக்கக்கூடாதென்பதைக் குறிக்கும் நெறி.

விஷவிருத்தி viṣa-virutti, *n.* <id.+ விருத்தி[1]. Profession of a poison-doctor; விஷத்தை நீக்கும் வைத்தியத் தொழில். *விஷவிருத்தி நிலம் ஒருமா* (S. I. I. v, 260).

விஷவைத்தியன் viṣa-vaittiyaṉ, *n.* <id. +. Poison-doctor; விடத்தை நீக்கும் மருத்துவன்.

விஷஸ்தானம் viṣa-stāṉam, *n.* <id.+. (Erot.) Parts in a woman's body supposed to be poisonous at specified periods, and therefore not conducive to sexual enjoyment; போக சுகத்தைக் கெடுக்கக்கூடிய விஷம் குறித்த காலங்களிற் றங்குவதாகக் கருதப்படும் மகளிர் அவயவம். *அறிநது விஷஸ்தான மகற்றி* (விறலிவிடு. 548).

விஷாக்கினி viṣākkiṉi, *n.* <id.+*agni.* Poison, considered as fire; விஷமாகிய நெருப்பு. *ஆலகால விஷாக்கினி* (தக்கயாகப். 67, உரை).

விஷாதம் viṣātam, *n.* <*viṣāda.* Sorrow, grief; துக்கம். (சி. சி. 2, 80, மறைஞா.)

விஷாரி viṣāri, *n.* <*viṣāri.* 1. Antidote to poison; விஷத்தைப் போக்கும் மருந்து. (பதார்த்த. 1256.) 2. See விஷவைத்தியன்.

விஷாணி viṣāṇi, *n.* <*vṛṣāṇī.* Square spurge. See சதுரக்கள்ளி. (தைலவ.)

விஷு[1] viṣu, *n.* <*viṣu.* See விஷுவம். *சைத்ரவிஷு.* (பஞ்.)

விஷு[2] viṣu, *n.* <*vṛṣa.* The 15th year of the Jupiter cycle; ஆண்டு அறுபதனுள் பதினைந்தாவது.

விஷு-சங்கிரமணம் visu-caṅkiramaṇam, n. <visu+. See விஷு-புண்ணியகாலம். (C. G.)

விஷு-புண்ணியகாலம் visu-puṇṇiya-kālam, n. <id.+. (Astron.) The time of the sun's entrance into either of the equinoctial signs Aries and Libra; மேஷம் அல்லது துலாத்தில் சூரியன் பிரவேசிக்குங் காலம். (பஞ்.)

விஷுவம் visuvam, n. <visuva. Equinox See சமராத்திரம்.

விஷூசி visūci, n. <visūcī. Cholera; விஷபேதி. *Loc.*

விஸ்தரி-த்தல் vistari-, 11 v. tr. <vistara. 1. To enlarge, amplify, elaborate; பெருக்குதல். இராகத்தை விஸ்தரித்துப் பாடினான். 2. To expatiate upon; விரித்துப்பேசுதல். 3. To examine, as a witness; சாட்சியாக விசாரித்தல். *Nāñ.*

விஸ்தரிப்பு vistarippu, n <விஸ்தரி-. 1. Amplification, elaboration; பெருக்குகை. 2. Expatiation; விரித்துப்பேசுகை. 3. Examination of a witness; சாட்சி விசாரிக்கை. *Nāñ.*

விஸ்தாரகுமாஸ்தா vistāra-kumāstā, n. <விஸ்தாரம்+. Court-clerk who assists in examining witnesses; கோர்ட்டில் சாட்சி விசாரணை நடத்த உதவிபுரியும் குமாஸ்தா. *Nāñ.*

விஸ்தாரம் vistāram, n. <vistāra. Expansiveness, extensiveness. See வித்தாரம், 1.

விஸ்தாரி vistāri, n. Learned person. See வித்தாரி. (யாழ். அக.)

விஸ்தி visti, n. Partition. See வித்தி[1].

விஸ்தீரணம் vistīraṇam, n. <vi-stīrṇa. 1. Breadth; விசாலம். 2. Area; பரப்பு.

விஸ்புரமுத்திரை vispura-muttirai, n. See விற்புரமுத்திரை. (செந். x, 424.)

விஸ்போடம் vispōṭam, n. <vi-sphōṭa. Boil; பிளவை. (சீவரட். 309.)

விஸ்மிருதி vismiruti, n. <vi-smṛti. 1. Forgetfulness; மறதி. 2. Madness; பைத்தியம்.

விஸர்க்கம் visarkkam, n. <vi-sarga. See விசர்க்கம்.

விஸர்ஜ்ஜனம் visarjjaṉam, n. <vi-sarjana. See விசர்ச்சனம். கங்கண விஸர்ஜ்ஜநம்.

விக்ஷேபம் vikṣēpam, n. <vi-kṣēpa. 1. See விக்கேபம். 2. Mutation, change; திரிபு. செனித்த விக்ஷேப மன்றே (கைவல். தத். 53).

வீ

வீ[1] vī. The compound of வ் and ஈ.

வீ[2]-தல் vī-, 4 v. intr. prob. vī. 1. To perish; to cease; to disappear; அழிதல். வீயாச சிறப்பின் (புறநா. 15). 2. To die; சாதல். சிலைத்தெழுந்தார் வீந்தவிய (பு. வெ. 3, 7). 3. To leave; நீங்குதல். வினைபபகை வீயாது பின்சென றடும (குறள், 207). 4. To change; to deviate, as from one's course; மாறுதல். வானின் வீயாது சுரக்கும் (மலைபடு. 76).

வீ[3]-த்தல் vī-, 11 v. tr. Caus. of வீ[2]-. To destroy; அழித்தல். எழுய ருலகமும வீககின்றான் (கம்பரா. முதற்போ. 118).

வீ[4] vī, n. <வீ[2]-. 1. Ruin, destruction; அழிவு. வீகலந்த மஞ்ஞை போல் (சீவக. 1104). 2. Death; மரணம். (பிங்.) 3. Separation, removal; நீக்கம். (பிங்.) 4. Drooping; languishing; மடிவு. (பிங்.) 5. Flower; மலர். வீகமழ் நெடுஞ்சினை (புறநா. 36). 6. Pollen; மகரந்தம். பூவிணையின் வீயை (மேருமந். 1058).

வீ[5] vī, n. <vī. Bird; பறவை. (பிங்.)

வீக்கம்[1] vīkkam, n. <வீங்கு-. 1. Enlargement, swelling, inflammation; உடலுறுப்பு வீங்குகை. கால் வீக்கம். 2. Contusion, *Cellulitis;* புண் முதலியவற்றின் புடைப்பு. 3. Dropsy, *Oedema;* நீர்ச்சுரப்பால் உடல் வீங்கும் நோய். 4. Puffing of the limbs; தோள் முதலியன பூரிக்கை. (யாழ். அக.) 5. Abundance; மிகுதி. (W.) 6. Crowd; கூட்டம். விணபிளந் தேங்க வாரக்கும் வானர வீக்கம (கம்பரா. இராவண. கள. 26). 7. Greatness; பெருமை. விசயனும் வீக்கமற்றான் (சீவக. 2192). 8. Pride; கருவம். இலங்கைக் கோமான்றன்னை . . . வீக்கந் தவிர்த்த விரலார்போலும (தேவா. 56, 10). 9. Longing, hankering; ஆசை. (யாழ். அக.)

வீக்கம்[2] vīkkam, n. <வீக்கு[1]-. 1. Bond, tie; கட்டு. (சூடா.) 2. Trouble, obstacle; இடையூறு. வீக்கஞ் செயதாா தவத்தினுக்கு (திருவிளை. பன்றிக்குட்டி. முலை. 6). 3. Covering; packing; மூடுகை. (திவா.) 4. Tightness; இறுக்கம்.

வீக்கமிறங்குதல் vīkkam-iṟaṅkutal, n. <வீக்கம்[1]+. Subsiding of a swelling and its transition from the upper to the lower parts of the body; உடலின் மேற்பகுதியிலிருந்த வீக்கங் குறைந்து மெல்ல மெல்லக் கீழ்நோக்கி யிறங்குகை. (W.)

வீக்கு[1]-தல் vīkku-, 5 v. tr. 1. To tie up, bind; கட்டுதல். கச்சையும் வீக்கினன் (சீவக. 1836). 2. To control, restrain; அடக்குதல். புலன்கள் வீக்கியும் (கம்பரா. காட்சிப். 72). 3. To hinder;

தடுத்தல். உயிர்ப்பினை வீக்கி (பாகவத. 2, மாயவனிலை, 8). கொழும்புகை வீக்கி மாடந் திறந்திட (சீவக. 534). 4. To strike; அடித்தல். *Tinn.*

வீக்கு[2] vīkku, *n.* <வீக்கு[1]-. 1. Tying; கட்டுகை. போயாழ் . . . யாப்புறு புரிநாண் வீக்கு முதலவிழ (பெருங். உஞ்சைக். 52, 86) 2. Tightness; இறுகுகை. தானை வீக்கற விசித்து (சீவக. 1086). 3. Beating; அடிக்கை. *Tinn.*

வீக்கு[3]-**தல்** vīkku-, 5 *v. tr.* Caus. of வீங்கு-. 1. To fill; நிறைத்தல். 2. To urge, force out; வேகமுறச் செலுத்துதல். வீக்கினான் முரசை வெய்தா (சீவக. 2661).

வீக்கு[4] vīkku, *n.* <வீங்கு-. 1. Greatness; பெருமை. வீக்கறுத்து . . . வஞ்சமறுத் திடுகென்றான் (சீவக. 2207). 2. [T. *vīka.*] Abundance; மிகுதி. (பொரு. நி.) 3. A mode of calculation; ஓர் கணிதமுறை. (பொரு. நி.)

வீக்கு[5]-**தல்** vīkku-, 5 *v. tr.* Caus. of வீ[2]-. 1. To kill; உயிரைப் போக்குதல். வீக்கு . . . வெவ்விடத்தை (கம்பரா. இராவணன்வதை. 122). 2. To destroy, ruin; அழித்தல். (யாழ். அக.)

வீகம்[1] vīkam, *n.* 1. [T. *bīgamu*, K. *bīga*, M. *vīgam.*] Padlock; பூட்டு. (யாழ். அக.) 2. Ring; மோதிரம். (திவா.) 3. cf. வேகம். Rapidity; speed; விரைவு. இப்போது நீ யிருந்தாயாகில வீகமென் (ஈடு, 7, 6, அவ.).

வீகம்[2] vīkam, *n.* <*vīka.* (சங். அக.) 1. Wind; காற்று. 2. Bird; பட்சி.

வீகமுத்திரை vīka-muttirai, *n.* <வீகம்[1]+. Seal set on locked doors, especially of a temple; கோயிற்கதவை அடைத்து இடும் முத்திரை. *Loc.*

வீகாசம் vīkācam, *n.* (யாழ். அக.) 1. cf. *vīkāśa.* Pomp and show; ஆடம்பரம். 2. Solitude; தனிமை.

வீங்கல் vīṅkal, *n.* <வீங்கு-. 1. Abundance; plenty; மிகுதி. (பொரு. நி.) 2. Morbid desire, longing; பொருளைப் பெறும்பொருட்டு ஏக்கங் கொள்ளுகை. (W.) 3. Lean, emaciated person; இளைத்திருப்பவ-ன்-ள். *Loc.* 4. See வீங்கி, 1. வீங்க லிவன் (விறலிவிடு. 825). 5. Sleeping; தூங்குகை. (W.)

வீங்கி vīṅki, *n.* <id. 1. Person having morbid desires; ஒன்றன்மீது ஏக்கங் கொண்டிருப்பவ-ன்-ள். (யாழ். அக.) சோற்றுக்கு வீங்கி. 2. Marking-nut. See சேங்கொட்டை, 1. (மலை.)

வீங்கிநாரி vīṅki-nāri, *n.* <வீங்கி+நாரி[4]. Woman having morbid desires; ஒன்றன்மீது ஏக்கங் கொண்டிருப்பவள். பஞ்சைநாரி பணிகாரஞ் சுட்டாள், வீங்கிநாரி விசாரப்பட்டாள்.

வீங்கு-**தல்** vīṅku-, 5 *v. intr.* [K. *bīgu.*] 1. To increase in size; to become enlarged; பருத்தல். (நாமதீப. 710.) 2. To swell; பூரித்தல். மணந்தநாள் வீங்கிய தோள் (குறள், 1233). 3. To become morbidly inflamed and swollen; வீக்கமுறுதல். (பொரு. நி.) 4. To grow; வளர்தல். (அக. நி.) 5. To be copious or excessive; to increase; மிகுதல். வளம வீங்கு பெருக்கம் (பதிற்றுப். 24, 17). 6. To be close, crowded; நெருங்குதல். (சூடா.) 7. To become tight and pressing; இறுகுதல். வீங்கிறை தடக்கையின் (குறிஞ்சிப். 123). 8. To be taut and not slack; விறைப்பாய் நிற்றல். விளரூன் றின்ற வீங்குசிலை மறவர் (அகநா. 89, 10). 9. To go up; மேனோக்கிச் செல்லுதல். நாவிளிம்பு வீங்கி (தொல். எழுத். 96). 10. To become emaciated; மெலிதல். அவனை வீங்கலா யிருக்கிறான். 11. To have morbid desires; ஏக்கங்கொள்ளுதல். 12. To sleep; தூங்குதல். (யாழ். அக.)

வீங்குபுள் vīṅku-puḷ, *n.* <வீங்கு-+. See வீங்குபுள்தோஷம். (பாலவா. 69.)

வீங்குபுள்தோஷம் vīṅkupuḷ-tōṣam, *n.* <வீங்குபுள்+. A disease of children, attributed to the flight of certain birds overhead when they are taken outside the house at dusk, midnight or other inauspicious hour; அந்திநிசி முதலிய அகாலங்களில் சிசுக்களை வீட்டுக்கு வெளியில் எடுத்துச் செல்லுகையில் சில பறவைகளின் நிழல் படுவதால் உண்டாவதாகக் கருதப்படும் நோய் வகை. (பாலவா. 71.)

வீங்கை vīṅkai, *n.* <*viṅkhā.* (யாழ். அக.) 1. A movement; ஒருவகைச் சலனம். 2. A mode of dancing; ஆடல்வகை. 3. A pace of a horse; குதிரை நடைவகை.

வீச்சம் vīccam, *n.* <வீசு-. Smell, effluvium; துர்நாற்றம்.

வீச்சரிவாள் vīccarivāḷ, *n.* <வீச்சு+. A kind of billhook; அரிவாள்வகை. *Loc.*

வீச்சாட்டம் vīccāṭṭam, *n.* <id.+ஆடு-. 1. Spaciousness, roominess; இடவிஸ்தாரம். (W.) 2. See வீச்சு, 5. 3. Good circumstances; நன்னிலைமை.

வீச்சு vīccu, *n.* <வீசு-. [K. *bīsu.*] 1. Throw, cast, as of a net; எறிகை. எழுந்த வீச்சுத் தவ்விட . . . வாளொடுந் தழுவிக் கொண்டான் (கம்பரா. அதிகா. 213). 2. Beat, flap, as of wings; சிறகடிக்கை. 3. Blow, stroke; அடி. 4. Swinging, oscillation; ஆட்டுகை. ஊஞ்சலை ஒரு வீச்சு வீசியாடினாள். 5. Length; நீளம். அந்தவீடு வீச்சா

யிருக்கிறது. 6. Quickness, rapidity; வேகம். அவன் வீச்சாக நடக்கிறான். 7. Sweep; glance; ஓட்டம். 8. A disease; நோய்வகை. (யாழ். அக.) 9. Strength; வலிமை. (W.) 10. Boastful speech, arrogant talk; இடம்பப்பேச்சு. யாரிடத்தில் இந்த வீச்சு. 11. Dry, screech as of an owl; ஆந்தை முதலியவற்றின் சத்தம். வாயசசிறு புதுப்புள வீச்சுறு விழுக்குரல் (பெருங். உஞ்சைக். 55, 89). 12. (Gram.) A vowel-sign of vowel-consonants; மெய்யெழுத்துக்கள் உயிரெழுத்தோடு சேர்ந்து வரும்போது கொள்ளும் ஒருவகைக் குறியீடு. 13. Curve; வளைவு. (சட்டட. நாமா. 16) 14. See விச்சம். *Loc.*

வீச்சுக்காரன் vīccu-k-kāraṉ, *n.* <வீச்சு + காரன்[1] 1. Person given to extravagance; அதிகச்செலவு செய்பவன். (யாழ். அக.) 2. Boastful person, braggart; பெருமை பேசுவோன்.

வீச்சுக்காரி vīccukkāri, *n.* Fem. of வீச்சுக்காரன். (யாழ். அக.) 1. Extravagant woman; செலவுகாரி. 2. Boastful woman; பெருமை பேசுபவள். 3. Prostitute; வேசி.

வீச்சுவலை vīccu-valai, *n.* <வீசு- +. [M. vīccuvala.] Casting-net; வலைவகை. *Loc.*

வீச்சுவீச்செனல் vīccu-vīcceṉal, *n.* Onom. expr. of screaming; கதறுதற்குறிப்பு.

வீச்சுவேணுமாய் vīccu-vēṇum-āy, *adv.* <வீச்சு + வியன்[1] +. With a free hand, liberally, as in measuring; அளவில் அதிகப்படியாய். வீச்சு வேணுமாய் அளக்க வேணடும.

வீச்சேணி vīccēṇi, *n.* <id. + ஏணி[1]. A kind of ladder. See வீசுகாலேணி. (சங். அக.)

வீசகணிதம் vīca-kaṇitam, *n.* <*bīja*+. Algebra. See பீசகணிதம்.

வீசகரி vīcakari, *n.* East Indian kino tree. வேங்கைமரம். (சங். அக.)

வீசகா vīcakā, *n.* See வீசகரி. (சங். அக.)

வீசகோசம் vīca-kōcam, *n.* <*bīja-kōśa.* (யாழ். அக.) 1. Seed; கொட்டை. 2. Pericarp of the lotus; தாமரைக்கொட்டை.

வீசம்[1] vīcam, *n.* cf. Pāli *vīsam* <*vim-śat.* [T. *vīsamu*, K. *vīsa.*] The fraction $\frac{1}{16}$; மாகாணி. (பிங்.)

வீசம்[2] vīcam, *n.* <*bīja.* 1. Seed, seed-grain; விதை. (பிங்.) 2. Root; மூலம். (யாழ். அக.) 3. Sprout; முளை. (இலக். அக.) 4. Semen; சுக்கிலம். (யாழ். அக.) 5. Mystic letter. See பீசாட்சரம். (யாழ். அக.) 6. Brain; மூளை. (சங். அக.) 7. Algebra. See பீசகணிதம். (யாழ். அக.) 8. Weight of a grain of paddy, used in weighing gold; நெல்லெடையாகிய நிறை. (W.)

வீசல் vīcal, *n.* <வீசு-. 1. Throwing; எறிகை. (பிங்.) 2. Giving liberally; வரையாது கொடுக்கை. (திவா.)

வீசவிருக்கநியாயம் vīca-virukka-niyāyam, *n.* <*bīja* + *vṛkṣa*+. (Log.) A nyāya illustrating an interminable argument, as on the question of priority between the tree and the seed; வித்து முந்தியதோ மரம் முந்தியதோ என்று விவாதிப்பதுபோல முடிவற்ற விவாதம்பற்றிக் கூறும் நெறி.

வீசனம் vīcaṉam, *n.* <*vījana.* 1. Small fan; சிற்றாலவட்டம். (சூடா.) 2. Fan; விசிறி. (திவா.)

வீசாட்சரம் vīcāṭcaram, *n.* <*bījākṣara.* Mystic letter. See பீசாட்சரம். (யாழ். அக.)

வீசி[1] vīci, *n.* <*vīcī.* 1. Wave; ripple; அலை. வீசிகள் கவரி யாக (கந்தபு. திருவவ. 110). 2. Trifle; a little; அற்பம். (இலக். அக.)

வீசி[2] vīci, *n.* cf. வாசி[1]. Health; சுகம். (இலக். அக.)

வீசிக்கட்டு-தல் vīci-k-kaṭṭu-, *v. tr.* <வீசு- +. To build in large proportions; விரிவாகக் கட்டுதல். நாலுமெழ வீசிக்கட்டி (கோயிலொ. 3).

வீசிதரங்கநியாயம் vīci-taraṅka-niyāyam, *n.* <*vīcī* + *taraṅga*+. (Log.) The nyāya of the wave-undulation, typifying an uninterrupted and regular succession or series, as of waves; அலைகள்போல ஒன்றன்பின்னொன்று தொடர்ந்துவருதலைக் கூறும் நெறி. (இலக். அக.)

வீசிநட-த்தல் vīci-naṭa-, *v. intr.* <வீசு- +. 1. To take long and quick strides, as in walking; காலை யெட்டிவைத்து வேகமாக நடத்தல். 2. To go a long distance; வெகுதூரஞ் செல்லுதல்.

வீசிப்போ-தல் vīci-p-pō-, *v. intr.* <id. +. See வீசிநட-.

வீசிமாலி vīcimāli, *n.* <*vīci-mālin.* Sea; கடல். (இலக். அக.)

வீசியடி-த்தல் vīci-y-aṭi-, *v. tr.* <வீசு- +. To strike with force, swinging the arm; ஓங்கியடித்தல்.

வீசிவில்லிடு-தல் vīci-villiṭu-, *v. tr.* <id. +. To apply a lever as in raising the wheel of a car; தேர் முதலிய நெம்பத் தணிபோடுதல். வீசிவில்லிட் டெழுப்பினும் எழுப்பப் போகா திருத்தல் (திவ். திருப்பா. 23, வ்யா. பக். 203).

வீசு-தல் vīcu-, *5 v.* cf. *vīj.* [T. *vīcu*, K. *bīsu*, M. *vīcuka.*] *tr.* 1. To throw, fling, as

a weapon; to cast, as a net; எறிதல். (பிங்.) நின்ற மணலுமிலுங கொண்டு வீசுமினே (திவ். இயற். திரு விருத். 53). 2. To flap, as wings; சிறகடித்தல். வீசுஞ் சிறகாற் பறததிர (திவ். இயற். திருவிருத. 54). 3. To swing, as the arm; ஆட்டுதல். மூங்கில் போன் றிருந்துள்ள தோள் வீசி (திவ் பெரியதி. 3, 7, 5, வ்யா.). 4. To fan; இரட்டுதல். முழவுத தோளோச்சித் தண்ணென வீசியோயே (புறநா. 50, 13). 5. To wave, flourish, as a sword; சுழற்று தல். வருமாய ரோடுடன் வளைகோல் வீச (திவ். பெரியாழ். 3, 4, 6). 6. To strike, beat, flog; அடித்தல். கழியால் அவனை வீசினான். 7. To open out, spread; to lengthen, stretch; விரித்து நீட்டு தல். இருஞ்சிறை வீசியெற்றி (கமபரா. சடாயுவுயிர். 107). 8. To accumulate; மிகுத்திடுதல். (அரு. நி.) 9. To give liberally; வரையாது கொடுத்தல். (பிங்.) இரவலர் புன்கணஅஞ நாடொறும உரைசா ன்கலம வரைவில வீசி (பதிற்றுப. 54, 8). 10. To spill; சிந்துதல். கணணீர்க் கடலாற் கனைதுளி வீசாயோ (கலித. 145). 11. To strew, scatter; sow, as seeds; சிதறுதல். கொள்பத மொழிய வீசிய புலனும் (புறநா. 23). 12. To lay aside, throw off; களைதல். உடலுறு பாசம்வீசா துமபர்ச்செல்வாரு மொததார் (கமபரா. கடறுவு. 11). 13. To abandon, to leave off, to drop; செய்யாதொழிதல். சுடுவே னது தூயவன் வில்லினுற்றற்கு மாசென்று வீசினேன் (கமபரா. சூளா. 18).—*intr.* 1. To blow, as the wind; காற்று முதலியன அடித்தல். வீசு தென்றலும் வீஙகிள வேனிலும் (தேவா. 1203, 1). 2. To spread; to be diffused or emitted, as fragrance, rays, etc.; பரவுதல். ஞானவாசம வீசி பரகாசியா நிற்ப (திருப்பு. 1132). 3. To be emitted, as a bad smell; துர்நாற்றம் அடித்தல்.

வீசுகாலேணி vīcu-kāl-ēṇi, *n.* <வீசு-+. A kind of ladder with two supporting legs; step-ladder; தாங்குகால்க ளிரண்டுள்ள ஏணிவகை. (W.)

வீசுகோல் vīcu-kōl, *n.* <id.+. 1. See வீசுவில். (W.) 2. A kind of rod used for striking the bow in singing *viṟ-pāṭṭu;* விற் பாட்டுப் பாடும்போது வில்லையடிக்க உபயோகிக்கும் கோல்வகை. *Nāñ.*

வீசுதமர் vīcu-tamar, *n.* <id.+தமர்[2]. Bow drill; துரப்பணவகை. (W.)

வீசுதவர் vīcutavar, *n.* <id.+தவர்[2]. See வீசுதமர். (யாழ். அக.)

வீசுவில் vīcu-vil, *n.* <id.+. Drill bow; துரப்பண மிழுக்க உதவும் வில்.

வீசுவிற்குடம் vīcu-viṟ-kuṭam, *n.* <வீசு வில்+. Case for a drill bow; துரப்பணக் கூடு. (W.)

வீசேறு-தல் vīcēṟu-, 5 *v. intr.* perh. வீசு-+ஏறு-. To be upraised; மேலேறுதல். வீசேறிய புருவத்தவர் (தேவா. 69, 10).

வீசை[1] vīcai, *n.* [T. *vīse.*] Viss, a measure of weight = 40 palams; நாற்பது பலங்கொண்ட எடுத்தலளவை.

வீசை[2] vīcai, *n.* <மீசை. Moustache. See மீசை, 2. *Loc.*

வீசைத்தூக்கம் vīcai-t-tūkkam, *n.* <வீசம்[2]+தூக்கம்[2]. Goldsmith's weight = 1/4 *kuṉṟi;* கால்குன்றிமணி எடை.

வீட்சணம் vīṭcaṇam, *n.* <*vīkṣaṇa.* Sight, look; பார்வை. கடாட்ச வீட்சணம.

வீட்சணை vīṭcaṇai, *n.* See வீட்சணம். (சங். அக.)

வீட்சிதம் vīṭcitam, *n.* <*vīkṣita.* See வீட்சணம். (யாழ். அக.)

வீட்டன் vīṭṭaṉ, *part.* perh. *vīpsā.* cf. வட் டம். A distributive suffix meaning 'each, every'; தோறும் என்று பொருள்படும் ஒரு விகுதி. ஆட்டை வீட்டன் பொலிசை காசு அரைக்கால் (S. I. I. ii, 97).

வீட்டார் vīṭṭār, *n.* <வீடு. Members of a household; வீட்டிலுள்ள ஜனங்கள்.

வீட்டாள் vīṭṭāḷ, *n.* <id. Wife; மனைவி. (யாழ். அக.)

வீட்டிறப்பு vīṭṭiṟappu, *n.* <id.+இறப்பு. Eaves of the roof of a house; மேற்கூரையின் தாழ்ந்த பக்கம். (சூடா.)

வீட்டு[1]-தல் vīṭṭu-, 5 *v. tr.* Caus. of வீடு-. 1. To kill; கொல்லுதல் (சூடா) அந்தகன் றூதர் வீட்டு முனனரே (உபதேசகா. சிவபுரா. 40). 2. To destroy; அழித்தல் என்றன் வெந்தொழில் வீட்டிட (திருவாச. 41, 5). 3. To remove; நீக்குதல். பிணியை வீட்டி மணிததடந் தோளினுற்குக் கொடுததியோ (கம்பரா. மிதிலைக். 97).

வீட்டு[2]-தல் vīṭṭu-, 5 *v. tr.* <வீழ்த்து-. To cast into, throw in; தள்ளுதல். இரவியைச் சிறையில் வீட்டினான் (கந்தபு. அமரர்சிறைபு. 3).

வீட்டுக்காரர் vīṭṭukkārar, *n.* <வீட்டுக் காரன். Husband. See ஆத்துக்காரர், 2.

வீட்டுக்காரன் vīṭṭu-k-kāraṉ, *n.* <வீடு+ காரன்[1]. 1. Man who owns a house; வீட்டுக் குரியவன். 2. See வீட்டுக்காரர்.

வீட்டுக்காரி vīṭṭukkāri, *n.* Fem. of வீட்டுக்காரன். (W.) 1. Woman who owns a house; வீட்டுக்குடையவள். 2. Wife; மனைவி.

வீட்டுக்காரியம் vīṭṭu-k-kāriyam, n. <வீடு +. Household affairs; குடும்பவேலை. நம் சேனாதிபதி விண்ணப்பத்தால் நம் வீட்டுக்காரியம் செய்யும் கோவணவர் (Pudu. Insc. 791).

வீட்டுக்கிரியை vīṭṭu-k-kiriyai, n. <id.+. Part of the funeral ceremonies, performed at the house; வீட்டிற் செய்யுஞ் சாச்சடங்குப் பகுதி. (யாழ். அக.)

வீட்டுக்குட்சாட்சி vīṭṭukkuṭ-cāṭci, n. <id.+உள்[2]+. Domestic evidence; வீட்டிலிருப் பவர்களுடைய சாட்சியம். (W.)

வீட்டுக்குடையவன் vīṭṭukkuṭaiyavaṉ, n. <id.+உடையவன். 1. Owner of a house; வீட்டுக்கு உரியவன். (W.) 2. Head of a family; குடும்பத் தலைவன். (W.) 3. (Astrol.) Lord of a zodiacal sign; இராசிக்குரிய அதிபதி.

வீட்டுக்குத்தூரம் vīṭṭukku-t-tūram, n. <id.+. See வீட்டுக்குவிலக்கு. (யாழ். அக.)

வீட்டுக்குவிலக்கம் vīṭṭukku-vilakkam, n. <id.+. See வீட்டுக்குவிலக்கு.

வீட்டுக்குவிலக்கு vīṭṭukku-vilakku, n. <id.+. Menstruation, as necessitating a woman to stay outside her house during her periods; மகளிர் மாதவிடாய்.

வீட்டுக்குளிர்ச்சி vīṭṭu-k-kuḷircci, n. <id. +. Offerings made to demons when worshipped at home; துர்த்தேவதைகளுக்குக் கிருகங்களி லிடும்பலி. (J.)

வீட்டுக்கோழி vīṭṭu-k-kōḻi, n. <id.+. Domesticated fowl; வீடுகளில் வளர்க்கப்படுங் கோழி.

வீட்டுச்சாமான் vīṭṭu-c-cāmāṉ, n. <id. +. 1. Household furniture and utensils; வீட்டிற்குரிய தட்டுமுட்டுகள். 2. See வீட்டுப்பண்டம், 2, 3.

வீட்டுச்சீட்டு vīṭṭu-c-cīṭṭu, n. <id.+. 1. Title-deeds relating to one's house; வீட்டைச் சேர்ந்த கிரயசாசன முதலிய பத்திரம். (W.) 2. Monetary transactions of a family; குடும்ப வியவ காரம். *Loc.*

வீட்டுச்சுகம் vīṭṭu-c-cukam, n. <id.+ சுகம்[1]. Domestic felicities; வீட்டிற் பெறக்கூடிய இன்பம்.

வீட்டுச்செலவு vīṭṭu-c-celavu, n. <id.+. Household expenditure, opp. to *veḷi-c-celavu;* உணவுமுதலியவற்றிற்கு ஆகுஞ் செலவு.

வீட்டுத்தெய்வம் vīṭṭu-t-teyvam, n. <id. +. 1. Household deity; குடும்பதேவதை. *Loc.* 2. Woman who dies during the lifetime of her husband and is worshipped as a deity by her family. See மங்கலியப்பெண்டு. *Tj.*

வீட்டுநெறி vīṭṭu-neṟi, n. <id.+நெறி[3]. Path to salvation; மோட்சத்திற்குரிய வழி. வீட்டு நெறிபயால் (ஔவைகுறள்).

வீட்டுப்பண்டம் vīṭṭu-p-paṇṭam, n. <id. +பண்டம்[1]. 1. See வீட்டுச்சாமான். (W.) 2. Household provisions; வீட்டுக்குவேண்டிய உணவுப்பொருள்கள். 3. Home-made articles; வீட்டிற் செய்யப்படும் பொருள்கள்.

வீட்டுப்பூசை vīṭṭu-p-pūjai, n. <id.+. Worship of the deity at home; வீட்டினுட் கடவுளுக்கு செய்யும் பூசை.

வீட்டுப்பெண் vīṭṭu-p-peṇ, n. <id.+. 1. Daughter of the family; குடும்பத்திலே பிறந்த பெண். 2. Daughter-in-law; மகன் மனைவி. (W.)

வீட்டுப்பெண்சாதி vīṭṭu-p-peṇcāti, n. <id.+. One's own wedded wife; தாலி கட்டின பெண்சாதி. வீட்டுப் பெண்சாதி வேம்பும் காட்டுப் பெண்சாதி கரும்பும. (W.)

வீட்டுமணியம் vīṭṭu-maṇiyam, n. <id.+. 1. Stewardship, management of a house or family; வீட்டுக்குடித்தனக்காரியங்களை நிர்வகிக்கை. (W.) 2. Steward; வீட்டுக்குடித்தன வேலையை மேற்பார்ப்பவன். *Loc.*

வீட்டுமம் vīṭṭumam, n. <*bhīṣma*. 1. Terror, horror; பயங்கரம். 2. Non-attachment; வைராக்கியம். (சங். அக.)

வீட்டுமன் vīṭṭumaṉ, n. <*Bhīṣma*. Bhīsma. See பீஷ்மன்.

வீட்டுமாசாரி vīṭṭumācāri, n. <id.+ *ā-cārya*. See வீட்டுமன். (நாமதீப. 142.)

வீட்டுலகம் vīṭṭulakam, n. <வீடு+உலகம். Heaven; மேலுலகம். தேவர் பெருமானை . . . நாவி னவிற்றுதா வீட்டுலக நண்ணுரே (சீவக. 1467).

வீட்டுவரி vīṭṭu-vari, n. <id.+வரி[5] House-tax; வீட்டுக்காகச் செலுத்தும் வரி. வீட்டுவரி யெப்பொழுதும வேண்டா மெனநிறுத்தி (பணவிடு. 46).

வீட்டுவழக்கம் vīṭṭu-vaḻakkam, n. <id.+. Family usage, tradition, opp to *nāṭṭu-vaḻakkam;* குடும்பத்தில் நடந்துவரும் வழக்கம்.

வீட்டுவாசல் vīṭṭu-vācal, n. <id.+. The front gate of a house; வீட்டின் முன்புற வாசல்.

வீட்டுவாடகை vīṭṭu-vāṭakai, n. <id.+ வாடகை[1]. House-rent; குடிக்கூலி.

வீட்டுவாடை vīṭṭu-vāṭai, n. <id.+ வாடை⁴. See வீட்டுவாடகை. (யாழ். அக.)

வீட்டுவிசாரணை vīṭṭu-vicāraṇai, n. <id. +. See வீட்டுமணியம், 1. (W.)

வீட்டுவிசாரம் vīṭṭu-vicāram, n. <id.+. Cares of a householder, cares of a family; குடும்பக் கவலை.

வீட்டுவீரன் vīṭṭu-vīraṉ, n. <id.+. One who affects heroism at home but is really a coward outside; வீட்டிலிருந்து வீரம்பேசும் பயங்கொள்ளி. (யாழ். அக.)

வீட்டுவேலை vīṭṭu-vēlai, n. <id.+. 1. Home-work, home exercise; வீட்டிற் செய்து கொணருமாறு இடப்படும் வேலை. Mod. 2. Domestic duties; குடும்ப வேலை. Colloq. 3. Menial service, as washing, sweeping, etc.; பெருக்குதல் துணிதுவைத்தல் முதலிய தாழ்தொழில். 4. House-building work; வீடுகட்டுந் தொழில்.

வீட்டுள்ளார் vīṭṭuḷḷār, n. <id.+. (W.) 1. Inmates of a house; வீட்டுக்குரியார். 2. Householders; இல்லறத்திலுள்ளவர்.

வீட்டெலி vīṭṭeli, n. <id.+எலி¹. House-rat. See இல்லெலி. (புறநா. அரும்.)

வீட்டைச்சுற்று-தல் vīṭṭai-c-cuṟṟu-, v. intr. <id.+. To be hanging about one's own house; to be a stay-at-home; வெளியேறி வேலைசெய்யாமல் தன்வீட்டிலேயே திரிந்துகொண்டிருத்தல்.

வீட்டோடுங்கூட்டோடும் vīṭṭōṭuṅ-kūṭṭōṭum, adv. <id.+. Throughout the house; வீடுமுழுவதும். (T. A. S. v, 224.)

வீடடைத்தல் vīṭaṭaittal, n. <id.+. Closing of a house due to extinction of a family, as by death; சாவு முதலியவற்றால் வமிசமற்று வீடு மூடிக்கிடக்கை.

வீடணன் vīṭaṇaṉ, n. <Vibhīṣaṇa. A brother of Rāvaṇa; இராவணன் தம்பி. நின்மி னென்றனன் வீடண னீதியான் (கம்பரா. பிணிவீ. 110).

வீடறு-த்தல் vīṭaṟu-, v. tr. <வீடு+ அறு²-. To settle, as a case or dispute; வழக்கு முதலியன தீர்த்தல். வழக்குமாறுபட்டு வந்தோர்க்கு அவ்வழக்கு வீடறுப்பன் (பொருந. 188, உரை).

வீடாரம் vīṭāram, n. [T. biḍāramu, K. biḍāra.] 1. Camp; பாசறை. (பு. வெ. 8, 16, கொளு, உரை.) 2. House; வீடு. (W.)

வீடாவழி vīṭā-vaḻi, adv. <வீடு+ஆ-+. From house to house; வீடு வீடாக. (W.)

வீடி¹ vīṭi, n. A parasitic leafless plant. See கோற்றன். (மலை.)

வீடி² vīṭi, n. <vīṭī. Betel; தாம்பூலம். (இலக். அக.)

வீடிகை vīṭikai, n. <vīṭikā. 1. Betel; வெற்றிலை. (மலை.) 2. Roll of betel leaves with arecanut, spices and lime; வெற்றிலைச்சுருள். (W.)

வீடு¹ vīṭu, n. <விடு¹-. [K. bīḍu.] 1. Leaving; விடுகை. நட்டபின் வீடில்லை (குறள், 791). 2. Emancipation, freedom, liberation; விடுதலை. நெடுங்கை விலங்கின் வீடுபெறல் யாதென (பெருங். நரவாண. 3, 107). 3. Freedom from the bondage of karma; வினைநீக்கம். வீடெனப்படுமே வினைவிடு தல (சீவக. 2846). 4. Completion; settlement; end; முடிவு. (பிங்.) 5. Dissolution of the universe; சங்காரம். நுகாச்சி யுறுமோ மூவுலகின் வீடு பேறு (திவ். திருவாய். 8, 10, 6). 6. Creation; சிருட்டி. (திவ். திருவாய். 8, 10, 6, பன்னீ.) 7. Heaven, as the final release or liberation; மோட்சம். வீடுடையா னிடை (திவ். திருவாய். 1, 2, 1). 8. Svarga, Indra's heaven; சுவர்க்கம். வீரிய ரெய்தற் பால வீடு (பு. வெ. 8, 30). 9. House, habitation, abode; மனை. வீடறக் கவர்ந்த (பு. வெ. 3, 15, கொளு). 10. (Astrol.) Zodiacal sign; இராசி. Loc. 11. Squares, as of a chess board; சதுரங்கத்தில் காய்களிருத்தற்கு உரிய தானம். Loc. 12. Winning place or goal in a board of an indoor game; சூட்டாட்டத்திற் பழமெடுத்தற்குரிய இடம். 13. Clearing nut tree. See தேற்றா. காழிருள் வீடும (பெருங். உஞ்சைக். 41, 33). 14. A cant term signifying one; ஒன்றைக் குறிக்குங் குழூஉக்குறி. (தைலவ.)

வீடு²-தல் vīṭu-, 5 v. perh. id. intr. 1. To perish; to be destroyed; கெடுதல். வினை . . . வீடுமே (தேவா. 360, 8). 2. To die; சாதல். வீடு மளவும் விடுகின்றிலேனே (திருமந். 1654). 3. To cease; ஒழிதல். தளாநடை வருத்தம் வீட (பெரும்பாண. 250).—tr. To let off, leave off; விடுதல். (W.)

வீடுகொள்(ளு)-தல் vīṭu-koḷ-, v. tr. <வீடு+. To recover, get back; மீண்டும்பெறுதல். ஆருயிரைக் கூற்றம் விழுங்கியபின் வீடுகொண்டற்றால் (பு. வெ. 2, 1).

வீடுசெய்-தல் vīṭu-cey-, v. tr. <id.+. 1. To renounce, relinquish; துறத்தல். வீடுமின் முற்றவும் வீடுசெய்து (திவ். திருவாய், 1, 2, 1). 2. To release; விடுதலை செய்தல். 3. To remit, as taxes; வரி முதலியன விட்டுக்கொடுத்தல். கறை வீடு செய்ம்மென (சிலப். 28, 204). 4. To surrender, as to God; அர்ப்பணஞ் செய்தல். உம்முயிர்

வீடுடையானிடை வீடுசெய்ம்மினே (திவ். திருவாய். 1, 2, 1).

வீடுசேர்-தல் vīṭu-cēr-, *v. intr.* <id.+. To be destroyed; அழிதல். *வீடுசேரநீர வேலைகான் மடுத்து* (கம்பரா. நாட்டுப. 61).

வீடுதூங்கி vīṭu-tūṅki, *n.* <id.+. Hanger-on, sponger; parasite; பிறனையடுத்து மதிப்பிழந்து வாழ்வோன். (யாழ். அக.) (W.)

வீடுநர் vīṭunar, *n.* <வீடு-. Those who die, mortals; இறப்பவர். *விண்ணவருமே வீடுநரே* (விநாயகபு. 22, 15).

வீடுநுழை-தல் vīṭu-nuḻai-, *v. intr.* <வீடு +. To trespass; to enter into a house with an evil intent; தீயவெண்ணத்துடன் பிறன்வீட்டினுட் பிரவேசித்தல்.

வீடுபெயர்[1]-தல் vīṭu-peyar-, *v. intr.* <id.+. To change one's residence or abode; இருப்பிடம் விட்டு வேறிடஞ் செல்லுதல். (W.)

வீடுபெயர்[2]-த்தல் vīṭu-peyar-, *v. intr.* <id.+. See வீடுபெயர்[1]-. (W.)

வீடுபேறு vīṭu-pēṟu, *n.* <id.+. Final emancipation, salvation; முத்திநிலை. *விண் பொருந்து தேவர்க்கும் வீடுபேறாய் நின்றானை* (தேவா. 268, 5).

வீடும்விளக்குமாய்வை-த்தல் vīṭum-viḷakkum-āy-vai-, *v. tr.* <id.+விளக்கு+ஆ[6]-+. To start one in life, to make one prosper in life; ஒருவனை வாழவைத்தல்.

வீடுமன் vīṭuman, *n.* <*Bhīsma*. Bhīsma. See பீஷ்மன். *வீடுமனும . . . கணைதொடுத்தான்* (பாரத. முதற்போ. 57).

வீடுமாற்று-தல் vīṭu-māṟṟu-, *v. intr.* <வீடு+. To shift from one house to another; ஒரு வீட்டைவிட்டு மற்றொரு வீட்டிற்குக் குடிபோதல்.

வீடுமாறு-தல் vīṭu-māṟu-, *v. intr.* <id. +. See வீடுமாற்று-.

வீடுவாசல் vīṭu-vācal, *n.* <id.+. House and its appurtenances; வீடும் அதைச் சார்ந்த பொருளும். *அவன் வீடுவாசலில்லாதவன்.*

வீடுவி-த்தல் vīṭuvi-, *v. tr.* Caus. of வீடு-. To cause to perish; to destroy; அழிவுசெய்தல். *காலனை வீடுவித்து* (தேவா. 444, 3).

வீடெடு-த்தல் vīṭeṭu-, *v. intr.* <வீடு+எடு-. 1. To build a house; வீடுகட்டுதல். *வீடெடுக்க அஸ்திபாரஞ் செய்பவர்* (பாரத. ஒழிபி. 3, உரை). 2. To lay the foundation; அஸ்திவாரமிடுதல். *நல்ல வீடெடுப்பவர்* (பாரத. ஒழிபி. 3).

வீண் vīṇ, *n.* [M. *vīṇ.*] 1. Uselessness, unprofitableness; பயனின்மை. (சூடா.) 2. That which is unprofitable, பயனற்றது. 3. That which is not necessary; அவசியமல்லாதது. *வீண பேசி மடவாரகை வெள்வளைகள் கொண்டால்* (தேவா. 677, 3).

வீண்கத்து vīṇ-kattu, *n.* <வீண்+கத்து-. Profitless words, as empty noise; பயனற்ற பேச்சு.

வீண்காரியம் vīṇ-kāriyam, *n.* <id.+. Useless deed; பயனற்றசெயல். (நன். 298, உரை.)

வீண்காலம் vīṇ-kālam, *n.* <id.+. Time spent in vain, time wasted; பயனின்றிப் போக்குங் காலம்.

வீண்குறிசொல்லுவோன் vīṇ-kuṟi-colluvōṉ, *n.* <id.+குறிசொல்-. Sham astrologer; போலியாகச் சோதிடக்குறி சொல்லிப் பிழைப்போன். (சுக்கிரநீதி, 176.)

வீண்செயல் vīṇ-ceyal, *n.* <id.+. See வீண்காரியம்.

வீண்செலவு vīṇ-celavu, *n.* <id.+. Profitless expenditure; பயனற்ற பணச்செலவு.

வீண்சொல் vīṇ-col, *n.* <id.+சொல்[3]. Idle talk, unprofitable discourse; பயனில்சொல். (W.)

வீண்சோறுதின்னி vīṇ-cōṟu-tiṉṉi, *n.* <id.+சோறு[1]+. Useless person; சோற்றுக்குக் கேடாய் ஒன்றுக்கு முதவாதிருப்பவ-ன்-ள். (W.)

வீண்டம்பம் vīṇ-ṭampam, *n.* <id.+. Vain show; பயனற்ற ஆடம்பரம்.

வீண்தெண்டம் vīṇ-teṇṭam, *n.* <id.+. 1. Sheer waste; சிறிதும் பயனின்மை. *Colloq.* 2. Unjust fine; அநீதமான அபராதம். (W.)

வீண்தேங்காய் vīṇ-tēṅkāy, *n.* <id.+. Coconut that breaks easily, as in a game; தேங்காயுருட்டியாடும் பந்தயவாட்டத்தில் எளிதில் உடையுந் தேங்காய். (J.)

வீண்நியாயம் vīṇ-niyāyam, *n.* <id.+. 1. Pretext; excuse; சாக்கு. *Loc.* 2. Profitless argument; பயனற்ற விவாதம்.

வீண்பத்தி vīṇ-patti, *n.* <id.+பத்தி[2]. Superstition; மூடபக்தி. (W.)

வீண்பாக்கு vīṇ-pākku, *n.* <id.+பாக்கு[1]. Betel-nut chewed at other times than after meal, dist. fr. *ūṇ-pākku;* உணவு கொள்ளாத வேளைகளில் தின்னும் பாக்கு. (W.)

வீண்பாடு vīṇ-pāṭu, *n.* <id.+. 1. Profitless task; பயனற்ற வேலை. 2. Profitless effort; பயனற்ற முயற்சி.

வீண்பிரதிஷ்டை vīṇ-piratiṣṭai, n. <id. +. Vanity; தற்பெருமை. (W.)

வீண்பொழுதுபோக்கு-தல் vīṇ-poḻutu-pōkku-, v. intr. <id.+. To while away one's time; காலத்தை வீணே கழித்தல். (W.)

வீண்போக்கு vīṇ-pōkku, n. <id.+ போக்கு[2]. Vain, lame excuse; பொருத்தமற்ற சாக்குவார்த்தை.

வீண்வம்பு vīṇ-vampu, n. <id.+. 1. Mischievous talk or deed; அக்கிரமமான பேச்சு அல்லது செயல். Loc. 2. Idle gossip; பயனற்ற வம்பளப்பு.

வீண்வார்த்தை vīṇ-vārttai, n. <id.+. See வீண்சொல். Colloq.

வீண்விதி vīṇ-viti, n. <id. + விதி[1]. Ill-fate; தீய ஊழ்.

வீண்வீம்பு vīṇ-vīmpu, n. <id.+. Unjustifiable obstinacy; அநுவசியமான பிடிவாதம்.

வீணத்தனம் vīṇa-t-taṉam, n. <வீணன் + தனம்[1]. Wickedness; துன்மார்க்கம். Nāñ.

வீணன் vīṇaṉ, n. <வீண். 1. Useless fellow; பயனற்றவன். வீணாக்குள வீணன் (அரிச். பு. சூழ்வினை. 19). 2. Idle fellow; சோம்பேறி. (W.) 3. One given to wicked ways; துன்மார்க்கன். Loc.

வீணாகரணம் vīṇā-karaṇam, n. <vīṇā + karaṇa. Playing on the lute; யாழ்வாசிக்கை (யாழ். அக.)

வீணாகானம் vīṇā-kāṉam, n. <id.+gāna. Music played on the lute; யாழிசை.

வீணாட்டம் vīṇ-āṭṭam, n. <வீண் +. See வீண்பாடு. (யாழ். அக.)

வீணாடிவீணன் vīṇāṭivīṇaṉ, n. See வீணாதிவீணன். Nāñ.

வீணாத்தண்டு vīṇā-t-taṇṭu, n. <vīṇā+. See வீணாதண்டம். வீணாத்தண்டுடே வெளியுறத தாளேக்கி (திருமந். 588).

வீணாதண்டம் vīṇā-taṇṭam, n. <id.+. 1. Neck of a lute; வீணைக்காம்பு. 2. Spine, as like the neck of a lute; முதுகெலும்பு.

வீணாதண்டு vīṇā-taṇṭu, n. <id.+. See வீணாதண்டம், 1 (இலக். அக.)

வீணாதிவீணன் vīṇātivīṇaṉ, n. <வீணன் + அதி +. 1. Entirely worthless person; முற்றும் உபயோகமற்றவன். 2. Rogue; போக்கிரி. Loc. 3. Person who persists in making unjust claims; பாத்தியதை யில்லாதிருக்கையிலும் தனக்கு உரிமை யுண்டென்று வழக்காடுபவன். Tj.

வீணாரவீணன் vīṇāravīṇaṉ, n. See வீணாதிவீணன். வீணாரவீணனைப்போ னீதிசெய்வா (தணடலை. சத. 55).

வீணாவாதன் vīṇā-vātaṉ, n. <vīṇā + vāda. One who plays on the vīṇai; வீணை வாசிப்போன். (யாழ். அக.)

வீணானுபந்தம் vīṇāṉupantam, n. <id. + anubandha. The pot of the vīṇai; வீணைக் குடம்.

வீணிழவு vīṇ-iḻavu, n. <வீண் +. That which is profitless, as labour; பயனற்றது. வீணிழவுக்கு மாரடிக்கிறேன்.

வீணை vīṇai, n. <vīṇā. The Indian lute, of 22 kinds, viz., cittirakōṣāvaḷi, cittirikai, kūrmikai, cāraṅkam, rāvaṇācuram, kiṉṉari, varāḷi, kīsti, kuccikai, vipañcikai, parivātiṉi, cakaḷa-vallaki, caravīṇai, anāvitam, makati, pirakati, lakulākṣi, ruttirikai, kaḷāvati, kaccaḷā, kāntāri, aṉumatam; சித்திரகோஷாவளி, சித்திரிகை, கூர்மிகை, சாரங்கம், ராவணாசுரம், கின்னரி, வராளி, கீஸ்தி, குச்சிகை, விபஞ்சிகை, பரிவாதினி, சகள வல்லகி, சரவீணை, அநாவிதம், மகதி, பிரகதி, லகுலாக்ஷி, ருத்திரிகை, களாவதி, கச்சளா, காந்தாரி, அனுமதம் என்னும் 22 வகையுள்ள யாழ்வகை. (பரத. ஒழிபி. 15.) எமமிறை நல்வீணை வாசிக்குமே (தேவா. 1199, 7).

வீணைக்காணி vīṇai-k-kāṇi, n. <வீணை + காணி[1]. Right of playing on the vīṇai in a temple; கோயிலில் வீணை வாசிக்கும் உரிமை. (I. M. P. Tj 465.)

வீணைச்செல்வம் vīṇai-c-celvam, n. <id. +. The Goddess of Yāḻ. See மாதங்கி, 3. (சீவக. 411, உரை.)

வீணைத்தண்டு vīṇai-t-taṇṭu, n. <id.+. See வீணாதண்டம், 1. (சீவக. 719, உரை.)

வீணைமீட்டு-தல் vīṇai-mīṭṭu-, v. intr. <id.+. To tune the yāl; யாழ்நரம்பை லய முணர்ந்து சுருதி சேர்த்தல்.

வீணைவல்லவர் vīṇai-vallavar, n. <id.+. 1. Expert players on the vīṇai; வீணைவாசிப்பதில் வல்லவர். இன்னிசை வீணையர் யாழின ரொருபால் (திருவாச. 20, 4). 2. Gandharvas; கந்தருவர். (திவா.)

வீணைவலிக்கட்டு vīṇai-vali-k-kaṭṭu, n. <id. + வலி +. Fret of a vīṇai; place where the strings of a yāḻ are held down by the fingers; யாழின் வார்க்கட்டு. (W.)

வீணைவாசி-த்தல் vīṇai-vāci-, v. intr. <id.+. To play on the yāḻ; யாழ்வாசிப்பு செய்தல்.

வீத்து[1] vīttu, n. <வீச்சு. 1. Flogging; அடிக்கை. (W.) 2. Length; நீளம். Loc.

வீத்து[2]-தல் vīttu-, 5 v. tr. <வீத்து. To flog; அடித்தல். Loc.

வீத்து[3]-தல் vīttu-, 5 v. tr. Corr. of வீழ்த்து-. என் பாதநிமத்திலும் கொஞ்சம் கஞ்சி வீத்துங்கள்.

வீத்துமம் vīttumam, n. Dill. See சதகுப்பை, 1. (மலை.)

வீதசோகம் vītacōkam, n. <vīta-śōka. Aśoka. See அசோகம், 2. (இலக். அக.)

வீதசோகன் vītacōkan, n. <vīta-śōka. Arhat, as free from sorrow; அருகக்கடவுள். (சூடா.)

வீதம்[1] vītam, n. <vihita. 1. Rate, ratio; அளவுமுறை. எனக்கு அவன் வீதம் கொடுத்தான். 2. Share, portion; பங்கு.

வீதம்[2] vītam, n. <vīta. 1. Abandonment; abolition; விடுகை. (சூடா.) 2. That which is forsaken or relinquished; விடப்பட்டது. (இலக். அக.) 3. Peace; அமைதி. (இலக். அக.)

வீதராகம் vīta-rākam, n. <vīta-rāga. Extinction of desire; பற்றறுகை. வீதராகமா முனிவ ளுனன் (மேருமந். 928).

வீதராகன் vīta-rākan, n. <vīta-rāga. One who is free from attachments; பற்றற்றவன். இது . . . வீதராகா என்றுற்போல நின்றது (சீவக. 2542, உரை).

வீதல் vītal, n. <வீ[2]-. 1. Death; சாவு. (சூடா.) 2. Poverty; வறுமை. (திவா.)

வீதா vītā, n. prob. விருதா. cf. vīta. Uselessness; பயனின்மை. (நாமதீப. 645.)

வீதாசாரம் vītācāram, n. <வீதம்[1]+ஆசாரம்[1]. Proportion; rate; பங்கு. Colloq.

வீதி[1]-த்தல் vīti-, 11 v. tr. <id. 1. To share; to allot; பங்கிடுதல். 2. To analyse and examine; பகுத்து ஆராய்தல். கதியாளா வீதித்துத் தேடரிதானது (திருப்பு. 900).

வீதி[2] vīti, n. <vīthī. 1. Street; தெரு. (பிங்.) வாழ்த்தொலிபோய் வீதிவாய்க் கேட்டலுமே (திருவாச. 7, 1). 2. The sun's path; orbit of celestial bodies; சூரியன் முதலிய கோள்கள் செல்லும் வழி. 3. Direction, way; வழி. கனிந்த கீத வீதியே . . . ஓடியெய்தினுர் (சீவக. 2039). 4. Means; முறை. தியானவீதியான் . . . வீட்டிலே கெய்தும் (சூளா. முத். 4). 5 Row, order; ஒழுங்கு. (W.) 6. (Drama.) A species of drama in one act and with one or two actors, the theme being love for a lascivious prostitute, one of ten rūpakam, q.v.; நபகம் பத்தனுள் காமவிச்சை மிகுந்த பரத்தையிடத்துக் கொண்ட காதலைக் குறித்து ஒருவர் அல்லது இருவர் நடிப்பதான ஓரங்கமுடைய நபகவகை. (சிலப. பக. 84, கீழ்க்குறிப்பு.) 7. Width, breadth; அகலம். வீதிவே னெடுங் கணணியா (தேவா. 168, 2). அந்த வஸ்திரத்தின் வீதி எவ்வளவு? 8. Running straight, as of a horse; நேரோட்டம். (பிங்.) வினைதரு வட்டமும் வீதியும் பதியும் (சீவக. 1839). 9. Place for breaking horses; வையாளி வெளி. (W.) 10. Light; ஒளி. (இலக். அக.) 11. cf. vēdi. Platform; மேடை. (யாழ். அக.)

வீதி[3] vīti, n. <bhīti. Fear, அச்சம். (சூடா.)

வீதி[4] vīti, n. <vīti. Horse; குதிரை. (யாழ். அக.)

வீதிக்குத்து vīti-k-kuttu, n. <வீதி[2]+. An inauspicious position of a house. See தெருக்குத்து.

வீதிகுத்து-தல் vīti-kuttu-, v. intr. <id. +. To run hither and thither; ஓடியாடுதல். வீதிகுத்திய குறுநதாட் பாரிடம (கல்லா. 41).

வீதிகோத்திரம் vītikōttiram, n. <Vītihōtra. See வீதிகோத்திரன், 1. (இலக். அக.)

வீதிகோத்திரன் vītikōttiran, n. <Vītihōtra. (யாழ். அக.) 1. The God of Fire; அக்கினி பகவான். 2. Sun; சூரியன்.

வீதிப்பாய்ச்சல் vīti-p-pāyccal, n. <வீதி[2] +. An inauspicious position of a house. See தெருக்குத்து.

வீதிப்போக்கு vīti-p-pōkku, n. <id.+ போக்கு[3]. (Mus.) Even movement of music in the same pitch; இசையின் நேர்செலவு. அசையொடு வீதிப்போக்கு முடுகியல் (திருவிளை. விறகு. 28).

வீதிமறிச்சான் vīti-maṟiccāṉ, n. <id. +மறி-. Taṭṭi, etc., put up in specified localities to shut out low-caste people, as in festivals; குறித்த இடங்களில் கீழ்மக்கள் வராதபடி தடுக்க இடப்படும் தட்டி முதலியன. Nāñ.

வீதியிலேவிடு-தல் vītiyil-ē-viṭu-, v. tr. <id.+. To leave adrift; to leave uncared for, as children; குழந்தை முதலியவற்றை நிராதாரமாக விட்டுவிடுதல்.

வீதிவர்ணச்சேலை vītivarṇa-c-cēlai, n. <வீதிவர்ணம்+. A kind of saree; ஒருவகைப் புடைவை. வீதிவர்ணச்சேலை யொன்று விந்தையாம் (விறலிவிடு. 714).

வீதிவர்ணம் vīti-varṇam, *n.* perh. வீதி² +. See வீதிவர்ணச்சேலை.

வீதிவிடங்கன் vīti-viṭaṅkaṉ, *n.* <id.+. The moveable image of Śiva, worshipped at Tiruvārūr; திருவாரூரிற் கோயில்கொண்ட உற்சவ மூர்த்தியாகிய சிவபிரான்.

வீதிவிலாசம் vīti-vilācam, *n.* <id.+. Taking a walk along the streets; தெருவில் உலா வருகை. (W.)

வீப்பகழி vī-p-pakaḻi, *n.* <வீ⁴+. The flower-arrow of Kāma; காமனது மலரம்பு. (உரி. நி.)

வீபணி vīpaṇi, *n.* <*vipaṇi*. 1. Bazaar-street; கடைவீதி. (சது.) 2. Shop. See விபணி.

வீபத்து vīpattu, *n.* prob. *vibudha*. Moon; சந்திரன். (சது.)

வீபற்சு vīpaṟcu, *n.* <*Bībhatsu*. Arjuna; அருச்சுனன். (பிங்.)

வீம்பன் vīmpaṉ, *n.* <வீம்பு. 1. Boaster, braggart; வீண்பெருமைக்காரன். 2. Proud person; கர்வி. 3. Pertinacious person; பிடிவாதக்காரன்.

வீம்பாட்டம் vīmpāṭṭam, *n.* <id.+. (W.) 1. Ostentatious display; வீண்டம்பம். 2. Bragging; வீண்பெருமை பேசுகை.

வீம்பு vīmpu, *n.* [M. *vīmbu*.] 1. Boast, swagger, bombast, vaunt; வீண்புகழ்ச்சி. *வீம்பு நாரியர்* (திருப்பு. 772). 2. Pride; கர்வம். 3. Obstinacy; பிடிவாதம்.

வீம்புக்காரன் vīmpu-k-kāraṉ, *n.* <வீம்பு + காரன்¹. See வீம்பன். (W.)

வீம்புப்பேச்சு vīmpu-p-pēccu, *n.* <id.+. Boasting speech; தற்புகழ்ச்சி.

வீமசேனன் vīmacēṉaṉ, *n.* <*Bhīmasēna*. Bhīma. See பீமன், 1. *அருச்சுனன் தமையனை . . . வீமசேனன்* (சிறுபாண. 240, உரை).

வீமதேவன் vīma-tēvaṉ, *n.* <*Bhīma-dēva*. A Rudra, one of *ēkātaca-ruttirar*, q.v.; ஏகாதச ருத்திரருள் ஒருவர். (பிங்.)

வீமபாகம் vīma-pākam, *n.* <*Bhīma*+*pāka*. Excellent cooking. See பீமபாகம். (குற்ற. குற. 17.)

வீமம் vīmam, *n.* <*bhīma*. 1. Fearfulness, dreadfulness; அச்சம். *வீமப்பேரொளியாய விழுப்பொருளை* (தேவா. 327, 8). 2. Fearful thing; அச்சந்தருவது. (W.) 3. A hell; நரகவகை. *அதன் கீழ் வீமம்* (சிவதரு. சுவர்க்கநரக. 109). 4. Bulkiness; பருமன். (W.)

வீமவீடணம் vīma-vīṭaṇam, *n.* <id.+*bhīṣaṇa*. A hell; நரகவகை. (சிவதரு. சுவர்க்கநரக. 109.)

வீமன் vīmaṉ, *n.* <*Bhīma*. 1. The second son of Pāṇḍu. See பீமன், 1. *மிடுக்கிலாதானை வீமனே . . . என்று* (தேவா. 647, 2). 2. Father of Damayantī; தமயந்தியின் தந்தை. *வீமன்றிரு மடந்தை* (நள.). 3. A kind of purified camphor; பச்சைக்கற்பூரவகை. (பதார்த்த. 1077.)

வீமேச்சுரவுள்ளமுடையான் vīmēc-cura-v-uḷḷamuṭaiyāṉ, *n.* An astrological work; ஒரு சோதிட நூல்.

வீயம் vīyam, *n.* <*bīja*. [T. *bīyamu*, K. *bīya*.] 1. Seed; வித்து. *அகோசர வீயத்தை* (திருமந். பாயி. 100). 2. Rice; அரிசி. (பிங்.)

வீயு vīyu, *n.* Worm-killer. See ஆடுதின்னாப்பாளை. (மலை.)

வீர்தி vīrti, *n.* prob. *vṛti*. Hedge, fence; வேலி. (பிங்.)

வீர்வீரெனல் vīr-vīr-eṉal, *n.* Onom. expr. of screaming, shrieking; கத்துதற் குறிப்பு.

வீரக்கல் vīra-k-kal, *n.* <வீரம்¹+. Memorial stone. See நடுகல். *Loc.*

வீரக்கழல் vīra-k-kaḻal, *n.* <id.+. String of little bells worn on the leg, as a sign of heroism; ஆண்மைக்குறியாக வீரரணியும் காலணி.

வீரக்குட்டி vīra-k-kuṭṭi, *n.* <id.+குட்டி¹. Eminent warrior; வீரரிற் சிறந்தோன். (யாழ். அக.)

வீரக்குடியான் vīra-k-kuṭiyāṉ, *n.* <id.+. One employed to sound the trumpet or conch on joyful or mournful occasions; சுபாசுப காலங்களில் சங்கு கொம்பு முதலியன ஊதும் பணி செய்பவன். (W.)

வீரக்குழல் vīra-k-kuḻal, *n.* <id.+குழல்³. A piece of armour for the forearm; முன்கையில் அணியும் இருப்புக் கவசம். (யாழ். அக.)

வீரக்கொடி vīra-k-koṭi, *n.* <id.+. Banner of victory; வெற்றிக் கொடி. (பு. வெ. 9, 39, உரை.)

வீரக்கொம்பு vīra-k-kompu, *n.* <id.+. Martial trumpet; படையெழுச்சியில் ஊதுங் கொம்பு. *சங்கும் கரிய வீரக்கொம்பும்* (பு. வெ. 2, 3, உரை).

வீரகங்கணம் vīra-kaṅkaṇam, *n.* <*vīra* + *கங்கணம்*[1]. See வீரகடகம். (W.)

வீரகடகம் vīra-kaṭakam, *n.* <id. + *கடகம்*[2]. Warrior's bracelet; வீரர் அணியும் கைவளை. (W.)

வீரகண்டாமணி vīra-kaṇṭāmaṇi, *n.* <id. +. Ring with little bells, worn on the leg, as a mark of heroism; வீரக்குறியாக அணியும் மணி கட்டிய கழல். *வீரகண்டாமணி விருது காலிட்டு* (கொண்டல்விடு. 494).

வீரகண்டை vīra-kaṇṭai, *n.* <id. + *கண்டை*[4]. [K. *vīragaṇṭe*.] See வீரக்கழல். (W.)

வீரகத்தி vīra-katti, *n.* <id. + *hatyā*. Sin of killing a hero or warrior; வீரனைக் கொன்ற பாவம். (இலக். அக.)

வீரகம் vīrakam, *n.* <*vīraka*. Oleander. See அலரி, 2. (இலக். அக.)

வீரகவசம் vīra-kavacam, *n.* <*vīra*+. Warrior's armour; வீரர் அணியும் கவசம்.

வீரகவிராயர் vīrakavirāyar, *n.* See வீரை யாசுகவிராயர்.

வேட்டிதம் vēṭṭitam, *n.* < *vēṣṭita.* 1. Surrounding; சூழ்கை. (இலக். அக.) 2. That which is surrounded; சூழப்பெற்றது. 3. Obstacle; தடை. (இலக். அக.) 4. Folding; மடிப்பு. (யாழ். அக.) 5. (Nāṭya.) A kind of dance; ஒரு வகைக் கூத்து. (யாழ். அக.)

வேட்டு¹ vēṭṭu, *n.* < வேடு¹. The occupation of hunting; வேட்டையாடுந் தொழில். வேட்டுவன்னுந் தொழிலுடையானை வேட்டுவன் என்றவின் (தொல். பொ. 21, உரை).

வேட்டு² vēṭṭu, *n.* [T. *vēṭu.*] Report of a gun; வெடி. துப்பாக்கி வெடியிடவே வேட்டு (குருபா. சத. 63).

வேட்டுப்பறி-தல் vēṭṭu-p-paṟi-, *v. intr.* < வேட்டு² +. 1. To burst, explode, as a cartridge; வெடி வெடித்தல். 2. To break wind; அபானவாயு விடுதல்.

வேட்டுவன் vēṭṭuvaṉ, *n.* < வேடு¹. 1. See வேடன்¹. வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று (குறள், 274). (சூடா.) 2. One who goes hunting; வேட்டைக்குச் செல்வோன். யாக்கை வேட்டுவன் யானையும் பெறுமே (புறநா. 214). 3. Man of the *kuṟiñci* tract; குறிஞ்சிநிலத்திற்குரிய ஆடவன். ஆயர் வேட்டுவர் (தொல். பொ. 21). 4. Hornet; குளவி. (பிங்.) வேட்டுவ வாயப் புழுப்போல (சி. போ. 1, 2, 2). 5. The 10th *nakṣatra.* See மகம்². (பிங்.)

வேட்டுவாளி vēṭṭuvāḷi, *n.* cf. வேட்டுவன். See வேட்டுவன், 1. (சங்கரநா. 9, உரை.)

வேட்டுவாளியன் vēṭṭuvāḷiyaṉ, *n.* < வேட்டுவாளி. See வேட்டுவாளி. (சங். அக.)

வேட்டுவிடு-தல் vēṭṭu-viṭu-, *v.* < வேட்டு² +. *tr.* To steal, rob; திருடுதல். *Loc.*—*intr.* 1. See வேட்டுப்பறி-. 2. To fib; பொய்சொல்லு தல். *Madr.*

வேட்டுவித்தி vēṭṭuvitti, *n.* Fem. of வேட்டுவன். Woman of the *kuṟiñci* tract; குறிஞ்சிநிலப் பெண். (தொல். பொ. 20, உரை.)

வேட்டுவேளான் vēṭṭuvēḷāṉ, *n.* See வேட்டுவன், 4. கிட்டுறும் வேட்டுவேளான் குடம்பியில் (ஆசாரப. 11).

வேட்டை¹ vēṭṭai, *n.* < வேடு¹. [T. *vēṭa*, K. *bēṭa*, M. *vēṭṭa.*] 1. See வேட்டம்¹, 1. வேட்டை வேட்கையில் (கம்பரா. நகர்நீங். 74). 2. Hunt, game killed in hunting; வேட்டையிற் கிடைக்கும் பொருள். பிடித்தது நமக்கு வேட்டை வாய்த்ததின்று (திருவாலவா. 44, 38). 3. Murder; கொலை. ஆவினை யின்னுயிர் வேட்டை (திருநூற். 56).

வேட்டை² vēṭṭai, *n.* cf. எட்டை¹. (W.) 1. Weariness; இளைப்பு. 2. Affliction; துன்பம்.

வேட்டைக்கடா vēṭṭai-k-kaṭā, *n.* < வேட்டை¹ + கடா². Ram trained for hunting; வேட்டைக்குப் பழக்கிய கடா. (யாழ். அக.)

வேட்டைக்காரன் vēṭṭai-k-kāraṉ, *n.* < id. + காரன்¹. 1. See வேட்டுவன், 1. 2. Person belonging to the hunting caste; வேட்டையாடும் ஒரு சாதியான். *Loc.*

வேட்டைகட்டு-தல் vēṭṭai-kaṭṭu-, v. intr. <id.+. To go hunting; வேட்டைமேற் செல்லுதல். பொங்குகடல வேட்டைகட்டி (கொண்டலவிடு. 71).

வேட்டைநாய் vēṭṭai-nāy, n. <id.+. 1. A special breed of hunting dogs; வேட்டையாடப் பழகிய நாய்வகை. வேட்டைநாயபோற் கடிக்க வருகு சிலநேரம் (தனிப்பா. i, 264, 1). 2. Biting dog; கடிக்கும் நாய். (யாழ். அக.)

வேட்டைப்பல் vēṭṭai-p-pal, n. <id.+ பல்². Tusk, fang; வக்கிரதந்தம். (W.)

வேட்டைபிடி-த்தல் vēṭṭai-piṭi-, v. tr. <id.+. See வேட்டையாடு-. குலைக்கிற நாய் வேட்டைபிடிக்குமா?

வேட்டையவியல் vēṭṭai-y-aviyal, n. prob. id.+. A kind of curry preparation; அவியற்கறிவகை. (யாழ். அக.)

வேட்டையாடு-தல் vēṭṭai-y-āṭu-, v. tr. <id.+. To chase, hunt; கொல்லுதற்கேனும் பிடித்தற்கேனும் காட்டிலுள்ள விலங்கு முதலியவற்றைத் துரத்திச் செல்லுதல். கானகத் தெய்தி நீ வேட்டையாடி விலங்கின மாய்த்தது (அரிச. பு. வேட்டஞ். 3).

வேட்டைவாளி vēṭṭaivāḷi, n. cf. வேட்டுவாளி. A kind of hornet; குளவிவகை. (சோயிற்பு. பதஞ். 80, உரை.)

வேட்டோன் vēṭṭōṉ, n. <வேள்-. 1. Married man; விவாகமானவன். (சங். அக.) 2. Husband; கணவன். (நாமதீப. 193.) 3. Friend; நண்பன். (யாழ். அக.) 4. One who desires; விரும்புவோன். (பிங்.)

வேட்பித்தல் vēṭpittal, n. <வேட்பி-. Conducting sacrifices as priests, one of antaṇar-aṟu-toḻil, q.v.; அந்தணரறுதொழிலுள் ஒன்றனை வேள்விசெய்விக்கை. (பிங்.)

வேட்பு vēṭpu, n. <வேள்-. Desire; விருப்பம். (யாழ். அக.)

வேடகம் vēṭakam, n. prob. vēdhaka. An ear-ornament; காதணிவகை. (அக. நி.)

வேடங்கட்டு-தல் vēṭaṅ-kaṭṭu-, v. intr. <வேடம்¹+. To put on a disguise; மாறுவேஷம் கொள்ளுதல்.

வேடங்காட்டு-தல் vēṭaṉ-kāṭṭu-, v. intr. <id.+. To dissemble; to appear in false light; போலியாக நடித்தல். (W.)

வேடச்சி vēṭacci, n. Fem. of வேடன்¹. Woman of the hunter tribe; வேட்டுவச்சாதிப் பெண். Loc.

வேடச்சேரி vēṭa-c-cēri, n. <வேடன்¹+. Hamlet of hunters; வேடநூர்.

வேடணம் vēṭaṇam, n. <vēṣana. Surrounding; வளைக்கை. (சங். அக.)

வேடதாரி vēṭa-tāri, n. <vēṣa-dhārin. 1. Person in disguise; மாறுவேடம் பூண்பவ-ன்-ள். 2. Hypocrite; வஞ்சகமுடையவ-ன்-ள். (இலக். அக.)

வேடம்¹ vēṭam, n. <vēṣa. 1. Disguise; உடை முதலியவற்றற் கொள்ளும் வேற்றுவடிவம். கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள் . . . கொங்கை நற்றடம் படிந்தும் (திருவாச. 2, 15). 2. Clothes, dress; உடை.

வேடம்² vēṭam, n. <வேள்-. cf. வேட்டம்². [K. vēla.] Desire; விருப்பம். வேண்டற் கரிய விடயங்களின் வேட மாற்றி (பாரத. சம்பவ. 53).

வேடன்¹ vēṭaṉ, n. <வேடு¹. cf. vyādha. [T. vēṭa, K. bēḍa, M. vēḍan, Tu. vēdda.] 1. Hunter, fowler; வேட்டுவன். வெந்தொழில் வேடராத்து (சீவக. 421). 2. Man of the pālai tract; பாலைநிலத்திற்குரியவன். (திவா.)

வேடன்² vēṭaṉ, n. <வேடம்¹. See வேடதாரி, 1. (கந்தபு.).

வேடிக்கை vēṭikkai, n. [T. vēḍuka.] 1. Amusement, diversion; fun; விநோதம். மௌனக் கூடிக் கலந்திருந்து கொள்வதோ வேடிக்கை (பணவிடு. 314). 2. Show; விநோதக்காட்சி. வேடிக்கை பார்க்கப்போனான். 3. Decoration; அலங்கரிப்பு. (இலக். அக.)

வேடிக்கைக்காரன் vēṭikkai-k-kāraṉ, n. <வேடிக்கை+காரன்¹. Droll person; விநோதச் செய்கை யுடையவன்.

வேடிக்கைகாட்டு-தல் vēṭikkai-kāṭṭu-, v. intr. <id.+. To divert, amuse; விநோதச் செயல் செய்தல்.

வேடிக்கைசெய்-தல் vēṭikkai-cey-, v. intr. <id.+. See வேடிக்கைகாட்டு-.

வேடிக்கைப்பேச்சு vēṭikkai-p-pēccu, n. <id.+. Diverting talk, gossip; விநோதமான வார்த்தை.

வேடிச்சி vēṭicci, n. See வேடச்சி. வேடிச்சி கொங்கை விரும்புங் குமரனை (கந்தரல. 53).

வேடிதம் vēṭitam, n. prob. வேடு². Unpleasant smell, as in boiling medicinal plants; மூலிகைகளைக் காய்ச்சுதல் முதலியவற்றா லுண்டாம் நாற்றம். (W.)

வேடு¹ vēṭu, n. prob. வேள்-. [K. bēḍa.] 1. Hunting; வேடர்தொழில். வேட்டொடு வேய்பயி

வழுவத்துப் பிரிந்த நின்னும் (அகநா. 318). 2. The caste of hunters; வேடசாதி. வேடுமுடை வேடி கடம (திவ். இயற். நான்மு. 47). 3. Hunter, வேடன். (இலக்.அக.) 4. A kind of masquerade dance; வரிக்கூத்துவகை. (சிலப். 3, 13, உரை.)

வேடு² vēṭu, n. cf. vēst. [T. vēṣṭu, K. vēḍi, M. vēḍu.] 1. Cover for the mouth of a vessel; பாத்திரத்தின் வாயை மூடிச்சுட்டும் ஆடை. (W.) 2. Covering; மூடுகை. (யாழ். அக.) 3. Cloth for filtering or straining; வடிகட்டுசீலை. (W.) 4. Small packet; பொட்டணம். (யாழ். அக.)

வேடுகட்டு-தல் vēṭu-kaṭṭu-, v. intr. <வேடு² +. 1. To tie a cloth over the mouth of a pot; பானையின் வாயைச் சீலையால் கட்டுதல். (W.) 2. To tie into a bundle; பொட்டணங் கட்டுதல். (யாழ். அக.)

வேடுபறி vēṭu-paṟi, n. <வேடு¹ +. 1. Highway robbery; வழிப்பறி. சுந்தரர் வேடுபறி. 2. A festival celebrating Tirumaṅkai-maṉṉaṉ's attempt to rob Viṣṇu on the highway; திருமங்கைமன்னன் திருமாலை வழிப்பறிக்க முயன்றதைக் கொண்டாடுந் திருவிழா. (பெருந்தொ. 1863, தலைப்பு.)

வேடுவழி vēṭuvaḻi, n. Pulpy-podded black babul. See பீவேல். (L.)

வேடுவன் vēṭuvaṉ, n. <வேடு¹. 1. Hunter; வேடன். வீரத்தாலொரு வேடுவனாகி (தேவா. 485, 4). 2. See வேட்டுவன், 4. (யாழ். அக.)

வேடை¹ vēṭai, n. <வேள்-. cf. வேட்கை. [K. vēḍa.] 1. Desire, longing; வேட்கை. வள்ளிக்கு வேடைகொண்ட பெருமானே (திருப்பு. 288). 2. Lovesickness; காமநோய். கொண்டதோர் வேடை தீரும (கந்தபு. தநிவழித. 71). 3. Thirst; தாகம். சால வருந்தின வேடையொடு (கம்பரா. நிருவாடு. 24).

வேடை² vēṭai, n. <vēḍā. Boat, vessel, மரக்கலம். (யாழ். அக.)

வேடை³ vēṭai, n. prob. வே-. 1. Heat, intense dryness; வெப்பம். வேடையடுத்த வெருப்பினும் (திருவாரூ. 522). 2. Season of drought; மழையில்லாக் காலம். கொடிய வேடைப்படலாற் சோர்ந்து (இரகு. திருவவ. 29). 3. See வேடைக்காலம், 1.

வேடை⁴ vēṭai, n. perh. vēśa. cf. வாடை². Street where merchants live; செட்டிகள் வசிக்குந் தெரு. (யாழ். அக.)

வேடைக்காலம் vēṭai-k-kālam, n. <வேடை³ +. 1. Hot season, summer; கோடைக்காலம். (W.) 2. See வேடை³, 2.

வேண்¹ vēṇ, n. <வேள். A region where *koṭu-n-tamiḻ* was spoken. See வேணாடு. குடக்கற்கா வேண்பூழி (நன். 272, மயிலை.).

வேண்² vēṇ, n. <வேள்-. [M. vēṇ.] Desire; விருப்பம். (யாழ். அக.)

வேண்டப்பாடு vēṇṭappāṭu, n. See வேண்டற்பாடு. (தக்கயாகப். அரும.)

வேண்டல் vēṇṭal, n. <வேண்டு-. 1. Desiring; விரும்புகை. (பிங்.) 2. Petition; விண்ணப்பம். *Loc.*

வேண்டலன் vēṇṭalaṉ, n. <id. + அல neg. +. Enemy; பகைவன். (சேரப.)

வேண்டற்பாடு vēṇṭaṟ-pāṭu, n. <வேண்டல் +. 1. Desire; விருப்பம். (தக்கயாகப். 506, உரை.) 2. Need; தேவை. 3. Greatness, as compelling obeisance; பெருமை. அவன் தொழும் படியான வேண்டற்பாட்டையுடைய தான் தொழா நின்றான (ஈடு, 2, 4, 4). 4. Pride; கருவம். பூதகணங்கள் தாருடைப்பகவானை வேண்டற்பாடு கெடுத்தது (தக்கயாகப். 554, உரை).

வேண்டாத்தலைவன் vēṇṭā-t-talaivaṉ, n. <வேண்டு- + ஆ neg. + தலை. (யாழ். அக.) 1. Dare-devil; அஞ்சாநெஞ்சன். 2. Rough-mannered person; முருடன்.

வேண்டாத்தனம் vēṇṭā-t-taṉam, n. <id. + id. + தனம்¹. *Loc.* 1. Wrong, wickedness; தவறு. 2. See வேண்டாப்பொறுப்பு.

வேண்டாதகாரியம் vēṇṭāta-kāriyam, n. <id. + id. +. Unnecessary act or business; அநுவசியமான செயல்.

வேண்டாதவன் vēṇṭātavaṉ, n. <id. + id. +. 1. Undesirable man; விரும்பப்படாதவன். 2. Enemy; பகைவன்.

வேண்டாதார் vēṇṭātār, n. <id. + id. +. 1. Those who have no desires; விருப்பமற்றவர். வேண்டுதல் வேண்டாமை யிலானடி (குறள், 4) ... 103). 2. See வேண்டார், 2. வேண்டாதார் நெஞ்சுட்க (கலித். 100).

வேண்டாப்பாடு vēṇṭā-p-pāṭu, n. <id. + id. +. See வேண்டாப்பொறுப்பு. *Loc.*

வேண்டாப்பொறுப்பு vēṇṭā-p-poṟuppu, n. <id. + id. +. Indifference; irresponsibility; பொறுப்பின்மை. *Loc.*

வேண்டாம் vēṇṭām, v. opt. <id. + id. 1. Verb meaning 'will not be required' or 'will not be necessary, indispensable'; இன்றியமையாது வேண்டத்தக்கதன்று என்பது குறிக்கும் வியங்கோள்வினை. ஓதம வொருநாளு மிருக்கவேண்டாம். 2. Verb in the future tense used in all genders, numbers and persons meaning (a) 'will not be required'; இன்றியமையாததன்று என்ற பொருளில் ஐம்பால் மூவிடத்திற்கும் உரியதாய் வரும் எதிர்கால

வினைமுற்று: (b) 'will stand in no relation to'; உறவின்மை முதலியவற்றைக் குறித்து ஐம்பால் மூவிடத்திற்கும் உரியதாய் வரும் எதிர்கால வினைமுற்று. 3. Auxiliary verb meaning must not'; அவசியமின்மை என்பதைக் குறிக்கும் வினை.

வேண்டாமை vēṇṭāmai, n. <id.+id.+. 1. Aversion, dislike; வெறுப்பு. வேண்டுதல் வேண்டாமையிலான (குறள், 4). 2. Absence of desire; contentment; அவாவின்மை. வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை (குறள், 363).

வேண்டார் vēṇṭār, n. <id.+id.+. 1. See வேண்டாதார், 1. 2. Enemies; பகைவர். வேண்டார் பெரியா விறல்வேலோன் ருனிளையன் (பு. வெ. 10, பொது. 6).

வேண்டாவெறுப்பு vēṇṭā-veṟuppu, n. <id.+id.+. Indifference, unconcern; உபேட்சை. அவன் அந்தக் காரியத்தை வேண்டாவெறுப்பாய்ச் செய்கிறான்.

வேண்டி vēṇṭi, prep. <id. For the sake of; பொருட்டு. அதை எனக்கு வேண்டிச் செய்.

வேண்டிக்கேள்-தல் [வேண்டிக்கேட்டல்] vēṇṭi-k-kēḷ-, v. tr. <id.+. To beseech; மன்றாடிக்கேட்டல். (யாழ். அக.)

வேண்டிக்கொள்(ளு)-தல் vēṇṭi-k-koḷ-, v. tr. <id.+. To solicit, pray for, request; பிரார்த்தித்தல்.

வேண்டிய vēṇṭiya, adj. <id. 1. Indispensable; இன்றியமையாத. 2. Required; தேவையான. 3. Sufficient; போதுமான. 4. Many; மிகுதியான. வேண்டிய நாள் என்னோடும் பழகிய நீ (தாயு. மண்டலத். 10).

வேண்டியது vēṇṭiyatu, n. <id. 1. That which is indispensable; இன்றியமையாதது. பயிருக்கு வேண்டியது மழை. 2. That which is required; தேவையானது. பானை செய்யக் குயவனுக்கு மண்ணோடு சக்கரமும் தண்டமும் வேண்டியது. 3. That which is sufficient; போதுமானது. 4. That which is abundant; மிகுதியானது. 5. See வேணது, 2.

வேண்டியமட்டும் vēṇṭiya-maṭṭum, adv. <வேண்டிய+. 1. As much as is indispensable; அவசியமான அளவில். 2. As much as is required; தேவையான அளவில். 3. Sufficiently; போதுமான அளவில். 4. Abundantly; மிகுதியாக.

வேண்டியவன் vēṇṭiyavaṉ, n. <id +. 1. Friend, favourite; பிரியத்துக்குரியவன். 2. Well-wisher, interested person; ஒருவனது நன்மையை நாடுபவன். அரசனுக்கு மந்திரி வேண்டியவன்.

வேண்டியிரு-த்தல் vēṇṭi-y-iru-, v. intr. <id.+இரு-. To be necessary or indispensable; இன்றியமையாததா யிருத்தல். இந்தக்காலத்திற்குப் படாடோபம் வேண்டியிருக்கிறது.

வேண்டு-தல் vēṇṭu-, 5 v. cf. வேள்-. [K. bēḍu.] tr. 1. To want, desire; விரும்புதல். பகலோடு செல்லாது நின்றீயல் வேண்டுவன் (கலித். 145). 2. To beg, entreat, request; பிரார்த்தித்தல். வேண்டித்தேவ ரிரக்கவந்து பிறந்ததும் (திவ். திருவாய். 6, 4, 5). (பிங்.) 3. To listen to with eagerness; விரும்பிக் கேட்டல். அன்னைவாழி வேண்டன்னை (ஐங்குறு. 101). 4. To buy, purchase; விலைக்கு வாங்குதல். (நாமதீப. 704.)—intr. To be indispensable; to be necessary; இன்றியமையாததாதல். வேண்டுமே காக்கை கடிவதோர் கோல் (நாலடி, 41).

வேண்டுகோள் vēṇṭu-kōḷ, n. <வேண்டு-+கொள்-. Supplication, request, entreaty; பிரார்த்தனை. வென்றுபததிரஞ் செய்துநின் வேண்டுகோளென்றுரா (திருவிளை. விறகு. 51).

வேண்டுநர் vēṇṭunar, n. <id. Those who wish for or desire a thing; விரும்புவோர். வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட (திருமுரு. 248).

வேண்டும் vēṇṭum, v. opt. <id. 1. Verb meaning 'will be required' or 'will be necessary, indispensable'; இன்றியமையாது வேண்டத்தக்கது என்பது குறிக்கும் வியங்கோள்வினை. வேதனீயாகி வையமிசைபடக் காததல வேண்டுமே (சீவக. 201). 2. Verb in the future tense used in all genders, numbers and persons, meaning (a) 'will be required'; இன்றியமையாதது என்ற பொருளில் ஐம்பால் மூவிடத்திற்கும் உரியதாய் வரும் எதிர்கால வினைமுற்று. எனக்குப் புஸ்தகம் வேண்டும்: (b) 'will stand in relation to'; உறவு முதலியவற்றைக் குறித்து ஐம்பால் மூவிடத்திற்கும் உரியதாய் வரும் எதிர்கால வினைமுற்று. அவன் உனக்கு என்ன வேண்டும்? 3. Auxiliary verb meaning 'must'; அவசியம் என்பதைக் குறிக்கும் வினை.

வேண்டுமென்று vēṇṭum-eṉṟu, adv. <வேண்டும்+என்-. 1. Intentionally; முழுமனதோடு. அதை வேண்டுமென்று செய்தேன். 2. Wilfully; பிடிவாதமாய். பலர் தடுக்கவும் வேண்டுமென்று அந்தக் காரியத்தைச் செய்கிறான்.

வேண்மாள் vēṇmāḷ, n. Fem. of வேண்மான். Woman of Vēḷir-tribe; வேளிர்குலப் பெண். வேண்மாள் அந்துவஞ் செள்ளை (பதிற்றுப. 9-ஆம் பதி.).

வேண்மான் vēṇ-māṉ, n. <வேள்+மான்². Male member of Vēḷir-tribe; வேளிர்குலத்து மகன். நன்னன் வேண்மான் (அகநா. 97).

வேண vēṇa, *adj.* < வேண்டு-. See வேண்டிய.

வேணகை vēṇakai, *n.* Surrounding wall, outer fortification; சுற்றுமதில். (பிங்.)

வேணது vēṇatu, *n.* < வேண்டியது. 1. See வேண்டியது, 1, 2, 3, 4. 2. Whatever strikes the mind; மனத்துத்தோன்றியது. காணுமல் வேண தெல்லாங் கத்தலாம (தனிப்பா. 1, 92, 6).

வேணவா vēṇ-avā, *n.* < வேட்கை + அவா. Ever-increasing desire; intense desire; வேட்கைப் பெருக்கம். (தொல். எழுத். 288, உரை.) (பிங்.)

வேணன் vēṇaṉ, *n.* < *vēṇa*. Person born of a barber girl and a Vaitēkaṉ; வைதேகனுக்கு அம்பட்டப் பெண்ணினிடம் பிறந்தவன். (சங். அக.)

வேணாட்டடிகள் vēṇāṭṭaṭikaḷ, *n.* < வேணாடு + அடிகள். 1. Ruler of Vēṇāṭu; வேணாட்டு அரசன். (T. A. S. ii, 184.) 2. A Śaiva saint, one of the authors of Tiru-v-icai-p-pā; திருவிசைப்பா வியற்றிய ஆசிரியருள் ஒருவரான பெரியார். (திருவிசைப. பாயி. 3.)

வேணாடர் vēṇāṭar, *n.* < id. See வேணாட்டடிகள். (திருவிசைப. பாயி. 2.)

வேணாடு vēṇāṭu, *n.* < வேள் + நாடு. The region comprising the major portion of modern Travancore, where a dialect of Tamil was spoken, one of 12 *koṭun-tamiḻ-nāṭu*, q.v.; கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டனுள் திருவிதாங்கூர்ச் சீமையின் பெரும்பகுதி அடங்கிய பிரதேசம். (நன். 273.) (T. A. S. i, 296.)

வேணாவியோர் vēṇāviyōr, *n.* A band of Ṛṣis who accompany the sun obstructing the heat of the sun from affecting the earth fully and thus prevent suffering; சூரியவெப்பத்தால் உலகந் துன்புறாமல் அதனைத் தம்மேல் தாங்கி அச் சூரியனுடன் செல்லும் ஒருசார் முனிவர்கணம். (புறநா. 43, உரை.)

வேணி[1] vēṇi, *n.* < *vēṇī*. 1. Matted hair; சடை. 2. Plaited lock of hair; பின்னிய மயிர். (பிங்.) 3. Root; மரவேர். (யாழ். அக.) 4. Sweet flag; வசம்பு. (தைலவ. தைல. 19.) 5. River; நதி. (பிங்.) 5. Flood; நீர்ப்பெருக்கு. (இலக். அக.)

வேணி[2] vēṇi, *n.* cf. *śrēṇī*. (பிங்.) 1. Street; தெரு. 2. Village; சேரி.

வேணி[3] vēṇi, *n.* cf. வியன்[1]. 1. Atmospheric space; ஆகாசம். (பிங்.) 2. Open space; வெளி. (இலக். அக.)

வேணிகை vēṇikai, *n.* < *vēṇikā*. Braided hair; பின்னிய மயிர். (யாழ். அக.)

வேணியளம் vēṇiyaḷam, *n.* A kind of *mattaḷam*; மத்தளவகை. (பரத. ஒழிபி. 13.)

வேணினர் vēṇiṉar, *n.* < வேணவு-. Those who love or desire; விரும்புவோர். மேலவனை விருப்பத் தூமம வேணின ரேணினரோ (சிவதரு. சுவர்க்க. மீசட. 48).

வேணீர் vēṇīr, *n.* < வேள்- + நீர்[1]. Water to allay thirst; தாகவேட்கை நீங்க உண்ணுநீர். வேணீ ருண்ட குடையோ ரன்னர் (கலித். 23).

வேணீரம் vēṇīram, *n.* < *vēṇīra*. Soap-nut. See பூவந்தி[1], 1. (மூ. அ.)

வேணு vēṇu, *n.* < *vēṇu*. 1. Bamboo; மூங்கில். (பிங்.) 2. Reed-pipe; புல்லாங்குழல். வேணுகானம். 3. Hollow tube; உட்டுளையுள்ள குழல். (பிங்.) 4. Bow; வில். (பிங்.) வேணுவாபுரி தொடை புரளவாங்கி (திருக். மீட்சிப். 65). 5. Sagittarius of the zodiac; தனுராசி. (இலக். வி. 882.) 6. Sword; வாள். (சூடா.)

வேணுகம் vēṇukam, *n.* < *vēṇuka*. Elephant's goad; யானைத்தோட்டி. (சிந்தாமணி நிகண்டு.)

வேணுகானம் vēṇu-kāṉam, *n.* < *vēṇu* + *gāna*. Music of the reed-pipe; புல்லாங்குழலிசை.

வேணுகோபாலன் vēṇu-kōpālaṉ, *n.* < id. + . Kṛṣṇa, as a cowherd playing the reed-pipe; புல்லாங்குழல் வாசிக்குங் கண்ணபிரான்.

வேணுசம் vēṇucam, *n.* < *vēṇu-ja*. Bamboo seed; மூங்கிலரிசி. (இலக். அக.)

வேணுநாதன் vēṇu-nātaṉ, *n.* < வேணு + நாதம். Flute-player; குழல் வாசிப்போன். (யாழ். அக.)

வேணுபலம் vēṇu-palam, *n.* < *vēṇu* + *phala*. See வேணுசம். (மூ. அ.)

வேணுபுரம் vēṇu-puram, *n.* < id. + *pura*. Shiyali. See சீகாழி. (காமதிப். 507.)

வேணும் vēṇum, *v. opt.* See வேண்டும் வேணுமாகில் வேணுமென்று (பாரத. சூது. 165).

வேணுமென்று vēṇum-eṉṟu, *adv.* < வேணும் + . See வேண்டுமென்று. *Colloq.*

வேணுனம் vēṇuṉam, *n.* < *vēṇuna*. Black pepper; மிளகு. (மூ. அ.)

வேணூல் vēṇūl, *n.* < வேள் + நூல். Treatise on erotics; காமசாத்திரம். அம்மடவாரிய லானவும் . . . ஆடவர் செய்கையும் . . . விளம்பிடும் வேணூல் (கந்தபு. இந்திரபுரி. 25).

வேத்தவை vēttavai, n. < வேந்து + அவை³. Royal assembly; இராசசபை. இசைபெறு திருவின் வேத்தவை (மலைபடு. 39).

வேத்தன்¹ vēttaṉ, n. < vēttṛ. One who knows; அறிந்தோன். (இலக். அக.)

வேத்தன்² vēttaṉ, n. < vēdya. See வேத்தியன். (கம்பரா. மீட்சிப. 116.)

வேத்தியம் vēttiyam, n. < vēdya. 1. That which is known; அறியப்படுவது. அருபலத்தி வேத்தியம் (சி. சி. அளவை, 1, சிவாக். பக். 113). 2. Mark, sign; அடையாளம். (யாழ். அக.)

வேத்தியல் vēttiyal, n. < வேந்து + இயல். 1. Kingly nature; வேந்தனது தன்மை. (நன். 409, மயிலை.) 2. (Nāṭya.) A kind of dance performed in the presence of a king, opp. to potu-v-iyal; அரசர்முன் ஆடும் கூத்துவகை. வேத்தியல் பொதுவியலென விருதிறத்துக் கூத்தும் (சிலப. 14, 148, உரை). 3. (Puṟap.) See வேத்தியன்மலிபு. (புறநா. அரும.)

வேத்தியன் vēttiyaṉ, n. < vēdya. One who is knowable; அறியத்தக்கவன். சட்சுவினால் வேதியன்.

வேத்தியன்மண்டபம் vēttiyaṉ-maṇṭapam, n. < வேத்தியல் +. Durbar hall of a king; அரசனது பேரோலக்க மண்டபம். வேத்தியன்மண்டப மேவியபின்னர் (சிலப. 28, 79).

வேத்தியன்மலிபு vēttiyaṉ-malipu, n. < id. +. (Puṟap.) Theme in which warriors expatiate upon the greatness of a heroic-king; மறமன்னனது மேம்பாட்டினை வீரர் சொல்லுதலைக் கூறும் புறத்துறை. (பு. வெ. 2, 13.)

வேத்திரகரன் vēttira-karaṉ, n. < vētra-kara. Nanti; நந்திதேவன். (இலக். அக.)

வேத்திரகீயம் vēttirakīyam, n. < vētra-kīya. A place mentioned in the Mahābhārata, where the Pāṇḍavas lived in disguise as Brahmins after the burning of the lac palace; அரக்கு மாளிகை நெருப்பாலழிந்தபின் பாண்டவர்கள் பார்ப்பனக்கோலம்பூண்டு வாழ்ந்ததாக மகாபாரதத்திற் கூறப்படும் ஓர் இடம். வேத்திரகீயச்சருக்கம் (பாரத.)

வேத்திரச்சாய் vēttira-c-cāy, n. < வேத்திரம்¹ + சாய்⁵. A sedge. See பிரப்பங்கோரை. (தைலவ.)

வேத்திரத்தாள் vēttira-t-tāḷ, n. < id. + தாள்¹. Tuber of rattan reed; பிரப்பங் கிழங்கு. (தைலவ.)

வேத்திரதரன் vēttira-taraṉ, n. < vētra-dhara. 1. Gate-keeper; வாயில் காவலன். (W.) 2. Nanti; நந்திதேவன். (யாழ். அக.) 3. Herald, panegyrist; கட்டியக்காரன். (யாழ். அக.)

வேத்திரதாரகன் vēttira-tārakaṉ, n. < vētra-dhāraka. See வேத்திரதரன். (யாழ். அக.)

வேத்திரப்படை vēttira-p-paṭai, n. < வேத்திரம்¹ +. Cane, as a weapon; பிரம்பாகிய ஆயுதம். வேத்திரப்படையாற் றுக்கி (திருவிளை. பாயி. 17).

வேத்திரபாணி vēttira-pāṇi, n. < vētra-pāṇi. Attendant who, with a cane in his hand, maintains order in a crowd; கூட்டத்தை ஒதுக்குதற்குக் கையிற் பிரம்பு தாங்கியுள்ள பணியாளன். (கோயிலொ. 57.)

வேத்திரம்¹ vēttiram, n. < vētra. 1. Rattan. See பிரம்பு, 1. வேத்திரக் கரத்தோர் (தணிகைப்பு. அகத்தி. 84). 2. Arrow; அம்பு. (W.)

வேத்திரம்² vēttiram, n. prob. bādira. Jujube tree. See இலந்தை¹. (மலை.)

வேத்திராசனம் vēttirācaṉam, n. < vētra + āsana. Rattan mat; பிரப்பம்பாய். (இலக். அக.)

வேதக்கட்டி vēta-k-kaṭṭi, n. < வேதம்¹ +. One who has learned the Vēdas by heart; வேதத்தை நன்கு ஓதியவன். Loc.

வேதக்காரன் vēta-k-kāraṉ, n. < id. + காரன்¹. Christian; கிறிஸ்தவன். Chr.

வேதக்கொடியோன் vēta-k-koṭiyōṉ, n. < id. + கொடி. Drōṇācārya; துரோணாசாரியன். (பிங.)

வேதகப்பொன் vētaka-p-poṉ, n. < வேதகம்¹ +. Refined gold; புடமிட்ட பொன். அல்லாத பொன்னிற்காட்டில் வேதகப்பொன்னுக்கு ஏற்றமுண்டு (திவ். திருமாலை, 39, வ்யா.).

வேதகம்¹ vētakam, n. < bhēdaka. 1. Differentiating, distinguishing; வேறுபடுத்துகை. உயிரு மாயா வுடலையும் வேதகஞ்செய் தாண்டவங்கணனே (கோயிற்பு. இரணிய. 56). 2. Change, modification; வேறுபாடு. விண்களி கூரவோர் வேதகம் வந்து வெளிப்படு மாகாதே (திருவாச. 49, 1). 3. Dissension, disunion; விரோதம். அவனால் இவ்வளவு வேதகமு முண்டாயிற்று. 4. Treachery, treason; துரோகம். வேதகமுண்டானால் இராச்சியம் சீரழியும். 5. Refining, as of gold; புடமிடுகை. வேதகப்பொன். 6. Refined gold; புடமிட்ட பொன். விளங்காநின்ற வேதகமே (தாயு. பெற்றவட். 10). 7. Agent to transmute baser metals into gold; இரும்பு முதலிய உலோகங்களைப் பொன்னாக்கும் பண்டம். இன்புறு வேதகத் திரும்பு பொன்னானாற் போல (பெரியபு. கண்ணப். 154). 8. cf. வேதங்கம். Small fine cloth; சிறுதுகில். (பிங.)

வேதகம்² vētakam, n. < vēdhaka. 1. Camphor; கர்ப்பூரம். (இலக். அக.) 2. Grain; தானியம். (யாழ். அக.)

வேதகம்[3] vētakam, *n.* <*vēdaka*. Disclosure; வெளிப்படுத்துகை. *இரகசியத்தை வேதகம் பண்ணலாகாது.*

வேதகருப்பன் vēta-karuppaṉ, *n.* <*vēda* + *garbha*. (யாழ். அக.) 1. Brahmā; பிரமன். 2. Brahmin; பார்ப்பான்.

வேதகலாபம் vēta-kalāpam, *n.* <id. + கலாபம்[2]. Religious persecution; மதப்பற்றுக் காரணமாக விளைக்கும் இமிசை. (W.)

வேதகன்[1] vētakaṉ, *n.* <*bhēdaka*. One who transmutes or changes the nature of things; ஒன்றின் தன்மையை வேறுபடுத்துவோன். *போதகன் வேதகன் பொருவிலன்* (சிவதரு. கோபுர. 104).

வேதகன்[2] vētakaṉ, *n.* <*vēda-ka*. One who reveals; அறிவிப்பவன். *வித்தகன் வேதக னருளி விளம்பிய வாய்மொழி* (சிவதரு. சிவஞானதான. 21).

வேதகாரன் vēta-kāraṉ, *n.* <*vēta-kāra*. 1. Worker in bamboo; கூடை பின்னுவோன். (சூடா. 2, 32.) 2. Weaver; நெய்வோன். (யாழ். அக.)

வேதகிரி vēta-kiri, *n.* <*vēda* + *giri*. The hill of Tiru-k-kaḻu-k-kuṉṟam; திருக்கழுக்குன்றம்.

வேதகீதன் vēta-kītaṉ, *n.* <id. + *gīta*. God, as praised in the Vēdas; [வேதத்தினாற் புகழ்ந்து பாடப்படுவோன்] கடவுள். *வேதியா வேதகீதா* (தேவா. 870, 1). *நச்சுநா கணைக்கிடந்த நாதன் வேத கீதனே* (திவ். திருச்சந். 117).

வேதகோஷ்டி vēta-kōṣṭi, *n.* <id. + . Band of Brahmins chanting Vēdas, in temple, etc.; கோயில் முதலியவற்றில் வேதபாராயணஞ் செய்யும் பார்ப்பனர் தொகுதி.

வேதகோஷம் vēta-kōṣam, *n.* <id. + *ghōṣa*. The sound of chanting the Vēdas. See வேதவொலி.

வேதங்கம் vētaṅkam, *n.* cf. வேதகம்[1]. A kind of fine cloth; ஒருவகைத் துகில். (சிலப். 14, 108, உரை.)

வேதசங்கிதை vēta-caṅkitai, *n.* <*vēda* + *saṃhitā*. Portions of the Vēdas recited in long sections; சிறுசிறுவாக்கியமாகவன்றித் தொடர்ச்சியாக ஓதப்படும் வேதப்பகுதி.

வேதசம்[1] vētacam, *n.* <*vētasa*. 1. Rattan-palm, m. cl., *Calamus rotang*; பிரம்புவகை. (இலக். அக.) 2. Sacred grass. See நாணற்புல். (சங்.)

வேதசம்[2] vētacam, *n.* <*vēdhasa*. Part of the hand under the root of the thumb; பெருவிரலடி. (யாழ். அக.)

வேதசாட்சி vēta-cāṭci, *n.* <வேதம்[1] + . Martyr for religion; மதத்தை நிலைநாட்டுவதற்காக உயிர்கொடுத்தவன். *R. C.*

வேதசாரம்[1] vēta-cāram, *n.* <*vēda* + . 1. The essence of the Vedas; வேதத்தின் சாரமானது. *ஆகையால் இச்சகல வேதசாரம்* (அஷ்டப். முமுட்சுப். பிரமேய. 31). 2. See வேதசீயம். (சங். அக.)

வேதசாரம்[2] vētacāram, *n.* cf. *vētasa*. See வேதசம்[1], 2. (சங். அக.)

வேதசாஸ்திரம் vēta-cāstiram, *n.* <*vēda* + . 1. The Vedas; வேதமாகிய நூல். 2. The Vēdas and the Śāstras; வேதங்களும் அதன் அங்கங்களாகிய சாஸ்திரங்களும். 3. Theology; சமயஞானம். *Chr.*

வேதசாஸ்திரி vēta-cāstiri, *n.* <*vēda-śāstrin*. One learned in the Vēdas and the Śāstras; வேதங்களையும் சாஸ்திரங்களையும் நன்கு ஓதியவன். (W.)

வேதசிரசு vēta-ciracu, *n.* <*vēda-śiras*. The Upaniṣads; உபநிடதம். (சி. போ. பா. சி. 32.)

வேதஞ்ஞன் vētaññaṉ, *n.* <*vēda-jña*. Vēdic scholar; வேதமறிந்தவன். (இலக். அக.)

வேதண்டம் vētaṇṭam, *n.* <*vētaṇḍa*. 1. Mountain; மலை. *வெள்ளி வேதண்டத்து* (சீவக. 546). 2. Mt. Kailāsa; கைலாசம். (பிங்.) 3. Mt. Potiyil; பொதியமலை. (யாழ். அக.) 4. Elephant; யானை. (பொதி. நி.)

வேதத்தன் vētattaṉ, *n.* <வேதம்[1]. Brahmā; பிரமன். *வைகா தானத்தே செய்தா ளிவையை வேதத்தனே* (தனிப்பா. 1, 225, 16).

வேதத்திரயம் vēta-t-tirayam, *n.* <*vēda-traya*. The three Vēdas, *irukku, yacu, cāmam*; இருக்கு யசு சாமம் என்ற மூன்று வேதங்கள்.

வேததத்துவம் vēta-tattuvam, *n.* <*vēda* + . The Vēdic truth; வேதத்தின் மெய்ப்பொருள். (யாழ். அக.)

வேதநாதம் vēta-nātam, *n.* <id. + . See வேதவொலி. *வேதநாதமும் . . . திரைத்தோங்க* (பெரியபு. திருஞான. 55).

வேதநாதன் vēta-nātaṉ, *n.* <id. + . See வேதநாயகன். *வேதநாதனைப் பாடலே கடன்* (திருவிளை. விறகு. 69).

வேதநாயகன் vēta-nāyakaṉ, *n.* <id. + . God, as the Lord of the Vēdas; [வேதங்களுக்குத் தலைவன்] கடவுள். *வேதநாயகன் மார்பகத் தினிது வீற்றிருக்கும் ஆதிநாயகி* (கம்பரா. அகலிகைப். 16).

வேதநாயகி vēta-nāyaki, *n.* <id.+. Fem. of வேதநாயகன். 1. Pārvatī; பார்வதி. *வேதநாயகி தோகை விழுகவே* (தக்கயாகப. 609). 2. Lakṣmī; இலக்குமி.

வேதநாவர் vēta-nāvar, *n.* <வேதம்[1] + நா[2]. Brahmins; பிராமணர். *வேதநாவர் விரும்புந் திருக் கண்ணபுரத் தாதியானே* (திவ். திருவாய். 9, 10, 9).

வேதநிந்தகன் vētā-nintakaṉ, *n.* <*vēda* +*nindaka*. 1. One who blasphemes the Vēdas; வேதப்பிராமாணியத்தை ஒப்பாது இகழ் பவன். 2. Atheist; நிரீச்சுரவாதி. (சங். அக.)

வேதநீயம் vētanīyam, *n.* <*vēdanīya*. (Jaina.) The karma which causes one to experience pleasure and pain, one of *eṇ-kuṟṟam*, q.v.; எண்குற்றங்களுள் ஒன்றும் இன்ப துன்பங்களை நுகர்விக்கும் கருமம். (பிங்.) (சிலப். 10, 177, உரை.)

வேதநூல் vēta-nūl, *n.* <வேதம்[1]+. See வேதசாஸ்திரம். *வேதநூற் பிராய நூறு* (திவ். திரு மாலை, 3).

வேதநெறி vēta-neṟi, *n.* <id.+நெறி[3]. See வேதமார்க்கம். *வேதநெறி தழைத்தோங்க* (பெரியபு. திருஞான. 1).

வேதப்பிரமாணம் vēta-p-piramāṇam, *n.* <*vēda*+. The Vēdas, considered as a source of right knowledge; வேதமாகிய அளவை.

வேதப்பிராமாணியம் vēta-p-pirāmā-ṇiyam, *n.* <id.+. The authority or evidence of the Vēdas; வேதம் பிரமாணமாயிருக்குந் தன்மை. *பௌத்தர் வேதப்பிராமாணியம் கொளவதில்லை*.

வேதப்பிரான் vēta-p-pirāṉ, *n.* <வேதம்[1] +. See வேதநாயகன். *மெய்க்கொண்டு வந்துபுகுந்து வேதப்பிரானார் கிடந்தார்* (திவ். பெரியதி. 5, 2, 1).

வேதப்புரட்டு vēta-p-puraṭṭu, *n.* <id.+. 1. Tampering with the Vēdas; வேதவாக்கியங் களைப் புரட்டிக்கூறுகை. 2. Heresy; புறமதம். *Chr.*

வேதபாகியம் vēta-pākiyam, *n.* <*vēda* +*bāhya*. That which is outside the authority of the Vēdas; வேதத்துக்குப் புறம்பானது.

வேதபாகியன் vēta-pākiyaṉ, *n.* <id.+ id. One who does not believe in the authority of the Vēdas; வேதத்துக்குப் புறம்பான வன்.

வேதபாடசாலை vēta-pāṭacālai, *n.* <id. +. School where the Vēdas are taught; வேதங்கள் கற்பிக்கப்படும் பள்ளிக்கூடம்.

வேதபாடம் vēta-pāṭam, *n.* <id.+ பாடம்[2]. 1. Study of the Vēdas; வேதமோதுகை. 2. The mode of reciting the Vēdas; வேத மோதும் முறை.

வேதபாரகன் vēta-pārakaṉ, *n.* <id.+. 1. Brahmin, as well versed in the Vēdas; [வேதங் கரைகண்டவன்] பிராமணன். *மணிமுத்தின் சிவிகை நின்றும் வேதபாரக ரிழிந்து* (பெரியபு. திரு ஞான. 1019). (பிங்.) 2. Scribe, expounder of the Jewish law; யூதவேதத்தை விளக்குபவன். *Chr.*

வேதபாராயணம் vēta-pārāyaṇam, *n.* <id.+. Chanting of the Vēdas, in temple, etc., by Brahmins; கோயில்முதலிய இடங்களிற் பிராமணர் வேதத்தை ஓதுகை

வேதபாராயணன் vēta-pārāyaṇaṉ, *n.* <id + பாராயணன்[1]. Reciter of the Vēdas; வேதத்தை ஓதுபவன். (அஷ்டப. திருவேங்கடமா. காப்பு).

வேதபீசம் vēta-pīcam, *n.* <id.+*bīja*. The mystic letter Ōm or *praṇava*, as the source or origin of the Vēdas; வேதமூலமான பிரணவ மந்திரம்.

வேதபுருஷன் vēta-puruṣaṉ, *n.* <id.+. The Vēdas, personified as a god; வேதமாகிய தெய்வம்.

வேதபுஸ்தகம் vēta-pustakam, *n.* <id.+. 1. The Vēdas, as a sacred work; வேதநூல். 2. The Bible; விவிலியநூல். *Chr.*

வேதம்[1] vētam, *n.* <*vēda*. 1. The Vēdas, the sacred books of the Hindus; இந்துசமயி களுக்குரிய சுருதி. (பிங்.) 2. The Jaina scriptures. See சைனுசமயம். *விண்ணவன் வேதமுதல்வன்* (சிலப். 10, 89). 3. The Bible; விவிலியநூல். *Chr.* 4. Art, science; சாஸ்திரம். *ஆயுர்வேதம், தனுர்வேதம்.* 5 Religious code of any sect; சமயமுதனூல். 6. Knowledge; அறிவு. (யாழ். அக.) 7. Exposition; விவரிக்கை. (யாழ். அக.)

வேதம்[2] vētam, *n.* <*vēdha*. 1. Boring, drilling, துளையிடுகை. *வேத நன்மணி* (கம்பரா. மீட் சிப். 29). 2. Depth; ஆழம். (யாழ். அக.)

வேதம்[3] vētam, *n.* Climbing staff plant. See வாலுளுவை, 1. (மலை.)

வேதமத்தியம் vētamattiyam, *n.* prob. *vēdha-madya*. (Mus.) A *yati* in time-measure; தாளத்துக்குரிய யதியுள் ஒன்று. (பரத. தாள. 52.)

வேதமந்திரம் vēta-mantiram, *n.* <*vēda* +. Vēdic mantra; வேதத்திலுள்ள மந்திரம்.

வேதமாதா vēta-mātā, *n.* <id.+. The Gāyatrī mantra, as the mother of the Vēdas; [வேதங்களின் தாய்] காயத்திரி மந்திரம். *வேதமாதா*

வென விமலமூர்த்தியும் . . . காயத்திரி (சேதுபு. சேதுபல. 131).

வேதமாந்தர் vēta-māntar, n. < வேதம்[1] +. Brahmins; பார்ப்பனர். வேதமாந்தர் வேந்த ரென்று (நம்பியகப். 75).

வேதமார்க்கப்பிரதிஷ்டாபனாசாரியர் vēta-mārkka-p-piratiṣṭāpaṉācāriyar, n. < vēda + mārga + pratiṣṭhāpana + ā-cārya. Holy teacher who establishes the Vēdic faith; வேத நெறியை நிலைநிறுத்தும் ஆசிரியர். *Vaiṣṇ.*

வேதமார்க்கம் vēta-mārkkam, n. < id. +. The Vēdic religion or faith; வேதத்திற் சொல்லப்பட்ட மதம். (பிங்.) (தக்கயாகப். 7, உரை.)

வேதமுக்கியை vēta-mukkiyai, n. prob. id. + mukhyā. Musk; கஸ்தூரி. (சங். அக.)

வேதமுடி vēta-muṭi, n. < வேதம்[1] +. See வேதசிரசு. (இலக். அக.)

வேதமுதல்வன் vēta-mutalvaṉ, n. < id. +. 1. God; கடவுள். வேதமுதல்வனென்ப தீதற விளங்கிய திகிரியோனே (நற். 1). 2. Brahmā; பிரமன். வேதமுதல்வற் பயந்தோன் (சிலப். 14, 48).

வேதமுதல்வி vēta-mutalvi, n. < id. +. Fem. of வேதமுதல்வன். (பிங்.) 1. Sarasvatī; சரசுவதி. 2. Lakṣmī; இலக்குமி. 3. Pārvatī; பார்வதி.

வேதமுனி vēta-muṉi, n. < id. + முனி[3]. See வேதவியாசன். வேதமுனி சூதமுனி (திருக்காளத். பு. அவையடக். 1).

வேதமூர்த்தி vēta-mūrtti, n. < id. +. 1. See வேதபுருஷன். 2. God, as embodied in the Vēdas; வேதசொரூபியாகிய கடவுள். 3. One who is well versed in the Vēdas; வேதங்களை நன்கு உணர்ந்தவன்.

வேதர் vētar, n. < id. Brahmins; பிராமணர். வேதராரததனை (கந்தபு. தெய்வயா. 195).

வேதரஞ்சகன் vēta-rañcakaṉ, n. < vēda + rañjaka. Brahmā; பிரமன். வேதரஞ்சகன் மால்புரந்தரன் (சௌந். 26).

வேதவசனம் vēta-vacaṉam, n. < id. + vacana. See வேதவாக்கியம்.

வேதவரசன் vēta-v-aracaṉ, n. < வேதம்[1] +. Brahmin; பார்ப்பான். (யாழ். அக.)

வேதவனம் vēta-vaṉam, n. < vēda + vana. See வேதாரணியம். வேதவனத்தின் மெய்ப்பொருளி னருளால் (பெரியபு. திருஞான. 269).

வேதவாக்கியசொரூபம் vēta-vākkiya-corūpam, n. < id. + vākya +. Nature of a Vēdic text, of four kinds, viz., *viti-vātam*, *artta-vātam*, *mantira-vātam*, *nāmatēyam*; விதிவாதம் அர்த்தவாதம் மந்திரவாதம் நாமதேயம் என்று நான்கு வகைப்படும் வேதவாக்கியங்களின் இயல்பு. (விவேகசி. வேதசரூபி. 5.)

வேதவாக்கியம் vēta-vākkiyam, n. < id. +. 1. Vēdic text; வேதத்திலுள்ள சொற்றொடர். 2. Gospel truth; உண்மை. அவர் சொல்வது வேதவாக்கியமாக வழங்குகின்றது.

வேதவாக்கு vēta-vākku, n. < id. + வாக்கு[5]. See வேதவாக்கியம்.

வேதவாணர் vēta-vāṇar, n. < வேதம்[1] + வாணன்[1]. Brahmins; பார்ப்பனர். வேதவாணர் . . . நீரியல் வனையுகின்ற நீர்மை (. . . திருச்சக. 9).

வேதவாதம் vēta-vātam, n. < vēda + vāda. Exposition of the Vēdic religion; வைதிக மதத்தைப்பற்றிய வாதம். வேதவாதச் சருக்கம். (நீல.)

வேதவிண்ணப்பம் vēta-viṇṇappam, n. < வேதம்[1] +. The chanting of the Vēdas, in temples, etc., on ceremonial occasions; விசேட காலங்களிற் கோயில் முதலிய இடங்களில் வேதமோதுகை.

வேதவித்தகன் vēta-vittakaṉ, n. < vēda +. See வேதவித்து. (யாழ். அக.)

வேதவித்து vētavittu, n. < vēda-vid. 1. One who is learned in the Vēdas; வேதங்களை நன்கறிந்தவன். வேதவித்தாய மேலோன் போல (கம்பரா. பாசு. 30). 2. God; கடவுள். . . . வேதவித்தை (தேவா. 162, 7).

வேதவியாக்கியானம் vēta-viyākkiyāṉam, n. < vēda +. 1. Commentaries on the Vēdas; வேதத்தின் விளக்கவுரை. 2. Expounding the Bible; விவிலியநூற்பொருளை விளக்குகை. (W.)

வேதவியாசன் vēta-viyācaṉ, n. < id. +. Vyāsa, as the compiler of the Vēdas; [வேதத் தைத் தொகுத்தோன்] வியாசமுனிவன். (தக்கயாகப். 331, உரை.)

வேதவியாதன் vēta-viyātaṉ, n. < id. + வியாதன்[1]. See வேதவியாசன். (மணி. 27, 5).

வேதவிருத்தம்[1] vēta-viruttam, n. < id. + viruddha. What is contrary to or against the Vēdas; வேதத்துக்கு மாறானது.

வேதவிருத்தம்[2] vēta-viruttam, n. < id. + vṛtta. Teaching of the Vēdas; வேதபோதனை. (யாழ். அக.)

வேதவிருத்தி vēta-virutti, *n.* <id.+*vṛtti.* Inam land for reciting the Vēdas; வேதமோதற்காக அளிக்கப்படும் இறையிலிநிலம். (Insc.)

வேதவிஹிதம் vēta-vihitam, *n.* <id.+ *vihita.* What is enjoined by the Vēdas; வேதத்தினால் விதிக்கப்பட்டது. (*அஷ்டாதச. அர்த்தபஞ்.* 31.)

வேதவீணை vēta-vīṇai, *n.* <id.+. A kind of *vīṇai;* வீணைவிசேடம். *நாரதாதிகள வேதவீணை தொடங்கவே* (*தக்கயாகப.* 623, *விசேடக்.*).

வேதவேத்தன் vētavēttaṉ, *n.* See வேத வேத்தியன். *வேதவேத்தனு மவன் மலாத தாணமிசை வீழ்ந்தான்* (*கம்பரா. மீட்சிப.* 116).

வேதவேத்தியன் vēta-vēttiyaṉ, *n.* <*vēda-vēdya.* God, as knowable through the Vēdas; [*வேதத்தினாலே அறியக்கூடியவன்*] கடவுள்.

வேதவேதாந்தன் vēta-vētāntaṉ, *n.* <*vēda-vēdānta.* God, as revealed in the Vēdas and the Vēdāntas; கடவுள். *விண்ணிலா னறிகிலா வேதவேதாந்தனூர்* (*தேவா.* 399, 4).

வேதவொலி vēta-v-oli, *n.* <*வேதம்*[1]+. The sound of chanting the Vēdas; வேதத்தை யோதும் ஒலி. *வேதவொலியும விழாவொலியும* (*திவ். திருவாய்.* 7, 3, 1).

வேதன்[1] vētaṉ, *n.* <*vēdhas.* 1. Brahmā; பிரமன். (*பிங.*) 2. God; கடவுள். *வேதனை வெண் புரி நூலனை* (*திவ். இயற். திருவிருத்.* 79). 3. Bṛhaspati; வியாழன். (*பிங.*)

வேதன்[2] vētaṉ, *n.* perh. *bhēda.* Chebulic myrobalan; கடுக்காய். (*மலை.*)

வேதனம்[1] vētaṉam, *n.* <*vētana.* 1. Hire; கூலி. *Loc.* 2. Salary, monthly wages; கூலியாகக் கொடுக்கப்படும் சம்பளம்.

வேதனம்[2] vētaṉam, *n.* <*vēdana.* 1. Knowledge, wisdom; அறிவு. *வேதனவடிவானோன்* (*ஞானவா. உத்தா.* 68). 2. The Vēdas; வேதம். *வேதனத்ரய வேளே நமோநம* (*திருப்பு.* 996). 3. Feeling, sensation; உணர்ச்சி. (*சக்கிரநீதி,* 98.) 4. Pain, torment, agony; வேதனை. (*யாழ். அக.*)

வேதனம்[3] vētaṉam, *n.* prob. *bhēdana.* Gold; பொன். (*யாழ். அக.*)

வேதனம்[4] vētaṉam, *n.* <*vēdhana.* Piercing, perforating; துளைக்கை. *காண வேதனச் சடங்கு.*

வேதனாகந்தம் vētaṉā-kantam, *n.* <*vēdanā+skandha.* See வேதனை, 3.

வேதனி[1] vētaṉi, *n.* <*vēdhanī.* An instrument for perforating elephant's ear; யானையின் செவிகளைத் தொளையிடுங் கருவி. (*யாழ். அக.*)

வேதனி[2] vētaṉi, *n.* Fenugreek. See வெந்தயம். (*சங். அக.*)

வேதனீயம் vētaṉīyam, *n.* <*vēdanīya.* (Jaina.) A kind of karma. See வேதநீயம். (*சூடா.*)

வேதனை vētaṉai, *n.* <*vēdanā.* 1. Difficulty, trouble; வருத்தம். *வேதனை பெருகி* (*சீவக.* 2506). 2. Pain, agony; நோவு. (*பிங.*) *கருப்பம் . . . வேதனை முதிர்ந்து காட்ட* (*பிரமோத்.* 6, 18). 3. (Buddh.) Sensation of pain and pleasure, as a constituent element of being, one of *pañca-kantam,* q.v.; பஞ்சகந்தங்களுள் சுகமுந் துக்கமும் அவ்விரண்டின் கலப்புமான உணர்ச்சி (*மணி.* 30, 189-190, *உரை.*) 4. (Buddh.) One of the twelve causes of existence; பிறவியின் காரணம் பன்னிரண்டனுள் ஒன்றான நுகர்ச்சி. (*மணி.* 30, 46, *உரை.*)

வேதனைக்கந்தம் vētaṉai-k-kantam, *n.* <*வேதனை*+*skandha.* See வேதனை, 3. (*சி. போ. பா. அவை.* 38.)

வேதனைக்காட்சி vētaṉai-k-kāṭci, *n.* <id.+. (Log.) Self-perception of pleasure and pain. See தன்வேதனைக்காட்சி. (*யாழ். அக.*)

வேதனைதீர்தல் vētaṉai-tīrtal, *n.* <id.+ *தீர்*[1]-. (Phil.) Removal of the obscuration of Māyā; மாயையின் மறைவு நீங்குகை. (*யாழ். அக.*)

வேதனைப்படு-தல் vētaṉai-p-paṭu-, *v. intr.* <id.+. 1. To undergo suffering; வருத்தப்படுதல். 2. To be hidden or obscured by Māyā; மாயையால் மறைக்கப்படுதல். (*யாழ். அக.*)

வேதஸ்வரம் vēta-svaram, *n.* <*vēda-svara.* The various kinds of accents in which Vēdic hymns are chanted, as *utāttam, aṉu-tāttam,* etc.; வேதங்களையோதும்போது உச்சரிக்கும் உதாத்தம் அனுதாத்தம் முதலிய ஓசை.

வேதா vētā, *n.* <*vēdhas.* 1. Brahmā; பிரமன். (*பிங.*) *வேதா நாயகற் குரைக்கலுற்றான்* (*கந்தபு. திருக்கல்.* 76). 2. God; கடவுள். (W.) 3. Sun; சூரியன். (*யாழ். அக.*)

வேதாக்கினி vētākkiṉi, *n.* <*vēdāgni.* Sacred fire, of three kinds, viz., *kāruka-patti-yam, ākavaṉīyam, taṭciṇākkiṉi;* வேதமந்திரத்தினால் வளர்க்கப்படும் காருகபத்தியம் ஆகவனீயம் தட்சிணாக்கினி என்னும் மூவகை அக்கினி.

வேதாகமம் vētākamam, *n.* <*vēda+āgama.* 1. The Vēdas and the Āgamas; வேதமும் ஆகமமும். *வேதாகமங்கள் விரிப்போரும்* (*அருட்

பா, 1, நெஞ்சறி. 668). 2. The Bible; விவிலிய நூல். *Chr.*

வேதாங்கம் vētāṅkam, *n.* <*vēdāṅga.* Works regarded as helps to the study of the Vēdas, six in number, viz., *citcai, viyākaraṇam, cantacu, niruttam, cōtiṭam, kaṟpam;* சிட்சை வியாகரணம் சந்தசு நிருத்தம் சோதிடம் கற்பம் என ஆறுவகைப்பட்ட வேதப் பொருளை யுணர்தற்குரிய கருவி. (மணி. 27, 100-102, உரை.)

வேதாசலம் vētācalam, *n.* <*vēdācala.* See வேதகிரி.

வேதாசாரம் vētācāram, *n.* <*vēdācāra.* Conduct laid down in the Vēdas; வேதங் கூறியுள்ள ஒழுக்கம்.

வேதாசாரியர் vētācāriyar, *n.* <*vēda*+*ācārya.* Preceptor who teaches the Vēdas; வேதப்பொருளை உபதேசிக்கும் ஆசிரியர்.

வேதாத்தியயனம் vētāttiyayaṉam, *n.* <id.+*adhyayana.* Chanting of the Vēdas; வேதமோதுகை.

வேதாத்தியாபகன் vētāttiyāpakaṉ, *n.* <id.+*adhyāpaka.* One who teaches the Vēdas; வேதத்தை யோதுவிப்பவன்.

வேதாத்தியாபனம் vētāttiyāpaṉam, *n.* <id.+*adhyāpana.* Teaching the Vēdas; வேத மோதுவிக்கை.

வேதாத்தியாயி vētāttiyāyi, *n.* <*vēdādhyāyin.* One who chants the Vēdas; வேத மோதுவோன்.

வேதாதி vētāti, *n.* <id.+*ādi.* The mystic syllable Ōm, as the beginning of the Vēdas; வேதத்தொடக்கத்திலுள்ள பிரணவம். (இலக். அக.)

வேதாதிவண்ணன் vētāti-vaṇṇaṉ, *n.* <வேதாதி+வண்ணம். God, as the *Ōm-kāra;* [ஓங்கார வடிவினன்] கடவுள். (யாழ். அக.)

வேதாந்தகன் vētāntakaṉ, *n.* <*vēdāntaga.* See வேதாந்தி, 1.

வேதாந்தசூத்திரம் vētānta-cūttiram, *n.* <*vēdānta*+. A treatise on Vēdānta by Vyāsa, in the form of sūtras; வியாசமுனிவர் இயற்றிய உத்தரமீமாஞ்சை சூத்திரம்.

வேதாந்தசூளாமணி vētānta-cūḷāmaṇi, *n.* <id.+. A metaphysical treatise on the Advaita philosophy, by Civappirakācar; சிவப் பிரகாசர் இயற்றிய வேதாந்தசமய நூல்.

வேதாந்ததேசிகர் vētānta-tēcikar, *n.* <id.+. A famous Vaiṣṇava Ācarya who lived in 14th C., specially revered by the *vatakalai* sect of Vaiṣṇavites; 14ஆம் நூற்றாண்டில் விளங்கியவரும் வைஷ்ணவருள் வடகலையாரால் தலைமையாகப் போற்றப்படுபவருமான வைஷ்ணவாசாரியர். (தேசிகப. வாழித் 3.)

வேதாந்தம் vētāntam, *n.* <*vēdānta.* 1. The Upaniṣads, as the concluding portions of the Vēdas; உபநிடதம். *வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கை* (திவ். பெரியாழ். 4, 3, 11). 2. The Uttara-mīmāmsā system of philosophy founded by Vyāsa and expounded in his Vēdānta sūtras, as containing the essence of the Upaniṣads; வியாசராற் செய்யப்பட்டதும் உபநிடதங்களின் பொருளைக் கொண்டதுமான வேதாந்தசூத்திரத்திற் கூறும் உத்தரமீமாஞ்சை மதம். (தக்கயாகப. 246, உரை.) 3. Advaita philosophy. See அத்துவைதம்.

வேதாந்தம்பேசு-தல் vētāntam-pēcu-, *v. intr.* <வேதாந்தம்+. See வேதாந்தமோது-, 2.

வேதாந்தமார்க்கம் vētānta-mārkkam, *n.* <*vēdānta*+. 1. The way of life or conduct, as determined by the principles of Vēdānta; வேதாந்தக்கொள்கையோடு பொருந்திய ஒழுக்கம். 2. Spiritual life; ஆத்மவிசாரம் அமைந்த வாழ்க்கை.

வேதாந்தமோது-தல் vētāntam-ōtu-, *v. intr.* <வேதாந்தம்+. 1. To study the Vēdānta; உத்தரமீமாஞ்சை கற்றல். 2. To speak with affected wisdom or spirituality; ஞானிபோலத் தத்துவம் பேசுதல். *நீ என்னிடத்து வேதாந்தமோத வேண்டாம்.*

வேதாந்தன் vētāntaṉ, *n.* <*vēdānta.* 1. God, as the Object of the Upaniṣads; கடவுள். 2. Arhat; அருகன். (சூடா.)

வேதாந்தாசாரியர் vētāntācāriyar, *n.* <id.+*ā-cārya.* 1. A Vaiṣṇava preceptor. See பராசரபட்டர். 2. See வேதாந்ததேசிகர். (தேசிகப. வாழித். 5.)

வேதாந்தி vētānti, *n.* <*vēdāntin.* 1. Follower of the Vēdānta or Uttara-mīmāmsā system of philosophy; உத்தரமீமாஞ்சையாகிய வேதாந்தக்கொள்கையினன். 2. Follower of the Advaita system; அத்துவைதி. (சி. சி. அளவை, 1, மறைஞா.) 3. Unworldly person; உலகப்பற்றற்றவ-ன்-ள். *Colloq.* 4. A Vaiṣṇava Ācārya. See நஞ்சீயர் *தஞ்சீரை ஞானியர்கள் தாம்புகழும் வேதாந்தி* (உபதேசரத். 42).

வேதாப்பியாசம் vētāppiyācam, *n.* <*vēda*+*abhyāsa.* Learning the Vēdas; வேதங்களைப் பயிலுகை.

வேதார்த்தன் vētārttaṉ, n. <vēdārtha. God, as the ultimate meaning of the Vēdas; [வேதப்பொருளானவன்] கடவுள். (W.)

வேதாரணியம் vētāraṇiyam, n. <vēda +araṇya. Tirumaṟai-k-kāṭu, a Śiva shrine in the Tanjore District; சோழநாட்டிலுள்ள திருமறைக்காடு என்னும் சிவதலம்.

வேதாரம்பம் vētārampam, n. <id.+ ā-rambha. The ceremony of beginning the study of the Vēdas, on the Upakarma day; சிராவணதினத்தின்று வேதாத்தியயனந் தொடங்குஞ் சடங்கு.

வேதாளம் vētāḷam, n. <vētāla. 1. Demon, ghost, goblin, vampire; பேய். (திவா.) 2. Devil, பிசாசு. வேதாள கடகமேய மாயோனே (தக்கயாகப. 104).

வேதாளி vētāḷi, n. <vētālī. Kāḷī; காளி. (பிங்.)

வேதாளிகர் vētāḷikar, n. <vaitālika. See வைதாளிகர். (சிலப. 5, 48.) (பிங்.)

வேதாளியர் vētāḷiyar, n. See வைதாளிகர். (செயாதரம Mss.)

வேதி[1] vēti, n. <vēdin. 1. One who knows; அறிந்தவன். வேதிபோற்றி விமலாபோற்றி (திருவாச. 4, 106). 2. Brahmā; பிரமன். (அரு. நி.) 3. Learned person; பண்டிதன். (இலக். அக.)

வேதி[2] vēti, n. <vēdi. 1. Low platform within a house, for sacrifices, weddings, etc.; மணம் முதலிய சடங்கு நிகழ்த்தும் மேடை. மைந்தனைச் செம்பொன்வேதி யெறிக்குங் கிரணமணிப் பீடம் தேற்றினரே (பாரத. திரௌ. 91). 2. See வேதிகை[1], 1. கீதசாலை வேதிநிறைய (பெருங். உஞ்சைக். 34, 224). 3. Outer wall of a fortification; compound wall; மதில். (சூடா.) 4. See வேதிகை[1], 3. பாததிரவேதி, திருமஞ்சனவேதி. 5. Sacrificial pit; ஓமகுண்டம். (பிங்.) 6. The 18th nakṣatra. See கேட்டை[1], 1. (பிங்.)

வேதி[3]-த்தல் vēti-, 11 v. tr. <bhēda. 1. To cause change; விகாரப்படுத்துதல். (யாழ். அக.) 2. To change, transmute, as baser metals; தாழ்ந்தவற்றை யுயர்பொருளாக மாற்றுதல். புகலிக்கிறை . . . வேதிக்க வுடம்பொரு பொன்மயமா யொளிவிட்டு (தக்கயாகப. 217). வெந்தழலி னிரதம் வைத் தைந்து லோகத்தையும் வேதித்து விற்றுண்ணலாம் (தாயு. தேசோ. 8). 3. To render hostile; விரோதப்படுத்துதல்.

வேதி[4] vēti, n. <வேதி[3]-. Transmuting; தாழ்ந்தவற்றை யுயர்பொருளாக மாற்றுகை. குளிகை கொடு பரிசித்து வேதி செய்து (தாயு. சின்மயா. 7).

வேதி[5]-த்தல் vēti-, 11 v. tr. <vyath. To oppress; நலிதல். வேதியா நிற்கு மைவரால் (திவ். திருவாய். 7, 1, 3).

வேதி[6]-த்தல் vēti-, 11 v. tr perh. vimard. To smear, rub on, as sandal paste; தீற்றுதல். (சீவக. 1081, உரை.)

வேதிகை[1] vētikai, n. <vēdikā. 1. Platform, pial; திண்ணை. (பிங்.) பவளத் திரள்கால் பைம்பொன் வேதிகை (சிலப் 5, 148). 2. Marriage dais, மணமேடை. (பிங்.) 3. Stool, pedestal; காலுள்ள பீடம். (கோயிலொ. 15.) 4. Altar, raised platform for oblations of rice, etc., in temples; பலிபீடம். (யாழ். அக.) 5. (Śaiva.) Place of worship; பூசை செய்யும் இடம். Loc. 6. Plank; பலகை. (அக. நி.) 7. Street; தெரு. (பொதி. நி.)

வேதிகை[2] vētikai, n. <bhēdikā. 1. Transmuting; வேறுபடுத்துகை. வேதிகைசெய் தெய்வமணி கொலோ (கம்பரா. உருக். 68). 2. Shield; கேடகம். (பிங்.) 3. Arrow; அம்பு. (பொதி. நி.)

வேதித்தார் vētittār, n. <வேதி[3]-. Enemies; பகைவர். வேதித்தார் புரமூன்றும் (தேவா. 159, 9).

வேதிதம் vētitam, n. <vēdhita. (யாழ். அக.) 1. Perforating, drilling; துளைக்கை. 2. Tube; துளையுடைப்பொருள்.

வேதிப்பான் vētippāṉ, n. <வேதி[3]-. One who transmutes; வேதகஞ்செய்வோன். தானெல்லாம் வேதிப்பா னாகி (சி. சி. 11, 12).

வேதியன்[1] vētiyaṉ, n. <vēda. 1. Brahmin; பார்ப்பனன். நான்மறை வேதியர்தேத்து (திருவாலவா. 40, 2). 2. Brahmā; பிரமன். வேதியன் முதலா வமரரும் (கல்லா. 25, 13). 3. God; கடவுள். வேதியா வேதகீதா (தேவா. 870, 1).

வேதியன்[2] vētiyaṉ, n. <vēdya. See வேதவேத்தியன். வினையேனுடை வேதியனே (திவ். திருவாய். 7, 1, 2).

வேதியன்[3] vētiyaṉ, n. Alum; சீனக்காரம். (மூ. அ.)

வேதினம் vētiṉam, n. perh. vēdhana. Saw; ஈர்வாள். வேதினத்துப்பவும் (சிலப. 14, 176).

வேது[1] vētu, n. <வெம்-மை. [M. vēdu.] 1. Heat, warmth; வெம்மை. வேதுசெய் சாந்தமும் (சீவக. 2675). 2. Fomentation; சூடான ஒற்றடம். வேதினொற்றி (கலித். 106). 3. Caustic, pungent medicine; காரமருந்து. (சங். அக.)

வேது[2] vētu, n. <bhēda. Change; வேறுபாடு. வேதறியாவண நின்றனன் (திருமந். 2220).

வேது³ vētu, n. cf. *vyathā*. Suffering, pain; வேதனை. எழுத்தஞ்சுணராச் சமணவேதினைப படுத தானை (தேவா. 423, 8).

வேதுகுளி-த்தல் vētu-kuḷi-, v. tr. & intr. <வேது¹+. To use steam as a sudorific; நீராவியால் உடலை வேர்க்கச் செய்தல். (J.)

வேதுகொள்(ளு)-தல் vētu-koḷ-, v. tr. & intr. <id.+. See வேதுபிடி-. வேதுகொள்வது போலுங் கடும்பகல் (கலித். 145). (ஈடு, 3, 5, 4.)

வேதுசெய்-தல் vētu-cey-, v. tr. & intr. <id.+. See வேதுபிடி-. அகிற்புகையின் மேவி யுடம்பினை வேதுசெய்து (சீவக. 2667).

வேதுபிடி-த்தல் vētu-piṭi-, v. tr. & intr. <id.+. 1. To warm the body, as with smoke, etc.; ஆவி புகை முதலியவைகளால் உடலை வெம்மை செய்தல். 2. To apply fomentation; ஒற்றடங் கொடுத்தல். 3. See வேதுகுளி-.

வேதுவார்-த்தல் vētu-vār-, v. intr. <id. +. To bathe a woman in medically prepared hot water, after child-birth; பிரசவமானபின் பெற்றவளுடம்பில் சூடான மருந்துநீரை யூற்றுதல். *Loc.*

வேதுவிடு-தல் vētu-viṭu-, v. tr. & intr. <id.+. See வேதுகுளி-. (J.)

வேதை¹ vētai, n. prob. *vyathā*. Pain, affliction; துன்பம். ஏதையா விந்தவேதை (இராம நா. கிஷ். 14).

வேதை² vētai, n. <*bhēda*. 1. Alchemy, transmutation of metals; இரசவாதம். (W.) 2. Line, as on palm of hand; இரேகை. (யாழ். அக.)

வேதை³ vētai, n. <*vēdha*. 1. Drilling, boring; துளைக்கை. 2. (Astron.) Contact on a particular day, of a *nakṣatra* or *tithi* with its preceding *nakṣatra* or *tithi*; ஒரு நாளின் திதி நட்சத்திரங்களுக்கு முன்னைய திதி நட்சத்திரங்களோடு உள்ள சேர்க்கை. இன்று ஏகாதசிக்குத் தசமி வேதை யுள்ளது. 3. See வேதைப்பொருத்தம். (சங். அக.)

வேதைக்கயிறு vētai-k-kayiṟu, n. <வேதை³+. (Astrol.) Diagram used in ascertaining *vētai-p-poruttam*; வேதைப்பொருத்தம் பார்க்கக் கீறிய கீற்று. (விதான. கடிமண. 17.)

வேதைச்சிந்தூரம் vētai-c-cintūram, n. <வேதை²+. A powder used in alchemy; இரசவாதத்திற் பயன்படும் சிந்தூரவகை.

வேதைப்பொருத்தம் vētai-p-poruttam, n. <வேதை³+. (Astrol.) A correspondence between the *nakṣatras* of the prospective bride and bridegroom ascertained by *vētai-k-kayiṟu*, one of ten *kaliyāṇa-p-poruttam*, q.v.; கலியாணப் பொருத்தம் பத்தனுள் மணமகனுடைய நக்ஷத்திரத் திற்கும் மணமகளுடைய நக்ஷத்திரத்திற்கு முள்ள இணக்கத்தை வேதைக்கயிறு மூலமாகப் பார்க்கும் பொருத்தம். (சோதிட. சிந். 198.)

வேதோக்தம் vētōktam, n. <*vēdōkta*. 1. That which is taught in the Vēdas; வேதத்திற் சொல்லப்பட்டது. 2. That which is in accordance with the principles of the Vēdas; வேத விதிக்கு இயைந்தது.

வேதோபாங்கம் vētōpāṅkam, n. <*vēdōpāṅka*. A class of works supplementary to the Vēdas, four in number, viz., *purāṇam*, *niyāyam*, *mīmāñcai*, *taruma-cāttiram*; புராணம் நியாயம் மீமாஞ்சை தருமசாத்திரம் என நால்வகை யாய் வேதத்திற்குத் துணையான சிற்றுறுப்புக்கள்.

வேந்தவை vēntavai, n. See வேத்தவை. இவ்வகை யுரைசெய விருந்த வேந்தவை (கம்பரா. மந திரப. 80).

வேந்தன் vēntaṉ, n. cf. *dēvēndra*. 1. Indra; இந்திரன். வேந்தன் மேய தீம்புன லுலகமும் (தொல். பொ. 5). 2. King; அரசன். பாடல்சான்ற விறல்வேந்த னும்மே (புறநா. 11). 3. Sun; சூரியன். (சூடா.) 4. Moon; சந்திரன். (சூடா.) 5. Bṛhaspati; வியாழன். (சூடா.)

வேந்து vēntu, n. <வேந்தன். 1. Kingly position; அரசபதவி. வேநதனும் வேந்து கெடும (குறள், 899). 2. Kingdom, royalty; இராச்சியம். (பு. வெ. 4, 5, உரை.) 3. Indra; இந்திரன். (அரு. நி.) 4. King; அரசன். வெந்துப்பின் வேந்து செறப்பட்டவா (குறள், 895).

வேந்துரு vēnturu, n. Ancestor in the sixth degree in the paternal line; ஏழாந்தலை முறையில் தந்தைவழி முன்னோன். (W.)

வேந்தோன்றி vēntōṉṟi, n. <வெண்டோன்றி. Malabar glory lily. See கலப்பைக் கிழங்கு. (W.)

வேப்பங்கள் vēppaṅ-kaḷ, n. <வேம்பு+கள்³. A sour juice that oozes from margosa trees, used medicinally; வேப்பமரத்தினின்று வடியும் நீர். (W.)

வேப்பங்குடிநீர் vēppaṅ-kuṭinīr, n. <id. +. Decoction prepared from margosa bark; வேப்பம்பட்டையினின்று வடித்த கஷாயம். இவ் வேப்பங்குடிநீரை யன்றோ நானுன்னைக் குடிக்கச சொல்லுகிறது (ஈடு, 1, 10, 4).

வேப்பநெய் vēppa-ney, n. <id.+. See வேப்பெண்ணெய். (பதார்த்த. 157.)

வேப்பம்பாசி vēppam-pāci, n. prob. id. +பாசி¹. A kind of moss, affecting crops; பயிரைக் கெடுக்கும் ஒருவகைப் பாசி. (யாழ். அக.)

வேப்பமரம் vēppa-maram, n. <id.+. See வேம்பு, 1.

வேப்பமுத்து vēppa-muttu, n. <id.+ முத்து². Seed of margosa fruit; வேம்பின் கொட்டை. (W.)

வேப்பலகு vēppalaku, n. <id.+அலகு. Petiole or rib of margosa leaf; வேப்பிலையின் ஈர்க்கு. (W.)

வேப்பாலை vēppālai, n. <வெட்பாலை. Conessi bark. See குடசப்பாலை, 1. (W.)

வேப்பிலைக்கட்டி vēppilai-k-kaṭṭi, n. prob. கருவேப்பிலை+. A kind of relish made of nārratai leaves, salt, chillies, etc.; நாரத்தையிலை உப்பு மிளகாய் முதலியவற்றாற் செய்யும் வியஞ்சன வகை. Loc.

வேப்பிலையடி-த்தல் vēppilai-y-aṭi-, v. intr. <வேம்பு+இலை+. 1. To effect a magic cure by passing a handful of neem twigs over the body. See குழையடி-, 1. 2. To coax a person to yield; இசையாத விஷயத்தில் ஒருவனை இசைவிக்க முயலுதல்.

வேப்பெண்ணெய் vēppeṇṇey, n. <id. +எண்ணெய். Oil extracted from margosa seeds; வேப்பங்கொட்டையினின்று எடுக்கும் நெய்.

வேபம் vēpam, n. <vēpa. Movement, shaking; சலனம். வேபமொன்றில்லாத சிந்தை (மேருமந். 99).

வேபனம் vēpanam, n. <vēpana. 1. See வேபம். (இலக். அக.) 2. Fear; பயம். (யாழ். அக.)

வேபாக்கு vē-pākku, n. <வே-+பாக்கு². Heating, boiling; வேதுகை. வேபாக் கறிந்து (குறள், 1128).

வேபி-த்தல் vēpi-, 11 v. intr. <vēp. To tremble, quake; நடுங்குதல். வேபியாப் பசியின் வாடி (மேருமந். 366).

வேம்பர் vēmpar, n. prob. E. chamber. Pump; நீர் முதலியன இறைக்குந் துழாய். Naut.

வேம்பருலக்கை vēmpar-ulakkai, n. <வேம்பர்+. Plunger of a pump; நீர்க்குழாய்க் கருவியில் நீரை இழுப்பதற்குரிய உலக்கை. Naut.

வேம்பன் vēmpaṉ, n. <வேம்பு. Pāṇṭiyaṉ, as wearing a garland of margosa flowers; [வேப்பம்பூ மாலையை யுடையவன்] பாண்டியன். சினையலர் வேம்பன் றேரானுகி (சிலப். 16, 149).

வேம்பனம் vēmpaṉam, n. cf. viḍambana. Toddy; கள். (யாழ். அக.)

வேம்பா¹ vēmpā, n. See வேம்பர். Loc.

வேம்பா² vēmpā, n. Vessel for heating water, salamander; வெந்நீர் சுடவைக்குங் கலம். Loc.

வேம்பா³-தல் vēmpā-, v. intr. <வேம்பு+ ஆ⁶-. 1. To be bitter; கசப்பாதல். 2. To be disliked; வெறுப்புக்குரியதாதல். என்னையும் வேம் பாகுகி (தனிப்பா. 1, 411, 45).

வேம்பாடம் vēmpāṭam, n. See வேம் பாடை. (G. Tn D. I, 218.)

வேம்பாடை vēmpāṭai, n. Red creeper. See பப்பிளி. (L.)

வேம்பாணி vēmpāṇi, n. perh. வேம்பு+ ஆணி¹. Small nail; சிறிய ஆணிவகை. (W.)

வேம்பின்கண்ணியன் vēmpiṉ-kaṇṇiyaṉ, n. <id.+கண்ணி¹. See வேம்பன். (பிங.)

வேம்பின்றாரோன் vēmpiṉrārōṉ, n. <id. +தார¹. See வேம்பன். (சூடா.)

வேம்பு vēmpu, n. [T. vēmu, K. Tu. bēvu, M. vēmpu.] 1. Neem, margosa, m. tr., Azadirachta indica; மரவகை. வேம்பின் பைங்காயெனறோழி தரினே (குறுந். 196). 2. Bitterness of taste; கசப்பு. 3. Dislike; வெறுப்பு. வேம்புற்ற முந்நீர் விழுங்க (சீவக. 513).

வேமம் vēmam, n. <vēma. Loom; நெய் வார் தறி. வேமமுதல தாமினி தகற்ற (ஞானா. 15).

வேமா vēmā, n. <vēmā nom. sing. of vēman. See வேமம். ஆடைக்கு நாடா வேமா முதலியன (தருக்கசங். 42).

வேமானியர் vēmāṉiyar, n. <vaimānika. Celestials, as borne in heavenly cars; [விமானத் திற சஞ்சரிப்பவர்] தேவர். வேமானியர்தம் மகளிரின் (சீவக. 2455).

வேய்¹-தல் vēy-, 4 v. tr. 1. To cover, as a building; to roof, thatch; மூடுதல். பிறங்கழல் வேய்ந்தன (பு. வெ. 3, 22). 2. To put on, as a garland; to wear, as crown; சூடுதல். புதன்மானப் பூவேய்ந்து (மதுரைக். 568). நுமர்வேய்ந்த கண்ணி யோடு (கலித். 83). 3. To surround; சூழ்தல். மாலையை வேய்ந்தரிக்கு மிளிறு (சீவக. 1769). 4. To set, as gems; பதித்தல். வேய்ந்த மாமணிக் கவசமும் (பாரத. காண்டவ. 8). 5. To be fitted with; பொருந்துதல். கார்மலர் வேய்ந்த . . . பரப்பாக (கலித். 98). 6. To bore; துளைபோடுதல். (அக. நி.)—intr. To open, blossom; மலர்தல். (கல்லா. 20, 5, உரை.)

வேய்² vēy, n. <வேய்¹-. 1. Bamboo. See மூங்கில், 1. வேய்ப்பெயல் விளையுட் டேக்கட் டேறல் (மலைபடு. 171). 2. Bamboo rod; மூங்கிற்கோல்.

